[illegible]

[illegible]

JL
V2;11m, N70tA
P06381-3
228651

விலை ரூ.10/-

# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்பு துறையின் வெளியீடு

ஜூலை 2006






# தமிழரசு

செய்தி–மக்கள்தொடர்பு துறையின் வெளியீடு

மலர் : 38 இதழ் : 1

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஆனி – ஆடி
ஜூலை 2006


## இந்த இதழில்...


நிதிநிலை அறிக்கை 2006–2007 — 2

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட விரைவில் சட்டம் – மாண்புமிகு முதலமைச்சர் — 41

நட்பு பாசத்திற்கு கிடைத்த வெற்றிதான் சிவாஜி சிலை திறப்பு – மாண்புமிகு முதலமைச்சர் — 49

சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது – மாண்புமிகு முதலமைச்சர் — 55

புலவர் குழந்தை வாழ்க்கை வரலாறு — 61

சென்னை மாநகராட்சியின் வளர்ச்சித் திட்டப் பணிகள் — 74


*இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு*

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

– கலைஞர்
திருக்குறள் உரையிலிருந்து...

### அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : காமராஜர் பிறந்த நாளான 15.7.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இரண்டாம் பக்க அட்டை : வேலூர் சிப்பாய்ப் புரட்சி 200ஆம் ஆண்டு நிறைவு விழா (10.7.2006)

நான்காம் பக்க அட்டை : நடிகர் திலகம் சிவாஜிகணேசன் சிலை திறப்பு விழா (21.7.2006)


ஆசிரியரும் வெளியிடுபவரும் : சி. கோசலராமன், இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

# நிதிநிலை அறிக்கை

## 2006 - 2007

தமிழக அரசின்
நிதியமைச்சர்
பேராசிரியர்
க. அன்பழகன்
அவர்கள்,
2006-2007ஆம்
ஆண்டிற்கான
திருத்த
வரவு-செலவுத்
திட்டத்தை,
2006ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள்
22ஆம் நாளன்று
சட்டமன்றப் பேரவை
முன் வைத்து
ஆற்றிய உரை.







**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

உலகோர் யாவரும் ஒரு மனதாய் உவந்தேற்கும் பெற்றியதாய், உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் ஒப்புயர்வற்ற பண்பாட்டின் சின்னமாய், முக்கடலும் முத்தமிடும் குமரி முனையில் நின்றொளிரும் அய்யன் திருவள்ளுவன் அருளிய வாய்மொழி,

**"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்**
**கரும்பொருள் யாதொன்று மில்" –**

– தெளிந்து தேர்ந்த நண்பர்களுடன் சேர்ந்து, ஆற்ற வேண்டிய செயலை ஆராய்ந்து, தாமும் நன்கு சிந்தித்துச் செய்தால் ஆகாதது ஒன்று மில்லை – என்ற வள்ளுவத்தின் வாய்மையை மனதிலே தாங்கி – தமிழ் மாநிலத்தை முன்னேற்றப் பாதையிலே முனைப்போடு இட்டுச் செல்லும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள; 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன்.

2. தமிழக அரசியல் வரலாற்றில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு அனைத்துக் கட்சிக் கூட்டணி ஒன்றை உருவாக்கி, தேர்தல் களத்தில் வென்று தி.மு.க. ஆட்சி அமைத்து, 1969இல் திடீரென்று அவர் மறைந்ததையொட்டி, அந்தப் பெருந்தகையின் பொது வாழ்வுப் புனித நடையினையே அடியொற்றி நடந்து, நாட்டு மக்கள் நலன் வளர்க்கும் நோக்குடன் மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முதன் முறையாகவும், தற்போது ஐந்தாவது முறையாகவும் பொறுப்பேற்றுள்ளார்கள்.

3. நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அங்கமாக இடம் பெற்று அமைந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவாக தமிழ்நாட்டு மக்கள் மகத்தான வெற்றியினை அளித்துள்ளார்கள். தேர்தலுக்கான வாக்குறுதிகளை வழங்கிடும் அறிக்கையை வெளியிட்ட போது, "இந்த அறிக்கையே இந்த அரசின் நிதி நிலை அறிக்கையாக அமையும்`` என்று கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை மெய்ப்பிக்கும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்`` என்ற எங்களின் உறுதி மொழியின் விரிவாக்கமே இன்றைய நிதிநிலை அறிக்கையாகும்.

4. "உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்`` என்ற மாநில சுயாட்சி

கொள்கை மனதிலே பதிந்திருக்கும் நிலையில் இந்த மாநிலத்து ஏழையெளிய பாட்டாளி மக்களையும், நடுத்தர மக்களையும் வாழ்விப்பதற்கான வழிவகைகளையும், திட்டங்களையும் இந்த அறிக்கையில் இடம் பெறச் செய்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

5. மத்திய அரசு மற்றும் அண்டை மாநில அரசுகள் ஆகியவற்றுடன் மோதுதல் அற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து, நமது மாநில உரிமைகளையும், மக்களின் நல்வாழ்வையும் நிலைநாட்ட தொடர்ந்து பணியாற்றிட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

**வேளாண்மை மற்றும் கூட்டுறவு**

6. இயற்கைச் சீற்றத்தால் விளைந்த இடர்ப்பாடுகளால் ‘சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்’ என்ற பெருமை குலைந்து ஏற்றமிகு வாழ்விழந்து நைந்த உழவர் பெருமக்களுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும் உற்றதுணையாக இருக்க வேண்டியது அரசின் பொறுப்பு என உணர்ந்த காரணத்தால், அவர்கட்குச் செய்யும் தலையாய உதவியாக, அவர்கள் பட்ட கடனிலிருந்து பாதுகாத்து மீட்டிட; 6,866 கோடி ரூபாய்க்கான கூட்டுறவுக் கடனை; அமைச்சரவை பதவியேற்ற நாளிலேயே, பதவியேற்ற மேடையிலேயே – பல்லாயிரவர் முன்னிலையில் தேர்தல் வாக்குறுதியைச் செயல்படுத்தும் வண்ணம் தள்ளுபடி செய்து கையெழுத்திட்டு நிறைவேற்றியது ஒரு வரலாறு ஆகும். அதனையொட்டி கூட்டுறவு வங்கிகள் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1,668 கோடி அளவிற்கான கடன் பொறுப்புகளை இவ்வரசே முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வகையில், நபார்டு வங்கிக்கு இந்த ஆண்டு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகைக்காக, 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.435 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கூட்டுறவு வங்கிகளுக்கு இத்தள்ளுபடியால் ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டும் வகையிலும், விவசாயிகளுக்குத் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும், இந்தத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்யும் திட்டத்திற்காக, ரூ.1,435 கோடி இந்த ஆண்டுக்கு மட்டும் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அடுத்து வரும் நிதியாண்டுகளிலும், இத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள ரூ.5,431 கோடிக்கும் அதன்மீதான வட்டிக்கும், தேவையான ஒதுக்கீடுகள் படிப்படியாகச் செய்யப்படுவதன் மூலம் விவசாயிகள் தொடர்ந்து பயிர்க்கடன் பெறுவதும், இவ்வங்கிகளின் வைப்பீட்டாளர்கள் மற்றும் பணிபுரிபவர்களின் நலன் பாதுகாக்கப் படுவதும் உறுதி செய்யப்படும்.

7. விவசாயிகளுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க்கடன் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. **நடப்பு குறுவை சாகுபடி காலத்திலிருந்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்படும் பயிர்க்கடன்களுக்கு சென்ற ஆண்டுவரை இருந்த 9 சதவீத வட்டி விகிதம் 7 சதவீதமாக குறைக்கப்படும்** என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். **இந்த 2 சதவீத வட்டிக் குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பை அரசே ஏற்றுக் கொள்ளும்.**

8. பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆண்டுதான், உழவர் நெஞ்சம் உவகை பொங்கிட உரிய நாளாகிய ஜூன் திங்கள் 12ஆம் தேதியன்று மேட்டூர் அணை பாசனத்திற்காக திறந்து விடப்பட்டது. இத்துடன் பாசனக் கால்வாய்கள் தூர்









எடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு பயிர்க்கடனும் மற்றும் இடுபொருட்கள் வழங்கும் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளதால், தமிழ்நாட்டில் இந்த ஆண்டு மொத்த உணவு உற்பத்தி 95 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. 2005–2006ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வேளாண்மை மற்றும் தொடர்புடைய இனங்களுக்கு ரூ.854.41 கோடியாக இருந்த மொத்த ஒதுக்கீடு, 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.977.98 கோடியாக உயர்ந்துள்ளது.

9. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் இன்றிக் குறைந்த விலையில் நுகர்வோர் காய்கறிகளைப் பெறவும் உருவாக்கப்பட்ட உன்னதத் திட்டம்தான் உழவர் சந்தைத் திட்டம். அனைவராலும் வரவேற்கப்பட்ட இந்தத் திட்டம் இடையில் தளர்வுற்று; தற்போது புத்துயிர் அளிக்கப்பட்டு 103 உழவர் சந்தைகள் மீண்டும் திறம்படச் செயல்படத் தொடங்கியுள்ளன.

10. விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விரயமின்றியும், உரிய விலை கிடைக்கும் வகையிலும் உலகத்தரம் வாய்ந்த சேகரிப்பு மையங்கள், குளிர்விக்கும் சாதனங்கள், தரம் பிரிப்பு, பதப்படுத்துதல், மற்றும் மின்னணு ஏலமுறை போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய **மூன்று வணிக முனையங்கள் (Terminal Markets) சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய பெருநகரப் பகுதிகளில் அமைக்கப்படும்.** இவை, விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பை அதிகரிப்பதுடன் ஏற்றுமதிக்கும் வழிவகுக்கும். அத்துடன் **கோவை மாவட்டம் பல்லடத்தில் வெங்காயத்திற்கும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாம்பழத்திற்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைப் பழங்களுக்கும் ஏற்றுமதிக்கேற்ற வகையில் குளிர்பதன வசதிகளுடன் கூடிய விற்பனைக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.**

11. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு தரிசு நிலங்களில் முந்திரி சாகுபடியை ஊக்குவித்து அதிக விளைச்சல் தரும் முந்திரி வகைகளை அறிமுகப்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்படும். கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மாவட்டங்கள் அடங்கிய முந்திரி விளைநில ஏற்றுமதி மண்டலத்தின் பணிகள் முந்திரி விவசாயிகளுக்கு மேலும் பலன் தரக்கூடிய வகையில் செம்மைப்படுத்தப்படும்.

12. உயிரி எரி பொருள் ( Ethanol ) பெட்ரோலுக்கு மாற்றாகவும் பயோடீசல் ( Bio-diesel ) டீசலுக்கு மாற்றாகவும் பயன்படுகிறது. முதற்கட்டமாக பெட்ரோலுடன் எத்தனால் உயிரி எரி பொருளை 5 விழுக்காடு கட்டாயமாகக் கலந்து பயன்படுத்த மைய அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்வதற்கான வசதியை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் சர்க்கரைச் சோளம் (sweet sorghum) மற்றும் சர்க்கரைக் கிழங்கு (sugar beet) மூலமும் எத்தனால் தயாரிக்கலாம் என்பதனால் இவைகளைப் பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

13. ஜெட்ரோப்பா (Jatropha) எனப்படும் காட்டாமணக்கு விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் பயோடீசலாக (Bio-Diesel) டீசலுக்கு மாற்றாக பயன்படும் என்பதால் தரிசு நிலங்களில் காட்டாமணக்கு விளைவிக்க ஊக்குவிக்கப்படும்.

14. இதற்கு முன்பிருந்த ஆட்சியில் 2001–2002ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் மொத்தம் 50 இலட்சம் ஏக்கர்




**தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு இந்நல வாரியம் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் மேலும் செம்மைப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல் படுத்தப்படும்.** இதற்கான தனிச் சட்ட முன்வடிவு இக்கூட்டத் தொடரிலேயே கொண்டுவரப்படும்.

17. இத்திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கும், விவசாயத் தொழிலாளர் களுக்கும் வழங்கப்படவுள்ள சலுகைகள் என்னென்ன; நன்மைகள் யாவை என்பதை தெரிவிக்க விரும்புகிறோம்.

- நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் மட்டுமல்லாது பதிவுபெற்ற குத்தகைதாரர்களும் இத் திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.
- இத்திட்டத்தின் கீழ் மகப்பேறு உதவி மாதம் ரூ.1,000/– வீதம் 6 மாதத்திற்கு ரூ.6,000/– வழங்கப்படும்.
- பத்தாம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவர்களுக்கு ரூ.1,250/–, மாணவி யருக்கு ரூ.1,500/–, 12ஆம் வகுப்பு தேர்ச்சி யடைந்த மாணவர்களுக்கு ரூ.1,750/–, மாணவியருக்கு ரூ.2,000/– உதவித் தொகையாக வழங்கப் படும். தொழிற்பயிற்சி (ITI), பல்தொழில்நுட்பப் பயிற்சி (Polytechnic), இளங்கலை, முதுகலை, சட்டம், தொழில் கல்வி, முதுகலைத் தொழில் கல்வி ஆகியவற்றைப் படிக்கும் மாணவ மாணவி யருக்கு ரூ.1,250/– முதல் ரூ.6,750/– வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் மகன்/மகள் ஆகியோரின் திருமணங்களுக்கு உதவித்தொகையாக, மணமகனுக்கு ரூ.3,000/–மும் மணமகளுக்கு ரூ.5,000/–மும் வழங்கப்படும்.
- 60 வயதை அடைந்து மூப்பின் காரணமாக வேலை செய்ய இயலாமல் ஆதரவற்ற நிலையில் உள்ள உறுப்பினர்களுக்கு மாதம் தோறும் ரூ.400/– ஓய்வூதியமாக வழங்கப்படும்.

(20 இலட்சம் ஹெக்டேர்) தரிசு நிலங்கள் உள்ளன என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதனையொட்டி தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இந்தத் தரிசு நிலங்களைச் சீர்செய்து நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் அரசு அளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கிராமம் வாரியாக தரிசு நிலங்கள் குறித்த புள்ளி விவரங்கள் வருவாய்த்துறை மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன. தரிசு நிலங்கள் அரசுப் புறம்போக்கு நிலங்களாகவும் தனியார் பட்டா நிலங்களாகவும் உள்ளன. **அரசுப் புறம்போக்கு தரிசு நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வழங்கப்படும். அதே நேரத்தில் சொந்தமாக தரிசு நிலம் வைத்திருக்கும் ஏழை விவசாயக் குடும்பங்களைப் பொறுத்தவரை, அந்நிலங்களை மேம்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற நிலமாக மாற்றித் தர வேண்டும் என்று அவர்களாகவே விரும்பிக் கேட்பார்களேயானால், அவற்றை அரசு செலவில் மேம்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாக மாற்றி அவர்களிடமே திருப்பி அளிக்கப்படும்.** இதற்கான தொடக்கப் பணிகள் நடந்து வருகின்றன.

16. தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோரின் நலனுக்காக, **தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம் 2000–ம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது**






- விபத்தினால் மரணம் அடைந்தால் ரூ. 1 இலட்சம் மற்றும் இயற்கை மரணத்திற்கு ரூ. 10,000 வழங்கப்படும். இரண்டு கைகள் அல்லது இரண்டு கால்கள் அல்லது ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு அல்லது இரண்டு கண்களில் பார்வை இழப்பு ஆகியவற்றுக்கு ரூ. 1 இலட்சம் உதவித்தொகை வழங்கப்படும். ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு ஆகியவற்றுக்கு ரூ. 50,000 வழங்கப்படும். மேற்குறிப்பிட்ட இனங்கள் தவிர வேறு காரணங்களால் கடுமையான காயம் ஏற்பட்டு ஏதேனும் உடல் உறுப்பை இழந்தால் ரூ. 20,000 உதவித் தொகையாக வழங்கப்படும்.
- ஈமச் சடங்கிற்கு ரூ. 2,000 உதவித் தொகை வழங்கப்படும்.

### கால்நடை வளர்ப்பு

18. விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களது வருவாயைப் பெருக்குவதே வழியாகும். எனவே விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாயை ஈட்ட வகை செய்யும் கால்நடை வளர்ப்புக்கு இவ்வரசு முன்னுரிமை அளிக்கும். குக்கிராமங்களிலுள்ள கால்நடைகளைப் பேணிப் பாதுகாக்க, அக்கிராமங்களுக்கே நேரடியாகச் சென்று முகாம்கள் மூலம் மருத்துவ வசதிகளை இலவசமாக அளித்திட ஏற்கெனவே தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

19. கோழி மற்றும் முட்டை உற்பத்தியில் தமிழகம் அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கின்றது. இவ்வகையில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் பறவைகளினால் ஏற்படும் நோய் குறித்த ஆய்வுக் கூடம் அமைக்கப்படுவதுடன் **நாகப்பட்டினம், கரூர், விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கால்நடை நோய்கள் குறித்த நுண்ணறிவுப் பிரிவுகள்** ஏற்படுத்தப்படும்.

### பாசனம்

20. காவிரி நதிநீர் ஆணையத்தின் முன்பாக சம்பந்தப்பட்ட அனைத்து மாநிலங்களும் தமது வாதங்களை ஏற்கெனவே முன்வைத்து, ஆணையத்தின் மதிப்பீட்டாளர்களின் அறிக்கையின் மீதான கருத்துக்களையும் தமிழ்நாடு தாக்கல் செய்துள்ள நிலையில் ஆணையத்தின் தீர்ப்பு மேலும் தாமதமாகாமல், விரைவில் அந்தத் தீர்ப்பைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும். முல்லைப் பெரியாறு பிரச்சினையில் தமிழகத்தின் தென் மாவட்ட விவசாயிகளுக்கு ஆறுதலாக அளிக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக கேரள அரசு புதிய சட்டத் திருத்தம் ஒன்றை செய்திருப்பதற்கு இந்த அரசு பெரிதும் வருந்துவதுடன், நமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள வேறு வழியின்றி நாம் உச்ச நீதிமன்றத்தையே நாடியுள்ள நிலையில், கேரள அரசு தனது நிலையினை மாற்றிக் கொண்டு நியாயத்தை உணர்ந்து நடக்க முன்வர வேண்டுமென்று தென் மாவட்ட விவசாயிகளின் சார்பில் வலியுறுத்துவோம்.

21. ரூ.3,900 கோடி மதிப்பீட்டில் பாசன வேளாண்மையை நவீனப்படுத்தவும், மற்றும் நீர்வள ஆதாரங்கள் மேலாண்மைத் திட்டப் பணிகளை விரைந்து செயல்படுத்தவும் பல்நோக்கு திட்டக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் ஆண்டில் 16 துணை வடிநிலப் பகுதிகளில் பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் விரைவில் எதிர்பார்க்கப் படுகிறது.

22. தமிழகத்தின் ஆறுகள், ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் தூர்வாரி

செப்பனிட்டு நவீனப்படுத்தும் பணியினைத் தொடர் திட்டமாக நிறைவேற்றுவோம்.

23. தொடர் மழை ஏற்படும் காலங்களில், சென்னை மாநகரில் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் கூவம், அடையாறு, கொசத்தலையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால், பள்ளிக்கரணை சதுப்பு நில ஏரி ஆகியவற்றின் வழியாக **வெள்ள நீர் சீராகக் கடலில் கலக்க வகைசெய்யும் வெள்ளத் தடுப்புப் பணிகள் ரூ. 279.01 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.**

24. திருச்சி புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள கோரையாறு, உய்யக்கொண்டான் கால்வாய், குடமுருட்டி ஆறு மற்றும் அரியாறு ஆகியவற்றில் தொடர் மழையின் போது ஏற்படும் வெள்ள நீரும் அதே சமயத்தில் காவிரியில் பெருகும் வெள்ள நீரும் சேர்ந்து எளிதில் வடிய முடியாமல் நகர்ப் பகுதிகளில் தேங்கி பொதுமக்கள் அவதியுறும் நிலை உள்ளது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக, வெள்ளம் வரும் காலங்களில் வெள்ள நீரின் பெரும் பகுதியைத் தடுத்துத் திருப்பி, தெற்கேயுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறண்ட பகுதிகள் பயன்பெறும் வகையில் கால்வாய்கள் மூலம் ஏரிகளை நிரப்பி, எஞ்சிய உபரி நீரை அக்கினியாற்றில் கொண்டு சேர்க்கும் திட்டம் ஒன்றினை ரூ.295 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

25. மதுரை மாநகரில் வைகை ஆற்றினை ஒட்டியுள்ள செல்லூர் ஏரி, பரவை ஏரி, தத்தனேரி, ஆனையூர், முடக்கத்தான் குளம் ஏரிகள், அவற்றின் கால்வாய்கள் மற்றும் சாத்தியாறு ஒடை ஆகியவற்றின் வெள்ளநீரை வைகையில் வடிக்கும் வண்டியூர் குளம் மற்றும் அதைச் சார்ந்த ஏரிகள், தொடர் மழை மற்றும் வெள்ளக் காலங்களில் மதுரை மாநகரின் பல பகுதிகளை வெள்ளத்தால் பாதிப்படையச் செய்கின்றன. வெள்ள நீரை வடிக்கும் கால்வாய்களை தூர்வாரி சீரமைத்துக் கரைகளை உயர்த்தி, வெள்ளநீரை வைகை ஆற்றில் சேர்க்கவும், புதிய மழை நீர் வடிகால்களை அமைக்கவும் ரூ.12 கோடி மதிப்பீட்டில் ஒரு வெள்ளப் பாதுகாப்புத் திட்டத்தை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

26. கடந்த தி.மு.க. ஆட்சியில் 1996ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டமான, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள 58 கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதி பெறும் திட்டம் மற்றும், 1999ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள 18ஆம் கால்வாய்த் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகளை முடிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன.

27. கோவைப் பகுதியைச் சார்ந்த "சிறுதுளி" தன்னார்வத் தொண்டு நிறுவனம் நொய்யல் ஆற்றுப் பாசனப் பகுதிகளில் செய்துள்ள நீர்நிலை மேம்பாட்டுப் பணிகள் பாராட்டத்தக்கன. மழைநீர் சேகரிப்பு, பாசனக் குளங்களைச் சீரமைத்தல், ஆறுகளில் மாசகற்றல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் "சிறு துளி" போன்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு இவ்வரசு நல்லாதரவும் ஊக்கமும் அளிக்கும். இது போன்ற தன்னார்வத் தொண்டினை மாதிரியாகக் கொண்டு நீர்நிலை மேம்பாட்டுப் பணிகள் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் அரசின் சார்பில் ஆக்கபூர்வமாக நடத்தப்படும்.






"இந்தியாவிலேயே
மிகக் குறைந்த விலையில்
அனைத்துக் குடும்ப
அட்டைதாரர்களுக்கும்
அரிசி கிலோ ஒன்று
ரூபாய் இரண்டு
என்ற விலையில் வழங்க
ஆணையிடப்பட்டுள்ளது."

28. இந்திய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் மேற் கொள்வதோடு, முதற்கட்டமாகத் தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்தை உருவாக்கிடப் பாடுபடுவோம்.

## பொது விநியோகத் திட்டம்

29. ஏழை எளியவர்களைப் பசிப்பிணியிலிருந்து பாதுகாக்கும் திட்டமாக விளங்கும் பொது விநியோகத் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்துவதுடன் தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் இவ்வரசு பொறுப்பேற்ற அன்றே **இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி கிலோ ஒன்று ரூபாய் இரண்டு என்ற விலையில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.** 2006–2007ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,950 கோடி உணவு மானியமாக நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

30. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் முறைகேடுகள் செய்வோர் மீது மிகக் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்பால் இந்த அரசு காட்டும் பொறுப்புணர்வுக்கு மாறாக; அரிசி போன்ற உணவுப் பொருட்களைக் கடத்தி அப்பாவி ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் கொள்ளையர்கள் மீது; மணல் திருடர்கள் மீது பாயும் குண்டர் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## உள்துறை

**31. "மழலைக் குழந்தையின் மவுன மொழியில்**
**– எந்த**
**மத பேதத்தைக் கண்டது அந்தக் குண்டு?**
**பின்எதற்காக**
**மரணப் படுகுழியில் அந்த மலர்களைக்**
**கொட்டி மூடியது இன்று?**
**மன ரணம் இனி ஆறுவது தான் என்று?"**

என நமது கலைஞர் அவர்கள் கவிதை மூலம் எழுப்பும் கேள்விக்குப் பதில் சொல்ல இயலாத பயங்கரவாதம் உலகத்தையே அச்சுறுத்தி – நாகரிகம், பண்பாடு, மனிதநேயம் ஆகிய முற்போக்குக் கூறுகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வரும் கொடுமையை நாம் கண்டு வருகிறோம். மும்பையில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பு – அதன் விளைவாக சுமார் இருநூறு அப்பாவிகள் பலியான நெஞ்சத்தைப் பதைபதைக்க வைக்கும் நிகழ்ச்சிகள் நமது நாட்டின் சரித்திரத்தில் மாறாத வடுக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பயங்கரவாதத்தைக் கண்டிப்பதுடன் – பலியானோரின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

32. 1969ஆம் ஆண்டில் தி.மு.கழக அரசு திரு. ஆர்.ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் இந்திய மாநிலங்களிலேயே முதல் முறையாக "போலீஸ் கமிஷன்" ஒன்றை அமைத்து – அந்தக் கமிஷன் வழங்கிய 133 பரிந்துரைகளில் ஊதிய உயர்வுகள் உட்பட 115 பரிந்துரைகளை உடனே ஏற்று நடைமுறைப்படுத்தியது. 1989ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக கழக அரசு அமைந்த போது முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. பி. சபாநாயகம், ஐ.ஏ.எஸ்., அவர்களுடைய தலைமையில் இரண்டாவது "போலீஸ் கமிஷன்" அமைக்கப்பட்டு – அந்தக் கமிஷன் வழங்கிய 112 பரிந்துரைகளில் 87 பரிந்துரைகள் மீது முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

33. இவ்வாறு கழக ஆட்சிக் காலத்தில் காவலர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளைச் செய்ய இரண்டுமுறை போலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட்டதைப் போலவே,



**காவலர் குறைதீர்க்க, காவல் துறை மேலும் வலிவும் பொலிவும் பெற மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைப்பதென இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.**

34. எந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் அன்றாடம் நடந்துவரும் சாலை விபத்துகளும், அவற்றில் ஏற்படும் மனித உயிர் இழப்புகளும் நமது மனதில் கலக்கத்தையும் பெருங்கவலையையும் உருவாக்கி வருகின்றன. சாலை விபத்துக் கொடுமைகளைத் தடுப்பதற்கு இந்த அரசு பின்வரும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதியிருக்கின்றது:-

- மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுவதை முற்றிலும் கட்டுப்படுத்த சுவாசப் பரிசோதனைக் கருவிகளை காவல் துறையினர் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். **வாகன ஓட்டிகள் குடிபோதையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கவும், ஓட்டுநர் உரிமத்தையே ரத்து செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**
- பெரும்பாலான சாலை விபத்துகளுக்கு ஓட்டுநர்களே காரணம் என்பதால் அவர்களுக்கு அவ்வப்போது காவல் துறையும் போக்குவரத்துத் துறையும் இணைந்து தேவையான மறு பயிற்சிகள் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலைகளில் “ஹலோஜன்'' விளக்குகளையும், கண்கூசும் பிரகாசமான விளக்குகளையும் பயன்படுத்துவதால், பயங்கர விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே அனைத்து வாகனங்களிலும் முகப்பு விளக்குகளின் நடுவில் கறுப்பு வண்ணம் பூசுவது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும்.

35. மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். கடந்த இரு மாதங்களாக கள்ளத்தனமாக மணல் அள்ளுதல், பொது வினியோகத் திட்டத்தின் கீழ் வினியோகிக்கப்படும் அரிசியைக் கடத்துதல் போன்ற குற்றங்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

36. இந்நிதியாண்டில் காவல்துறையை நவீனமயமாக்கல் திட்டம் ரூ.68 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், காவல்துறைக்கான கட்டடங்கள் கட்டுதல், குடியிருப்புகள் அமைத்தல், காவல்துறையினருக்கு நவீன ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் வாங்குவதற்கு இத்தொகை செலவிடப்படும்.

37. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்கு ரூ. 23 கோடி மதிப்பீட்டில் சிறப்பு வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வண்டிகள் வாங்கப்படும். தீயணைப்புப் பணியாளர்களுக்கு தீயணைப்பு உடைகள் மற்றும் ரசாயன கவச உடைகளுடன் கூடிய மூச்சுக்கருவிகள் வழங்கப்படும்.

### நீதித்துறை

38. நீதித் துறைக்கும் அரசின் நிருவாகத் துறைக்கும் இடையே ஆரோக்கியமான அணுகுமுறை உருவாவதற்கு இந்த அரசு எடுத்து வரும் முயற்சிகளைப் பத்திரிகைகள் பாராட்டியுள்ள நிலையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். உதாரணமாக நீதித்துறையின் அத்தியாவசியத் தேவையாக சுட்டிக்காட்டப்பட்ட பணியாளர்கள், கட்டடங்கள், இடவசதிகளைப் பெருக்குவதற்கான மனைகள் போன்ற தேவைகள், நீண்டகாலமாக நிறைவேற்றித் தரப்படாமல் இருந்தவை, இந்த அரசு பதவியேற்ற பிறகு நிறைவேற்றப்பட்டு வருவதைக் கூறலாம்.






39. சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அருகில் உள்ள தமிழ்நாடு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கான அரசாணை இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தில் உள்ள அரசு வழக்கறிஞர்களுக்காக தனியாக ஒரு கட்டடம் ரூ. 2.03 கோடி மதிப்பீட்டில் உயர்நீதிமன்ற வளாகத்திலேயே கட்டப்படும். மணமுறிவு வழக்கு சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்க, குடும்பநல நீதிமன்றங்கள் ஒவ்வொன்றிலும் இரு முழுநேர ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர். நீதித் துறைக்குத் தேவையான கட்டடங்கள் மைய அரசின் நிதி உதவியுடன் படிப்படியாகக் கட்டப்படும். சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளைக்குத் தேவையான 350 பணி இடங்களுக்கான ஒப்புதல் வழங்கப்படும். நீதி நிருவாகத்திற்காக 2006–2007ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.212.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தமிழில் கல்வி

40. தேர்தல் அறிக்கையைத் தொடர்ந்து ஆளுநர் உரையில் உறுதியளித்தவாறு, “தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் தான் இல்லை” என்ற நாணமுறும் நிலையைப் போக்க நம் தமிழ் மொழியை, பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களும் கட்டாயமாக கற்பதற்கான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி, **அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆண்டிலேயே முதலாம் வகுப்பில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடங்கும். இது வரும் ஆண்டுகளில் படிப்படியாக பத்தாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும்.**

### பள்ளிக்கல்வி

41. இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே அரசுப் பள்ளிகளில் காலியாகவுள்ள 7,635 ஆசிரியர் பணியிடங்களை, காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்ப அரசு ஆணையிட்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதிய அடிப்படையில் பணியாற்றிய சுமார் 45,987 ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல், காலமுறை ஊதியம் வழங்கப்படுகிறது. **இனி வரும் காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏற்படும் ஆசிரியர் காலியிடப் பணியிடங்கள் காலமுறை ஊதிய அடிப்படையிலேயே நிரப்பப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.**

42. அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக வெளிப்படையான கலந்தாய்வுமுறை வாயிலான பொது மாறுதலுக்கான வழிகாட்டும் நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2006–2007ஆம் கல்வி யாண்டில் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல்






நடைமுறைப்படுத்தப்பட்டு ஆசிரியர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. **ஆசிரியர்களுக்கான மாறுதல்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறையினை அரசுத் துறைகள் அனைத்திற்கும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.**

43. தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு தமிழ்நாட்டில் கல்லாமை இருளை நீக்கப் பள்ளிகள் பல திறந்து மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் நாளை 'கல்வி வளர்ச்சி நாள்' என்று அறிவித்து அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணையைச் சட்டமாக்குவதற்கு இந்தக் கூட்டத்தொடரிலேயே சட்ட முன்வடிவு கொண்டு வரப்படும். இந்த ஆண்டு ஜூலை 15ஆம் நாளன்று பள்ளிகளில் விழா எடுத்து காமராஜர் திருவுருவப் படத்தை அலங்கரித்து மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். அந்நாளிலிருந்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்களுக்கு வாரத்திற்கு இரு முட்டைகள் வழங்கும் திட்டமும் தொடங்கப் பட்டுள்ளது.

44. **கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மாணவர்கள் இலவச பஸ் பாஸ் திட்டத்தையும் கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றும்.** நல்ல காரியங்களை எந்த அரசு செய்தாலும், கலைஞர் தலைமையிலான அரசு, அதனை கட்சிக் கண்ணோட்டத்துடன் கைவிட்டு விடாமல் செயல்படுத்தும் என்பதற்கு இதுவும் ஒரு தக்க எடுத்துக் காட்டாகும்.

45. தி.மு.கழக ஆட்சியில் 1999–2000ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப் பட்டு இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்ற **பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும்போதே மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ்கள், வாழ்விடச் சான்றிதழ்கள், குடும்ப வருமானச் சான்றிதழ்கள் ஆகியன வழங்கும் திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வரும்.**

46. மத்திய அரசின் உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வித் திட்டம் ரூ.723.18 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக மாநில அரசின் பங்காக ரூ.180.80 கோடி இத்திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கல்வித் துறைக்கு இத்திருத்த வரவு செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.5,438.88 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உயர் கல்வி

47. பொறியியல் கல்லூரிப் படிப்புகளுக்கான சேர்க்கை முறையில் கடந்த ஆண்டுகளில் நிலவி வந்த குழப்பத்தை அகற்றி, ஒற்றைச்சாளர முறையில் முன்பிருந்த 39,000 இடங்களைவிட, இப்போது கூடுதலாக 13,000 இடங்களைப் பெற்று, மொத்தமாக 52,000 இடங்கள் மாணவர்களுக்குக் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தனியார் சுயநிதிக் கல்லூரிகளின் நிருவாக ஒதுக்கீட்டிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவது இந்த ஆண்டு சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டுள்ளது.

48. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடியும்; ஆளுநர் உரையில் தெரிவித்தவாறும் தொழிற்கல்விப் படிப்புகளுக்கான **பொது நுழைவுத் தேர்வை வரும் 2007–2008ஆம் ஆண்டு முதல் அகற்றிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கல்வியாளர்கள் கொண்ட குழு ஒன்றினை இந்த அரசு அமைத்துள்ளது.**






49. தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு கடந்த காலத்தில் அரசுப் பொறியியல் கல்லூரிகளில் பல மடங்காக உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணத் தொகையைக் குறைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதைப் போன்றே, ஏழை எளிய மாணவர்களின் கல்விச் செலவைக் குறைக்கும் வகையில், **அரசுப் பொறியியல் மற்றும் கலைக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்பட்டு வரும் அனைத்துப் பாடப்பிரிவுகளையும் பொதுவகைக் கட்டணம் செலுத்தும் பாடப்பிரிவுகளாக மாற்றுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

50. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற் கிணங்க பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்விக்கான தேவை பெருகி வருவதாலும்; அக்கல்வியில் தனிச்சிறப்பு மிக்க உயர் பட்டப் படிப்புக்கான அவசியம் வளர்ந்து வருவதாலும், **சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக் கழகத்தைப் போன்ற தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை திருச்சியில் ஒன்றும், கோவையில் ஒன்றுமாக நிறுவிடவும் – பின் தங்கிய பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்காகக் கோவை மாவட்டம் வால்பாறையிலும், சேலம் மாவட்டம் மேட்டூரிலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கிடவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது.**

**51. ஜூலை 15ஆம் நாள் காமராஜர் பிறந்த நாள் விழாவில் முதலமைச்சர் அறிவித்தவாறு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்ள கல்வியியல் ஆய்வு மையம் (Centre for Educational Research) ஒன்று அமைக்கப்படும்.**

52. கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவியர் விரைவாக வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கேற்ற வழி வகைகளை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் – **ஊரகப் பகுதிகளில் பல் மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், உடல் இயக்க மருத்துவக் கல்லூரிகள் (Colleges of Physiotherapy) அமைந்திடத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.**

53. திராவிடத் தலைவர்கள் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார் ஆகியோரால் தோற்றுவிக்கப் பட்டு வழி நடத்தப்பட்ட நீதிக் கட்சி ஆட்சியில் 1923ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட "Madras University Act, 1923" என்ற சட்டம்தான் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு இன்று வரையிலும் உறுதி மிக்க சட்டமாக இருந்து வருகிறது. உயர்கல்விக்கு நீதிக் கட்சி அளித்த கொடை என்றே இச்சட்டம் அழைக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர்கல்வி பெறுவதற்கும், பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களாக இடம் பெறுவதற்கும் முதன் முதலில் நீதிக்கட்சி ஆட்சிதான் வழிவகுத்துக் கொடுத்தது என்பது சரித்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ள சான்று.

54. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேரூன்றிய திராவிடர் இயக்கம் இன்று வரையில் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் பல ஏற்றம் தரும் மாற்றங்களை உருவாக்கியுள்ளது என்ற உண்மையை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் – திராவிட இயக்க வரலாறு, அதன் தொடர்பான அரசியல் – சமூகச் சிந்தனைகள், சீர்திருத்தங்கள், சமூக – பொருளாதாரக் கொள்கைகள், சட்ட திட்டங்கள், மொழி வளர்ச்சி போன்றவற்றைப் பற்றி உயர்நிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாகவும், எதிர்காலத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்திடும் வகையிலும்; **சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழா நடைபெற இருப்பதை யொட்டி; சென்னைப் பல்கலைக்கழகத்தில், பல்கலைக்கழக வளாகத்திலேயே "திராவிட இயக்க ஆய்வு மையம்" (Centre for Research on Dravidian**

**"மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்."**

**Movement) ஒன்றினை நிறுவிட இந்த அரசு முடிவெடுத்துள்ளது.**

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன்

55. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ''வருமுன் காப்போம்'' என்ற பெயரில் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் மருத்துவ வல்லுநர்களைக் கொண்ட குழுக்களின் வாயிலாக இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, **நடப்பு ஆண்டிலும் வரும் ஆண்டிலும் 9,000 இலவச மருத்துவ முகாம்கள் மாநிலமெங்கும் நடத்தப்படும்.** இத்திட்டத்திற்காக ரூ.11.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

56. தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக, **235 அரசு மருத்துவமனைகளில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.** இம்மருத்துவமனைகளுக்குத் தேவையான கருவிகள் மற்றும் நவீன மருத்துவச் சாதனங்கள் ரூ.70 கோடி செலவில் வழங்கப்படும். மேலும், அவசர காலங்களில் நோயாளிகளை மருத்துவமனைகளுக்குக் கொண்டு சேர்க்கும் சேவைகளை அளிக்கும் வகையில் 14 மாவட்டங்களிலுள்ள கிராமப்பகுதிகளுக்கு 198 அவசர ஊர்திகள் வழங்கப்படும். 32 அரசு மருத்துவமனைகள் 24 மணி நேர அவசர மற்றும் சிசுக் கவனிப்பு மையங்களாக தரம் உயர்த்தப்படும்.

57. ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆய்வக வசதிகளை மேம்படுத்தும் வகையில் **தமிழகத்தில் உள்ள 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செமி ஆட்டோ அனலைசர் கருவிகள் ரூ.17 கோடி செலவில் வழங்கப்படும்.** மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மற்றும் ஓமியோபதி மருத்துவ சிகிச்சை பிரிவுகள் இந்த ஆண்டில் தொடங்கப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருந்துகள் வாங்குவதற்காக ரூ.174.28 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

58. சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குத் தேவைப்படும் கூடுதல் கட்டடங்கள் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். நோய் கண்டறியும் நவீன MRI ஸ்கேன் வசதிகள் மாநிலமெங்கும் எளிதில் கிடைத்திடும் வகையில் **திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, கோவை மற்றும் வேலூர் ஆகிய அரசு மருத்துவமனைகளில் ரூ23.95 கோடி செலவில் MRI ஸ்கேன் மையங்கள் அமைக்கப்படும்.** சென்னை பொது மருத்துவமனையில் அதிநவீன 64 Slice CT Scanner ரூ.5.50 கோடி செலவில் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்தால் அமைக்கப்படும்.

59. **மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, விழுப்புரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்கப்படும்.**

### தொழில் வளர்ச்சி

60. தொழில் வளர்ச்சியில் தமிழகத்தை முன்னணி மாநிலமாக ஆக்கிட இந்த அரசு இடையறாது பாடுபடும். புதிய அரசு பொறுப்பேற்றுள்ள இந்தச் சில நாட்களுக்குள்ளாகவே மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. உற்பத்தித் துறையில் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும்; தமிழக தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சர்வதேசச் சந்தையில் தரத்திலும் விலையிலும் போட்டியிடக் கூடிய அளவிற்கு மேம்படுத்தவும்; அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும்; மாநிலத்தின் பல்வேறு பகுதிகள்






தொழில்துறையில் வளர்ச்சி அடையவும்; மாநிலத்தில் உள்ள தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளைக் கலந்தாலோசித்து ஒரு **புதிய தொழில் கொள்கை நடப்பு ஆண்டிலேயே அறிவிக்கப்படும்.** தமிழ்நாட்டில் முன்னணித் தொழில்களாக விளங்கும் தோல்பதன மற்றும் தோல் பொருட்கள் தொழில், துணித் தொழில், மோட்டார் வாகன உற்பத்தித் தொழில் மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொழில் (Electronic Hardware) ஆகியவற்றை ஊக்குவித்து வலுப்படுத்திடும் வண்ணம் இந்த அரசின் தொழில் கொள்கை வகுக்கப்படும்.

61. தொழில் மற்றும் வர்த்தகத்தில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகவும், தொழில்கள் தங்கு தடையின்றி வளர்வதற்காகவும் **முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிறப்புக் குழு** (Special Task Force) **ஒன்று அமைக்கப்படும்.**

62. மாநிலத்தில் சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை (Industrial Corridor of Excellence) ஒன்றினை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சிறப்பு பெருவழிச்சாலையில் தொழில் பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நகரியங்கள் அமைக்கப்பட்டு, அவை துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுடன் விரைவு நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் பாதைகள் மூலம் இணைக்கப்படும். இச்சிறப்புத் தொழில் பெருவழிச்சாலை உலகத்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியுடன் அமையும்.

63. இந்தியப் பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் 2-7-2005 அன்று மதுரையில் நடைபெற்ற சேது சமுத்திரம் திட்டப் பணிகள் தொடக்க விழாவில் – அகில இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் – கலைஞர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று தமிழகத்தில் 400 கோடி ரூபாய் செலவில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் (National Automotive Testing and Research and Development Infrastructure Project) ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார். **அதற்கென சென்னைக்கருகில் ஒரகடம் என்னுமிடத்தில் வாகனச் சோதனை மையம் அமைவதற்குரிய சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் அந்த மையம் நிறுவப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.**

64. வேளாண்மைத் துறையில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மருத்துவத்துறையில் பல்வேறு நோய்களுக்கு புதிய மருந்துகளை கண்டறியவும் பெரிதும் பயன்படும் **உயிரியல் தொழில்நுட்பத்துறைக்கு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்றை இவ்வரசு அமைக்கும்.**

65. தமிழ்நாட்டில் கணினி பயன்பாட்டை அதிகரிக்கவும், கணினியை எல்லோரும் எளிதில் வாங்கக் கூடிய நிலையை உருவாக்கவும் **தமிழகத்தில் நிறுவ முன் வரும் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குச் சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும்.** தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் **ரூ. 100 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் கணினித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் கணினிகளின் மீது விதிக்கப்படும் பொது மற்றும் மத்திய விற்பனை வரியிலிருந்து உச்சவரம்பின்றி விலக்கு அளிக்கப்படும்.** இந்தச் சலுகை இந்தத் தொழிற்சாலைகள் வணிக ரீதியாகச் செயல்படும் ஆண்டிலிருந்து பத்தாண்டுகளுக்கு அளிக்கப்படும்.

66. தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள தென்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். இந்தக் குறிக்கோளுடன், முன்னர் தி.மு. கழக ஆட்சியில் நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு மத்திய அரசால் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப் பட்டது. இங்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் வண்ணம், இந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா திட்டத்தை உயிரூட்டிச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

67. தமிழக மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கிடும் வண்ணம் – இப்பொழுது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சேலம் உருட்டாலையை சர்வதேச அளவுக்கு உயர்த்திட புதிய குளிர் உருட்டு ஆலை (Cold Rolling Mill) அமைத்திட 1553 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ள மத்திய அரசின் நடவடிக்கையை நாம் நன்றியுடன் பாராட்டி வரவேற்கிறோம்.

## தகவல் தொழில்நுட்பம்

68. மென்பொருள் தயாரிப்பில் பல்லாயிரக் கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சேவைப் பணிகளில் இலட்சக்கணக்கான பட்டதாரி களுக்கும் வேலைவாய்ப்பைத் தரவல்லதாகத் தகவல் தொழில்நுட்பத் துறை விளங்குகிறது. இத்துறைக்கு இவ்வரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து ஒரு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையினை வகுக்கும். அரசுத் துறைகளில் மின் ஆளுமையைச் செம்மையாகச் செயல் படுத்தி மக்களுக்கு நல்ல முறையில் சேவைகளை அளிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மக்கள் அன்றாடம் அணுகும் பத்து முக்கியத் துறைகளில் மின் ஆளுமைத் திட்டம் முடுக்கி விடப்படும்.

69. முன்னர் தி.மு.கழக ஆட்சியில், சென்னை தரமணியில் பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்கள் அமைந்திடு வதற்கேற்ற வகையில் உலகத் தரத்திலான "டைடல்" பூங்கா நிறுவப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். அதனைத் தொடர்ந்து இரண்டாவது டைடல் பூங்கா சென்னையில் அமையுமென்று முதல் அமைச்சர் கலைஞர் அப்போது அறிவித்தார். அதன்படி, **சென்னை தரமணியில் தற்போது இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**




70. 15–6–2006 அன்று தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள விப்ரோ மற்றும் இன்போசிஸ் நிறுவனங்களுக்கு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருடன் நேரில் சென்று பார்வையிட்டு விவாதித்ததன் அடிப்படையில்; **தமிழ்நாடு அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா நிறுவனமும் இணைந்து, சென்னையில் உள்ள டைடல் பூங்கா போன்றதொரு அமைப்பினைக் கோவையில் உருவாக்குவது பற்றியும்; இன்போசிஸ் நிறுவனம் அடுத்த மூன்றாண்டுகளில் சென்னையில் 1,250 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்து, 50 இலட்சம் சதுர அடிகள் கொண்ட மென்பொருள் நிறுவனத்திற்கான கட்டிடங்களைக் கட்டி, 25 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவது என்றும் முடிவெடுக்கப்பட்டு அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

71. மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை – தகவல் தொழில்நுட்பம், வடிவமைத்தல் உள்ளிட்ட உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையத்தை (National Centre of Excellence - Indian Institute of Information Technology, Design and Manufacturing) – சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைத்திட முடிவு செய்துள்ளது. அதன்படி 2003–ஆம் ஆண்டு முதல் மத்திய அரசிடம் நிலம் ஒப்படைக்கப்படாமலும், முடிவெடுக்கப்படாமலும் இருந்ததால், கட்டிடப் பணிகள் முடிந்து இக்கல்வி நிறுவனம் தொடங்கப்படுவது தாமதப்பட்டு வந்ததைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு அமைந்தவுடன் முக்கியமான இந்த நேர்வில் – தேவையான நிலத்தை மத்திய அரசிடம் ஒப்படைக்கவும், உரிய ஒத்துழைப்பினை நல்கி இணைந்து செயல்படவும் – முடிவெடுத்து அறிவித்துள்ளது.

**"சென்னை தரமணியில் தற்போது இரண்டாவது டைடல் பூங்கா அமைப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது."**

72. **தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்குத் தேவையான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் செய்வது குறித்து அரசுக்குப் பரிந்துரைகள் அளிக்க இத்துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில தகவல் தொழில்நுட்பக் குழு (State Information Technology Task Force) ஒன்று அமைக்கப்படும்.**

73. தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற் கேற்ப, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் செப்டம்பர் 15 அறிஞர் அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக்களையொட்டி இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் செப்டம்பர் திங்கள் முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்படும். தற்போது முதற்கட்டமாக வழங்கப்படவுள்ள 30 ஆயிரம் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு செலவாகும் தொகை அன்னியில் இத்திட்டத்திற்கு இந்த நடப்பாண்டிற்கு மட்டும் 750 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதை அறிந்து கொள்ளலாம்.

74. இந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகளை முறையாகக் கொள்முதல் செய்யவும் குறை நேராமல் விநியோகிக்கவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் தலைமையிலான இக்குழுவில் தி.மு. கழகத்தின் சார்பாக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. டி. சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சி. கோவிந்தசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் திரு. கு. செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் திரு. எச். அப்துல் பாசித், புரட்சி பாரதம் சார்பில் திரு. பூவை மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இக்குழு 27.6.2006 அன்று கூடி, இத்திட்டத்தை துவங்கிவைக்க முதற் கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை, வெளிப்படையான தேசிய ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்வது என்றும், அடுத்த கட்டமாக இத்திட்டத்திற்குத் தேவைப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி (International Open Competitive Bidding) முறையில் கொள்முதல் செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தேசிய ஒப்பந்தப்புள்ளிகள் 24.7.2006க்குள் பெறப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்படும். முதற்கட்டமாக, பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், சமத்துவபுரம் இதுவரை அமைக்கப்படாத நீலகிரி மாவட்டத்தில் அங்குள்ள மலைவாழ் பழங்குடி குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வடசென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றுமாக, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்திலுள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

## சிறு மற்றும் குறுந்தொழில்கள்

75. ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஆற்றி வரும் முக்கியப் பங்கை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. தொழில் வளத்தில் பின்தங்கிய




பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியின்போது முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில்வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறியத் தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ரூ.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளின் மேம்பாடு

76. சாலைகளை நன்கு பராமரிக்கவும், போக்குவரத்து அதிகமாக உள்ள நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், பழைய பாலங்களைப் புதுப்பிக்கவும், புதிய பாலங்கள், குறிப்பாக இரயில்வே மேம்பாலங்கள் கட்டவும் இந்த அரசு தலையாய முன்னுரிமை அளிக்கும்.

77. சாலைப் பராமரிப்பு பணிகளுக்கு மட்டுமே இந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.804 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சாலைகள் மற்றும் பாலங்களுக்கான மூலதன ஒதுக்கீடுகளுக்கென ரூ.2,461 கோடி என்ற உயர் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைகளில் பெருகி வரும் போக்குவரத்தைக் கருத்தில் கொண்டு 2664 கி.மீ நீளமுள்ள முக்கிய மாவட்டச் சாலைகள் மற்றும் இதர மாவட்டச் சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும். மேலும், 3812 கி.மீ நீளமுள்ள இதர மாவட்டச் சாலைகள் முக்கிய மாவட்டச் சாலைகளாக மாற்றப்படும். இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு அறிவித்துள்ள பாரத் நிர்மாண் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 4122 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள் தரம் உயர்த்தப்படும்.




78. **மதுரை மாநகரப் பகுதியின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு மதுரை ஆரச்சாலையின் இரண்டாவது கட்டப் பணிகள் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.** பின்னலாடைத் தொழிலில் ஆண்டுக்கு ரூ.8,000 கோடிக்கும் அதிகமாக ஏற்றுமதி செய்து சாதனை படைத்து வரும் **திருப்பூர் நகரத்தின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, ரூ.70 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் நகரத்தின் வட்டச்சாலை மற்றும் அணுகு சாலைகளை மேம்படுத்தும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.** திண்டிவனத்திலிருந்து திருச்சி வரையிலான தேசிய நெடுஞ்சாலையை ரூ.1,260 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக மாற்றும் திட்டப் பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அண்மையில் தொடங்கப் பட்டுள்ளன.






## மின் சக்தி

79. தடையற்ற தரமான மின்சாரத்தை வழங்குவதற்கு இந்த அரசு முக்கியத்துவம் அளிக்கும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நிறுவு திறன் 10,011 மெகாவாட்டாகும். இந்த ஆண்டில் 749 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தித் திறன் நிறுவப்பட்டு இந்த ஆண்டு இறுதியில் மொத்த உற்பத்தி நிறுவு திறன் 10,760 மெகாவாட் ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கூடங்குளம் அணுமின் திட்டத்தின் முதல் பிரிவு இந்த ஆண்டிலும் இரண்டாம் பிரிவு அடுத்த ஆண்டிலும் செயல்படத் தொடங்கும். மேலும் கூடங்குளம் அணுமின் திட்டத்தில் 2000 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது மற்றும் நான்காவது உற்பத்தி அலகுகளை விரைவில் செயல்படுத்த மத்திய அரசை இந்த அரசு வலியுறுத்தும். பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில், 1000 மெகாவாட் திறனுடைய ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரித் திட்டத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் செயல்படுத்த இவ்வரசு இசைந்துள்ளது.

80. ஊரகப் பகுதிகளில் தடையின்றித் தரமான மின்சாரம் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் நடப்பு ஆண்டில் ரூ.195.54 கோடி மதிப்பீட்டில் மின்பகிர்மானத் திட்டங்களை மேற்கொள்ளும். இதற்காக, **ஊரகப் பகுதிகளில் 25 புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் 2706 புதிய மின் பகிர்வு மின் அழுத்த மாற்றிகள் நிறுவப்படும். 24 துணை மின் நிலையங்களில் மின் அழுத்த மாற்றிகளின் திறன் அதிகரிக்கப்படும்.**

81. முதலமைச்சர் கலைஞரின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார திட்டம் விரிவுபடுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் நினைவு கூர்வர். தேர்தல் அறிக்கையில் அளிக்கப் பட்ட வாக்குறுதிப்படி **சுயநிதித் திட்டத்தின் கீழ் சிறப்புத் தொகை கட்டி மின் இணைப்பு பெற்ற இரண்டு இலட்சத்து 40 ஆயிரம் விவசாய மின் இணைப்புகளுக்கும் இனி இலவச மின்சாரம் வழங்கப்படும்.**

82. விவசாய மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதற்கும் வீட்டு மின் இணைப்புகளுக்கு குறைந்த கட்டண வீதத்தில் மின்சாரம் வழங்குவதற்கும் கிராமப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கு இலவச மின்வசதி வழங்குவதற்கும் மாநில அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்கி வருகிறது. இந்த வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக ரூ.1,530 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## போக்குவரத்து

83. பயணியர் நலன் கருதி, **நடப்பாண்டில் 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்காக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

84. 1997ஆம் ஆண்டு தி.மு. கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற மினிப் பேருந்து திட்டத்தை, தொடர்ந்து கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் விரிவுபடுத்தி சிறப்பாகச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது.

85. அண்மைக் காலமாக நமது நாட்டில் விமானப் போக்குவரத்தின் தேவை அதிகமாகி, அதன் காரணமாக, பெரும் எண்ணிக்கையில் விமானிகளுக்கும் தேவை ஏற்பட்டுள்ளது. இத்தேவையைப் பூர்த்தி செய்யவும், விமானவியல் துறையில் உயர்கல்வி அளிக்கவும், முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அறிவித்தவாறு, **மறைந்த பாரதப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி**




அவர்களின் நினைவாக திருப்பெரும்புதூரில் 'ராஜீவ் காந்தி விமானவியல் உயர்கல்வி மற்றும் விமான ஓட்டிகள் பயிற்சி அகாடமி' ஒன்று அமைக்கப்படும். இது பற்றி மத்திய விமானப் போக்குவரத்துத் துறையோடு தமிழக அரசு தொடர்பு கொண்டுள்ளது.

86. கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் ஒரு பெரிய துறைமுகம் (Major Port) அமைப்பதற்குச் சாதகமான சூழல் இயற்கையிலேயே இருப்பதாக ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்படும் இச்சமயத்தில், கிழக்கு மேற்கு ஆசிய நாடுகளை இணைக்கும் முக்கிய கப்பல் போக்குவரத்து வழித்தடத்தில் மிகவும் தேவைப்படும் சரக்கு மாற்றும் துறைமுகமாக அமையும் வகையில் குளச்சலில் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

## சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்

87. சென்னை மாநகரத்தில் வளர்ந்து வரும் போக்குவரத்துத் தேவைகளுக்கு மெட்ரோ இரயில் திட்டமே சரியான தீர்வாக அமையும் என்பதால் மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. **சென்னை மாநகரில் பெருகி வரும் குடியிருப்புகள் மற்றும் அடிப்படை வசதிகளுக்கான பல்வேறு தேவைகளைக் கருத்தில் கொண்டு, சென்னைக்கு அருகே துணை நகரங்களை (Satellite Towns) உருவாக்கிட இந்த அரசு கருதியுள்ளது.** உரிய ஆயத்தப் பணிகளை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமமும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் செய்து வருகின்றன.




88. சென்னை மாநகரில் அதிகரித்துவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப தேவைப்படும் மின்வசதி, சாலை வசதிகள், குடிநீர், கழிவு நீர் மற்றும் மழை நீர் வடிகால் ஆகிய அடிப்படை வசதிகளை உருவாக்கும் பொருட்டு ஒரு பெரும் திட்டம் (Master Plan) வகுக்கப்படும்.

## நகராட்சி நிர்வாகம்

89. நகர்ப்புறக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு KfW என்னும் ஜெர்மானிய அரசு நிதி நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடனுதவி பெறக் கருதப்பட்டுள்ளது.

**90. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறு சீரமைப்புத் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழ் நகர்ப் பகுதிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் ரூ. 410 கோடி மதிப்பீட்டில் செய்து கொடுக்கப்படும்.**

91. சேலத்தின் மையப் பகுதியில் ஓடும் திருமணிமுத்தாற்றை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி அழகுபடுத்தும் திட்டம் வகுக்கப்பட்டு, ரூ.5 கோடி மதிப்பீட்டில் 1996-2001 ஆண்டுகளில் முதல் கட்டமாக 1.5 கி.மீ நீளத்திற்கு மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டது. இரண்டாவது கட்டமாக; **திருமணிமுத்தாறு மற்றும் இதில் கலக்கும் வெள்ளக்குட்டை ஆறு ஆகியவற்றை 5.66 கி.மீ நீளத்திற்கு சீரமைக்க ரூ.31.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியிலிருந்து (TNUDF) நிதியுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.**




92. ஆசிய அளவில் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம் முன்னணி இடத்தை வகிக்கின்றது. இந்நகரின் பிரமிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை செம்மையான முறையில் அளிக்கும் வகையில் **திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும்.**

93. ஜப்பானிய விஞ்ஞானிகள் கிருமிகளைப் பயன்படுத்தி, கழிவுகளை அகற்றுவதில் வெற்றி கண்டுள்ளனர். இவ்வகைக் கிருமிகள், திறன்மிக்க கிருமிகள் (Efficient Microbes) என்று அழைக்கப்படுகின்றன. EM என்னும் இக்கிருமிகளின் உணவே கழிவு தான் என்பதால், இம்முறையைப் பயன்படுத்தி கழிவு நீரால் மாசுபட்டுள்ள நீர் நிலைகள், ஆறுகள், கால்வாய்கள் ஆகியவற்றைச் சுத்தப்படுத்த சோதனை ரீதியில் ஒரு முன்னோடித் திட்டத்தை (pilot scheme) மேற்கொள்ள அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## குடிநீர் வழங்கல்

94. தமிழ்நாட்டில் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், 55,149 ஊரகக் குடியிருப்புகளில் வசிப்போர் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் பெறும் நிலை உள்ளது. **இக்குடியிருப்புகள் அனைத்தும் மூன்று ஆண்டுகளில் முழுமையான குடிநீர் வசதி பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். குடிநீர் வசதி பெறாத 968 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படும்.** ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ் ரூ.411 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**95. குடிநீரில் ப்ளோரைடு அதிகமாக உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு ஒரே தீர்வான ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் திட்டத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.** இத்திட்டம் தொடர்பாக 17-7-2006 அன்று இவ்வங்கியின் உயர் அலுவலர்கள் முதல் அமைச்சரைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

**96. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களில் பல ஆண்டுகளாக நிலவி வரும் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக,**



**காவிரி நீரை கொண்டுவந்து வழங்கும் 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பெரும் திட்டத்தின் பணிகள் இந்த ஆண்டு தொடங்கும்.**

97. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்த தாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தி, வாரியத்திற்கும் ஒப்பந்ததாரருக்கும் இடையே போடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளில் அரசுக்கும் வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களைச் செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின் மத்திய அரசின் சாத்தியத்திற்கான நிரவல் நிதி உதவி (viability gap funding) முறையின்கீழ் நிதி உதவி கோரப்படும்.

98. மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிதி உதவியைப் பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்படும்.

## உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு தேர்தல்கள்

99. மக்களாட்சி மாண்பிலும், அதிகாரப் பரவலிலும் அசைக்க முடியாத நம்பிக்கையும், மிகுந்த ஆர்வமும் கொண்டுள்ள இந்த அரசு உரிய காலத்தில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையான தேர்தல்களை நடத்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

100. ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் விரைவில் நடத்திட சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## குடிசைப் பகுதி மேம்பாடு

101. **பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி மத்திய அரசால் வழங்கப்படும் ரூபாய் 250 கோடி நிதி உதவியின் மூலம் குடிசைப் பகுதிகளில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும்.**

## ஊரக வளர்ச்சி

102. ஊரகப் பகுதிகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் இவ்வரசு மிகுந்த முனைப்புடன் செயல்படும். **கிராமங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும்** வரும் ஐந்து ஆண்டுகளில் உருவாக்குவதற்காக ஏற்கெனவே **திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்த "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை" மீண்டும் "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற பெயரால் செயல்படுத்துவது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் ரூ.500 கோடி அரசு நிதியுதவி அளிக்கப்பட்டு 2,500 ஊராட்சிகளில் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீட்டில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.** இவ்வாறு ஆண்டு ஒன்றுக்கு 2,500 ஊராட்சிகள் வீதம் பரவலாக எல்லா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு, ஐந்தாண்டுகளில் தமிழகத்திலே உள்ள 12,618 ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் முழுமை அடையும். தற்போது மாநிலத் திட்டத்திலிருக்கும் பல்வேறு திட்டங்களை ஒருமுகப்படுத்தி கூடுதல் நிதி ஒதுக்கீட்டுடன் இப்புதிய திட்டம் செயல் படுத்தப்படும். தனிநபர் வருமான அடிப்படையில் மிகவும் நலிந்துள்ள ஊராட்சிகளில் முதல் ஆண்டிலும், எஞ்சியுள்ள ஊராட்சிகளில் வருமான ஏறுமுக அடிப்படையில் வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

103. மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்துள்ள தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் நமது மாநிலத்தில் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பங்குபெறும் வேலைவாய்ப்பற்ற கிராம மக்கள் ஒரு நாள் பணிக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ.80/–ஐ பெறுவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நீக்கும் வகையில், புதிய ஊரக விலைப் புள்ளிகள் அட்டவணைக்கு (Rural Schedule of Rates) ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. **இதனால் இத்திட்டத்தில் பங்கேற்கும் பயனாளிகள் அனைவருக்கும் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ.80/– கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு இந்தத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் மொத்தமாக ரூ.3212.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

> "தி.மு.கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்த "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை" மீண்டும் "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற பெயரால் செயல்படுத்துவது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது."




## சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வு பணிகள்

104. சுனாமி நிவாரணப் பணிகளுக்கு நிதியாக மத்திய அரசு மூலம் – ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம் என்ற தலைப்பில் 2347.19 கோடி ரூபாயும், உலக வங்கியின் மூலம் 1852.74 கோடி ரூபாயும், ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம் 629.64 கோடி ரூபாயும், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 67.50 கோடி ரூபாயும் என மொத்த நிதி ஒதுக்கீடு 4897.07 கோடி ரூபாய் ஆகும். அதில் கடந்த ஆட்சிக்காலத்தில் செலவிடப்பட்ட தொகை 806 கோடியே 38 இலட்ச ரூபாய் ஆகும். அந்தத் தொகை நிவாரணப் பணிகளுக்கு மட்டும் செலவிடப்பட்டு, நிரந்தர வீடுகள் கட்டுதல், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற மறுசீரமைப்புப் பணிகளுக்கென எதுவும் செலவிடப்படாத நிலையில்; 24.6.2006 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களின் ஆட்சித்தலைவர் களுடன் சுனாமி சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் நடந்தவை; நடக்க வேண்டியவை குறித்து ஆய்வு செய்தார்கள். ஆய்வின் முடிவில் **சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற் கொள்வதற்கென இந்த நிதி ஆண்டில் மேலும் 1,000 கோடி ரூபாய் செலவிடுவது என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கான பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.**

## மகளிர் நலன்

105. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கை கானல் நீராகவே இருந்து வருகின்றது. முந்தைய தி.மு.க ஆட்சிக்காலங்களில் சமச்சொத்துரிமையும், அரசுப் பணிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உரிய ஒதுக்கீட்டையும் அளித்து மகளிர் நலனையும் உரிமையையும் காத்த கலைஞர் தலைமையிலான அரசு, பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு இடஒதுக்கீடு செய்வதற்கான அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தை இந்த ஆண்டிலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று மைய அரசை வலியுறுத்துகிறது.






**106. ஏழை கர்ப்பிணிப் பெண்களின் ஊட்டச்சத்து உணவுக்காகவும், கருவுற்ற காலத்தில் அவர்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டும் வகையிலும் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு மகப்பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், மகப்பேறு காலத்திற்குப் பின்னர் 3 மாதங்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 6 மாதங்களுக்கு ஆறாயிரம் ரூபாய் பேறுகால நிதி உதவி வழங்கிடும் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.** இதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

107. தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி, 1.4.2002 முதல் முந்தைய ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ.10,000/-லிருந்து ரூ.15,000/- ஆக உயர்த்தி 3.6.2006 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது, இடையில் நுழைந்து ஆதாயம் பெற முனைவோர் யாராயினும் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப் படுவர் என்பதை இந்த அரசு எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளது.

### மகளிர் சுய உதவிக் குழுக்கள்

108. 1989இல் தி.மு. கழக ஆட்சியில் முதலமைச்சர் அவர்களால் தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகளிர் மேம்பாட்டினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு இச்சுய உதவிக் குழுக்களுக்குத் தொடர்ந்து தேவையான ஆதரவையும், ஊக்கத்தையும், நிதியையும் வழங்கும். **2006-2007ஆம் ஆண்டில் 5 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.**

109. திறன் வளர்ப்புப் பயிற்சி பெறுவதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வருவாய் ஈட்டும் தொழில்களைத் தொடங்குவதற்கான கடன் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு இப்பயிற்சியில் பங்கேற்கும் **சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்படும் பயிற்சி உதவித்தொகை ரூ.7.50 லிருந்து ரூ.45/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

110. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் செயல்பாடுகள் மேலும் செம்மைப்படும் வகையில் தலைமையகத்திலும், மாவட்ட அளவிலும் தேவையான மாறுதல்களைச் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

### முதியோர் மற்றும் ஆதரவற்றோர் நலன்

111. தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததற்கிணங்க, **முதியோர், கணவனால் கைவிடப் பட்டோர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் ஊனமுற்றோர்**









**போன்றவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை, ரூ.200/-என்று இருப்பதை ரூ. 400/- என்று உயர்த்தி வழங்கப்படும்.** இதற்காக 2006-2007ஆம் ஆண்டுக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.407.06 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஊனமுற்றோர் நலன்

112. ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீத இடஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். **கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித்தொகை ரூ.200/-லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தப்படும்.** ஊனமுற்றோர் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு எண்ணியுள்ளது. ஊனமுற்றோர் வறுமை காரணமாகப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட நேரிட்டால் அவர்கள் தமது படிப்பைத் தொடர அரசு சிறப்புக் கவனம் செலுத்தும். உடல் ஊனமுற்றோர்க்கான காலிப் பணியிடங்களை நிரப்பிட சிறப்புத் தேர்வுகள் நடத்தப்படும். ஊனமுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சியும் சுய தொழில் கடனும் வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்படும். கிராமப் புறங்களில் உள்ள ஊனமுற்றோர்க்கு கை வினைத் தொழிலும், சிறு கடையும் நடத்த முன்னுரிமை வழங்கப்படும். ஊனமுற்ற ஆண்களுக்கும், பெண்களுக்கும் சிறப்புச் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

113. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு – 10ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் – **மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெறக் கூடிய கண் பார்வையற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுத் தொகை வழங்குவதுடன்; அவர்களுடைய உயர்கல்விச் செலவையும் அரசே ஏற்கும்.**

### சத்துணவுத் திட்டம்

114. இத்திட்டத்திற்கு 2006-2007ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.955.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சத்துணவு பெறும் மாணவர்களுக்கு வாரம் இருமுறை முட்டை வழங்கும் திட்டத்திற்காக ரூ.40 கோடி கூடுதல் ஒதுக்கீடு இந்த ஆண்டு செய்யப்பட்டுள்ளது.

### நெசவாளர் நலன்

115. விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதைப் போலவே இலவச மின்சாரம் நெசவுத் தொழில் செய்பவர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **கைத்தறி நெசவாளர்கள் சொந்தமாகத் தறிக் கூடம் வைத்திருந்து தாமே நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருவார்களேயானால், அவர்களுக்கு இரு மாதங்களுக்கு 100 யூனிட் வரை மின்சாரம் இலவசமாக வழங்கப்படும். அதே போல விசைத்தறி நெசவாளர்கள் சொந்தமாக தறிக்கூடம் அமைத்து தாமே விசைத்தறி இயக்குபவர்களாக இருந்தால்**

> "மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று நிலைகளைப் பெறக் கூடிய கண் பார்வையற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுத் தொகை வழங்குவதுடன்; அவர்களுடைய உயர்கல்விச் செலவையும் அரசே ஏற்கும்."




அவர்களுக்கு இரு மாதங்களுக்கு 500 யூனிட்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படும். இச்சலுகையினால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு ஏற்படும் இழப்பான ரூ.40.26 கோடியைத் தமிழக அரசு ஈடுசெய்யும்.

116. ஏழை நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் உற்பத்தி செய்யும் வேட்டி சேலைகளை நலிந்த குடும்பங்களுக்கு தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு இலவசமாக வழங்கிடவுமான திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும், 1 ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதனால் சுமார் 62 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெறுவர்.

## அமைப்பு சாராத் தொழிலாளர் நலன்

117. கடந்த தி.மு.க. ஆட்சி, அமைப்புசாராத் தொழிலாளர்களுக்காக பல்வேறு நலவாரியங்களை அமைத்து, சமூகப் பாதுகாப்பையும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கியது. ஆனால் அந்த வாரியங்கள் கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் தேர்தல் அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டபடி அமைப்புசாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த, ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நலவாரியம், சலவைத் தொழிலாளர்கள் நலவாரியம், முடிதிருத்துவோர் நலவாரியம், தையல் தொழிலாளர்கள் நலவாரியம், பனைத் தொழிலாளர் நலவாரியம், கை வினைத் தொழிலாளர் நலவாரியம், ஓவியர்கள் நலவாரியம், காலணி மற்றும் தோல் தொழிலாளர் நலவாரியம், கைத்தறி மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர் நலவாரியம் ஆகிய **ஒன்பது நல வாரியங்களை மீண்டும் தொடங்கி அவற்றுடன் 10வது நலவாரியம் பொற்கொல்லர்களுக்காகவும் அமைத்து செயல்படுத்திட இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்நலவாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/– ஓய்வூதியம் வழங்கப்படும்.**

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் நலன்

118. இலட்சக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டு பல்லாண்டுகளாக காத்திருக்கின்றனர். இவர்களது பொருளாதாரத் தேவையை ஓரளவாவது நிறைவுசெய்யும் பொருட்டு இவர்களுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கப்படும் எனத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதன்படி, பதிவுசெய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கும் படித்த இளைஞர்களில், **பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதந்தோறும் ரூ.150/–ம், மேனிலைப் படிப்பு / புகுமுக வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.200/–ம் மற்றும்**



**இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு ரூ.300/–ம் மூன்றாண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படும்.** இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.110 கோடி அரசுக்கு செலவு ஏற்படும்.

119. தேர்தல் அறிக்கையில் கூறியவாறு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை ஒருங்கிணைத்து சுயவேலைவாய்ப்புகளைப் பெருக்கும் நோக்கத்துடன், அத்தகைய இளைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களின் பயிற்சி மற்றும் உதவித் தொகைக்காக, ரூபாய் பத்து கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மீனவர் நலன்

**120. மத்திய அரசின் நிதி உதவி பெற்று கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் ரூ. 23.50 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும்.**

121. தற்போது 5,000 விசைப் படகுகளுக்கு ஒரு விசைப்படகிற்கு மாதமொன்றுக்கு 1,000 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இந்த அளவினை உயர்த்த வேண்டுமென்ற மீனவர்களின் கோரிக்கையை ஏற்று, **இந்த அரசு, 1.8.2006 முதல் 1,000 லிட்டர் அளவினை 1,500 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தி வரிவிலக்கு அளிக்கும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.55 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.**




122. **சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு கூடுதல் வலைகள், கை விளக்குகள் (Handy Rechargeable Lanterns), மீன்களை எடுத்துச்செல்ல மிதிவண்டிகள் (Heavy Duty Bicycles), உயிர்காக்கும் உடை (Life Jackets), ஐஸ் பெட்டிகள் (Ice Boxes) மற்றும் நிலை அறியும் கருவிகள் (GPS) ஆகியவை ராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்ட நிதி உதவியிலிருந்து ரூ.100 கோடி செலவில் வழங்கப்படும்.**

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

123. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி முன்னேற்றமே அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முக்கியத் தூண்டுகோலாக அமையும் என்பதால், இவ்வரசு அந்த மக்களுக்கு தரமான கல்வியை அளிப்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல்படும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் தங்கும் விடுதிகள் சரியான முறையில் பராமரிக்கப்படாத நிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்விடுதிகள் நன்கு பராமரிக்கப்படும் வண்ணம் சிறப்புப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

124. தற்போது மத்திய அரசு வழங்கி வரும் சிறப்பு மைய உதவி (Special Central Assistance) வாயிலாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தனிப்பட்ட பயனாளிகள் பயன்பெறும் வகையில் வருவாய் ஈட்டும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. **இத்திட்டத்தின் நிதி ஆதாரங்களை உயர்த்தி, மேலும் கணிசமான அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வருவாய் ஈட்டும் திட்டங்களில் பயன்பெற வழிவகுக்கும் வகையில், சிறப்பு மாநில நிதியுதவித் திட்டம் (Special State Assistance) ஒன்றை இந்த அரசு செயல்படுத்தும். இது போன்ற ஒரு திட்டம் தமிழகத்தில் முதன் முதலாகத் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது என்பதை மிக்க**

> "மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை நிறுத்தி, 11,691 நபர்களுக்கு சுமார் 50 கோடியில் வேறு பணிக்கான பயிற்சி வழங்கவும், மறுவாழ்வு அளித்திடவும் நடவடிக்கை"

**மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.** இத்திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

125. "மனிதனை அமர வைத்து மனிதனே இழுத்துச் சென்ற கைரிக்ஷா கொடுமையை ஒழித்து கலைஞர் ஆட்சியில் இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கியதைப் போல, மனிதக் கழிவை மனிதனே கையால் அள்ளும் கொடுமையை நிறுத்தி, அந்தப் பணியினை ஆற்றி வருபவர்களுக்கு தகுதியான வேறு பணி வழங்கப்படும்'' என தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டதற்கேற்ப, **அந்தப் பணியில் ஈடுபட்டுள்ள 11,691 நபர்களுக்கு சுமார் 50 கோடி ரூபாய் செலவில் வேறு பணிக்கான பயிற்சி வழங்கவும், மறுவாழ்வு அளித்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

### பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

126. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனிலும் சமூகநீதி நிலைநாட்டப் படுவதிலும், தி.மு.கழக அரசு தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இப்போது மற்றுமோர் எடுத்துக்காட்டாக சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக அரசு உதவி பெறாத அனைத்துத் தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களிலும் சமூக நீதி அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டம், இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்துறைக்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் மொத்தம் 319.96 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினர் நலன்

127. தேர்தல் அறிக்கையில் உறுதி யளித்துள்ளவாறு – சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்குக் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்புகளிலும் தனியாக இடஒதுக்கீடு வழங்கிட மத்திய அரசை வலியுறுத்தி வருவதுடன்; தமிழகத்திலும் அவர்களுக்கு இடஒதுக்கீட்டுக்கு வழி வகுத்திடத் தேவைப்படும் உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

### அரவாணிகள் நலன்

128. **அரவாணிகளின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், அவர் களுக்கான சுயஉதவிக் குழுக்கள் அமைப்பது குறித்தும் அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்தும் இந்த அரசு விரைவில் பரிசீலித்து முடிவெடுக்கும்.**

### இலங்கைத் தமிழர்

129. இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான பேச்சு வார்த்தைகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது குறித்தும், தமிழகத்திற்கு வருகை தரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து








வருவது குறித்தும் இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இப்பிரச்சினைக்கு விரைவில் சுமூகமான பேச்சுவார்த்தைகள் மூலம் நிரந்தர தீர்வு ஏற்பட வேண்டும் என்று இந்த அரசு விழைகிறது.

130. அதிகரித்து வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்கிட ரூ. 34.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

131. தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளின் முகாம்களை அமைச்சர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் சென்று பார்த்து செய்த பரிந்துரையின் பேரில் **அகதிகள் தற்போது மாதந்தோறும் பெற்று வருகின்ற மத்திய அரசின் நிதி உதவியான 200 ரூபாய் என்பதுடன் தமிழக அரசின் சார்பாக 200 ரூபாய் சேர்த்து மொத்தமாக 400 ரூபாயாக உயர்த்தி வழங்கிட முடிவெடுத் துள்ளது. அதைப் போலவே அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகையும் இரண்டு மடங்காக உயர்த்தித் தரப்படும்.**

### அறிவியல் தமிழ்

132.இயல், இசை, நாடகம் என வளர்ந்து வளம்பெற்ற தமிழ், இன்றைய அறிவியல் வளர்ச்சிப் போக்கையும், தேவையையும் ஒட்டி அறிவியல் தமிழாகவும் மணம் வீசத் தொடங்கியிருக்கிறது. அறிவியல் துறையிலும், தொழில்நுட்பத் துறையிலும் தமிழ் மொழி உறுதியாகக் கால் பதித்தால் தான் வளர்ந்து வரும் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்திட முடியும். அறிவியல் தமிழை வளர்த்திடும் முயற்சிகள் பலரால் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை அனைத்தையும் ஒருங்கிணைக்கவும், திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிகாணவும் **"அறிவியல் தமிழ் மன்றம்'' ஒன்றை அமைத்து; அம்மன்றம் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

### தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு

133. உலகத்தின் மற்ற தொன்மையான மொழிகளோடு ஒப்பிடத்தக்கவகையில் தமிழ் மொழியில் இலக்கிய ஆய்வினை மேற் கொள்வதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தை உலகத் தமிழ்ச் செம்மொழி ஆய்வு நிறுவனமாக்கி, செம்மொழி ஆராய்ச்சிக்கான மத்திய அரசின் நிதி உதவியினை இந்த நிறுவனத்திற்கு வழங்கிடுமாறு இந்த அரசு மைய அரசை வலியுறுத்தும்.

134. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு வெளியிட்டுள்ள நிலையில், நடப்பு நிதி ஆண்டில் மேலும் 6 பகுதிகள் அச்சிடப்படும்.

> "அகதிகள் தற்போது மாதந்தோறும் பெற்று வருகின்ற மத்திய அரசின் நிதி உதவியான 200 ரூபாய் என்பதுடன் தமிழக அரசின் சார்பாக 200 ரூபாய் சேர்த்து மொத்தமாக 400 ரூபாயாக உயர்த்தி வழங்கிட முடிவெடுத்துள்ளது."

135. **நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் நிதியுதவியினை ரூ.500/– லிருந்து ரூபாய் 1000/– ஆக உயர்த்தி 2006–2007 நிதி ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது.**

136. தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க வேண்டுமென முதல் குரல் கொடுத்தவரும், நூறாண்டுகளுக்கு முன்பே சூரியநாராயண சாஸ்திரி என்ற தனது பெயரை "பரிதிமாற்கலைஞர்" என்று தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவரும், திருப்பரங்குன்றத்தில் பிறந்து **இந்தத் திருவிடம் முழுவதும் புகழ் செதுக்கியவருமான பெருமகனாரது நினைவைப் போற்றும் வகையில் அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசை, இந்த அரசு வலியுறுத்தும்.**

- ❖ **திருப்பரங்குன்றத்திற்கு அருகில் விளாச்சேரி கிராமத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவில்லமாக ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.**
- ❖ **அவரது நூல்கள் அரசுடைமை யாக்கப்பட்டு, அவரது வழித் தோன்றல்களுக்கு உரிய பரிவுத்தொகை வழங்கப்படும்.**

## இந்து சமய அறநிலையங்கள்

137. முன்னர் கழக ஆட்சியில் ஆன்றோர் சான்றோர் மனம் மகிழ அறநிலையப் பணிகள் நடந்தேறியதை அனைவரும் அறிவர். கோயில்களுக்குத் திருப்பணியாற்றி குடமுழுக்கு விழாக்களை நடத்துவதிலும், கோயில் சொத்துக்களை முறையாகப் பாதுகாப்பதிலும், சொத்துப் பதிவேடுகளை உருவாக்கு வதிலும், கோயில் சொத்துக்களை மீட்பதிலும், கோயில்களின் வருவாயை உயர்த்துவதிலும், தமிழில் ஆகம நூல்களை வெளியிடுவதிலும் இந்த அரசு தொடர்ந்து ஆர்வம் காட்டி ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை மேற் கொள்ளும். திருக்கோயில்களின் நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை அவ்வப்போது பெற்று நடைமுறைப்படுத்திட திருக்கோயில் ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.

## சமூகச் சீர்திருத்தம்

138. சமுதாயத்தை சீர்திருத்தப் பாதையில் இட்டுச் செல்வதற்கான திட்டங்களை வகுப்பதற்காக கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்டு, முந்தைய ஆட்சியின் போது கலைக்கப்பட்ட சமூகச் சீர்திருத்தத் துறை மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. **சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆலோசனைகளை அரசுக்கு வழங்க, சமூகவியல் ஆர்வலர்களைக் கொண்ட நிரந்தரக் குழு ஒன்று உருவாக்கப்படும்.**

139. தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் இருந்த முள்ளை அகற்றிடும் வகையில் – உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோவில்களில் அர்ச்சகர் ஆகலாமென்ற சமத்துவக் கொள்கைக்கு இந்த அரசு செயல்வடிவம் கொடுத்திட முடிவு செய்து, அதற்கான அரசாணை பிறப்பித்து, அந்த அரசாணையை பிரத்தியேகமான அரசிதழிலும் அறிவிக்கை செய்துள்ளது. **இந்த ஆணையைச் செயற்படுத்திட பல்வேறு அம்சங்களைப் பற்றிய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிட, ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே. இராசன் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

## சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனங்கள்

140. ஜப்பான் நாட்டு பன்னாட்டுக் கூட்டுறவு நிதி வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள்









செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தடுப்பணைகள், நிலத்தடி நீர், கசிவுநீர் குட்டைகள் போன்றவற்றை உருவாக்குவதன் மூலம் மலைவாழ் மக்கள் வாழும் 40 கிராமங்கள் உட்பட வனப்பகுதிகளை ஒட்டியுள்ள 205 கிராமங்களில் 45,250 ஹெக்டேர் பரப்பளவுள்ள தரம் குன்றிய காடுகள் ரூ.101.42 கோடி ஒதுக்கீட்டில் மேம்படுத்தப்படும்.

## சுற்றுலா

141. தமிழகத்திற்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே சுற்றுலாத் தலங்களில் பன்னாட்டுத் தரத்திற்கு ஏற்ப அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியமாகும். இதற்காக ஒரு சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கப்படும். ஏலகிரி, ஏற்காடு, பழவேற்காடு, தரங்கம்பாடி, பிச்சாவரம், செட்டிநாடு, சுருளி போன்ற அதிக பிரபலமடையாத, ஆனால் அதே நேரத்தில் முக்கியச் சுற்றுலா மையங்களாக விளங்கும் பகுதிகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

142. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான **பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிருவாகத்தால் கம்பி வட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல் படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

## சிப்பாய்ப் புரட்சி

143. 1998ஆம் ஆண்டு தி.மு. கழக அரசு வேலூர் சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூணை நிறுவியது. 10–7–2006 அன்று நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சியின் இருநூறாவது ஆண்டு நிறைவு அரசு விழாவில் கலந்து கொண்ட முதலமைச்சர் அறிவித்திருப்பதையொட்டி, இளைஞர்களுக்கு வீரத்தை ஊட்டவும், விடுதலை உணர்வை எழுப்பவும், வேலூர் சிப்பாய்ப் புரட்சி பற்றிய விவரங்கள் பாடப் புத்தகங்களில் இடம் பெறவும், வேலூரில் மேலும் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்திடவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

## பகத்சிங் நூற்றாண்டு விழா

144. நாட்டு விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிமிகு வரலாற்றில் புரட்சிக் கனலாகப் புத்தொளிவீசும் பகத்சிங்கின் நூற்றாண்டுவிழா வரும் செப்டம்பர் திங்களில் தொடங்குவதை முன்னிட்டு **இந்த ஆண்டு முழுவதும் மாதந்தோறும் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் இந்த தியாகசீலனின் நினைவு போற்றும் நிகழ்ச்சிகள் அரசின் சார்பில் நடத்தப்படும்.**

## விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்

145. தமிழகம் விளையாட்டுத் துறையில் ஒரு முன்னோடி மாநிலமாக விளங்க ஆவன செய்யப்படும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடி **ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவில் ஆண்டுதோறும்**






**விளையாட்டுப் போட்டிகள் நடத்த இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.** மேலும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பான பயிற்சி அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் தேசிய விளையாட்டு மையம் ஒன்றை (National Institute of Sports) அமைக்க மைய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

146. தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளை **ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்திடும் வகையில், செயற்கை இழை ஓடுகளப்பாதை ரூ.2.5 கோடி செலவில் புதுப்பித்து அமைக்கப்படும்.**

## திரைப்படத்துறை

147. தமிழ்த் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கும் அவ்வப்போது அந்தத் துறைக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைவதற்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டதை அத்துறையினரும் மாண்புமிகு உறுப்பினர்களும் நன்கறிவார்கள்.

148. தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளவாறு, திரைப்பட வெளிப்புறக் காட்சிகளுக்கான படப்பிடிப்புக் கட்டணம் தற்போது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. இராஜாஜி மண்டபத்தில் படம் எடுக்க நாளொன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் என்றிருந்த கட்டணம் 10 ஆயிரம் ரூபாயாகக் குறைக்கப் பட்டுள்ளது. படப்பிடிப்புக்கான வகை ஒன்று என்ற பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்டணம் என்றிருந்ததை 5 ஆயிரம் ரூபாய் என்றும், வகை இரண்டு என்ற பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கட்டணம் என்றிருந்ததை 3 ஆயிரம் ரூபாய் என்றும் குறைக்கப் பட்டுள்ளது. அதைப் போல, சின்னத் திரைப்படங்களுக்கான படப்பிடிப்புக் கட்டணங்களை பெரிய திரைப்படங் களுக்கானக் கட்டணத்தில் 50 சதவிகிதம் என்று குறைக்கப்பட்டுள்ளது. மேலும் கேளிக்கை வரியைப் பொறுத்தவரை

- 1989இல் புதிய படங்கள் மீதான வரி தி.மு.க. ஆட்சியில் 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக கேளிக்கை வரி குறைக்கப்பட்டு, தற்போது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் புதிய திரைப் படங்களுக்கு 15 சதவிகிதமாகவும், பழைய படங்களுக்கு 10 சதவிகிதமாகவும் கேளிக்கை வரி இருந்து வருகிறது.
- **திரைப்படத்துறைக்கும் தமிழ் மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய படங்களுக்கு தமிழிலேயே பெயர்கள் சூட்டப்படுமானால், அந்தப் படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும்.**

149. தரமணியில் உள்ள **"தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்"**









**விரிவாக்கப்பட்டு, இந்நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் மற்றும் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் முழு அளவில் இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் "எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்" (M.G.R. Film and Television Institute) என்று பெயர் சூட்டப்படும்.**

150. அம்பேத்கர் ஆங்கில மொழிப்படம் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டால் ரூபாய் பத்து இலட்சம் அளிக்கப்படும் என்று இந்த அரசு 1997–98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்து, அவ்வாறே தற்போது வழங்க விருப்பதையொட்டி; இப்போது **'இனமுரசு' சத்தியராஜ் நடிக்கும் 'தந்தை பெரியார்' என்ற திரைப்படத்துக்கு பெரியார் வாழ்ந்திருந்த வயதைக் குறிக்கும் வண்ணம் 95 இலட்சம் ரூபாயை இந்த அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்

151. அரசுத் துறைகள் அனைத்திலும் நிரப்பப்படாமல் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை ஒரு காலக்கெடுவுக்குள் நிறைவேற்றிடும் வகையில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. வேலை நியமனத்தடை ஆணையினால் பாதிப்புக் குள்ளானோரின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசுப்பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்க ஏதுவான ஆணைகளை இந்த அரசு வழங்கியுள்ளது.

152. இந்த அரசு 13.5.2006 அன்று பதவியேற்ற பிறகு காலியாகவுள்ள அரசு பணியிடங்களை நிரப்புவதில் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. 12,618 மக்கள்நலப் பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். மக்கள் நல்வாழ்வுத்துறையில் 1,393 மருத்துவர்களும் 1,800 செவிலியர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 1539 மருத்துவர்களும் 5,260 செவிலியர்களும் காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள். பள்ளிக்கல்வித் துறையில் 3,491 ஆசிரியர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 7,635 ஆசிரியர்கள்; ஆசிரியர் தேர்வாணையம் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமாக நியமனம் செய்யப்பட உள்ளனர். இதுவரை ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியத்தின்கீழ் பணிபுரிந்துவந்த 45,987 ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 400 கோடி கூடுதல் செலவாகும். பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் 236 விரிவுரையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் அரசு கலைக் கல்லூரிகளில் 1,020 விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் நியமனம் செய்யப்பட உள்ளனர். பொதுப்பணித்துறையில் 569 உதவிப் பொறியாளர்கள் மற்றும் காவல் துறையில் 755 சார் ஆய்வாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

153. அரசுப் பணியாளர்கள் பணியிலிருக்கும் போது மரணமடைந்து விட்டால் அவர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டு நெறிமுறைகளை யொட்டி கருணை அடிப்படையிலான பணி நியமனங்களை அரசுத்துறைகளில் செய்வதற்கான ஆணைகள் இடப்பட்டுள்ளன. **அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் சாலைப்பணியாளர்கள் ஆகியோரின் வேலைநிறுத்தப் போராட்டத்தின்**

**போதும், பணிநீக்க காலத்தின்போதும் உயிர் நீத்தோரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் அளிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

154. சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், உலகவங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பணிபுரியும் **சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களில் ப்ளஸ் 2 தகுதியுடன் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவார்கள்.** இந்நியமனம் இந்த ஒரே ஒரு முறை மட்டும் சிறப்புத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

155. 2000-2001ஆம் ஆண்டுவரை அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களில், தொகுப்பு C மற்றும் D அலுவலர்களுக்கு மிகை ஊதியம் (Bonus), தொகுப்பு A மற்றும் B அலுவலர்கள், தொகுப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் பெறும் அலுவலர்கள் ஆகியோருக்கு சிறப்பு மிகை ஊதியம் (Special Adhoc Bonus) மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பொங்கல் பரிசு (Pongal Gift) ஆகியன வழங்கப்பட்டு வந்தன. 2001-2002ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ள இச்சலுகையினை மீண்டும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், **இந்நிதியாண்டில் வரும் பொங்கல் பண்டிகையின் போது மேற்கூறிய மிகை ஊதியம், சிறப்பு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு ஆகியன மீண்டும் வழங்கப்படும்.** இதற்காக இந்தத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

156. கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் மீதான அலுவலர் குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டு, ஊதிய நிலுவைத் தொகையில் 40 சதவிகிதத் தொகையை இரு ஆண்டுத் தவணைகளில் வழங்கி, எஞ்சியுள்ள 60 சதவிகித நிலுவைத் தொகை 2003-2004ஆம் ஆண்டு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. பின்னர் 2004-2005ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு மட்டும் மூன்று சம ஆண்டுத் தவணைகளில் இந்நிலுவைத் தொகை அஞ்சலக சேமிப்புப் பத்திரங்களாக வழங்கப்பட்டு வருகிறது. பணியில் இருப்பவர்களுக்கு இதுவரையிலும் இந்த நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இது தொடர்பான அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையை ஏற்று, 1.8.2006 அன்று பணியில் இருப்பவர்களுக்கும் இனி ஓய்வு பெறுபவர்களுக்கும் **இந்த நிலுவைத் தொகை இந்த நிதி ஆண்டிலிருந்து மூன்று சம ஆண்டுத் தவணைகளில் ரொக்கமாக வழங்கப்படும். முதல் தவணைத் தொகை வரும் ஆகஸ்ட் திங்களில் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும். ஏற்கெனவே ஓய்வு பெற்றவர்களுக்கு மீதமுள்ள தவணைத் தொகைகளும் ரொக்கமாகவே வழங்கப்படும்.** இதனால் அரசுக்கு ரூ.871.58 கோடி செலவாகும். இந்த ஆண்டில் ரூ. 290.53 கோடி செலவு ஏற்படும்.

157. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள், பொதுக்கோரிக்கைகளை வலியுறுத்தி 23.10.2002 முதல் 1.11.2002 வரையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட பத்து நாட்களை ஊதியமற்ற விடுப்பாகக் கருத வேண்டுமென முன்னர் ஆணையிடப்பட்டது. **இந்த வேலை நிறுத்த காலம் ஊதியத்தோடு கூடிய பணிக்காலமாகக் கருதப்படும் என்று தற்போது ஆணையிடப்படுகிறது.**

"அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் சாலைப்பணியாளர்கள் ஆகியோரின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் போதும், பணிநீக்க காலத்தின்போதும் உயிர்நீத்தோரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் அளிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும்."






158. அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுபெறும்போது, அவர்களது ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு, 1.4.2003க்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட நடைமுறையே மீண்டும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, இந்த அரசு 31.7.2006 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வூதியக் கணக்கீட்டிற்கான பின்வரும் ஆணைகளை வெளியிடும்.

- **33 ஆண்டுகள் பணிபுரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்படும்.**
- **ஓய்வுபெறுவதற்கு முந்தைய 10 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதமே ஓய்வூதியமாக கணக்கிடப்பட வேண்டும் என்பதை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும்.**

159. ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை தென்னகத்தில் முதன் முதலாக ஏற்றுச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடு என்பதால் இப்போதும் ஆறாவது ஊதியக் குழுவினை அமைக்க மத்திய அரசு செய்துள்ள முடிவினை நாங்கள் வரவேற்கிறோம். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு **ஆறாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீது மத்திய அரசு வெளியிடும் ஆணையை செயற்படுத்துவது குறித்து இந்த அரசு உரிய நேரத்தில் பரிசீலிக்கும்.**

## நிருவாகச் சீர்திருத்தக் குழு

160. ஊழலற்ற வெளிப்படையான நிர்வாகத்தை அளிப்பதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளதை மெய்ப்பிக்கும் வகையில் அலுவலக நடைமுறைகளை எளிமைப்படுத்தத் தேவையான மாற்றங்களைச் செய்து, அன்றாட வாழ்வில் பொதுமக்கள் அணுகும் அலுவலகங்களில் நிலவும் காலதாமதத்திற்கும் ஊழலுக்கும் அடிப்படைக் காரணமான **சிகப்பு நாடா முறையினை (Red Tapism) அகற்றிடத் தேவையான பரிந்துரைகளை வழங்கிட பல்துறை வல்லுநர்களைக் கொண்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைக்கப்படும்.**

## ஆண்டுத் திட்டம்

161. 2006-2007ஆம் ஆண்டு பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் கடைசி ஆண்டாகும். புதுடில்லியில் 6.6.2006 அன்று மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோருக்கிடையே நடந்த கூட்டத்தில், 2006-2007 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.12,500 கோடி என்ற உயர் அளவிலான திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு, 2005-2006 ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீட்டை விட 37 சதவீதம் அதிகமாகும்.

162. 2005-2006ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூ.10.99 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதை உயர்த்தி, 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.17.04 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு இந்த நிதியாண்டில் ரூ.35.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

163. மாநிலத்தின் முன்னேறிய மற்றும் பின்தங்கியுள்ள மாவட்டங்களிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காக, இப்பகுதிகளின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில் மத்திய அரசின் தேசிய சமவளர்ச்சித் திட்டம் (ராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா - RSVY) திருவண்ணாமலை,

**"ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இம்மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியின் கீழ் பதிவு பெறுவதிலிருந்தும் வரி செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்படும்."**

திண்டுக்கல், சிவகங்கை கடலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ.15 கோடி வீதம் மூன்றாண்டுகளுக்கு மொத்தம் ரூ.45 கோடி அளிக்கப்பட்டு திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

### வரிகள்

164. 2006–2007ஆம் ஆண்டிற்கு புதிய வரி விதிப்பு இல்லாத வரவு செலவு அறிக்கையினை தாக்கல் செய்வதில் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது.

165. இம்மாநிலத்தின் உற்பத்தியாளர்களும் வணிக சமூகத்தினரும் மதிப்புக்கூட்டு வரியை அறிமுகப்படுத்துதல் குறித்து அரசு விரைந்து முடிவெடுக்குமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளனர். **கடந்த 5.7.2006 அன்று நடைபெற்ற, நிதிநிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்பான உற்பத்தியாளர் மற்றும் வணிகர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில், அவர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்ததற்கு இணங்க, முழுமையாக ஆய்வு செய்து, மதிப்புக் கூட்டு வரித் திட்டம் வரும் ஜனவரி 1, 2007 முதல் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.** பல்வேறு வணிக அமைப்புகள் விடுத்துள்ள வரிவிகிதக் குறைப்பு கோரிக்கைகள், குறிப்பாக, **இம்மாநிலத்தில் மருந்து உற்பத்தி தொழில் மற்றும் பல்வேறு பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் கோரிக்கைகள் மதிப்புக் கூட்டுவரித் திட்டத்தில் பெருமளவில் நிறைவேற்றப்பட்டு விடும்.**

166. மதிப்புக் கூட்டுவரி அறிமுகத்தால் சிறு வணிகர்கள் எந்தவித இடர்ப்பாட்டுக்கும் உள்ளாகாமல் இருக்க ஏற்ற வழிவகை செய்யப் படும். **இந்த நோக்கத்தின் அடிப்படையில், ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இம்மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டுவரியின் கீழ் பதிவு பெறுவதிலிருந்தும் வரி செலுத்துவதி லிருந்தும் விலக்களிக்கப்படும். இதனால், சுமார் 45,000 வணிகர்கள் பயன்பெறுவார்கள்.**

167. வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையான உணவுப் பொருட்களுக்கு எந்தவித வரியும் விதிக்கக்கூடாது என்பது தி.மு.க. அரசின் ஏற்றமிகு கொள்கையாக எப்போதுமே இருந்து வருகிறது. இந்தக் கொள்கையின் செயல்வடிவமாக, 1996ஆம் ஆண்டு தி.மு.க ஆட்சியில் மாநிலத்திற்குள் விற்பனையாகும் பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி நீக்கப்பட்டது. அதன் பின்னர், இந்த உணவுப் பொருட்கள் மீது மீண்டும் வரிவிதிக்கப்பட்டது. **தற்போது பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி, 2002 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறே முழுமையாக விலக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 110 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்.**

168. நமது மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் வெளிச்சந்தையில் திறம்பட போட்டியிட உதவும் வகையிலும், மதிப்புக் கூட்டுவரியை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு முன்னோடி யாகவும், மாநிலத்தின் உற்பத்திப் பொருட் களுக்காகத் தேவைப்படும் மூலப்பொருட்கள் மீதான நுழைவு வரியினை உற்பத்திப் பொருட்கள்மீது விதிக்கப்படும் வரிகளிலிருந்து முழுமையாக கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படும். இதனால் மாநிலத்தின் உற்பத்தியாளர்களின் இடர்ப்பாடுகள் களையப்படும். இதற்கான அரசு அறிவிக்கை விரைவில்






வெளியிடப்படும். உயர் அடர்த்தி பாலிஎத்திலின் (HDPE) பொருட்கள் மீதான நுழைவு வரியினை விற்பனை வரியில் ஈடுசெய்வதற்கு தற்போது வழங்கப்படும் சலுகை, குறைந்த அடர்த்தி பாலிஎத்திலின் (LDPE) பொருட்களுக்கும், பாலிபுரோப்பலின் (PP) மணிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது ஒரு தொடர் கோரிக்கையாக இருந்து வருகிறது. **இந்தக் கோரிக்கையிலுள்ள நியாயத்தை உணர்ந்து இந்தச் சலுகை, குறைந்த அடர்த்தி பாலிஎத்திலின் (LDPE) பொருட்களுக்கும் பாலிபுரோப்பலின் (PP) மணிகளுக்கும் நுழைவுவரி விதிக்கப்பட்ட நாளான 21.3.2003 முதலாகவே வழங்கப்படும்.**

169. நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் **டீ சேர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும். கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும், தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப்படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்.**

170. சிட்டா நூல், கைத்தறித் துணிகள் தயாரிப்பில் முக்கிய மூலப்பொருளாகும். கைத்தறித் தொழிலை ஊக்குவிக்கவும், அதில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நெசவாளர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் **சிட்டா நூலுக்கு முழு வரிவிலக்களிக்கப்படும்.** இதனால் ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.56 கோடி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும்.

171. நமது மாநிலத்தில் பின்னலாடை (Hosiery) தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்பதில் இந்த அரசு எப்பொழுதும் அக்கறை கொண்டுள்ளது. இந்தத் தொழில், நாட்டிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும், இளம்பெண்களுக்கும் வேலை வாய்ப்பினை அளித்துவருகிறது. இந்தத் தொழிலுக்கு ஊக்கமளிக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த அரசு வெளிமாநிலங்களுக்கு விற்கப்படும் பின்னலாடைகளின் மீதான விற்பனை வரியினை, கடந்த 1996ஆம் ஆண்டு 4 சதவிகிதத்திலிருந்து 1 சதவிகிதமாகக் குறைத்தது. ஆனால், பின்னர் மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்திருத்தம் காரணமாக, வெளிமாநிலத்தில் பதிவு செய்யப்படாத வணிகர்களுக்கு விற்கப்பட்ட பின்னலாடை களுக்கு 10 சதவிகிதம் மத்திய விற்பனை வரி செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட ஊக்குவிப்புத் திட்டச் சலுகை 2002 முதல் 2005 வரையிலான காலத்திற்குத் தரப்படாததால் நமது மாநிலத்திலுள்ள பின்னலாடைத் தயாரிப்பாளர்கள் மிகுந்த இன்னலுக்கு ஆட்பட்டுள்ளனர். **விதிக்கப்படும் வரியில் 90 சதவீதத்தை வணிகர்களுக்கே திருப்பித்தரும் ஊக்குவிப்புத் திட்டம் 13.5.2002 முதல் 3.4.2005 வரையான காலத்திற்கும் வரியைக் கைவிடுதல் மூலமாக நீட்டிக்கப்படும்.**

172. கழிவுத்தாள் வணிகர்கள் அந்தத்தாளை கொள்முதல் செய்யும்போது தற்போது 4 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. அந்த வணிகர்கள் அதே

கழிவுத்தாளை வெளிமாநிலத்திற்கு விற்கும்போது மீண்டும் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் 4 சதவிகித வரி செலுத்த வேண்டியுள்ளது. இதனால் கழிவுத்தாள் விற்பனை செய்யும் வணிகர்கள் தங்கள் பொருட்களை வெளிமாநிலச் சந்தைகளில் போட்டியிட்டு விற்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. **தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின்கீழ் கழிவுத்தாளுக்கு வரி விதிக்கப் பட்டிருப்பின் அந்தப் பொருட்கள் வெளி மாநிலங்களுக்கு விற்கப்படும் போது, அந்த வெளிமாநில விற்பனைக்கு வரிவிலக்கு அளிக்கப்படும்.**

173. செங்கல் உற்பத்தியில் எரிசாம்பல் ஒரு முக்கிய மூலப் பொருளாகும். **சுற்றுச் சூழலைப் பேணும்வகையில் செங்கல் உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்யும் எரி சாம்பலுக்கு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.**

174. மென்பொருட்கள் தமிழ் மொழியில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, **தமிழ்மொழியில் தயாரிக்கப்படும் உரிமம் அளிக்கப்பட்ட மென்பொருட்களுக்கு (Licensed Software) விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

175. சாம்பிராணிக்கு 1996இல் அளிக்கப்பட்ட வரிவிலக்கு, 2002இல் நீக்கப்பட்டு 4 சதவிகித விற்பனை வரி விதிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஒரு சிறு பிரிவினர் மட்டுமே சாம்பிராணி உற்பத்தி செய்கின்றனர் என்பதைக் கருத்தில் கொண்டு, **சாம்பிராணிக்கு மீண்டும் விற்பனை வரிவிலக்கு அளிக்கப்படும்.**

176. வரிபாக்கியினை செலுத்த இயலாத வணிகர்களின் இடர்களையும் வண்ணம் ஒரு புதிய சமாதானத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்பது வணிகர் சமூகத்தின் முக்கியக் கோரிக்கையாகும். 1.1.2007 முதல் புதிய வரிமுறையான மதிப்புக்கூட்டு வரியினை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளதால் தற்போது நடைமுறை யிலுள்ள தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச்சட்டத்தின்கீழ் இருக்கும் வரி நிலுவைகள் அனைத்தையும் ஒரு முடிவிற்கு கொண்டுவருவது, வணிகர் மற்றும் அரசு ஆகியோரின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு வரிபாக்கியினை செலுத்த இயலாத நிலையிலிருக்கும் அனைத்து வணிகர்களுக்கும் பயனளிக்கும் வகையில், **வணிகர் நட்புறவான ஒரு சமாதானத் திட்டத்தினைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. நடப்புக் கூட்டத்தொடரிலேயே இத்திட்டத்திற்கான விளக்கங்களைக் கொண்ட சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படும்.**

177. முந்தைய அரசால் கொண்டுவரப்பட்ட மறுவிற்பனை வரி (Resale Tax) நீக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தோம். **அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வண்ணம், மறுவிற்பனை வரி 1.1.2007 முதல் நீக்கப்படுகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## பதிவுத் துறை

178. கடந்த தி.மு.க. ஆட்சியில் சார் பதிவாளர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 450 சார் பதிவாளர் அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விரைவான சேவை அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் எஞ்சியுள்ள 108 சார் பதிவகங்களும் இவ்வாண்டு கணினிமயமாக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.11.41 கோடி இந்தத் திருத்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

179. போலி முத்திரைத்தாள்களை புழக்கத்திலிருந்து அறவே நீக்கும் வகையில் முத்திரைத் தீர்வை செலுத்தியதை இயந்திரங்கள் மூலம் ஆவணங்களில் அத்தாட்சி செய்தல் (Franking) அல்லது மின்னணு முறையில் முத்திரைத்தீர்வை வசூலித்தல் (e – stamping) போன்ற மாற்று ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.






180. விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் தங்கள் தொழில் சம்பந்தப்பட்ட தேவைகளுக்காக நகைகள் மற்றும் அசையாச் சொத்துக்களை வங்கிகளில் அடமானம் வைத்துக் கடன் பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் கடனுக்காக அளிக்கப்படும் அடமான ஆவணங்களுக்கு, விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர்கள் கடன் தொகையில் 0.5 சதவீதம் முத்திரைத்தீர்வை செலுத்த வேண்டியுள்ளது. விவசாயிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, **அத்தாட்சி செய்யப்படாத அடகு/அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கும்.**

## ஒட்டுமொத்த நிதிநிலை

181. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்டத்தின் நிதிநிலை பற்றிய கணிப்புகளை தற்போது நான் அளிக்கின்றேன். 2006–2007ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவுகள்ரூபாய் 38 ஆயிரத்து 731 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 2006–2007ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீடுகளில் வருவாய் செலவு 39 ஆயிரத்து 860 கோடி ரூபாய் என மதிப்பிட்டுள்ளது. இதனால் ஏற்படும் வருவாய் பற்றாக்குறை ரூபாய் 1,129 கோடியாகவும், மொத்த வருவாய் வரவுகளில் 2.9 சதவீதமாகவும் இருக்கும். நடப்பு நிதியாண்டின் கடன்களும் முன்புணங்களும் (நிகரம்) உள்ளிட்ட மூலதனச் செலவு ரூபாய் 6,102 கோடியாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 7,231 கோடி அளவிற்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும். 2006–2007ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் நிதிப்பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவிகிதத்திற்குள்ளாகவே இருக்கும். இது 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை பற்றிய பொறுப்புடைமைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளை ஒத்தே இருக்கும். இந்த நிதிப்பற்றாக்குறை ரூபாய் 7,453 கோடி அளவிற்கு நிகரக் கடன் மூலம் எதிர்கொள்ளப்படும். பொது கணக்கு (நிகரம்) மற்றும் எதிர்பாராச் செலவு நிதி (நிகரம்) ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 2006–2007ஆம் ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிப்பற்றாக்குறை ரூபாய் 4 கோடியாக இருக்கும். இந்தப் பற்றாக்குறை புதிய வரிகள் ஏதும் விதிக்காமலேயே செலவினங்களின் சிக்கனத்தைக் கடைப்பிடித்தும் மேம்பட்ட வரிநிர்வாகம் மூலமாகவும் ஈடுகட்டப்படும்.

182. 31.3.2001 அன்று ரூபாய் 28 ஆயிரத்து 685 கோடி அளவில் அரசின் கடன் பொறுப்புகள் இருந்தன. இக்கடன்களுக்காக மாதந்தோறும் ரூபாய் 293 கோடி வட்டியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் 2005–2006ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடுகளின்படி, 31.3.2006 அன்று உள்ளபடி, ரூபாய் 56 ஆயிரத்து 94 கோடி அளவிற்கு, மிக அதிகமான கடன் பொறுப்புகள் இவ்வரசிற்கு விட்டுச் செல்லப்பட்டுள்ளது. இந்தப் பெருமளவு கடனிற்கு செலுத்த வேண்டிய வட்டிப் பொறுப்புகளுக்கு மட்டும், ஒவ்வொரு மாதமும் ரூபாய் 446 கோடி அளவிற்கு நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது. எனினும், தமிழ்நாட்டு மக்களின் நலனை தலையானதாகக் கருதி, வளர்ச்சி நோக்குடைய இந்த வரவு செலவு திட்டத்தை செயலாக்க இவ்வரசு முனைந்துள்ளது. அதே நேரத்தில் நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீத அளவிற்குக் கட்டுப்படுத்த எந்தவொரு வரிவிகிதத்தையும் உயர்த்தாமல் பிற நிதி ஆதாரங்கள் அனைத்தையும் திரட்டியுள்ளது. இவ்வாறாக நிதிச் சமன்பாட்டில் சரிவு ஏற்படாவண்ணம் சமூகப் பாதுகாப்பு அரணை வலுப்படுத்தியுள்ளோம்.

183. வரவு–செலவுத் திட்ட உரையின் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ள நடுத்தரகால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான மாநிலத்தின் நிதிநிலைச் செயல்திட்டம் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது. இதனை வரவு–செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன். நடுத்தரகால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிநிலை இலக்குகளை இவ்வரசு செம்மையாகப் பின்பற்றும்.

184. அய்யன் திருவள்ளுவர் வகுத்தளித்தவாறு – தூங்காமை, கல்வி, துணிவுடைமை ஆகியவை என்றைக்கும் நீங்காமல் நிறைந்திடப்பெற்று – அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய தகுதிகள் மிகுந்திடப்பெற்று – கொஞ்சமும் குறைவின்றி

**“நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 3 சதவீத அளவிற்குக் கட்டுப்படுத்த எந்தவொரு வரிவிகிதத்தையும் உயர்த்தாமல் பிற நிதி ஆதாரங்கள் அனைத்தையும் திரட்டியுள்ளது.”**

நமது நெஞ்சமெலாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழுக்கும்; வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பரிணாமக் கூறுகளுக்கெல்லாம் பாதையைப் பண்படுத்திக் கொடுத்து பூமிப்பந்தின் மனித இனங்களில் புகழ்பூத்த, மிகவும் மூத்த இனமாம் நற்றமிழர்க்கும்; தொண்டூழியம் தொடர்ந்து செய்து வருவதையே பிறவிப்பயனும் பெருமையும் என்பதாகக் கொண்டு ஓய்வின்றி; நாளும் உழைத்து வரும் நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள்;

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

எனும் இலக்கணத்திற்குரிய இனிய இலக்கியமாக இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையினைத் தயாரிப்பதில் தமது கடமை உணர்வால் பட்டைதீட்டப்பெற்ற வைரமென ஒளிரும் நூலறிவுடன் சிறந்த மதிநுட்பத்தாலும், நீண்ட பல ஆண்டுகளாக நாட்டு மக்கள் மனமறிந்து நடத்திய நிருவாகத்தினால் பெற்ற பட்டறிவாலும், அய்யன் வள்ளுவன் வகுத்த வாழ்வியல் நெறியில் – செழித்திருக்கும் தமது சிந்தனைத் திறனையும், ‘வெல்லுஞ் சொல்இன்மை அறிந்து’ பிரயோகித்திடும் சொல்வன்மையினையும், ‘அற்றங் காக்குங் கருவி’யாம் அறிவாற்றலையும் செலவிட்டுச் செவ்விய வழி காட்டியிருக்கிறார்கள். எனது நெஞ்சம் நிறைந்த நன்றி எந்நாளும் உரித்தாகுமாறு.

185. திக்கெட்டும் வாழும் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் செறிவான வரவேற்பையும் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே பரவி விரவியிருக்கும் பல்வேறு அம்சங்களும் இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையிலே இடம் பெற்றுள்ளன.

186. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் – கழனி காத்திடும் விவசாயிகள், கடிதுழைத்திடும் பாட்டாளிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், வணிகர்கள், பள்ளி, கல்லூரிகள் செல்லும் மாணவர்கள், கடல் மீதேறி வாழ்க்கைப் பயணம் செலுத்தும் மீனவர், நெசவாளர்கள், பனை – தென்னையைச் சார்ந்திருப்போர் மற்றும் கைவினைஞர்கள் – மகிழ்ந்து வாழ்த்தி வரவேற்கத் தக்க வகையிலே; எண்ணி யெண்ணிச் செயல் திட்டங்களைச் சேர்த்துச் சேர்த்து, திரட்டிப் படைக்கப்பட்டிருப்பதே இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கை.

187. ***“ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்துவதுதான் அரசு. அதுபோல அனைவரையும் சேர்த்து நடத்துவதுதான் நல்லரசு. எனவே, இம்மன்றத்தின் அகத்தும் புறத்தும் கூறப்படும் ஆக்கம் நிறைந்த நல்ல கருத்துக்களையும், அறத்தை அணி செய்யும் ஆலோசனைகளையும் இந்த அரசு வரவேற்று, அவற்றைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஆவன செய்ய முற்படும் என்றும் உறுதி கூறுகிறேன்”*** என்று 25–3–1971 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்று முதல் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை அளித்து உரையாற்றிய போது கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதை, பேரவைக்கு நினைவூட்டிடப் பெரிதும் விழைகின்றேன். அந்த உறுதியில் இன்றைக்கும் எந்தவித மாற்றமும் இல்லை. எனவே அன்று அவர் வழங்கிய உறுதிமொழியை – இன்று அவரது சார்பில் நான் வழங்குவதில் மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

188. இந்த வரவு செலவுத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதில் முழு ஈடுபாடு கொண்டு இடையறாது ஒத்துழைத்து அரும்பணியாற்றிய நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்களுக்கும், அரசின் நிதித்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அதிகாரிகளுக்கும் இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2006–2007ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட அறிக்கையை இப்பேரவை முன் வைக்கின்றேன்.

**வணக்கம்**



# பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாட விரைவில் சட்டம்



**காமராஜர் பிறந்த நாள் - கல்வி வளர்ச்சி நாள் விழாவில் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (15.7.2006)**

இன்றைய தினம் கொண்டாடப்படுகின்ற இந்த விழா பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாள் விழா என்பது மாத்திரமல்ல; கல்வி வளர்ச்சி நாள் விழாவாகவும் கொண்டாடப்படுகிறது. இப்படிக் கொண்டாட வேண்டுமென்று நெடுநாட்களாக எனக்கு விருப்பம், ஆசை அதனை பலமுறை நான் வெளியிட்டிருக்கின்றேன். ஆனால், தோதாக வாய்ப்பு அமையாமல் போய்விட்டது. கடந்த காலத்தில் 2000 ஆம் ஆண்டின் இறுதியில் இதுபோன்ற ஒரு நினைவு எனக்கு எழுந்து ஒரு விழாவிலே காமராஜர் அரங்கத்திலே நடைபெற்ற விழா என்று கருதுகிறேன், காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக – கல்விக் கண் திறந்த நாளாக கொண்டாடுவதற்கு கழக அரசு முனையும் என்று குறிப்பிட்டேன். ஆனால், கழக அரசு நடைபெற்று முடிந்த அந்தத் தேர்தலிலே தொடர முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால் அதனை நான் நிறைவேற்ற இயலவில்லை.



### ரத்து செய்யப்பட்ட திட்டங்கள்

இங்கே சமூக நலத்துறை அமைச்சர் பூங்கோதை பேசும்போது, பல திட்டங்களை இடையிலே வந்த அரசு மாற்றி அமைத்துவிட்டது அல்லது ரத்து செய்துவிட்டது என்று குறிப்பிட்டார். ஒன்றல்ல, இரண்டல்ல பல திட்டங்கள் அவ்வாறு ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, ஏழைப் பெண்களுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய பெயரால் திருமண உதவித் திட்டம். அந்த அம்மையாருடைய பெயரும் நினைவுக்கு வரவேண்டும் அந்தப் பெயரால் பெண்களுடைய வாழ்வும் சிறப்படைய வேண்டும் என்ற இரு குறிக்கோளை இணைத்து அன்றைக்குத் தீட்டப்பட்ட அந்தத் திட்டம் செயல்பட்டு ஏறத்தாழ 2 இலட்சத்து 50 ஆயிரம் பெண்கள் கழக ஆட்சியிலே பயன் பெற்றார்கள். அது கடந்த ஆட்சியில் அறவே ரத்து செய்யப்பட்டுவிட்டது.

இப்பொழுது இந்தத் திட்டம் இன்றைக்கு "காமராஜர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாள்" என்ற அந்தப் பெயரிலே விழாக் கொண்டாடி நிறைவேற்றப்பட்டாலும், இது அரசு ஆணை என்ற அளவிலே இருந்தால் அடுத்து ஒரு அரசு வந்தால், அந்த ஆணையை மாற்றுவதற்கு எளிதாக ஆகிவிடுகிறது. அப்படித்தான் சில திட்டங்கள் ஆணை என்ற அளவிலே நாங்கள் வெளியிட்ட காரணத்தால் அடுத்து வந்த அரசு அவைகளையெல்லாம் அரசாணை மூலம் மாற்றி அமைத்துவிட்டது.

### எல்லா பள்ளிகளிலும் கொண்டாட வேண்டும்

அந்த வகையிலே தி.மு. கழக ஆட்சியிலே நாங்கள் அமைத்த உழவர் சந்தை மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. தி.மு.கழக ஆட்சியிலே இரண்டு வாரத்திற்கு ஒரு முட்டை என்கின்ற அளவில் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுக்காக கொடுக்கப்பட்ட அந்தத் திட்டமும் ரத்து செய்யப்பட்டு வெளியிடப்பட்டுவிட்டது என்பது அந்த செய்தி – இப்படிப் பல நல்ல திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுவிட்டன. அதற்கு என்ன காரணம் என்றால், இவைகளெல்லாம் அரசு ஆணையாக மாத்திரம் வெளியிடப்பட்ட காரணத்தால் அந்த ஆணையை இன்னொரு அரசு வந்தால் சுலபமாக மாற்றிவிட முடிகிறது. அதற்காக எல்லாவற்றையும் சட்டமாக ஆக்க முடியுமா என்றால், அது முடியாது. நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சட்டமன்ற அனுபவம் வாய்ந்த சுதர்சனம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் அனைவரும் அறிவீர்கள். சட்டத்திற்கும் ஆணைக்கும் உள்ள வித்தியாசம் என்ன ? எது வலிமை வாய்ந்தது ? எது மாற்ற முடியாதது ? எது மாற்றுவதற்கு எளிதல்ல ? என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஆணை என்றால் நாளைக்கு ஒரு அரசு வந்தால் காமராஜர் நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடுகின்ற அந்த ஆணை மாற்றப்பட்டு, பள்ளிக்கூடங்களுக்கு வேறு ஒரு ஆணை வெளியிடப் பட்டுவிடலாம் இது சுலபம். ஆனால், காமராஜர் பிறந்த நாள்



கல்வி வளர்ச்சி நாள், அன்றைக்கு இன்னென்ன காரியங்களை பள்ளிக்கூடங்களில் செய்ய வேண்டும் என்பதை ஆணையாக வெளியிடாமல் சட்டமாகவே ஆக்கிவிட்டால்; அதைக்கூட மாற்றலாம், அதை மாற்றுவதற்கு சட்டசபைக்கு வந்தாக வேண்டும்.

சட்டசபையிலே அதை மாற்றுகிற நேரத்தில் பீட்டர் அல்போன்ஸ் விடுவாரா ? சுதர்சனம் விடுவாரா ? எவ்வளவு பெரியவாதங்கள் நடைபெறும். எனவே தான் நான் காமராஜர் அரங்கத்திலே பேசிவிட்டு இங்கே வருகிறேன். இங்கே வரும்போதே எனக்கு நினைவு, இங்கே வந்து இந்தச் செய்தியை சொல்ல வேண்டும் என்று. இந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுவதும், அந்த நாளில் தமிழ்நாட்டிலே உள்ள எல்லாப் பள்ளிகளிலும் குதூகலமாக காமராஜர் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும் என்பதும் சட்டமாக ஆக்கப்பட்டால் என்ன ? – என்ற அந்தக் கேள்வியோடு வந்தேன். அந்தக் கேள்விக்கு இப்பொழுதே விடையளிக்கின்றேன்.

நிச்சயமாக வருகின்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் காமராஜர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவிக்கப்படவும், அந்த நாளில் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் அவருடைய பெயரைச் சொல்லி அவருடைய படத்திற்கு ஆங்காங்கு மாலைகள் அணிவித்து, அவருக்கு வாழ்த்துச் சொல்லி நன்றி கூறுகிற நாளாக இந்த நாளை கொண்டாட வேண்டும் என்பதையும் சட்டமாக ஆக்குவதற்கு நான் முனைவேன், ஆக்குவேன். அதற்கு உங்களுடைய ஆதரவு நிச்சயமாக இருக்குமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

சத்துணவுத் திட்டம் ஏன் வந்தது ? முதலில் மதிய உணவுத் திட்டமாக பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, பிள்ளைகள் படிக்க வேண்டும் என்றால் வயிற்றுக்கு இல்லாமல் எப்படிப் படிப்பார்கள். வயிற்றுக்குச் சோறு இல்லாமல் பட்டினி கிடந்து படிக்க முடியுமா என்ற அந்தக் கேள்விக்கு கிடைத்த பதில்தான் மதிய உணவுத் திட்டம். இதை ஆசிரியர்கள் பார்த்துச் செய்ய வேண்டிய ஒரு கடமையாக இருக்கிறது. இதை அரசே செய்தால் என்ன ? என்று என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது மாற்றம் கொண்டு வந்தார். அதைத்தான் சத்துணவாக ஆக்கினால் என்ன என்று; அவர் கொண்டு வந்ததாயிற்றே, ஆகவே அதை ரத்து செய்து விட வேண்டும் என்று இல்லாமல், அதை மேலும் வளர்க்க வேண்டும். மேலும் அதை பெரிய அளவிலே செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு முட்டை வழங்கப்படும் என்று வழங்கினோம். இப்பொழுது இன்று முதல் காமராஜர் பிறந்த நாளையொட்டி வாரத்திற்கு இரண்டு முட்டைகள் பள்ளிக் குழந்தைகளுக்குத் தரப்படும் என்று அறிவித்திருக்கின்றோம், அது தொடரும்.

நான் இங்கே வரும்பொழுது ஒலி பெருக்கியிலே நம்முடைய தொகுப்பாளர் பேசியதை கேட்டுக் கொண்டு வந்தேன். பிள்ளைகள் இப்பொழுது படிப்பிலே முட்டை வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள், அந்த முட்டை வாங்காமல் இருப்பதற்காகத்தான் இந்த முட்டை, (கைதட்டல்) இந்த முட்டை சாப்பிட்டால்தான் பலமாக வலிவாக இருக்க முடியும். ஆரோக்கியமாக இருக்க முடியும். ஆரோக்கியமாக இருந்தால்தான் நன்றாக எழுதமுடியும், நன்றாகப் படிக்க முடியும். நன்றாகத் தேர்ச்சியடைய முடியும் என்ற இவ்வளவையும் உள்ளடக்கிய சத்துள்ள உணவு. இந்தச் சத்துணவுத் திட்ட விழாவிலே கலந்து கொண்டு பெருந்தலைவர் காமராஜரை நன்றியோடு நினைப்பதற்கு ஏற்ற இந்த வாய்ப்பை எண்ணி மகிழ்ந்து அந்த வாய்ப்பும் என்னுடைய தொகுதியிலேயே கிடைத்திருக்கிறது என்கின்ற மகிழ்ச்சியோடு சுயநல மகிழ்ச்சியோடு அனைவருக்கும் நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன்.



❖ ❖ ❖




### காமராஜ் – பெயர் வந்தது எப்படி ?

**கா**மராஜர் என்று நாம் அறிகின்ற அந்தக் குழந்தையை, பார்வதிப்பாட்டி 'காமாட்சி' என்றுதான் முதலில் அழைத்தார். இன்னும் சரியாகச் சொன்னால் 'காமாட்சி' ஒரு ஆண் குழந்தைக்குப் பெண்பால் பெயரை வைக்க வேண்டியதன் அவசியம் என்ன வந்தது என்று கேள்வி எழலாம். நிறைய ஆண் குழந்தைகளைப் பெற்றுப்போட்டுவிட்டு, பெண் குழந்தையே இல்லாமல் போகும்போது, கடைசியாகப் பிறந்த ஆண் குழந்தைக்கு ஆசைக்காக அப்படிப் பெயர் வைத்தால் அது ஏற்றுக் கொள்ளும்படியாக இருந்திருக்கும்.

ஆனால் காமராஜரோ முதல் குழந்தை. எனவே பார்வதிப்பாட்டி அப்படிப் பெயரிடுவதற்கு, தேவி மீனாட்சியின் மீது அவர் கொண்டிருந்த இறைபக்தியும் பிரியமும்தான் காரணம் என்று காமராஜரின் வாழ்க்கையை அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

'காமாட்சி' என்று பாட்டி அன்பாக அழைத்தாலும் பெற்றவளுக்கென்று ஒரு ஆசை இருக்காதா ? சிவகாமி அம்மாள் தன் மகனை 'ராஜா' என்றே அழைத்தார்.

அப்பா குமாரசாமி பார்த்தார். தாயையும் தாரத்தையும் திருப்திப்படுத்தும் வண்ணமாகவோ என்னவோ இரண்டு பெயர்களையும் சேர்த்து, உனக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் என்று, காமாட்சியில் உள்ள 'காமா'வையும் 'ராஜா' வையும் சேர்த்து காமா'ராஜா' ஆக்கிவிட்டார். காமாட்சி அன்று முதல் 'காமராஜ்' ஆனார்.

### காமராஜரின் ஆங்கில அறிவு

காமராஜர் படிக்கவில்லை என்பதால் அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்று பலர் நினைத்துக்கொண்டு இருந்தனர். ஆனால் காமராஜருக்கு நன்றாகவே ஆங்கிலம் தெரியும். ஏதாவது தெரியவில்லையானால், அவரே வெளிப்படையாகக் கேட்டுக் தெரிந்து கொள்ளும் ஓர் உண்மையான அறிஞராக அவர் இருந்தார். அவர் ஆங்கிலத்திலேயே பேசி விஷயங்களை விளக்கிய சம்பவங்கள் அநேகம் உண்டு.

அவருடைய ஆங்கில அறிவுக்குச் சில உதாரணங்கள். இது அவர் முதலமைச்சராக இருந்தபோது நடந்தது. ஒருமுறை ஓவியர் பாஷ்யம், மகாத்மா காந்தியை உட்கார்ந்த நிலையில் ஓர் ஓவியம் வரைந்தார். அது காமராஜருக்கு மிகவும் பிடித்துப்போய் விட, அதை எல்லா மாவட்டக் கமிட்டிகளும் வாங்க உத்தரவிட்டார். 'எல்லா அலுவலகங்களிலும் இந்தப் படத்தை hang செய்யவும்' என்று தட்டச்சு செய்திருந்ததை மாற்றி install செய்யவும் என்று போடச் சொன்னார் முதலமைச்சராக இருந்த காமராஜர்.

Hang செய்யவும் என்றால் 'தொங்கவிடவும்' என்ற அர்த்தம் வரும்தான் என்றாலும், அந்தச் சொல்லுக்கு 'தூக்கில் போடுதல்' என்ற ஒரு பொருள் இருந்ததால், மகாத்மாவுக்கு மரியாதை செய்யும் பொருட்டு, தப்பித்தவறிக்கூட அப்படி ஒரு பொருள்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 26.6.2006 அன்று, சென்னை காமராஜர் அரங்கில் நடைபெற்ற விழாவில் பெட்ரோலிய எரிபொருட்களுக்கான குழாய்ப்பாதையினை நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள். மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு.முரளி தியோரா, மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு.ப.சிதம்பரம், திரு.தயாநிதி மாறன், திரு.டி.ஆர். பாலு, திரு.ஜி.கே.வாசன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



வந்து விடக்கூடாது என்பதில் அவர் கவனமாக இருந்தார். மொழியை எவ்வளவு கவனமாகக் கையாண்டார் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

### முதல் வேலை

வைப்பாற்றுப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா நடைபெற்றது. அடிக்கல் நாட்டிய காமராஜர், பாலத்தைப் பற்றிப் பேசவில்லை. இலவச உணவுத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்.

'எதற்காகச் சுதந்தரம் வாங்கினோம் ? எல்லோரும் வாழ. எப்படி வாழணும் ? ஆடு, மாடுகள் மாதிரி உயிரோடு இருந்தால் போதுமா ? மனிதர்களாக வாழணும். அதற்குப் படிப்பு வேணும். பட்டினியாக இருந்தால் படிப்பு வருமா ? வராது. ஏழைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடங்களிலேயே சாப்பாடு போடணும், அப்பதான் படிப்பு ஏறும். இதுவே முதல் வேலை, முக்கியமான வேலையும் கூட.

அன்னதானம் நமக்குப் புதியதல்ல, இதுவரை வீட்டுக்கு வந்தவர்களுக்குப் போட்டோம். இப்போது பள்ளிக்கூடத்தை தேடிப்போய் போடச் சொல்கிறோம். அப்படிச் செய்தால் உயிர் காத்த புண்ணியம்; படிப்பு கொடுக்கும் புண்ணியம் இரண்டும் சேரும். இதை உணர்ந்து இப்பகுதியில் பல ஊர்க்காரர்கள் தாங்களாகவே பகல் உணவுத் திட்டத்தை நடத்த ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். இவர்களைப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

'என் மனத்தில், எல்லோர்க்கும் கல்விக் கண்ணைத் திறப்பதைவிட முக்கியமான வேலை இப்போதைக்கு இல்லை. இதையே எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதுகிறேன். எனவே மற்ற எல்லா வேலைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு ஊர் ஊராக வந்து பகல் உணவுத் திட்டத்துக்காகப் பிச்சையெடுக்க சித்தமாக இருக்கிறேன், என்று உணர்ச்சிபூர்வமாக காமராஜ் பேசிய பேச்சு, வரலாற்றில் மறக்க முடியாததாகிவிட்டது.

*– நாகூர் ரூமி எழுதிய 'காமராஜர்' நூலிலிருந்து...*



# தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர் ம.பொ.சி. சிலை அமைக்கப்படும்!



**சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய சிறப்புரை (1.7.2006)**

நேற்றையதினம் (30.6.2006) என்னுடைய தொகுதியான சேப்பாக்கம் தொகுதியில், எனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி கூற நான் சென்றிருக்க வேண்டும். உடல்நிலை இடம்தராத காரணத்தால் அந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. இன்றைக்கும் ஒத்தி வைக்கப்படுமா என்ற கேள்விக்கு இடமில்லாமல் இங்கே வந்திருக்கிறேன் என்றால் நான் பேசுகின்ற அந்தக் கூட்டத்தை விட, நான் சிலம்புச் செல்வரைப் பற்றி பேசுகின்ற கூட்டம் சிறந்தது என்று நான் கருதியதுதான் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

நம்முடைய ராஜாராம் அவர்கள் நான் ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாது என்று குறிப்பிட்டார். ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடாது என்று அவர் குறிப்பிட்டதின் பொருள் அரசியலிலிருந்து, சமுதாயத் தொண்டிலிருந்து, தமிழர்களுக்கு ஆற்றுகின்ற பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிடக்கூடாது என்ற நிலையிலேதான் அவர் சொன்னதாக நான் எடுத்துக் கொள்கிறேனேயல்லாமல், மருத்துவர்கள் சொல்கின்ற ஓய்வைப் புறக்கணிக்க வேண்டுமென்று அவர் நிச்சயமாகச் சொல்லியிருக்க மாட்டார். இன்று கூட என்னோடு வந்திருக்கிற மருத்துவத்துறை நண்பர், நீண்ட நேரம் பேச வேண்டாம், விரைவிலே முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுங்கள் என்று சொல்வதற்காகத்தான் எனக்குத் துணையாக வந்திருக்கிறார். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஆற்ற வேண்டிய கடமைகளில், நேற்றைய தினம் நான் ஆற்றியிருக்க வேண்டிய கடமையை, இன்னொரு நாளைக்குக் கூட ஆற்றலாம். ஏனென்றால் வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறுகின்ற கூட்டம்தான் அது. ஆனால் இது நாட்டுக்கு உழைத்த ஒரு பெருமகனுக்கு, மொழிக்காகப் பாடுபட்ட ஒரு பெரியவருக்கு, காலம் எல்லாம் சுதந்திரத்திற்காகவும், இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், அருந்தொண்டாற்றிய ஒரு அரிய மனிதருக்குச் செய்கின்ற சிறப்பு – அந்தச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் இருப்பது என்னுடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பெருங்குறையாக ஆகிவிடும் என்பதால்தான் இன்று இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்கின்ற வாய்ப்பை நான் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் 8.7.2006 அன்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு, ம.பொ.சி. அவர்களின் மகன் வழி பெயரன்கள் திரு. தி.திருஞானம், திரு. தி.ஞானசிவம் ஆகியோருக்கு தலா ரூ.10 இலட்சம் பரிவுத் தொகை வழங்கினார்கள்.

திரு. ராஜாராம் அவர்கள் சொன்னார்கள். சிலம்புச் செல்வர் அவர்கள் எப்படியெல்லாம் இந்தச் சமுதாயத்திற்கு, நாட்டிற்கு உழைத்தார் என்பதையும், சென்னை மாநகரம் நம்மிடத்திலே இன்றைக்கு இருப்பதற்கு காரண கர்த்தாக்களில் மூலவரே அவர்தான் என்பதையும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அது மாத்திரமல்ல, திருத்தணியிலே அன்றைய எல்லையைக் காப்பாற்றுவதற்காக சிலம்புச் செல்வர் அவர்களும், மறைந்த நண்பர் விநாயகம் அவர்களும் போராடிய போது, அறிஞர் அண்ணா அவர்களும், நானும், நண்பர் ராஜாராம் போன்றவர்களும் திருத்தணிக்கே சென்று அவர்களை வாழ்த்திவிட்டு வந்தோம்.

ஒரு காலத்திலே திராவிடர் இயக்கத்தை வீழ்த்த வேண்டும், திராவிடர் இயக்கத்தை தலையெடுக்க விடக் கூடாது என்று கங்கணம் கட்டிக்கொண்டு பணியாற்றியவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள். இதிலே அவரை நாங்கள் எப்படி வெற்றி கொண்டோம் என்றால், அவரே எங்களைப் பரவாயில்லை என்று ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு, அவரை நாங்கள் வெற்றி கொண்டிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், பாஞ்சாலங்குறிச்சியிலே அவருக்கு மிகவும் பிரியமான மாவீரன் கட்டபொம்மனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டுமென்று, பாஞ்சாலங்குறிச்சியிலே கோட்டையைப் புதுப்பித்து கட்டினேன். அந்த விழாவிற்கு வந்திருந்த சிலம்புச் செல்வர் அவர்கள் பேசும்போது, வள்ளுவர் கோட்டம் கட்டுவதற்கு ஏற்பாடு, பூம்புகார் கட்டுவதற்கு ஏற்பாடு, இங்கே பாஞ்சாலங்குறிச்சியை இவ்வளவு அழகான கோட்டையாக கருணாநிதி உருவாக்கியிருக்கிறார் என்று சொல்லிவிட்டு, ஒரு பாச உணர்வோடு சொன்னார். இதையெல்லாம் இருந்து பார்த்து கருணாநிதியை வாழ்த்துவதற்கு அண்ணா இல்லையே, என்று வருத்தப்பட்டு விட்டுச் சொன்னார், அண்ணா இல்லாவிட்டாலும் கருணாநிதி அவர்களே, அண்ணா இடத்திலே நான் இருந்து உங்களை வாழ்த்துகிறேன் என்று அன்றைக்குச் சொன்னார். இன்றைக்குச் சொன்னது போல் அந்தச் சொல் என்னுடைய காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

என்றும் என் மீது ஒரு தனி பாசம் கொண்டவர். "கல்லக்குடி கொண்டான்" என்ற பட்டத்தை அவர்தான் திருச்சியிலே நடைபெற்ற ஒரு விழாவிலே வழங்கினார். மற்றவர்களைப் பாராட்டுவதில் சளைக்காதவர்.

தமிழுக்காக உழைக்கின்ற யாராக இருந்தாலும், தமிழுக்காக போராடுகின்ற யாராக இருந்தாலும் அவர்களையெல்லாம் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறவர்.



அவர் எழுதிய நூல்கள் நூற்றுக்கு மேற்பட்டவை என்பதை நம்முடைய ராஜாராம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார். அதிலே ஒரு நூல் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற நூல் என்று கருதுகிறேன். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அது நாட்டுடைமையாக்கப்பட்டதாக நினைக்கிறேன். அது நாட்டுடைமை யாக்கப்பட்டு ஒரு இலட்சம் ரூபாய் அதற்காக பரிசு வழங்கப்பட்டது என்றும் எனக்கு நினைவிருக்கிறது. அந்தக் காலத்திலே ஒரு இலட்ச ரூபாய் என்பது பெருந்தொகைதான். ஆனால் இப்போது அண்மையில் நம்முடைய இராவண காவியம் போன்ற நூல்களை எழுதிய புலவர் குழந்தை அவர்களின் நூல்களை அரசுடைமையாக்கி, பத்து இலட்ச ரூபாய் இந்த அரசின் சார்பில் வழங்கப்பட்டிருக்கின்றது. அவர் எழுதிய நூல்கள் இருபத்தைந்து, முப்பது நூல்கள், ம.பொ.சி. அவர்கள் எழுதிய நூல்கள் நூற்றுக்கு மேற்பட்டவை என்ற காரணத்தால், நான் இங்கே விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் அடிப்படையில், அந்த நூல்களுக்காக இருபது இலட்ச ரூபாய் அரசின் சார்பாக வழங்கப்பட்டு, அந்த நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்பதை அவருடைய குடும்பத்தாருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

*மற்றவர்களைப் பாராட்டுவதில் சளைக்காதவர். தமிழுக்காக உழைக்கின்ற யாராக இருந்தாலும், தமிழுக்காக போராடுகின்ற யாராக இருந்தாலும் அவர்களையெல்லாம் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறவர்.*

இன்னொன்று, அவருக்கு சிலை வைக்க வேண்டுமென்றல்லாம் சொல்லப்பட்டது. எப்போதுமே ஒருவர் மறைந்து விட்டால், அவருக்கு சிலை வைக்கப்படும் என்று அறிவிப்பார்கள். ஆனால் மறைந்து ஐந்தாறு ஆண்டுகள் ஆனாலுங்கூட சொல்வதே, மறப்பதற்காகத்தான் என்ற அளவிலே மறந்து விடுவார்கள். இது நாட்டில் வழக்கமாக நடைபெற்றுவருகின்ற ஒன்று. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களைப் பொறுத்தவரையில் நிச்சயமாக இந்த அரசின் சார்பில் அவருக்கு எதற்காக இல்லாவிட்டாலும் – தமிழகத்தின் தலைநகரத்தைக் காப்பாற்றிக் கொடுத்த அந்த ஒரு தகைமைக்காகவாவது " தலைநகர் காத்த தமிழ்ச் செல்வர் ம.பொ.சி." சிலை அமைக்கப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா முழுவதும் அவருடைய பெயர் பரவ வேண்டுமென்று நண்பர் ராஜாராம் இங்கே சொன்னார். அதற்காக அஞ்சல் தலையும் அந்தச் சுதந்திரப் போராட்ட தளகர்த்தருக்கு, வருகின்ற ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்து இந்த அறிவிப்புகளோடு நான் என்னுடைய சிற்றுரையை நிறைவு செய்து விடைபெற்றுக் கொள்கிறேன் – வாழ்க ம.பொ.சி.யின் புகழ் என்று கூறி.

✧ ✧ ✧



# நட்பு - பாசத்திற்கு கிடைத்த வெற்றிதான் சிவாஜி சிலை திறப்பு



## நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (21.7.2006)

இன்று நான் மகிழ்ச்சியோடு இருக்கிறேனா, உணர்ச்சிப் பேரலையில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருக்கிறேனா என்ற கேள்விக்கு என்னாலேயே பதில் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு இனம் தெரியாத நிலையில் உங்கள் முன்னால் நான் அமர்ந்திருக்கின்றேன்.

நட்பின் கடமையாற்ற மாத்திரமல்ல, இந்த நாடு யாருக்கு நன்றி கூற வேண்டுமோ அந்த நன்றியினை அடையாளப் பூர்வமாக வெளியிட இந்த விழா தேவை என்று நான் கருதினேன். ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய நண்பர், என் உயிருக்குயிரான சிவாஜி மறைந்த காலத்திலேயிருந்து, அவருக்கு சிலை வைப்பதற்கான பேச்சு இருந்தது என்றாலுங்கூட, அது செயல்படாத நிலையில் நான் இந்தப் பொறுப்புக்கு வந்தவுடன், இந்தப் பொறுப்பும் எனக்கே உண்டு என்ற அடிப்படையில் இதனை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் இந்தப் பொறுப்பை நான் நிறைவேற்ற முடியாமல் இங்கே உரையாற்றிய நம்முடைய கலையுலகக் காவலர்கள் என்னுடைய அருமைச் சகோதரர்கள் கூறியதுபோல, பல தடைகள், மனக்கிலேசம், பெரும் புயல் வீசுகின்ற அளவுக்கு ஏற்பட்டன.

### நீதிக்குத் தலைவணங்கும் பண்பாடு

மே திங்கள் தமிழக சட்டமன்றத்திலே ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது, அந்த உரையின் அச்சடிக்கப்பட்ட புத்தகத்திலேயே இந்தத் திங்கள் இதே நாளில் இதே இடத்தில் சிவாஜியினுடைய சிலை வைக்கப்படும் என்று அந்த உரையிலேயே குறிப்பிடப்பட்டு உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முனைப்பான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டோம். இடத்தைப் பார்வையிட்டோம், ஏடுகளுக்குச் செய்தி தந்தோம், ஏடுகளும் அந்தச் செய்தியை பெரிய அளவிலே வெளியிட்டன. அதுவரையிலே வராத எதிர்ப்பு சொல்லிக் கொள்ளாமல் வந்த சுனாமிபோல வந்தது. சிலை வைப்பதற்குத் தடையா, தடங்கலா என்ற அந்தக் கேள்வி தமிழகம் முழுவதும் எதிரொலித்தது. என்ன செய்யப் போகிறான் கருணாநிதி என்கின்ற கேள்வி இரக்க உணர்வோடும், ஏளனப் புன்னகையோடும் எழுந்தன. ஆனால் நான் அவற்றுக்கெல்லாம் மௌனம்தான் சாதித்தேன். எந்தப் பதிலும் சொல்லவில்லை. நீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினை வந்தது. நீதிமன்றம் இறுதியாக அரசுக்கு தந்திருக்கின்ற தாக்கீது ஏற்கெனவே இருந்த அரசு இதுபோன்ற சாலைகளில் சிலைகள் வைப்பதில்லை என்று உறுதியளித்திருக்கிறது. எனவே நாங்கள் விழா நடத்த, சிலை நாட்ட அனுமதிக்கிறோம் என்றாலும் கூட, உச்சநீதிமன்றத்திற்குச் சென்று அதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று நீதிமன்றம் எங்களுக்கு ஆணையிட்டது. நீதிக்குத் தலைவணங்குகின்ற பண்பாட்டை நாங்கள் தொடர்ந்து கடைபிடித்து



வருகின்றவர்கள் என்ற காரணத்தால், அந்த ஆணையை ஏற்று இன்று இந்த விழாவை உங்களுடைய அன்பால், ஆதரவால் வாழ்த்து முழக்கத்தோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

## சிவாஜி சிலையையும் காப்பாற்ற முடியும்

தொடர்ந்து உச்சநீதிமன்றத்திலும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செல்வோம். ஆனால் உங்களுக்கு நான் தருகின்ற விளக்கம், நல்ல உள்ளம் படைத்த நாளேடுகளுக்கு, வார ஏடுகளுக்கு நான் தருகின்ற விளக்கம், ஒன்றே ஒன்று. அப்படிப்பட்ட உறுதிமொழி உச்சநீதி மன்றத்திற்கு கடந்தகால அரசினால் கொடுக்கப்பட்டாலும் இதே இடத்தில் கொஞ்சம் தள்ளி இந்த மேடைக்குப் பின்னால் சிம்சன் நிறுவனத்தின் கடிகாரம் ஒன்று அதே ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டதை காணலாம். எனவே, இந்தச் சாலையில் எந்த ஒன்றும் குறுக்கிட்டு வைக்கப்படமாட்டாது என்று உறுதிமொழி உச்சநீதிமன்றத்திற்கு வழங்கிய கட்சியின் ஆட்சிக் காலத்தில்தான் சிம்சன் கடிகாரம், ஏறத்தாழ ஒரு சிலையைப்போல அந்த உயரத்திற்கு இடம் பெற்றிருக்கின்றது. இதையும் நாங்கள் உச்சநீதிமன்றத்திலே எடுத்துச் சொல்லி, சிம்சன் கடிகாரத்தை காப்பாற்ற முடியுமானால் சிவாஜியின் சிலையையும் எங்களால் காப்பற்ற முடியும் என்ற உறுதியை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உணர்ச்சிப் பெருவெள்ளம்

சிவாஜி சிலைக்கு மாத்திரம் இடமில்லை என்று ஒரு செய்தி வந்திருக்குமேயானால், ஒருவார காலம் நான் பட்ட வேதனையை அறிந்தவர்கள், நேரில் தெரிந்தவர்கள் இங்கே கூட நம்முடைய மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜி. கே. வாசன் அவர்கள் அமர்ந்திருக்கிறார். அவர் என்னை சென்னையில் பார்த்துவிட்டு, நாகர் கோவிலுக்குச் சென்றவர், அங்கிருந்து தொலைபேசி மூலமாக எனக்கு ஆறுதல் சொன்னார், கவலைப்படாதீர்கள், நல்ல தீர்ப்பு வரும் என்று சொன்னார். அப்படிப் பார்த்தவர்கள் எல்லாம் எனக்கு ஆறுதல் கூறுகின்ற அளவுக்கு என்னைச் சமாதானப் படுத்தக் கூடிய அளவிற்கு என்னுடைய கழகத் தளகர்த்தர்கள் எல்லாம் என் முகத்தைப் பார்த்துப் பார்த்து வேதனைப்படக்கூடிய அளவிற்கு நான் இருந்த நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பு மாத்திரம் வேறுவிதமாக வந்திருந்தால், எனக்குச் சிலை வைக்க நீங்கள் இடம் தேடியிருக்க வேண்டும், அப்படித்தான் நான் ஆகியிருப்பேன். ஏனென்றால் சிவாஜியோடு கொண்ட அந்த நட்பும், அன்பும் ஏதோ பார்த்தோம், பழகினோம், ஒரு இலையிலே அமர்ந்து சாப்பிட்டோம், இருவருக்கும் அவருடைய அன்னைதான் என் அன்னையாக, என் அன்னைதான் அவருடைய அன்னையாக – இருவருக்கும் ஒரு தாய்தான் என்ற அளவிலே பழகினோம் என்றாலும் நாங்கள் இங்கே நம்முடைய தம்பி ரஜினி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் சிவாஜி ஏற்றுக் கொண்ட தலைவர் வேறு என்றாலும், நான் ஏற்றுக் கொண்ட தலைவர் வேறு என்றாலும், நான் ஏற்றுக் கொண்ட கொள்கை வேறு என்றாலும், அவர் ஏற்றுக்கொண்ட கொள்கை வேறு என்றாலும், நாங்கள் அவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, அனைத்தையும் கடந்துநாங்கள் இருவரும் ஒரே இதயத்திற்குத்தான் சொந்தக்காரர்களாக இருந்தோம். அந்த நட்புக்குத்தான் இன்று இந்த வெற்றி கிடைத்திருக்கின்றது. நிறைய பேச வேண்டும் என்றிருந்தேன், பேச முடியாமல் நெஞ்சை அடைக்கின்றது, உணர்ச்சிப் பெருவெள்ளம் என்னை அலைமோதச் செய்கின்றது. நான் உற்சாகப் பெருவெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறேன். மகிழ்ச்சிப் பெருங்கடலில் திளைத்துக் கொண்டிருக்கிறேன்.

## வசனங்களுக்கு உயிர் கொடுத்தவர்

இன்று சிவாஜியின் சிலை திறக்கின்ற நேரத்தில் ஒரு பாடல் வேண்டும், அதை நம்முடைய தம்பி சிவசிதம்பரம் பாடத் தயாராக இருக்கின்றார் என்று சொன்னபோது, காலையில் 6 மணிக்கு சிவசிதம்பரத்திற்கு டெலிபோன் செய்து உடனே வாருங்கள் என்று சொன்னேன். வந்தார். பக்கத்திலே உட்கார வைத்துக்கொண்டு எழுதிய பாடல் தான், அவர் இங்கே பாடியதாகும். எப்படி அந்த பாடல் வந்ததென்றால், சிவாஜியை நினைத்தவுடனேயே அந்தப் பாட்டு வந்துவிட்டது. அவ்வளவு சுலபமாக அந்தப் பாடலை நான் எழுதினேன். அவ்வளவு உணர்ச்சியோடு அந்தப் பாட்டை நான் எழுதினேன். ஏனென்றால் நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, தம்பி விஜயகாந்த் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, நான் எழுதிய வசனங்களுக்கு உயிர் கொடுத்தவர் சிவாஜி. நான் உரையாடல்கள் எழுதினேன், அதற்கு உயிரோட்டம் தந்தவர் சிவாஜி. பராசக்தி படத்தை வெளியிட்டபோது, ஒரு வாரப் பத்திரிகையில் அந்தப் படத்திற்கு தாக்குதல் விமர்சனம் எழுதுவதாக எண்ணிக் கொண்டு அட்டைப் படத்திலேயே "பரப்பிரம்மம்'' என்று தலைப்பிட்டு ஒரு செய்தியை வெளியிட்டு, ஒரு கதை வசவு, தயாநிதி என்று போட்டு, அந்த அட்டைப் படத்திலே வந்த பெண்ணை முக்கால் நிர்வாணமாக ஆக்கி இதுதான் பராசக்தி படம் என்று பிரசுரித்தபோது, அன்று மாலையிலேயே உட்கார்ந்து, "பரப்பிரம்மம்'' என்ற தலைப்பிலேயே ஒரு நாடகத்தை எழுதினேன். பக்கத்திலே அமர்ந்து காட்சி அமைப்புகள் எப்படி இருக்க வேண்டுமென்பதை சிவாஜிதான் சொன்னார். அந்த "பரப்பிரம்மம்'' நாடகத்திலேதான், "சேரன் செங்குட்டுவன்'' ஓரங்க நாடகம் இடம் பெற்றது. அந்த நாடகத்திற்கு நான் எழுதிய கவிதை வசனத்தை ஒரே மூச்சில் ஊருக்கு ஊர், ஆயிரம் ஊர்களில் அந்த நாடகம் நடந்திருக்கும், அதைப்பேசியது மாத்திரமல்ல, அப்போது இந்த இயக்கத்திலே இருந்த காரணத்தால் இயக்கத்திற்கு நிதி சேர்த்துக் கொடுக்க நாடகத்தைப் பயன்படுத்தியவர் என்னுடைய நண்பர் சிவாஜி கணேசன். அவர் பேசிய அந்தக் கவிதை வசனத்தை இந்த நேரத்திலே இந்தச் சிலைக்கு நேராக நின்று ஒரு முறை சொல்லிக் கொள்வது அவருடைய ஆத்மா இருந்தால் வாழ்த்தும் என்று கவிப்பேரரசு சொன்னாரே, ஆத்மா அல்ல, அவர் சிலையாக நின்றே அதைக் கவனிப்பார், அதைக் கேட்டுக் கொண்டிருப்பார் என்ற அந்த நம்பிக்கையுடனே அந்த கவிதை உரையாடலை நான் இங்கே கூறவிரும்புகிறேன்.

## சிவாஜி குடும்பத்தில் நானும் ஒருவன்

புறநானூற்றுத்தாய், தன்னுடைய மகன் போரிலே அடிபட்டு வீழ்ந்துவிட்டான் என்ற செய்தியைக் கேள்விப்படுகிறாள். அவன் முதுகிலே காயம்பட்டான் என்ற செய்தியைக் கேள்விப்பட்டு, அப்படியா, அந்தக் கோழைக்குப் பால் கொடுத்த மார்பை அறுத்தெறிகிறேன் என்று போர்க்களத்திற்குச் செல்கிறாள். அங்கே போனால் அவன் முதுகிலே அடிபடவில்லை, மார்பிலே காயம் தாங்கி மரணமுற்றான், அப்போது அந்தத்தாய், பொய் சொன்ன அந்த வீரன் எங்கே என்று தேடுகிறாள். இது புறநானூற்றிலே வருகின்ற ஒரு செய்யுள், ஒரு கவிதை அதை நான் எளிய நடையிலே எழுதியிருந்தேன். அதற்கு உயிர் கொடுத்து ஒவ்வொரு நாடக மேடையிலும் பரப்பியவர் என்னுடைய ஆருயிர் நண்பர் சிவாஜி கணேசன்.

(முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தக் கவிதை வசனத்தை அப்படியே மேடையில் கூறுகிறார்)

நான் எழுதிய அந்தக் கவிதை வரிகளை உயிர் கொடுத்து அந்தக் கவிதையையே காப்பாற்றியவர் என்னுடைய அருமைத்தோழர், ஆருயிர் நண்பர், என்றும் தமிழாக வாழக்கூடிய, தமிழ் உரைநடையாக வாழக்கூடிய, என்றும் கதாபாத்திரத்திற்கு உயிரூட்டக்கூடிய, என்றும் என்னோடு கலந்துவிட்ட இன்றும் கலந்திருக்கின்ற சிவாஜிதான். அந்தச் சிவாஜியின் சிலையை இங்கே வைத்ததில் நான் அளவற்ற உணர்ச்சி பொங்க, அளவற்ற அன்பு பொங்க, அந்தக் குடும்பத்தாரில் ஒருவருக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சி எனக்கும் ஏற்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்ல, அந்தக் குடும்பத்திலே நானும் ஒருவன் என்கின்ற முறையில் அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்கிறேன்.

என்னுடைய தங்கை கமலா அம்மையார் இந்த விழாவிற்கு வருகை தந்திருக்கிறார். நான் அவர்களைக் காணுகின்றேன், கண் கலங்கக் காணுகின்றேன், அவருடைய திருமணத்திற்கு மணமகனின் தோழனாக சுவாமிமலை வரை சென்று, அங்கே நடைபெற்ற திருமணம், திருக்குறள் பாடி நடைபெற்ற திருமணம், அந்தத் திருமணத்திலே அன்றைய இளம் வயதில் சிவாஜிக்கு வாழ்த்துக்கூறி அன்று கண்ட அந்த மணமகளை, அவர்களை இன்றைக்கு இங்கே நான் காண்கிறேன்.

அதற்குப் பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகள், அரசியலில், கலையுலகில்! ஆனால் எங்களுடைய நட்பில், எந்த நிகழ்ச்சியும் எங்களை இடரவில்லை, எங்களுக்கு குறுக்கே நிற்கவில்லை, எங்கள் நட்பு தழைக்க எல்லா நிகழ்ச்சிகளும் எருவாகப் பயன்பட்டதே அல்லாமல் எதுவும் இடையூறாக இல்லை என்பதை எடுத்துக்கூறி அந்தப் பெருமகனுக்கு வைக்கப்பட்ட இந்தச் சிலை நாம் காட்டிய உறுதிக்குக் கிடைத்த வெற்றி, கொண்ட அன்புக்குக் கிடைத்த வெற்றி, நானும் சிவாஜியும் கொண்ட பாசத்திற்குக் கிடைத்த வெற்றி என்று கூறி சிவாஜி வாழ்க, வாழ்க என்று உரைத்து விடைபெறுகிறேன். ❖

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

திரைப்படங்கள் – அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள் படப்பிடிப்பு நடத்துதல் – படப்பிடிப்பு கட்டணங்களை திருத்தி அமைத்தல் – ஆணைகள் :-

---

செய்தி மற்றும் சுற்றுலா (திதொ. 2) த்துறை

அரசாணை (நிலை) எண். 113 நாள். 26.06.2006

<u>படிக்கப்பட்டது:-</u>

1. அரசாணை (நிலை) எண். 276, செய்தி மற்றும் சுற்றுலா (திதொ. 2 ) த்துறை, நாள் 07.10.1993.
2. அரசாணை (நிலை) எண். 62, செய்தி மற்றும் சுற்றுலா (திதொ. 2) த்துறை, நாள். 10.04.2002.
3. அரசாணை (நிலை) எண். 100, செய்தி மற்றும் சுற்றுலா (திதொ. 2) த்துறை, நாள். 05.06.2003.
4. அரசாணை (நிலை) எண். 371, செய்தி மற்றும் சுற்றுலா (திதொ. 2) த்துறை, நாள். 01.10.2004.

---

<u>ஆணை :</u>

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை மூலம் அரசுக்குச் சொந்தமான இடங்களில் தனியார்கள் படப்பிடிப்பு நடத்த செய்தி மக்கள்தொடர்பு இயக்குநர் மூலம் ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் முறை (Single Window System) நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

2. நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டு, சென்னையில் உள்ள இராஜாஜி மண்டபத்திற்கு மட்டும் ஒரு நாள் படப்பிடிப்பு கட்டணமாக ரூ. 25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்), வகை – 1ன் கீழ் வரும் இடங்களுக்கு ஒரு நாள் படப்பிடிப்பு கட்டணமாக ரூ. 10,000/– மும் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வகை 2–ன் கீழ் வரும் இடங்களுக்கு ஒரு நாள் படப்பிடிப்பு கட்டணமாக ரூ. 5,000/–மும் (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டது.

3. தமிழ்நாட்டில் திரைப்பட படப்பிடிப்பு நடத்தப்படுவதை ஊக்குவிக்கின்ற வகையிலும் நலிந்து வருகின்ற திரைப்படத் தொழிலுக்கு கைகொடுத்து உதவுகின்ற வகையிலும் பொது இடங்களில் படப்பிடிப்புகள் நடத்துவதற்கான கட்டண விகிதங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தற்போது வசூலிக்கப்பட்டுவரும் படப்பிடிப்பு கட்டணங்களை பின் வருமாறு திருத்தி அமைத்து ஆணையிடுகிறது.



| | |
|---|---|
| (அ) இராஜாஜி மண்டபம்,<br>சென்னை. | நாளொன்றுக்கு ரூ. 10,000/–<br>(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) |
| (ஆ) <u>வகை –1.</u><br>1. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள புராதனச் சின்னங்கள்<br>2. வள்ளுவர் கோட்டம்<br>3. அரசு மனநல காப்பக நிறுவனம், அரசு மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், பிரையண்ட் பூங்கா கொடைக்கானல், சிம்ஸ் பூங்கா, குன்னூர், தேசிய பூங்காக்கள், வன விலங்குகள் சரணாலயங்கள், புதிய கொத்தவால் சாவடி, கோயம்பேடு, பனகல் கட்டடம், சைதாப்பேட்டை, ரிப்பன் மாளிகை தாளமுத்து நடராசன் மாளிகை ( சி. எம்.டி.ஏ.கட்டடம்) தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநரின் கீழ் உள்ளவை, கால்நடைப்பண்ணை, ஹெலிப்பேட், உதகமண்டலம். | நாளொன்றுக்கு ரூ. 5,000/–<br>(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) |
| <u>வகை – 2</u><br>1. தலைமை வனக்காப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள்<br>2. இயக்குநர், மீன் துறையின் கீழ் உள்ள மீன் வளர்ச்சிப் பண்ணைகள்<br>3. கடற்கரைகள், மெரினா கடற்கரை, பொது இடங்கள், பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடங்கள்<br>4. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகள்<br>5. நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள், தெருக்கள் மற்றும் கட்டடங்கள்<br>6. சிறைத்துறை தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகள், மத்திய சிறைச்சாலைகள் (வெளிப்புறம் மட்டும்)<br>7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது இடங்களில் வகைபாட்டிற்குள் வராத இதர இடங்கள் பல்வகை இனங்களாக கருதப்படுபவை | நாளொன்றுக்கு ரூ. 3,000/–<br>(ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) |

4. மேலே பத்தி –3ல் ஆணையிடப்பட்ட திரைப்பட படப்பிடிப்புகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்களைப் போன்றே சின்னத்திரை படப்பிடிப்புகளுக்கும் கட்டணச் சலுகைகள் வழங்கும் வகையில் திரைப்பட படப்பிடிப்பு கட்டணங்களில் 50% மட்டும் சின்னத்திரை படப்பிடிப்புகளுக்கு வசூலிக்கலாம் என்பதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு திருத்திய சின்னத்திரை படப்பிடிப்பு (Television) கட்டணம் வசூலிக்க அரசு ஆணையிடுகிறது.

| | |
|---|---|
| (அ) இராஜாஜி மண்டபம் சென்னை. | நாளொன்றுக்கு ரூ. 5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) |
| **(ஆ) <u>வகை – 1</u>** | |
| 1. இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள புராதனச் சின்னங்கள்<br>2. வள்ளுவர் கோட்டம்<br>3. அரசு மனநல காப்பக நிறுவனம், அரசு மருத்துவ மனைகள், அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள், பிரையண்ட் பூங்கா, கொடைக்கானல், சிம்ஸ் பூங்கா, குன்னூர், தேசிய பூங்காக்கள், வன விலங்குகள் சரணாலயங்கள், புதிய கொத்தவால் சாவடி, கோயம்பேடு, பனகல் கட்டடம், சைதாப்பேட்டை, ரிப்பன் மாளிகை, தாளமுத்து நடராசன் மாளிகை (சி.எம்.டி.ஏ. கட்டடம்), தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநரின் கீழ் உள்ளவை, கால்நடைப் பண்ணை, ஹெலிப்பேட், உதகமண்டலம். | நாளொன்றுக்கு ரூ. 2, 500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) |
| **<u>வகை –2</u>** | |
| 1. தலைமை வனக்காப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒதுக்கப்பட்ட வனப்பகுதிகள்<br>2. இயக்குநர், மீன் துறையின் கீழ் உள்ள மீன் வளர்ச்சிப் பண்ணைகள்<br>3. கடற்கரைகள், மெரினா கடற்கரை, பொது இடங்கள், பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடங்கள்.<br>4. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்ப்பாசனத் திட்டப் பகுதிகள்.<br>5. நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளரின் கட்டுப்பாட்டிலுள்ள நெடுஞ்சாலைகள், தெருக்கள் மற்றும் கட்டடங்கள்.<br>6. சிறைத்துறை தலைவரின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலைகள், மத்திய சிறைச் சாலைகள் (வெளிப்புறம் மட்டும்)<br>7. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொது இடங்களில் வகைபாட்டிற்குள் வராத இதர இடங்கள் பல்வகை இனங்களாக கருதப்படுபவை. | நாளொன்றுக்கு ரூ. 1,500/– (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) |

5. மேலே பத்தி 3 மற்றும் பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்டுள்ள படப்பிடிப்பு கட்டணங்கள் இந்த அரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும்.

6. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா. கு. எண். 2098/எப்எஸ்/பி/06, நாள். 14.06.2006 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ. இறையன்பு
அரசு செயலாளர்



# சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டிய பெரும்பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது



வேலூரில் நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சி 200ஆம் ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (10.07.2006)

வேலூர் சிப்பாய்ப் புரட்சியினுடைய 200ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொள்கின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக – வேலூர் மக்களுக்கு அல்ல, வேலூர் மாவட்ட நிருவாகத்திற்கு அல்ல, இந்த மேடையிலே அமர்ந்திருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளுக்கு அல்ல, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் இன்றைக்கு இந்த மேடையில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பினை ஏற்று அமர்ந்திருக்கிறேன் என்றால் – அப்படி அமர்ந்திருக்கின்ற காரணத்தினால்தான் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறேன் என்றால் – அப்படி கலந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் வேலூர் சிப்பாய்ப் புரட்சியைப் பற்றி நினைவுகூர்ந்து வெளியிடப்படுகின்ற அஞ்சல் தலையைப் பற்றி உரை நிகழ்த்துகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன் என்றால் – இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியது வேலூர் மாவட்டத்திலே உள்ளவர்கள் மாத்திரமல்ல, தமிழகம் முழுவதும் இருக்கின்ற வாக்காளப் பெருமக்கள். எனவே அவர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவர்களை நம்பித்தான் நான் இந்த மேடையில் – நம்முடைய தம்பி ஞானசேகரன் சொன்னதைப் போல – ஒரு ஆருடத்தை வெளியிட்டேன். அதை தீர்க்கதரிசனம் என்று ஞானசேகரன் குறிப்பிட்டார். தீர்க்கதரிசனமும் அல்ல, ஆருடமும் அல்ல, நம்பிக்கையின் வெளிபாடு. அதைத்தான் அன்றைக்கு இங்கே சொன்னேன். "இன்று இருக்கின்ற



ஓரிரு நிமிடத்தில் வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் உங்களைச் சந்திக்கின்றேன். விரைவில் உங்களை நான் கோட்டையில் சந்திப்பேன்" என்று குறிப்பிட்டேன்.

## விடுதலைக்காக நடைபெற்ற போராட்டம்

சொன்னதைச் செய்வது எங்களுடைய வழக்கம். அதைச் செய்துவிட்டு இன்றைக்கு வந்திருக்கின்றேன். இந்த இடைக்காலத்தில் தம்பி தயாநிதி மாறன் குறிப்பிட்டதைப் போல 40 அல்லது 45 நாட்களில் என்னென்ன சாதனைகளைச் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டோமோ, அவற்றில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி விட்டுத்தான் இன்று உங்களை நான் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். அடுத்து சந்திக்கின்ற வாய்ப்பு ஏற்படும்பொழுது இன்னும் பெரும்பாலான சாதனைகளை, சொன்னவைகளையும் சொல்லாதவைகளையும் சிந்தித்து சொல்லப் போகின்றவைகளையும் சாதித்துவிட்டு உங்களைச் சந்திக்கின்ற முதலமைச்சராக உங்கள் முன்னால் காட்சியளிப்பேன் என்ற உறுதியை நான் இப்போது தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனவே இந்த விழாவிலே கலந்து கொள்வதை நான் என்னுடைய வாழ்நாளில் பெரும் பேறாகக் கருதுகின்றேன். ஏனென்றால் இந்தியாவினுடைய விடுதலைக்காக நடைபெற்ற போராட்டம் இந்தியாவில் எங்கே தொடங்கப்பெற்றது என்று தெரியாத நிலையில் இன்றைக்கும் இந்தியாவிலே இருக்கின்ற குறிப்பாக தமிழகத்திலே இருக்கின்ற இளைஞர்கள், பள்ளி மாணவர்கள் உள்பட அத்தனை பேருக்கும் தெரியப்படுத்துகின்ற வகையிலே இன்றைக்கு வேலூர், ஏற்கெனவே 1998ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அந்த நினைவுத் தூணின் மூலமாகவும் இன்று நடத்துகின்ற இந்த விழாவின் மூலமாகவும் அறிவித்துக் கொண்டிருக்கிறது.

## பேராசிரியர் சஞ்சீவியின் "வேலூர்ப் புரட்சி" நூல்

இதற்கு நான் யாருக்கு நன்றி சொல்ல வேண்டுமென்றால் வேலூரில்தான் சிப்பாய்ப் புரட்சி இந்தியாவிலேயே முதன்முதலில் தோன்றியது, நடந்தது என்று எனக்குத் தெரிந்திருந்தாலும்கூட அதை வெளியிடுகின்ற, அதை மக்களுக்கு எடுத்துச்



இந்த விழா மிகச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரே ஒரு குறை. இந்த விழா நடைபெற வேண்டும் என்பதற்காக என்னை வலியுறுத்தி, ஒப்புதல் பெற்ற தம்பி துரைமுருகன் இந்த விழாவிலே கலந்து கொள்ள முடியாமல் உடல்நலிவுற்றிருக்கிறாரே என்ற அந்தக் குறையைத் தவிர வேறு எந்தக் குறையும் இல்லாத அளவிற்கு இந்த விழா ஒளிமிகுந்த விழாவாக, உயிருள்ள விழாவாக, ஒப்புற்ற விழாவாக, சீரான விழாவாக, சிறப்பான விழாவாக, வீரம் செறிந்த விழாவாக நன்றியுள்ளவர்கள் தமிழர்கள்; நன்றி மறக்கமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சொல்லுகின்ற வாய்ப்பை என்ன காரணத்தாலோ நான் பெறாமலே போய்விட்டேன். ஆனால் அதை நிறைவு செய்த பெருமை மறைந்த பேராசிரியர் சஞ்சீவி அவர்களுக்கு உண்டு. அவர்கள் இந்தியாவினுடைய, குறிப்பாக தமிழ்நாட்டினுடைய விடுதலை வீரர்களைப் பற்றியெல்லாம் வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தை எதிர்த்து யார் யார் வாள் சுழற்றினார்களோ, யார் யார் போர்க்குரல் எழுப்பினார்களோ, அந்த மறவர்களைப் பற்றியெல்லாம், வீரர்களைப் பற்றியெல்லாம், சூரர்களைப் பற்றியெல்லாம் அவர்களுடைய சரித்திரங்களையெல்லாம் சிறுசிறு நூல்களாக பெரிய அளவிலே உள்ள நூல்களாக எழுதி வெளியிட்டவர் பேராசிரியர் சஞ்சீவி அவர்களாவார்கள்.



அவர் இன்றைக்கு இல்லை, மறைந்துவிட்டார். ஆனால் அவருடைய எழுத்துக்கள் மறையவில்லை. அவருடைய உணர்வுகள் மறையவில்லை. அந்த உணர்வுகளின் பெட்டகமாகத்தான் 'வேலூர்ப் புரட்சி' என்கின்ற இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

## நினைவுச்சின்னம்

ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்த இந்த நூலை நான் படித்துவிட்டு தம்பி துரைமுருகனிடத்திலே கேட்டேன், பேராசிரியர் சஞ்சீவி வேலூர்ப் புரட்சியைப் பற்றி எழுதியிருக்கிறாரே அதற்கான சின்னங்கள், நினைவுகள், அடையாளங்கள் ஏதாவது இன்றைக்கு வேலூரில் இருக்கிறதா, அதை நாம் மக்களுக்கு நினைவுபடுத்த வேண்டாமா என்று கேட்டு நான் 1998ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது அவரும், தம்பி ஞானசேகரனும் இணைந்து இங்கே இந்தத் தூணை நிறுவுவதற்கு ஒரு முயற்சி எடுத்து அந்த முயற்சியிலே நானும் பங்கு பெற வேண்டும் என்று அவர்கள் அன்புக் கட்டளையிட்டு அன்றைக்கு நான் திறந்து வைத்த தூண்தான் இன்றைக்கு இந்த வேலூர்ப் புரட்சியினுடைய நினைவுச் சின்னமாக இங்கே விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அதற்கு அடுத்தபடியாக இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதற்கு முக்கியத்துவம் என்னவென்றால் எந்த நாளில் எந்த ஜூலை 10ஆம் நாள் இங்கே ரத்த வெள்ளம் பெருக்கெடுத்ததோ, இந்தக் கோட்டையிலே இருந்து குருதிப் புனல் வெளிப்பட்டதோ, அந்த நாள் இந்த நாள். எந்த நாளில் இங்குள்ள கோட்டை அருகில் 800 தமிழ் வீரர்கள், சிப்பாய்கள், வெட்டுண்டும் குத்துண்டும், சூடுபட்டும், கருண்டு விழுந்து பிணங்களாக மிதந்தார்களோ, அந்த நாள் இந்த நாள். அவர்களுடைய பேரெதிர்ப்பால், அவர்களுடைய வீர உணர்ச்சியினால் எதற்கும் பயப்படாத, அஞ்சாத அவர்களுடைய நெஞ்சுரத்தால் 200க்கும் மேற்பட்ட வெள்ளைக்காரர்களை வேட்டையாடினார்களே, அது நிகழ்ந்த நாள் இந்த நாள் ஜூலை 10ஆம் நாள்.

## சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும்

எனவே அது நடந்து 200 ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்றைக்கு நாம் அந்த நாளை கொண்டாடுவதாகச் சொல்லமாட்டேன். ஏனென்றால் நம்மவர்கள் மாய்ந்திருக்கிறார்கள் பலபேர். எனவே கொண்டாடுவதாகச் சொல்லமாட்டேன். நினைவு கூருகிறோம். நம்முடைய வீரமரபை, நம்முடைய விடுதலை ஆர்வத்தை, நாம் பெற்றிருந்த சுதந்திரக் கனலை இன்றைக்கு எண்ணிப் பார்க்கிறோம். இது அணையாமல் என்றென்றும் காப்பாற்றப்பட வேண்டும். சுதந்திரம் பெற்று விட்டோம். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்க வேண்டும். பெற்ற சுதந்திரம் எதற்காக என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தச் சுதந்திரத்தை எதற்கெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்தச் சுதந்திரத்தை சர்வாதிகார முறையிலே காப்பாற்றுவதா அல்லது ஜனநாயக முறையிலே காப்பாற்றுவதா என்று விவாதித்து ஜனநாயகத்தை தழுவுவதிலேதான் அந்தச் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டும்.

அப்படி ஜனநாயகத்தை நாம் நம்பிய காரணத்தாலேதான் ஜனநாயகத்திற்கு நாம் மதிப்பளிக்கிற காரணத்தாலேதான் இன்றைக்கு நான் அன்றைக்கு சொன்னதைப் போல உங்களை கோட்டையிலே சந்திப்பேன் என்று சொன்னது நிறைவேறியிருக்கிறது என்றால், ஜனநாயகத்தைக் காக்க வேண்டும் என்று நீங்களெல்லாம் எண்ணிய எண்ணத்தினுடைய அடையாளம் தான். அதனுடைய விளைவுதான் இது. இங்கே பேசிய நம்முடைய வீராசாமி சொன்னார். அன்றைக்கு நம்முடைய வீரர்கள்



தோற்றுவிட்டார்கள் என்றால் அதற்குக் காரணம் 200 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அந்தப் புரட்சியில் வெள்ளை ஏகாதிபத்திய வீரர்களை எதிர்த்து நிற்க முடியாமல் தோற்றுவிட்டார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு கருணாநிதி போல ஒரு தலைவர் இல்லை என்று சொன்னார்.

## துரோகத்தால் தோல்வி

நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த விடுதலைப் போராட்டம் வேலூர் வட்டாரத்திலே மாத்திரம் நடைபெற்றதல்ல. மதுரை மாவட்டத்திலே நடைபெற்றது, நெல்லை மாவட்டத்திலே நடைபெற்றது. நெற்கட்டும் செவலில் பூலித்தேவன் வட்டாரத்திலே நடைபெற்றது.

நடைபெறாத இடமில்லை. இராமநாதபுரத்திலே சிவகங்கைச் சீமையிலே நடைபெற்றது. அங்கெல்லாம்கூட தலைவர்கள் இல்லாமல் போகவில்லை. சிவகங்கைச் சீமையிலே மருது சகோதரர்கள் இருந்தார்கள். வேலுநாச்சியார் இருந்தார்கள். பூலித்தேவன் இருந்தார். பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் இருந்தார். ஊமைத்துரை இருந்தார். தலைவர்கள் இருந்தார்கள். இருந்தாலும் தமிழ்ப் படை ஏன் தோற்றது ? வெள்ளைப்படை ஏன் வென்றது என்றால் வீரர்களும் இருந்தார்கள், தலைவர்களும் இருந்தார்கள். இடையிலே துரோகிகளும் இருந்தார்கள். அதனால்தான் அன்றைக்கு வெற்றி கிடைக்கவில்லை.

கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பன் இருக்கவில்லையா ? அதனால்தான் கட்டபொம்மன் தூக்கில் இறந்தான். கட்டபொம்மன் எவ்வாறு பிடிபட்டான் ? ஓய்வெடுக்க வந்த இடத்திலே அவனைக் காட்டிக் கொடுக்கவில்லையா ? அதற்கு எட்டப்பன் துணைபுரியவில்லையா ? இப்படி நம்முடைய மன்னர்கள் விடுதலைக்காக போராடிய வேந்தர்கள், பாளையக்காரர்களாக இருந்தாலும் பலசாலிகளாக இருந்தாலும், படைபலம் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களெல்லாம் வெள்ளையரை எதிர்த்து அன்றைக்கு நடத்திய சுதந்திரப் போராட்டத்திலே, விடுதலைப் போராட்டத்திலே வெற்றி பெறாததற்குக் காரணம் கூடவே உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பார்களே அதைப்போல துரோகிகள் இருந்த காரணத்தினால்தான் அவர்கள் தோற்க நேரிட்டது, வெற்றி பெற முடியாமல் போனது.

அந்த நிலை உலகத்தில், ஏன் குறிப்பாக இந்தியாவில் சிறப்பாக தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் நிரந்தரமானது, இன்று வரையிலே. அதை விலக்க முடியாது. நாம்தான் விலகிச் செல்ல வேண்டும். அப்படி விலகிச் சென்றால்தான், தமிழ்நாட்டு மக்கள் அவர்களை அடையாளம் கண்டு கொண்டால்தான், யார் நமக்காக பாடுபடுகின்றவர்கள், யார் நமக்காக பணியாற்றுகின்றவர்கள், யார் நமக்காக போராடக் கூடியவர்கள், யார் நமக்காக ரத்தம் சிந்தக் கூடியவர்கள், யார் நமக்காக தியாகம் செய்யக்கூடியவர்கள் என்பதை அடையாளம் காண முடியும். தமிழ்நாட்டைக் காப்பாற்ற முடியும். அன்றைக்கு வெள்ளையரை எதிர்த்து நடைபெற்ற அந்தப் போராட்டம் திடீரென்று உதயமாகி விடவில்லை. நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் காதர்மொய்தீன் அவர்கள் சொன்னதைப் போல், இந்த கோட்டைக்குள்ளே அடைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானுடைய 12 மக்கள் ஐந்தாறு பெண்கள், அவருடைய மகன்கள், இவர்களெல்லாம் அடைபட்டுக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாவலாக வீரர்கள் இருக்கிறார்கள்.

## ஜூலை 10இல் வெடித்த புரட்சி

அப்படி இருந்தும் கூட கோட்டைக்குள்ளே சிறைபட்டுக் கிடந்த திப்புசுல்தானுடைய மக்கள் அவர்களுடைய பெண்கள், பிள்ளைகள் இவர்கள் எல்லாம் சேர்ந்து, அங்கு இருந்த தமிழ் வீரர்களையெல்லாம் தங்களோடு இணைத்துக் கொண்டு மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக தியாகத்துக்கு தயாராகி யாருக்கு என்ன விளைவு ஏற்பட்டாலும் பரவாயில்லை என்கின்ற அழுத்தமான உள்ளத்தோடு, வைராக்கிய உள்ளத்தோடு, வெள்ளையர்களை விரட்டியே தீருவது என்று எண்ணி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்த நேரத்திலே தான், இந்தச் செய்தி ஒற்றர்கள் மூலமாக வெள்ளை ஏகாதிபத்தியத்தினுடைய காவலர்களுக்கு தெரிந்து, இதை அடக்கியே தீர வேண்டும் என்று முனைப்புக் கொண்டார்கள். அப்படி முனைப்புக் கொண்டபோதுதான், திடீரென்று ஜூலை 10ஆம் தேதி காலை இந்தப் புரட்சி வெடித்தது. புரட்சி வெடித்தவுடன் இங்கிருந்த அதிகாரிகள், பக்கத்திலே ஆற்காடிலே இருந்த படையின் கர்னலுக்கு செய்தி சொல்லி அனுப்பினார்கள்.

அவர் பெயரே "கர்னல் கில்" என்பது. "கில்" என்றாலே கொல். கர்னல் கில் என்பாருக்கு செய்தி சொல்லி அனுப்பினார்கள். 16 அல்லது 17 கல் தொலைவிலே உள்ள இடத்திலிருந்து படை வீரர்கள் அங்கிருந்து புறப்பட்டு வந்து, வேலூர் கோட்டை கதவுகளை உடைத்து நொறுக்கி அங்கிருந்த வீரர்களை கட்டிப் போட்டு ஏறத்தாழ 2,200 வீரர்களை கைது செய்து, 800 பேரை கொலை செய்து, சுட்டுப் பொசுக்கி அதற்கு ஈடாக 200 வெள்ளைக்காரர்கள் மாண்டு, அப்படி ஒரு பெரும் குருதிப் பொட்டலாக இருந்த வேலூர் கோட்டை வெளி மைதானம் அன்றைக்கு மாறி இருக்கிறது என்றால், அந்த ரத்தத் தடாகம் இங்கே தோன்றியதற்கு என்ன காரணம் ? விடுதலை ஆர்வம் அல்லவா ? சுதந்திர தாகம் அல்லவா ?

## தியாகிகளின் கல்லறைகளை நோக்கி வீர வணக்கம் செலுத்த வேண்டும்

அன்றைக்கு எழுந்த அந்தப் புரட்சிப் பொறிதான் மெல்ல, மெல்ல, வளர்ந்து வளர்ந்து இந்தியாவெங்கும் நாடு தழுவிய சுதந்திரப் போராட்டமாக வியாபித்து இன்றைக்கு நாம் அந்த சுதந்திரத்தின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது– இன்றைக்கு, இந்தச் சுதந்திரத்தின் காரணமாக நமக்குக் கிடைக்கின்ற சுகம் எதுவானாலும் இவைகளுக்கெல்லாம் காரணம் இவைகளுக்கெல்லாம் மூலாதாரமாக இருந்தவர்கள், இவைகளுக்கெல்லாம் பின்னணியாக இருந்தவர்கள், இன்றைக்கு கல்லறைகளாக இருக்கின்றார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. அந்தக் கல்லறைகளை நோக்கி, நாம் நன்றி கூறிட வேண்டும். நாம் வீர வணக்கம் செலுத்த வேண்டும். எத்தனையோ ஆயிரக்கணக்கான தீரர்கள், தியாகிகள் புதையுண்டு போயிருக்கிறார்கள். அவர்களுடைய ரத்தத்தால், அவர்களுடைய தியாகத்தால் கிடைத்ததுதான் இந்தச் சுதந்திரம். அந்தச் சுதந்திரத்தை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும். அதற்கு எந்தவிதமான ஊனமும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கின்றது. இதைச் சில பேர் கேலி செய்யக் கூடும். ஏனென்றால் நாம் செய்கின்ற காரியம் எதுவானாலும் அதற்கு வேறு ஒரு பொருள், வேறு ஒரு திசை திருப்புகின்ற நிலை சிலர் எடுக்கக் கூடும். அதனால் இப்பொழுதே சொல்லி வைக்கின்றேன்.





இதை வரலாறு ஒப்புக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலே முதன் முதல் வெள்ளையரை எதிர்த்து விடுதலைப் போராட்டம் வேலூரில்தான் நடைபெற்றது என்பதை; அரிபாத சௌத்ரி என்கின்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வளர்ந்து வந்த வெறுப்பு முதன் முதலாக மக்கள் எழுச்சியாக வெளிப்பட்டது. 1806ஆம் ஆண்டு நடைபெற்ற வேலூர் சிப்பாய்ப் புரட்சி 1857ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய நாட்டு சிப்பாய்ப் புரட்சியின் முன்னோடியாக விளங்கியது. அந்தச் சிப்பாய்ப் புரட்சிக்கு அடிப்படை வேலூர் சிப்பாய்ப் புரட்சிதான் என்பதை அரிபாத சௌத்ரி ஒப்புக்கொள்கின்றார்.

அதுமாத்திரமல்ல, சுதந்திரப் போராட்டம் முதன் முதலாக சிப்பாய்ப் புரட்சியாக வேலூரில் தான் வெடித்தது என்பதை வீர சாவர்க்கர் ஏற்றுக்கொண்டு எழுதியிருக்கின்றார்.

எனவே இந்தப் புரட்சியில் தமிழ் வீரர்கள் எவ்வளவு பண்போடு நடந்து கொண்டார்கள் என்பதை பாதிக்கப்பட்ட ஆங்கிலேயப் பெண்களே சொல்கிறார்கள். அதையும் அந்தச் சரித்திரப் புத்தகத்திலே படிக்க முடிகிறது. ஒரு பெண்மணி சொல்கிறார். சென்னையிலே உள்ள இன்றைக்கும் சென்னையிலே இருக்கிற பாரீஸ் கார்னர். அந்த பாரீஸ் கார்னர் தாமஸ் பாரி என்ற ஆங்கிலேயருடைய பெயரால் ஏற்பட்டது. அந்த தாமஸ் பாரியைப் பற்றிய நூலில் ஜி.ஹெச். ஹாட்ங்சன் என்பவர் குறிப்பிடுகிறார்.

வேலூர் சிப்பாய்ப் புரட்சியின்போது எந்த பெண்மணியும் அவமானம் செய்யப்படவில்லை. அதற்கு நேர்மாறாக மிகுந்த அன்போடும், மதிப்போடும் அவர்கள் நடத்தப்பட்டார்கள் என்று எழுதியுள்ளார் என்பதிலிருந்து ஆர்த்தெழுந்தாலும், போர்ப்பாட்டுப் பாடினாலும், வாள் சுழற்றினாலும் பண்பாடு மிக்கவர்கள் தமிழர்கள். அந்த நாகரிகத்தை அவர்கள் எள்ளளவும் விட்டுத் தரமாட்டார்கள் என்பதற்கு அடையாளமாக இந்த மதிப்புரை தமிழர்களுக்கு கிடைத்திருக்கிறது.

## தமிழர்களுடைய பண்பை உணர்த்திய போராட்டம்

புரட்சியிலே கொல்லப்பட்ட கர்னல் ஒருவர். அவருடைய விதவை மனைவி எழுதுகிறார், அந்தச் சரித்திரக் குறிப்பில் இடம் பெற்றிருக்கிறது. பான்கோர்ட்டு என்ற கர்னல் அவருடைய துணைவியார் விதவையாகிவிட்டவர் எழுதுகிறார்.

புரட்சியிலே ஈடுபட்ட ஒரு தமிழ் வீரன் எங்களை கோழிகளை அடைத்து வைக்கும் பட்டிக்குள் நுழைந்து கொள்ளுமாறு பணித்தான். எல்லோருடைய கண்ணுக்கும் புலனாகக்கூடிய அளவுக்கு இருந்த எங்களை மாற்ற முடியாத சினம் கொண்டிருந்த புரட்சி மறவர்களின் பார்வையிலிருந்து காப்பாற்றிக்கொள்ள துணைபுரியும் வரையில் நாங்கள் ஏறத்தாழ ஆடையின்றி இருந்தோம். (பெண்கள் சொல்கிறார்கள், ஆங்கிலப் பெண்கள் சொல்கிறார்கள் கர்னலுடைய மனைவி அதிலே எழுதுகிறார்) அந்த நேரத்தில் நாங்கள் மற்றவர்களுடைய பார்வையிலிருந்தும் எங்களை காப்பாற்றிக் கொண்டோம் – என்றால் அந்த எழுத்தின் நயத்தை புரிந்து கொண்டால் அதில் இருக்கிற சோகம் தெரியும். வேதனை புரியும். மற்றவர்களுடைய பார்வையிலிருந்து எங்களை காப்பாற்றிக் கொள்ள துணை புரியும் வகையில், நாங்கள் மறைந்து கொள்வதற்காக அந்த தமிழ் வீரர்கள் ஒரு பழைய பாயைக் கொண்டுவந்து கொடுத்தார்கள், சுற்றிக் கொள்ளுங்கள் என்று ஆடையில்லாத காரணத்தால் பழைய பாயை சுற்றிக் கொண்டேன். மானம் காப்பாற்றப்பட்டது மாத்திரமல்ல, சிறிது நேரத்தில் அந்த வீரன் அங்கே வந்து என்னுடைய மகனுடைய பசியைத் தீர்க்க ஒரு ரொட்டித் துண்டையும் கொண்டு வந்து கொடுத்தான். யார் ? புரட்சியிலே பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி, கணவனை இழந்த விதவை, அந்த நேரத்திலும் தன்னுடைய மானத்தையும், தன்னுடைய மகனின் உயிரையும் காப்பாற்ற பாடுபட்ட தமிழ் வீரனை புகழ்ந்துரைத்தாள். தாய்க்குலத்தினுடைய பெருமைக்கும், சேய்களின் வாழ்வுக்காக அவர்கள் புரிந்த ஜாதி மத பேதமற்ற வகையிலே தமிழ்ச் சிப்பாய்கள், தமிழ் வீரர்கள் நடந்து கொண்ட அந்த முறைமைக்கும் இதைவிட வேறு சான்று தேவையில்லை என்று சரித்திர ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.



நினைவூட்டப்பட வேண்டும் என்றார். நிச்சயமாக நான் அவருக்கும் சொல்லுகின்றேன். எதிரே இருக்கின்ற உங்களுக்கும் சொல்லுகின்றேன். எதிர்கால தலைமுறை நம்மைவிட நம்முடைய வீரத்தை உணர, இந்திய சுதந்திர போராட்டத்தில் தமிழர்களின் பங்கு என்ன என்பதை உணர, திருப்பூர் குமரன் மாத்திரமல்ல, சிதம்பரனார் மாத்திரமல்ல, தில்லையாடி வள்ளியம்மாள் மாத்திரமல்ல, கட்டபொம்மன் போன்றவர்கள் மாத்திரமல்ல, பூலித்தேவன் போன்றவர்கள் மாத்திரமல்ல. வேலூர் சிப்பாய்ப் புரட்சி தான் முதல் சுதந்திரப் போராட்டம் என்ற அந்த உண்மையை உலகிற்கு உணர்த்த இளைஞர்களை எண்ணி இளைஞர்களுடைய உள்ளத்திலே இந்த நிழல் பசுமரத்தாணி போல பதியுமேயானால் அது காலாகாலத்துக்கும் அவர்கள் பாட்டன் பூட்டன் ஆகிற காலம் வரையிலும் மற்றவர்களுக்கு சொல்லித் தருகின்ற வரையிலும் அது நீடிக்கும், நிலைக்கும்.

இப்படி தமிழர்களுடைய பண்பாட்டை, நாகரிகத்தை, கலாச்சார மேன்மையை, அவர்களுடைய பண்பை உணர்த்துகின்ற ஒரு போராட்டமாகவும் அந்தச் சிப்பாய்களுடைய புரட்சி அமைந்திருக்கிறது என்பதற்கான உதாரணங்களாகத்தான் இவைகளையெல்லாம் குறிப்பிட்டேன். இவ்வளவு அரும்பாடுபட்டு தேடிய சுதந்திரத்தை இன்றைக்கு நாம் காப்பாற்றித் தீர வேண்டும் என்கின்ற அளவிற்கு இருக்கின்ற சுதந்திரம். அந்தச் சுதந்திரத்தை வலுப்படுத்த ஜனநாயகம் என்கின்ற ஊற்று, ஜனநாயகம் என்கின்ற உரம், அதற்கு இடப்பட்டு இன்றைய தினம் சர்வாதிகார நாடாக இந்த நாடு இருந்திடக் கூடாது. சர்வாதிகார வெறியர்களை எதிர்த்துத்தான் நாம் சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றோம்.

### பாடப்புத்தகங்களில் வேலூர்ப் புரட்சி

எனவே இந்தச் சுதந்திரத்தைக் காப்போம் என்று சூளுரைத்துத் தான் தலைவர்கள் இமயத்திலிருந்து குமரிமுனை வரை இருக்கின்ற தலைவர்கள் உத்தமர் காந்தியடிகளானாலும் சரி, பண்டித ஜவஹர்லால் நேரு ஆனாலும் சரி, சிதம்பரனார் ஆனாலும் சரி, பாரதியார் ஆனாலும் சரி, தந்தை பெரியார் ஆனாலும், பேரறிஞர் அண்ணாவானாலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் ஆனாலும் சரி, இவர்கள் எல்லாம் பாடுபட்டு, இன்றைக்கு இருக்கின்ற நாமாக ஆனாலும் சரி, பாடுபட்டு, இன்றைக்கும் அறப்போர் நடத்தி வருவது, ஆளுங்கட்சியாக இருந்தாலும் நமக்கு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற பொறுப்பு, எதிர்க்கட்சியாக இருந்தாலும் அந்த மக்களுக்காக நாம் வாழவேண்டும் என்கின்ற இந்தப் பொறுப்பு, எந்த நிலையிலும் பொறுப்புள்ளவர்களாக நாம் இருக்க வேண்டும். அந்தப் பொறுப்பை சுமந்திருக்கின்ற நாம் இந்தச் சுதந்திரப் போராட்டத்தை நினைவுகூருவதன் மூலமாக வருங்கால இளைஞர்களுக்காக நினைவூட்ட வேண்டும்.

நம்முடைய இணை அமைச்சர் வேலு அவர்கள் இங்கே குறிப்பிட்டார். பாடப் புத்தகங்களில் எல்லாம் இது

### இன்னும் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்படும்

எனவே நான் நிச்சயமாக இந்த மேடையிலே உறுதியாகச் சொல்ல விரும்புகின்றேன். ஞானசேகரன் வைக்காத கோரிக்கையாக இருந்தாலும்கூட அவர் வைத்த கோரிக்கைகள் பல கோரிக்கைகள் அவைகளெல்லாம் காலத்தின் வேகத்திலே சிந்தித்துப் பார்த்து, நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் காணப்படும் என்ற ஆறுதலை மாத்திரம் அவருக்கு இங்கே சொல்லி, எதிர்கால இளைஞர்கள் நம்முடைய இளம் மாணவர்கள், அனைவரும் இதை உணர வேண்டும். ஏதோ இன்றைக்கு வேலூரில் பல்லாயிரக்கணக்கில் கூடினோம். ஒரு பழைய சரித்திரத்தை ஞாபகப்படுத்திக் கொண்டோம் என்பதோடு நின்றுவிடாமல் இது என்றென்றைக்கும் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு சரித்திரத்தை வேலூர் மூலமாக இன்றைக்கு நாம் ஏற்கெனவே எழுப்பியிருக்கின்ற அந்த தூண் மூலமாக மாத்திரமல்ல, இன்னும் ஒரு நினைவுச் சின்னம் அதற்காக எழுப்பப்படும் என்பதையும் நான் இங்கே வாக்குறுதியாகத் தந்து, அந்த நினைவுச் சின்னம் எப்படி எவ்வாறு எழுப்பப்படவேண்டும் என்பதை தகுந்த சிற்பிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்பதையும் இங்கே எடுத்துக்கூறி,இளைஞர்களுடைய நினைவுக்கு அவர்களுடைய பாடப்புத்தங்களில் ஒரு சில பக்கங்களில் நிச்சயமாக இது இடம்பெறும். அவைகள் இடம் பெற்று அவர்களுடைய இளம் உள்ளத்திலே வீரத்தை ஊட்டும், விடுதலை உணர்வை எழுப்பும், சுதந்திரக் கனலை எழுப்பும் என்ற உறுதியையும் உங்களுக்கு அளித்து உங்களை எல்லாம் சந்திப்பதற்கான வாய்ப்பை பெற்றமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். ❖



# புலவர் குழந்தை

## வாழ்க்கை வரலாறு



இராவண காவியம் என்னும் ஒப்பிலாத தனித்தமிழ்ப் பெருங் காவியத்தை இயற்றித் தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியினையும், இனவெழுச்சியினையும், தன்மானப் பண்பினையும் கிளர்ந்தெழச் செய்த புலவர் குழந்தை அவர்களின் சொந்த ஊர், கொங்கு நாட்டுக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஓலவலசு என்னும் சிற்றூராகும். இவ்வூர் கோவை மாவட்டத்து, ஈரோடு வட்டத்தில், ஈரோடு – பழைய கோட்டை வழியில், ஈரோட்டிற்குத் தெற்கே பதினாறாவது கல்லில் (26 கி.மீ.) உள்ளது. 'ஓலவலசுப் பண்ணையக்காரர்' என்னும் பழம் பெருங்குடியில், 1.7.1906இல் இவர் பிறந்தார். இவர்தம் தந்தையார் – முத்துச்சாமிக் கவுண்டர்; தாயார் – சின்னம்மையார். இவர் தம் பெற்றோர்க்கு ஒரே மைந்தராவர்.

நான்கைந்து திண்ணைப் பள்ளிகளில் நான்கைந்தாண்டுகள் இடையிடையே விட்டுவிட்டுப் படித்த இவர் தம் பள்ளிப் படிப்புக் காலம் ஆகக்கூடி எட்டு மாதங்களேயாம். இவர் பத்தாண்டுப் பருவத்திலேயே கவிபாடும் ஆற்றலை இயற்கையாகப் பெற்றிருந்தார். அவ்விளம் பருவத்திலேயே, ஒரு பாட்டைப் பிறர் பாடக் கேட்டால் உடனே இவர் அப்பாட்டின் ஓசையில் புதுப்பாட்டொன்றினைப் பாடி விடுவர். எந்நேரமும் ஏதேனும் ஒரு பாட்டை எழுதிக் கொண்டிருப்பதே இவருடைய பொழுதுபோக்காகவும் விளையாட்டாகவும் இருந்தது.

இவர் ஆசிரியர் உதவியின்றித் தாமாகவே முயன்று படித்துத் தமிழில் சிறந்த புலமையுடையவரானார். மேலும், தாமாகவே படித்து 1934ஆம் ஆண்டில், சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் பட்டம் பெற்றுச் சிறந்தார்.

இவர் 1924 முதல் 1962 முடிய 39 ஆண்டுக்காலம் ஆசிரியத் தொண்டாற்றியுள்ளார். 1941 முதல் 1962 முடிய, பவானி கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

ஓலவலசில் இவருக்கு முன் படித்தவர் எவருமில்லை. அவ்வூரார் எவருக்கும் கையொப்பமிடவும் தெரியாது. இளமைப் பருவத்திலேயே பொதுத்தொண்டில் பேரார்வங் கொண்டிருந்த இவர், தாமாகத் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் படித்துக் கொண்டிருந்த பொழுது, தம் ஊரிலிருந்த தம்மையொத்த இளைஞர்களுக்குக் கல்வி கற்பித்து, அவர்களைக்கொண்டு வயதாற் பெரியவர்களுக்குக் கையெழுத்துப் போடப் பழக்கி, அதன்மூலம் அவ்வூரின் தற்குறித்தனத்தைப் போக்கினார்.

யாப்பிலக்கணம் படிக்கத் தொடங்கு முன்னரே 1918இல், இவர் பாடிய 'கன்னியம்மன் சிந்து' என்னும் சிறு நூல் அச்சாகியுள்ளது.

1926–27இல், வெள்ளகோவில், 'வீரக்குமாரசாமி இரதோற்சவச் சிந்து', 'வீரக்குமாரசாமி காவடிச் சிந்து', 'வெள்ள கோவில் வழிநடைச் சிந்து' ஆகிய நூல்கள் அச்சாயின.

1935 முதலாக இவர் பள்ளிப் பாடநூல்கள் எழுதி வந்துள்ளார். இவர் எழுதிய பள்ளி இலக்கண நூல்கள் (3–11 வகுப்பு) தனிச் சிறப்புடையவை.

இவர் எழுதியுள்ள நூல்களாவன:

**செய்யுள் நூல்கள்** : 1. இராவண காவியம், 2. அரசியலரங்கம், 3. நெருஞ்சிப்பழம், 4. காமஞ்சரி, 5. உலகப் பெரியோன் கென்னடி, 6. திருநணாச் சிலேடை வெண்பா, 7. புலவர் குழந்தை பாடல்.

**உரை நூல்கள்** : 8. திருக்குறள் – குழந்தையுரை, 9. தொல்காப்பியப் பொருளதிகாரம் – குழந்தையுரை, 10. நீதிக்களஞ்சியம் உரை.

**இலக்கண நூல்கள்** : 11. யாப்பதிகாரம், 12. தொடையதிகாரம், 13. இன்னூல் (சூத்திரம்).

**உரைநடை நூல்கள்** : 14. தொல்காப்பியர் காலத் தமிழர், 15. திருக்குறளும் பரிமேலழகரும், 16. பூவாமுல்லை, (இம்மூன்றும் ஆராய்ச்சி நூல்கள்) 17. கொங்குநாடு, 18. தமிழக வரலாறு, 19. தமிழ் வாழ்க (நாடகம்), 20. தீரன் சின்னமலை (விடுதலை வீரன் வரலாறு), 21. கொங்கு நாடும் தமிழும், 22. கொங்குக்குலமணிகள், 23. அருந்தமிழ் விருந்து, 24. அருந்தமிழ் அமிழ்து, 25. சங்கத் தமிழ்ச் செல்வம், 26. ஒன்றே குலம், 27. அண்ணல் காந்தி, 28. தமிழெழுத்துச் சீர்திருத்தம், 29. தீரன் சின்னமலை நாடகம்.

1925இல், தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கம் தொடங்கினதும் இவர் அவ்வியக்கத்தில் சேர்ந்து, பெரியாரின் அணுக்கத் தொண்டரானார். அன்று முதல், சுயமரியாதை இயக்கம், அதன் மறுபதிப்பான திராவிடர் கழகம், அதன் மறுமலர்ச்சியான திராவிட முன்னேற்றக் கழகம் எனத் தொடர்ந்து அதே கட்சியில் – ஒரே கட்சியில் – பணியாற்றியவர். சுயமரியாதைக் கொள்கையினின்றும் இவர் அணுவும் அசையாதவர்; முறுகிய கட்சிப் பற்றுடையவர்; பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதனையும் செய்யாதவர். பள்ளி ஆசிரியராக இருந்துகொண்டே அத்தொழிலுக்குச் சிறிதும் இடையூறில்லாமல், 'பெரியார் சீடர்', 'கருப்புச் சட்டைக்காரர்' என்று ஊரார் கூறுமளவுக்குக் கட்சித் தொண்டாற்றி வந்தார்.

இவரது சுயமரியாதை உணர்ச்சிப் பிழம்பே இராவண காவியம் நூல் ஆகும்.

1938இலும், 1948இலும் நடைபெற்ற இந்தியெதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு கொண்டு, பாடல்களாலும், சொற்பொழிவுகளாலும் பெருந்தொண்டாற்றினார்.

'அரசியலரங்கம்' என்னும் நூலில், 'ஆட்சி மொழி' என்னும் தலைப்பில், இந்தி தேவையில்லை என்பதை முடிவு கட்டியுள்ளார்.

தருமபுரி மாவட்டம் அரூரில் நடந்த வேளாள மாநாட்டில், விதவை மணத் தீர்மானங்கொண்டு வந்து ஒருமனதாக நிறைவேற்றி, அதன்படி நூற்றுக்கணக்கான விதவை மணங்கள் செய்து வைத்தமை இவர் சமூகத் தொண்டுக்குச் சிறந்த சான்றாகும்.

1948இல், சென்னையில் நடந்த திருக்குறள் மாநாட்டில், பகுத்தறிவுக்கேற்ப – தமிழ் மரபு பிறழாமல் – திருக்குறளுக்கு ஓர் உரை எழுதப் பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குழுவில் – நாவலர் சோமசுந்தர பாரதியார் முதலிய ஐவருள் புலவர் குழந்தையும் ஒருவராவர். இவரே தனித்து அப்பணியை மேற்கொண்டு, திருக்குறளுக்குப் பகுத்தறிவுக் கேற்பச் சிறந்ததோர் உரையெழுதி வெளியிட்டார். 'திருக்குறள்–குழந்தையுரை' என்னும் அவ்வுரையை இவர் இருபத்தைந்து நாட்களில் எழுதி முடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அறிஞர் அண்ணா அவர்கள் 'விடுதலை' ஆசிரியராக ஈரோட்டில் இருந்தபோது, அண்ணா அவர்களோடு இவர் நெருங்கிப் பழகி வந்தனர்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களும் இவர்பால் அன்பும் மதிப்பும் உடையவராவார்.

புலவர் குழந்தை அவர்கள் பெருங்கவிஞர் மட்டுமல்லர்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 8.7.2006 அன்று தலைமைச் செயலகத்தில் புலவர் குழந்தை அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டதற்கு, புலவர் குழந்தை அவர்களின் மூத்த மகள் திருமதி. கு. சமத்துவம், இளைய மகள் திருமதி. கு. சமரசம் ஆகியோருக்கு தலா ரூ.5 இலட்சம் பரிவுத்தொகை வழங்கினார்கள்.

இவர் ஒரு சிறந்த எழுத்தாளர்; கேட்போர் வேட்கும் வண்ணம் பேசும் பெரும் பேச்சாளர். இவருடைய எழுத்தும் பேச்சும் உண்மையும் உறுதியும் அஞ்சாமையும் ஆய்வும் செறிந்த புரட்சிக்கனல் கக்கும் இயல்புடையவை எனல் மிகையாகாது. இவருடைய செய்யுள் நடையும் உரைநடையும் எளிய இனிய தனிச் செந்தமிழில் அமைந்தவையாகும். இவர் நூல்களெல்லாம் தமிழுக்கும் தமிழர்க்கும் ஆக்கந்தரும் வகையிலேயே அமைந்துள்ளன.

புலவர் குழந்தை அவர்களின் புலமைத்திறன், செய்யுளியற்றுவதுடன் மட்டும் அமைந்துவிடவில்லை; சிறந்த உரை எழுதுவதிலும் வல்லுநர் என்பதனை இவர்தம் 'திருக்குறள்–குழந்தையுரை', 'தொல்காப்பியப் பொருளதிகார உரை', 'நீதிக்களஞ்சியம்' உரை முதலிய உரைகளைக் கண்ணுறுவோர் எளிதில் அறியலாம். இவரது வரலாற்றுப் புலமைக்குக் 'கொங்குநாடு' என்னும் நூல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதற்குமுன் இத்தகைய நூல் வெளிவரவில்லை.

புலவர் குழந்தை அவர்கள் தம் தாய்மொழியிடத்துக் கொண்டுள்ள அளவுகடந்த பற்றுக்கும், தமிழ்மொழி யாதொரு குறைபாடுமின்றி வளமுற்றுத் திகழ வேண்டும் என்னும் பேரார்வத்திற்கும் பெருநோக்கிற்கும் சான்றாகத் திகழ்கிறது. "தமிழெழுத்துச் சீர்திருத்தம்" என்னும் ஆராய்ச்சி நூல் 'தொல்காப்பியர் காலத் தமிழர்', 'பூவாமுல்லை', 'திருக்குறளும் பரிமேலழகரும்' என்னும் நூல்கள் புலவரின் ஆராய்ச்சித் திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

முந்தைய ஆட்சியாளரால் தடை செய்யப்பட்ட இவர்தம் 'இராவண காவியம்' தமிழக அரசினால், தமிழ்வாழத் தாம் வாழும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தமிழவேள் கருணாநிதி அவர்களால் 17.5.1971இல் தடை நீக்கப்பட்டது. அது கண்ட தமிழகமே அகமிக மகிழ்ந்து தமிழக அரசை, டாக்டர் கலைஞர் தமிழவேள் அவர்களை மனமார வாழ்த்தியது; புலவர் குழந்தையை உவந்து பாராட்டியது.

தந்தை பெரியார் அவர்களால் புலவர் குழந்தை அவர்கட்குப் பொன்னாடை போர்த்துப் பெருமைப் படுத்தினர். தந்தை பெரியார் அவர்கள், தமிழ்ப் புலவர்களெல்லாம் தமிழரை இழிவுபடுத்தும் புராணக் கருத்துக்களையே பாடி வந்தனர். அதற்கு மாறாக இராவண காவியத்தைச் செய்து தமிழரின் இழிவைப் போக்கிய புலவர் குழந்தை அவர்களைப் பாராட்டுகிறேன். அத்தகைய இராவண காவியத்தைத் தமிழ் மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும். இக்காவியத்தைப் பள்ளிகளில் பாடமாக வைக்கவேண்டும் என்று பேசினார்.

புலவர் குழந்தை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் முத்தம்மையார் அவர்கள். புலவர் குழந்தை அவர்கட்குச் சமத்துவம், சமரசம் என்னும் இரு பெண் மக்கள் உள்ளனர்.

தமிழுக்குத் தொண்டு செய்த புலவர் குழந்தை 24–9–1973ஆம் ஆண்டு மறைந்தார்.

* * *

## அறிந்துகொள்வோம் அரசாணையை

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

உருவப்படங்கள் – அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் தலைவர்கள் மற்றும் பெரியோர்களுடைய திருவுருவப் படங்களை வைப்பது குறித்து – அறிவுரைகள் / ஆணை வெளியிடப்படுகிறது.

பொது (பொது–1)த் துறை

அரசு ஆணை (நிலை) எண்.457 நாள் : 4.6.2006

பார்வை :

1. அரசு ஆணை (நிலை) எண்.1681, பொது (சமூக பாதுகாப்பு)த் துறை, நாள் : 21.7.1970.
2. அரசு ஆணை (நிலை) எண். 47, பொது (பொது–1)த் துறை, நாள் : 7.1.1978.
3. அரசு ஆணை (நிலை) எண்.2363, பொது (பொது–1)த் துறை, நாள் : 24.10.1980.
4. அரசுக் கடித எண்.19834A/81–1, பொது (பொது–1)த் துறை, நாள் : 11.11.1982.
5. அரசுக் கடித எண்.85973/83–1, பொது (பொது–1)த் துறை, நாள் : 24.8.1983.
6. அரசுக் கடித எண்.51000/84–1, பொது (பொது–1)த் துறை, நாள் : 15.6.1984.
7. அரசுக் ஆணை (நிலை) எண்.408, பொது (பொது–1)த் துறை, நாள் : 4.3.1986.
8. அரசுக் கடித எண்.15532/89–1, பொது (பொது–1)த் துறை, நாள் : 17.5.1989.
9. அரசு ஆணை (நிலை) எண். 408, ஊரக வளர்ச்சி (சி2)த் துறை, நாள் : 22.5.1990.

* * *

ஆணை :

பார்வை ஒன்று முதல் ஒன்பது வரையிலும் உள்ள அரசு ஆணைகள் மற்றும் கடிதங்களில் அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் தலைவர்களின் திருவுருவப் படங்களை வைப்பது குறித்து அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வையில் கண்ட அரசு ஆணைகள் மற்றும் கடிதங்களின்படி, பின்வருமாறு தலைவர்கள் மற்றும் பெரியோர்களின் திருவுருவப் படங்களை அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் வைக்கலாம் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1. தற்போதைய குடியரசுத் தலைவர்
2. தற்போதைய பிரதமர்
3. அண்ணல் காந்தி அடிகள்
4. பண்டித ஜவஹர்லால் நேரு
5. திருவள்ளுவர்
6. பேரறிஞர் அண்ணா
7. பெருந்தலைவர் காமராஜர்
8. மூதறிஞர் இராஜாஜி
9. தந்தை பெரியார்
10. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்
11. திரு. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
12. திரு. வ.உ. சிதம்பரனார்
13. திரு. காயிதேமில்லத்
14. திருமதி. இந்திராகாந்தி
15. முன்னாள் முதலமைச்சர்கள்
16. தற்போதைய முதலமைச்சர்



3. மேற்கண்ட திருவுருவப் படங்களைத் தவிர, 24.9.1983 நாளிட்ட பொதுத் துறையின் அரசுக் கடிதம் எண். 85973/83–1 இன் படி தமிழன்னையின் திருவுருவப் படத்தினையும் அரசு அலுவலகங்கள் / கட்டடங்களில் வைக்கலாம் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

4. பார்வை 8–இல் கண்ட அரசுக் கடிதத்தில் அரசு பணத்தை செலவிடாமல் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் இந்நாள் முதலமைச்சர் ஆகியோரின் திருவுருவப் படங்களை வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5. பார்வை 9–இல் கண்ட அரசாணையில் 22.5.1990 அன்று ஊரக வளர்ச்சித் துறையின் உள்ளாட்சி அலுவலகங்கள் மற்றும் மன்றக் கூட்டங்களில் வைக்கப்படும் பெரியோர்களின் திருவுருவப் படங்களுடன் முன்னாள் முதலமைச்சர்கள் மற்றும் தற்போதைய முதலமைச்சர் ஆகியோரின் திருவுருவப்படங்களை வைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

6. மேலும், அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் திருவுருவப் படங்களை வைப்பது குறித்து பார்வை 9–இல், 22.5.1990 அன்று வெளியிடப்பட்ட இந்த அரசின் முந்தைய ஆணைகளைப் பின்பற்றி தலைவர்களின் திருவுருவப் படங்களை வைப்பதில் ஏற்படும் தகராறுகளைத் தவிர்ப்பது ஜனநாயக முறைக்கு உகந்ததாகும் என்பது இந்த அரசின் கொள்கை முடிவாகும். அந்த அடிப்படையில் அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் கட்டடங்களில் தலைவர்களின் திருவுருவப்படங்களை வைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி
அரசு தலைமைச் செயலாளர்



இணையத்தில் தமிழரசு

தமிழக அரசின் கொள்கைகள், அறிவிப்புகள், திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றைத் தாங்கி செய்தித்துறை வெளியிடும் 'தமிழரசு' இதழை இனி இணையத்திலும் (Internet) படிக்கலாம்.

தமிழக அரசின் இணைய தளமான "www.tn.gov.in" –என்ற முகவரியில் 'தமிழரசு' இதழ் வெளியிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாது வெளிமாநிலங்களிலும் உலக நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் 'தமிழரசு' இதழை இனி இணையத்தின் மூலம் படிக்கலாம்.

"www.tn.gov.in" – என்ற இணையதள முகவரியை 'க்ளிக்' செய்யுங்கள்!

தமிழரசு இதழைப் படியுங்கள்!!

# சுனாமி நிவாரணப் பணிகளை அடிக்கடி ஆய்வு செய்து விரைவுபடுத்திட வேண்டும்

**சுனாமி மறுவாழ்வு மற்றும் சீரமைப்புப் பணிகள் குறித்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 24.6.2006 அன்று ஆற்றிய உரை**

ஆழிப் பேரலையால் அவதிக்குள்ளாகி அதன் தொடர்ச்சியாக நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் மாவட்டங்களின் ஆட்சியர்களை அழைத்து; கலந்துரையாடி; நிவாரணப் பணிகளின் அளவையும் தரத்தையும் அறிந்து; அவற்றை விரைவுபடுத்திடவும், நிறைவளித்திடும் வகையில் நிறைவேற்றிடவும், வழிவகை காண இந்த வாய்ப்பு பெரிதும் பயன்படும் என்பதிலேயும்; உங்களனைவரையும் சந்திப்பதிலேயும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

2004 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் கண்டும் கேட்டுமிராத சுனாமிப் பேரலை தமிழகத்தைத் தாக்கியது. கடலோர மாவட்டங்களைத் தாக்கிய இந்தப் பேரலை சற்று அடங்குவதற்கு முன்னரே ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். எண்ணற்ற சிறுவர் சிறுமியர் தங்களது பெற்றோர்களை இழந்தனர். ஏராளமான வீடுகளும், பயிர் நிலங்களும், மீன்பிடி சாதனங்களும், படகுகளும் பாதிப்படைந்தன. உங்களில் சிலர் சுனாமியின் தாக்கத்தை நேரடியாக அனுபவித்ததாகக் கேள்விப்பட்டேன்.

சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்டோருக்கு உலகெங்கிலும் இருந்து அரசு சாரா நிறுவனங்களும், ஐக்கிய நாட்டு அமைப்புகளும், மத்திய அரசும் உதவிக்கரம் நீட்டின. இவர்களது பணிகளையும், உதவிகளையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றிட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருந்தது. இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டினால்தான் மீனவர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் உதவி வழங்கிட முடிந்தது என்பதை நான் அறிவேன்.

இருப்பினும், சில இடங்களில் பாதிப்படைந்த அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான உதவிகள் முழுமையாகச் சென்றடையவில்லை என்ற குறைபாடு இருந்ததையும் மறைத்திட





முடியாது. இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்கியிருந்தாலும்; பல இடங்களில் முழுமையான உதவி இன்னும்கூடக் கிடைத்திடவில்லை என்பது நல்ல நிருவாகத்திற்கு அடையாளமாகாது. அத்தகைய குடும்பங்களுக்கும் உதவிகள் முழுமையாகச் சென்றடைந்திடவேண்டும் என்பதை உணர்ந்து நீங்கள் கண்காணித்திட வேண்டுமென்று விரும்புகிறேன்.

நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பெயரில் சுனாமி பாதித்த பகுதிகளில் ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் தொகுப்பு என்ற உதவித் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து இரண்டாயிரத்து 347 கோடியே 19 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தது. அரசாங்கத்தில் உள்ள குறிப்புகளின்படி, இதுவரை ரூ. 731 கோடி மட்டும் செலவிடப்பட்டுள்ளது. இருப்பினும் செலவிடப்படாமல் எஞ்சி உள்ள தொகையின் அளவைப் பார்க்கும்பொழுது மேலும் நிவாரண உதவிகளை அரசின் விதிமுறைகளுக்கு ஏற்ப வழங்கிட வாய்ப்புகள் உள்ளன என்பது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறிப்பாக, மீனவர்களுக்குத் தேவைப்படும் படகுகள் போன்றவை வழங்கப்பட்டிருந்தாலும், கூடுதலாக வலைகள், ஐஸ் பெட்டிகள், பாதுகாப்பு சாதனங்கள், குளிர்பதன வசதிகள் போன்றவற்றை மத்திய அரசின் ஒப்புதலோடு மேற்கொள்ளலாம். இது குறித்து விரிவாக ஆலோசனை செய்து, மீனவர் மற்றும் மீனவர் அல்லாத அனைத்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் எவ்வாறு கூடுதலாக உதவி வழங்கலாம் என்பது பற்றி தக்க ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுனாமியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளில் மிக அதிக அளவில் ஏற்பட்ட பாதிப்பு மக்கள் வாழ்ந்து கொண்டிருந்த வீடுகளாகும். வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு முதற்கட்டமாக நிவாரண உதவி ஒரு இலட்சத்து 18 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதன் அடிப்படையிலும்; பல குடும்பங்கள் கடற்கரையிலிருந்து சற்று தொலைவில் உள்ள இடங்களுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவித்ததின் அடிப்படையிலும்; ஏறத்தாழ ஒரு இலட்சத்து 30 ஆயிரம் வீடுகள் கட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டதாக அறிகிறேன்.

ஆனால், தற்சமயம் சென்னையில் ஏறத்தாழ நான்காயிரம் வீடுகளும், ஏனைய பகுதிகளில் 32 ஆயிரம் வீடுகளும் கட்டப்பட்டு வருவதாக நீங்கள் அளித்த விவரங்களில் இருந்து தெரிய வருகிறது.

சென்னையைத் தவிர பிற மாவட்டங்களில் வீடு கட்டும் பணி அரசு சாரா நிறுவனங்களின் மூலமாகத்தான் நடைபெற்று வருகிறது. இந்தக் கட்டடப்பணிகள் அரசு நிர்ணயித்த தொழில்நுட்ப

**“சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்டோருக்கு உலகெங்கிலும் இருந்து அரசு சாரா நிறுவனங்களும், ஐக்கிய நாட்டு அமைப்புகளும், மத்திய அரசும் உதவிக்கரம் நீட்டின. இவர்களது பணிகளையும், உதவிகளையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றிட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருந்தது. இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டினால்தான் மீனவர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் உதவி வழங்கிட முடிந்தது என்பதை நான் அறிவேன்.”**

விதிமுறைகளையொட்டி, அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக் கூடியதாகக் கட்டப்பட்டு வருகின்றன என அறிகின்றேன். ஆனால், கட்டுமானப் பணிகள் பல இடங்களில் இன்னமும் நிறைவு பெறாமலும், தொடக்க நிலையிலும் உள்ளன. குறிப்பாக நாகப்பட்டினம் மாவட்டத்தில், கட்டுமானப் பணி தொடக்க நிலையில் இருக்கிறது.

சுனாமிப் பேரலை அழிவு ஏற்பட்ட ஒன்றரை ஆண்டுகள் கடந்த பின்னரும், பல குடும்பங்கள் தற்காலிகக் குடியிருப்புகளில் குடியிருந்து வருவதும்; அதனை நாம் பார்த்துக் கொண்டிருப்பதும் கொடுமையானது. தற்காலிகக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்கள் அனைத்தும் மழைக்காலத்துக்கு முன்னரே பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றிட நீங்கள் முழுமுயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

சுணக்கம் காட்டுகின்ற நிறுவனங்களை முடுக்கிவிட்டு, அவர்களுக்குத் தக்க ஒத்துழைப்பு வழங்கி வீடு கட்டும் பணியினை விரைவுப்படுத்திட வேண்டும். இதற்காக அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அரசு துறையினரோடு வாரந்தோறும் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே சமயம் குடியிருப்புப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்குகள், வீடுகளுக்கு மின் இணைப்புகள், இணைப்பு மற்றும் உட்புறச் சாலைகள், கழிவு நீர் வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றிற்குத் தேவையான நிதி, உலக வங்கித் திட்டத்தின் கீழும், ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின் கீழும் தேவைப்படும்

அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிதிநிறுவனங்களின் விதிமுறைகளுக்கு ஏற்ப, இப்பணிகளைச் செய்து முடித்திட சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்கள் இணைந்து செயலாற்ற வேண்டும். எந்தவொரு வீடும் அடிப்படை வசதிகளை நிறைவு செய்யாமல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலக வங்கித் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஆயிரத்து ஐநூற்று ஐம்பது கோடி ரூபாய், வீடுகள் கட்டும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 22.06.2006 அன்று இந்தியாவிற்கான உலக வங்கியின் இயக்குநரை நான் சந்தித்தபொழுது அவரிடம் இதுபற்றி விவாதித்து பின் வரும் இரு திட்டங்களை உலக வங்கி ஏற்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன்.

முதலாவது, கடற்கரையிலிருந்து 200 மீட்டருக்குள் வசிக்கும், நேரிடையாக பாதிப்பு அடையாத, ஏறத்தாழ இருபதாயிரம் குடும்பங்களுக்கு, அவர்களது விருப்பத்திற்கேற்ப 200 மீட்டருக்கு அப்பால் குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்.

இத்திட்டத்திற்கு முதற்கட்டமாக ஏற்பளித்துள்ள உலக வங்கி, இவ்வாறு மாற்று இடத்தில் வீடுகள் கட்டும்போது ஏற்கெனவே குடியிருப்புகளில் இருந்த அனைவரும் அவர்தம் ஒப்புதலோடு புதிய இடத்தில் குடியமர்த்தப்பட வேண்டுமென்றும், காலியான இடம் அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் ஆலோசனை தெரிவித்துள்ளது. அவ்வாறு எந்தெந்த குடியிருப்புகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்பது பற்றி மிக விரிவாக ஆய்வு செய்து இந்த குடும்பங்களை எங்கு குடியமர்த்தலாம், அதற்குத் தேவைப்படும் நிலம் எவ்வளவு, நில எடுப்பிற்காகத் தேவைப்படும் தொகை எவ்வளவு போன்ற விவரங்களை ஆய்வு செய்து ஜூலை 15 ஆம் தேதிக்குள்ளாக விரிவான அறிக்கையை அரசுக்கு நீங்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு சாரா நிறுவனங்கள் முன்வந்தால், அவர்களையும் இத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளலாம்.

இரண்டாவது திட்டமாக, கடலோர மாவட்டங்களில் வெள்ளம், புயல், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் குடிசை வீடுகள், பழமையான முறையில் கட்டப்பட்ட வீடுகள் போன்றவற்றில் வாழும் ஏழை, எளியோரின் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித்தரும் பணியாகும்.

இவ்வாறு கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆயிரம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இக்குடும்பங்கள் தற்போது தங்கும் இடங்களிலேயே தேவையான இடம் இருப்பின், அந்தந்த இடங்களிலேயே அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக் கூடிய உறுதியான வீடுகளைக் கட்டித்தரலாம். அவ்வாறு இடம் இல்லாதிருப்பின், தேவைப்படும் நிலத்தை நில எடுப்பு செய்து வீடுகள் கட்டும் பணியினைத் தொடரலாம்.

ஏற்கெனவே, மைய அரசின் கடல் வளர்ச்சித்துறை மூலமாக ஒருசில மாவட்டங்களில் வெள்ளம், புயல், சுனாமி போன்றவற்றால் பாதிக்கக்கூடிய பகுதிகள் எவை என்பது அறிவியல் பூர்வமாகக் கண்டறியப்பட்டுள்ளதாக அறிகிறேன். அனைத்து கடலோர மாவட்டங்களிலும் இப்பணி தொடரப்பட்டு; இத்திட்டத்திற்கான முன்வரைவுகள் ஜூலைத் திங்கள் 15ஆம் தேதிக்குள்ளாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் வழங்கிடவுள்ள விவரங்களின் அடிப்படையில்தான் மத்திய அரசும், உலக வங்கியும் இத்திட்டத்திற்கு உதவிட வாய்ப்பு உருவாகும்.

இறுதியாக, உலக வங்கித் திட்டத்தின் கீழ் 234 கோடியே 58 இலட்சம் ரூபாயும்; ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின் கீழ் 573 கோடியே 71 இலட்சம் ரூபாயும்; இதுவரை அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளில் ஆய்வு மேற்கொள்ளுதல், சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல், ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல் போன்ற முதற்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விரு திட்டங்களும் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள்ளாக முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்நிறுவனங்கள் செலவிட்ட தொகைகளை ஈடு கட்டுவதற்குப் பிரச்சினைகள் ஏற்படலாம்.

நடப்பு ஆண்டில், உலக வங்கித் திட்டத்தின் கீழ் 160 கோடி ரூபாயும், ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டத்தின் கீழ் 320 கோடி ரூபாயும் செலவிடப்படும் என்று சம்பந்தப்பட்ட துறைகள் தெரிவித்துள்ளன. இந்த ஆண்டு, திட்டப் பணிகளுக்காக 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கான ஒப்புதலை இந்த அரசு மத்திய திட்டக்குழுவிடமிருந்து பெற்றுள்ளது. ஆகவே, ஏற்கெனவே உறுதி அளித்துள்ள தொகையைவிட கூடுதலான தொகையை அனைத்து துறைகளும் செலவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொத்தத்தில் இந்த ஆண்டில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாக நாம் இத்திட்டங்களின் கீழ் பணிகளைச் செய்து முடிக்க வேண்டும். சுனாமி நிவாரணப் பணிகளை அடிக்கடி ஆய்வு மேற்கொண்டு பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களைப் பார்வையிட்டு, அவற்றை விரைவுபடுத்திட தொடர்புடைய அமைச்சர்களையும், அரசுச் செயலர்களையும், துறைத் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். தலைமைச் செயலாளர் இப்பணிகளை மாநில அளவில் மாதந்தோறும் ஆய்வு செய்து விரைவுபடுத்திட வேண்டுகிறேன்.

இனிவருங்காலங்களில், இதுபோன்ற பேரிடர்கள் ஏற்பட்டாலும், தமிழக மக்கள் உயிர்ச்சேதம் ஏதுமின்றி, தங்கள் குடும்பத்தினரையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக ஒரு வளமான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்கிட நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ❖





<u>தமிழ்நாடு அரசு</u>

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – 2006 – 2007ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு/ஊராட்சி ஒன்றியம்/நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்துதல் – பள்ளிகளின் பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (இ1)துறை

அரசாணை (நிலை) எண். 100 நாள். 30.06.2006.

படிக்கப்பட்டவை :-

1. அரசாணை (நிலை) எண். 97, பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள். 26.06.2006.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 99420/ஜி1/2004, நாள். 30.06.2006.

<u>ஆணை :</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2006–2007 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு / ஊராட்சி ஒன்றிய / நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக நிலை உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாறு உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படவிருக்கும் 100 நடுநிலைப் பள்ளிகள் இணைப்பில் உள்ளவாறு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு அரசு ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

---

<u>இணைப்பு</u>

<u>(அரசாணை (நிலை) எண். 100. பள்ளிக் கல்வித் (இ1) துறை, நாள். 30.06.2006)</u>

<u>2006 – 2007 ஆம் கல்வியாண்டில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் பள்ளிகளின் பெயர் பட்டியல்</u>

| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மதகனேரி, வள்ளியூர் கல்வி மாவட்டம் |
| 2. | திருநெல்வேலி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வீராணம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் |
| 3. | தூத்துக்குடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேல்மாந்தை, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் |
| 4. | இராமநாதபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வாலிநோக்கம், கடலாடி ஊராட்சி ஒன்றியம் |

| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 5. | சிவகங்கை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கோவிலூர், கல்லல் ஊராட்சி ஒன்றியம் |
| 6. | சிவகங்கை/ இராமநாதபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சோழந்தூர், |
| 7. | விருதுநகர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, படந்தால், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் |
| 8. | விருதுநகர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, எஸ். அம்மாப்பட்டி, வத்தராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் |
| 9. | விருதுநகர் | சேதுபதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருச்சுழி அஞ்சல் |
| 10. | விருதுநகர் | காரியாப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரை பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி காரியாப்பட்டி துவங்க |
| 11. | மதுரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாராபத்தி |
| 12. | மதுரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, செம்மனிப்பட்டி, மேலூர் ஒன்றியம் |
| 13. | திண்டுக்கல் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பில்லமநாயக்கன்பட்டி, குஜிலியம்பாறை ஒன்றியம் |
| 14. | கோயமுத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காரத்தொழுவு, மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் |
| 15. | கோயமுத்தூர் | மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, வரதராசபுரம் சர்க்கார் குளம் ஊராட்சி ஒன்றியம் |
| 16. | கோயமுத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,ஜல்லிப்பட்டி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் |
| 17. | ஈரோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தேர்ப்பட்டி தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் |
| 18. | ஈரோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கல்கடம்பூர், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம் |
| 19. | ஈரோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெள்ளித்திருப்பூர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் |
| 20. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தாண்டவராயபுரம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் |
| 21. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சார்வாய்புதூர், தலைவாசல் ஒன்றியம் |
| 22. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வைகுந்தம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் |
| 23. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெள்ளக்கடை, ஏற்காடு ஒன்றியம் |
| 24. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, செட்டியூர், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் |
| 25. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தமையனூர், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம் |
| 26. | சேலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராமமூர்த்திநகர், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் |
| 27. | நாமக்கல் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பொட்டணம், சேந்தமங்கலம் ஊராட்சி ஒன்றியம் |
| 28. | கிருஷ்ணகிரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நேரலகிரி, வேப்பனபள்ளி ஊராட்சி ஒன்றியம் |



| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 29. | கிருஷ்ணகிரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெட்டமுகலாம், கெலமங்கலம் ஒன்றியம் |
| 30. | கிருஷ்ணகிரி | அரசு மேல்நிலைப்பள்ளி ஆதம்பட்டி மகளிரை பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆதம்பட்டி துவங்க |
| 31. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கொளசன அள்ளி |
| 32. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீலநாயக்கனூர். |
| 33. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராமகொண்டஹள்ளி |
| 34. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாலவாடி, பாப்பாரப்பட்டி ஒன்றியம் |
| 35. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, புதுபாலசமுத்திரம் |
| 36. | தர்மபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஜாதிபுத்தூர் |
| 37. | புதுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வல்லவாரிகிழக்கு |
| 38. | புதுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வத்தக்கோட்டை, திருவரங்குளம் ஒன்றியம் |
| 39. | புதுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பல்லவராயன்பத்தை, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் |
| 40. | புதுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கீழப்பட்டி, கறம்பக்குடி ஒன்றியம் |
| 41. | திருச்சி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சடையம்பட்டி, வையம்பட்டி ஊராட்சி ஒன்றியம். |
| 42. | திருச்சி | நகராட்சி நடுநிலைப்பள்ளி, துறையூர், துறையூர் ஊராட்சி ஒன்றியம் |
| 43. | திருச்சி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கண்ணுடையான்பட்டி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் |
| 44. | திருச்சி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, புஞ்சை சங்கேந்தி, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம் |
| 45. | திருச்சி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, புதூர் உத்தமனூர், லால்குடி ஊராட்சி ஒன்றியம் |
| 46. | பெரம்பலூர் | அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரை பிரித்து அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி அரியலூர் துவங்க |
| 47. | பெரம்பலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சிறுகடம்பூர், செந்துறை ஊராட்சி ஒன்றியம் |
| 48. | பெரம்பலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, அருங்கால், அரியலூர் ஒன்றியம் |
| 49. | பெரம்பலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரியதத்தூர், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் |
| 50. | பெரம்பலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சோழன்குடிக்காடு, செந்துறை ஊராட்சி ஒன்றியம் |
| 51. | நாகப்பட்டினம் | நகராட்சி நடுநிலைப்பள்ளி, திருஇந்தலூர் மாயவரம் ஊராட்சி ஒன்றியம் |
| 52. | நாகப்பட்டினம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தொடுவாய், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் |
| 53. | நாகப்பட்டினம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திட்டுப்படுகை, கொள்ளிடம் ஒன்றியம் |
| 54. | நாகப்பட்டினம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஆறுபாதி, செம்பனார்கோவில் ஒன்றியம் |

| வ.எண் | மாவட்டம் | பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 55. | நாகப்பட்டினம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மருங்கூர், திருமருகல் ஒன்றியம் |
| 56. | நாகப்பட்டினம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காரப்பிடாகை, கீழையூர் ஊராட்சி ஒன்றியம் |
| 57. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சக்கராப்பள்ளி |
| 58. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தம்பிக்கோட்டை வடகாடு, பட்டுக்கோட்டை ஒன்றியம் |
| 59. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, புதுத்தெரு சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் |
| 60. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வளப்பக்குடி, திருக்காட்டுப்பள்ளி அஞ்சல் |
| 61. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, திருவாய்ப்பாடி, திருவிடைமருதூர் தொகுதி |
| 62. | தஞ்சாவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராயமுண்டான்பட்டி, பூதலூர் ஊராட்சி ஒன்றியம் |
| 63. | திருவாரூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கீழப்பெருமழை அஞ்சல் – 614 703. |
| 64. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அரசமங்கலம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் |
| 65. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கூவனூர், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியம் |
| 66. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தடாகம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம் |
| 67. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, எலவாடி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் |
| 68. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேல்காரணை, காணை ஊராட்சி ஒன்றியம் |
| 69. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சிறுவாலை, காணை ஊராட்சி ஒன்றியம் |
| 70. | விழுப்புரம் | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, செடார் மகளிரை பிரித்து மகளிர் உயர்நிலைப்பள்ளி துவங்க |
| 71. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பிரம்மதேசம் |
| 72. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஒட்டம்பட்டு முகையூர் ஊராட்சி ஒன்றியம் |
| 73. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பொன்னங்குப்பம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம் |
| 74. | விழுப்புரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பையூர் |
| 75. | கடலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வடலூர், குறிஞ்சிப்பாடி ஒன்றியம் |
| 76. | கடலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, முட்டம், காட்டுமன்னார்கோயில் ஒன்றியம் |
| 77. | கடலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நடியப்பட்டு, கம்மாபுரம் ஒன்றியம் |
| 78. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வடுகப்பட்டு, செய்யார் ஊராட்சி ஒன்றியம் |
| 79. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பல்லாவரம், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் |
| 80. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேட்டு எச்சூர், அனக்காவூர் ஒன்றியம் |
| 81. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மேல்நாச்சிப்பட்டு, புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் |
| 82. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ரோட்டுத் தெரு, திரமணி ஊராட்சி ஒன்றியம் |
| 83. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தெள்ளூர் ஆரணி ஒன்றியம் |
| 84. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெட்டியாந்தொழுவம், ஆரணி ஊராட்சி ஒன்றியம் |
| 85. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இந்திரவனம், சேத்துப்பட்டு ஒன்றியம் |
| 86. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கொண்டையாங்குப்பம், தெள்ளார் ஒன்றியம் |
| 87. | திருவண்ணாமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாடகம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் |
| 88. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சுமைதாங்கி, வாலாஜா ஊராட்சி ஒன்றியம் |
| 89. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பணமடங்கி (வழி) லத்தேரி, கீ.வ.குப்பம் ஊராட்சி ஒன்றியம் |
| 90. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாகவெளி, வாலாஜா ஊராட்சி ஒன்றியம் |
| 91. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பரமேஸ்வரமங்களம், நெமிலி ஊராட்சி ஒன்றியம் |
| 92. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சின்னக்கம்மியம்பட்டு, சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் |
| 93. | வேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, புதுப்பட்டு காவேரிபாக்கம் ஊராட்சி ஒன்றியம் |
| 94. | காஞ்சிபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ராமாபுரம், அச்சரப்பாக்கம் ஒன்றியம் |
| 95. | காஞ்சிபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வடமணிப்பாக்கம், அச்சரப்பாக்கம் ஒன்றியம் |
| 96. | காஞ்சிபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காரப்பாக்கம், சிட்லப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் |
| 97. | காஞ்சிபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வையாவூர், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் |
| 98. | காஞ்சிபுரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கொளப்பாக்கம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் |
| 99. | திருவள்ளூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வேப்பம்பட்டு, திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் |
| 100. | நீலகிரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பாடாந்தொரை மற்றும் அஞ்சல் கூடலூர், ஊராட்சி ஒன்றியம் |

ம. குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்

**செ**ன்னை மாநகராட்சியின் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 17.6.2006 அன்று தலைமைச்செயலகத்தில்

# சென்னை மாநகராட்சியின் வளர்ச்சித் திட்டப் பணிகள்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆய்வு

சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் ஆய்வு நடத்தினார்கள். ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், ‘சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட அனைத்து சாலைகளும் செப்டம்பர் மாதத்துக்குள் செப்பனிடப்படும். இரயில்வே மேம்பாலம், சுரங்கப் பாதை வேலைகள் இன்னும் மூன்று மாதங்களில் தொடங்கப்படும். சென்னை மாநகராட்சியில் 30 உடற் பயிற்சிக் கூடங்களை நவீனப்படுத்தி, இவ்வாண்டு இறுதிக்குள் பணிகள் முடிக்கப்படும். இவ்வாண்டு இறுதிக்குள் புதிதாக 15 பூங்காக்கள், 300 புதிய கழிப்பறைகள், 100 குழந்தைகள் நல மையக் கட்டடங்கள், 362 பள்ளி வகுப்பறைகள் கட்டி முடிக்கப்படும். மேலும், பெரம்பூர் இறைச்சிக் கூடம் நவீனப்படுத்தும் வேலை மூன்று மாதங்களில் தொடங்கப்படும். 780 கிலோ மீட்டர் நீளமுள்ள மழை நீர் வடிகால்கள் செப்டம்பர் மாத இறுதிக்குள் இரண்டு முறை தூர் வாரப்படும். ஐ.டி.ஐ. இவ்வாண்டுக்குள் தொடங்கப்படும்’ என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர் திரு. சையது முனிர்ஹோதா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை மேயர் கராத்தே திரு. ஆர். தியாகராஜன், ஆணையர் திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., இணை ஆணையர்கள் திரு. மணிவாசன், இ.ஆ.ப., திருமதி சந்தியா, இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் எம். பன்னீர்செல்வம் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்திற்கு முன்பு பூந்தமல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூந்தமல்லி பேருந்து நிலைய விரிவாக்கம் மற்றும் குடிநீர் அடிப்படை வசதிகள் மேம்பாடு குறித்தும் ஆய்வு செய்தார். கூட்டத்தில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு. தீனபந்து, இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறைச் செயலர் திரு. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலைய ஆணையாளர் திரு. பிச்சாண்டி, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக ஆணையர் திரு. நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பூந்தமல்லி நகராட்சித் தலைவர் பூவை. மு. ஞானம் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ❖





# படமும் செய்தியும்



20.6.2006 அன்று, மேதகு தமிழக ஆளுநராக மீண்டும் பதவியேற்ற திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை 5.7.2006 அன்று அண்ணா உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் திரு. செல்லமுத்து சந்தித்து, தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி விவசாயிகள் செலுத்த வேண்டிய கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்தமைக்காக நன்றி தெரிவித்தார். மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், ஆகியோர் உடன் உள்ளனர்.



அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை ஆணையைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுக்கு திராவிடர் கழகம் சார்பில் 12.6.2006 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற பாராட்டுப் பெருவிழாவில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசினை வழங்கினார்.



ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பாக 23.6.2006 அன்று தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது.



பெங்களூரில் மின்னியல் நகரத்தில் அமைந்துள்ள "இன்போசிஸ்" மென்பொருள் நிறுவனத்திற்கு 15.6.2006 அன்று வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, அந்நிறுவனத்தின் முதன்மை தொழில்நுட்ப அலுவலரும் இணை நிருவாக இயக்குநருமான திரு.கோபாலகிருஷ்ணன் வரவேற்றார். உடன் மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.தயாநிதி மாறன் உள்ளார்.





தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பள்ளிகள் – பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (வரவு செலவு – 2)துறை

அரசாணை (நிலை) எண். 99 நாள். 27. 06. 2006

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண். 100/ பள்ளிக் கல்வி (பட்ஜெட்) துறை நாள். 27.6.03.
2. அரசு நே.மு.க. 45241/பிடி & எஸ் ஐ (எஸ்பி II) / 2006, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள். 25.5.06.
3. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித எண். 45868/அ1/2006 நாள். 6.6.2006.

---

ஆணை :

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து வகைப் பள்ளிகளிலும் அந்தந்த வகை ஆசிரியர் பணியிடங்களில் அவ்வப்போது நிரந்தரமாகக் காலி ஏற்படும்போது, அத்தகைய பணியிடங்களானது இளநிலை ஆசிரியர் பணியிடங்களாக (அதாவது, இளநிலை இடைநிலை ஆசிரியர், இளநிலை பட்டதாரி ஆசிரியர், இளநிலை முதுகலை ஆசிரியர்) கருதப்பட்டு கீழ்க்கண்டவாறு தொகுப்பூதியத்தில் நிரப்ப அரசு ஆணையிட்டது.

| வரிசை எண். | ஆசிரியர் பணியிட வகை | வழங்கப்படவுள்ள தொகுப்பு ஊதியம் மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | இளநிலை இடைநிலை ஆசிரியர் (உடற் கல்வி ஆசிரியர், சிறப்பாசிரியர் உட்பட) | ரூ. 3000/– (நர்சரி, மாண்டிசோரி மற்றும் கிண்டர் கார்டன் போன்ற இளநிலை ஆசிரியர்களுக்கு ரூ. 2500/–) |
| 2. | இளநிலை பட்டதாரி ஆசிரியர் (மொழி ஆசிரியர் உள்பட) | ரூ. 4000/– |
| 3. | இளநிலை முதுகலை ஆசிரியர் | ரூ. 4500/– |

மேலும், அவ்வாணையில் இவ்வாறு தொகுப்பூதியத்தில் நிரப்பப்படும்போது, இனி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் நேரடி நியமனம் இருக்காது என்றும் பதவி உயர்வில் மட்டும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்படும் என்றும் இளநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்களில் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுபவர்கள் ஐந்து ஆண்டு கால நிரந்தர பணி நிறைவுக்குபின் தகுதி, திறமை பணியிடமானது தானாக முறையான பணியிடமாக தரம் உயர்த்தப்பட்டதாகக் கருதப்படும் என்றும் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்த பின்னர்

அவர்களது தகுதிகாண் பருவமானது மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலமாக இருக்கும் என்றும் ஆணையிடப்பட்டது.

2. அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி ஒப்பந்த முறை மாற்றப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கலாம் என்றும் அரசுப் பள்ளிகளில் உள்ள அனைத்துக் காலியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பலாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது.

3. அதற்கிணங்க 2003 – 2004 ஆம் ஆண்டிலிருந்து இளநிலை தரத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்படும் எனவும், இனி வருங்காலங்களில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினத்திற்கான நிதியொதுக்கீடு திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி சார்ந்த பட்டியல்கள் உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் பொழுது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவைகளை அனுமதிக்குமாறு சார்நிலை கருவூலம், கருவூலம் மற்றும் சம்பளக் கணக்கு அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்திய மதிப்பீடு 2006–2007ல் இச்செலவினத்தைச் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவினை அரசுக்கு தவறாது அனுப்பிட தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

5. இவ்வாணை நிதித்துறை அ.சா.கு.எண். 2018/FS/P/06 நாள்.27.6.2006ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேட்டு எண். 185.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். குற்றாலிங்கம்
அரசுச் செயலாளர்



கவியரசு கண்ணதாசன் அவர்களின் 80ஆவது பிறந்த நாளையொட்டி, சென்னையிலுள்ள அவரது திருவுருவச்சிலைக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.வெள்ளக்கோயில் சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.பி.பி. சாமி அவர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் 24–6–2006 அன்று மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



# இரவல் அறிவு

ஓர் ஊரில் நல்லவன் ஒருவன் இருந்தான். அவன் எல்லோருக்கும் உதவி செய்பவன்.

ஒரு நாள் கடைத் தெருவில் பார்வையற்றவன் ஒருவன் வழி தெரியாமல் தடுமாறுவதைக் கண்டு தன் வீட்டிற்கு அழைத்து வந்தான். சில நாட்கள் தங்கிவிட்டுப் போகுமாறு மிக அன்புடன் அவனை வேண்டினான்.

பார்வையற்றவனும் சம்மதித்தான்.

சில நாட்கள் சென்றன. பார்வையற்றவனுக்குத் தொடர்ந்து அப்படித் தங்குவதற்குச் சங்கடமாயிருந்தது. தான் கிளம்புவதாகக் கூறினான்.

"இன்னும் சிறிது நாள் தங்கலாமே!" என்றான் அந்த நல்லவன்.

"இல்லை ஐயா! நானோ வறியவன். என் வழியையும் பார்க்க வேண்டும். நெடுங்காலம் ஒரே இடத்தில் தங்குவதால் உங்களுக்கும் வீண் சுமை. எனக்கும் வீண் சோம்பல். தவிர யாரும் அவரவருக்குத் தெரிந்ததைச் செய்ய வேண்டுமே தவிரப் பிறர் மீது சவாரி செய்யக் கூடாது."

இதைக் கேட்ட நல்லவன் மகிழ்ந்தான். பார்வையற்றவனின் தத்துவப் பேச்சு அவனை மிகவும் புளகாங்கிதமடையச் செய்தது.



"சரி. இப்போது இருட்டி விட்டது. இன்று இரவு மட்டும் தங்கிவிட்டு நாளைக் காலையில் போ!" என்றான்.

பார்வையற்றவன் வெறுமையாகச் சிரித்தான்.

"நானோ பிறவியிலேயே பார்வையை இழந்தவன். அப்படியிருக்க இரவுக்கும், பகலுக்கும் எனக்கு என்ன வேறுபாடு தெரியப் போகிறது?" என்றான்.

பார்வையற்றவனின் தெளிவைக் கண்டு வியந்த நல்லவன், "சரி. இந்த

விளக்கையாவது வழித்துணைக்கு எடுத்துக் கொண்டுபோ!" என்று வேண்டினான்.

"கண் தெரியாதவனுக்கு விளக்கினால் என்ன பயன்?" மறுத்தான் பார்வையற்றவன்.

"உண்மை. ஆனால் விளக்கு உனக்கு உபயோகப்படாவிட்டாலும் எதிரே வருபவர்களுக்கு நீ வருவது தெரியுமல்லவா?" விடாப்பிடியாக விளக்கைக் கொடுத்தனுப்பினான் நல்லவன்.

ஒப்புக்கொண்ட பார்வையற்றவன் விளக்கைக் கையில் ஏந்திக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் சென்ற பின் எதிரே வந்த ஒருவன் மடேலென்று பார்வையற்றவன் மீது மோதிக் கொண்டான்.

"யாரவன் கண் மண் தெரியாமல் வந்து மோதுவது?" பார்வையற்றவன் கத்தினான்.

"மன்னிக்க வேண்டும். நான் நேராகத்தான் வந்தேன். தாங்கள்தான் என் மீது வந்து மோதினீர்கள்!" என்றான் வந்தவன்.

"சரி. எனக்குத்தான் கண் தெரியாது. உங்களுக்குமா தெரியாது?" சீறினான் பார்வையற்றவன்.

"நள்ளிரவு என்பது அனைவருக்குமே பொதுவானது தானே நண்பரே! இரவு நேர இருட்டில் எனக்கு மட்டும் எப்படி ஒளி தெரியும்?" என்றான் வந்தவன்.

"அது சரிதான். ஆனால் என் கையில் உள்ள விளக்கு கூடவா உங்களுக்குத் தென்படவில்லை?" என்றான் இன்னும் காட்டமாக.

"அப்படியா!" என ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்த வந்தவன், "உண்மைதான். தாங்கள் விளக்கு ஏந்தியிருக்கிறீர்கள். ஆனால் அது அணைந்து அல்லவா போயிருக்கிறது?" என்றான் அமைதியாக.

பார்வையற்றவன் மனத் திகைப்பு நீங்கியவனாக, "உண்மை. தவறு என்னுடையதுதான். அவரவர் தன் சுய அறிவைப் பயன்படுத்த வேண்டும். இரவல் ஞானத்தால் எந்தப் பயனும் இல்லை!" என்றபடியே விளக்கைத் தூக்கியெறிந்து விட்டுத் தன் கைக்கோலை ஊன்றியபடியே நடந்தான்.

இப்போது அவனால் சிரமமின்றி நடக்க முடிந்தது.

– *"ஜென் தத்துவக் கதைகள்"*
*என்ற நூலிலிருந்து*

* * *

# விடுகதைகள்

1. வருவது தெரியும், போவது தெரியாது. அது என்ன?
2. தண்ணீரிலே தாமரைப்பூ, தள்ளாடுதே அலைகளிலே. அவன் யார்?
3. தன்னை நம்பாதவன் கூடவே வருவான். அவன் யார்?
4. வேகாத வெய்யிலிலும் வெள்ளையப்பன் விளையாடுவான். அவன் யார்?
5. அந்தரத்தில் தொங்கும் அழகான வீடு எது? அது என்ன?
6. வெள்ளைச் சீமாட்டிக்கு விளக்கு எரியுது தலைக்கு மேலே. அது என்ன?
7. வெட்டி வெட்டி எரியும் எங்கள் வீட்டு விளக்கு. அது என்ன?
8. நெட்டி இல்லாத வட்ட இலை. அது என்ன?
9. காடு மேடெல்லாம் கிடக்கும், கால் வைத்தால் கத்த வைக்கும். அது என்ன?
10. தொட்டாற் சுருங்கிக்கு தொண்ணூறு கால். அது என்ன?

விடைகள்

1. புகை
2. படகு
3. நிழல்
4. உப்பு
5. குருவிக்கூடு
6. மெழுகுவர்த்தி
7. மின்னல்
8. அப்பளம்
9. முள்
10. மரவட்டை



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 104ஆவது பிறந்த நாளையொட்டி, 15-7-2006 அன்று சென்னை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.டி.ஆர். பாலு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா. வீராசாமி, திரு.மு.க. ஸ்டாலின், திரு.பரிதி இளம்வழுதி. டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, திரு.கே.பி.பி. சாமி ஆகியோர் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



தியாகிகள் தினத்தையொட்டி, 17-7-2006 அன்று, சென்னை, கிண்டி தியாகிகள் மணிமண்டபத்தில் அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா. வீராசாமி, திரு.மு.க.ஸ்டாலின், திரு.பரிதி இளம்வழுதி ஆகியோர் மாலையணிவித்தார்கள். திரு.குமரி அனந்தன் உடன் உள்ளார்.

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்பு துறையின் வெளியீடு

விலை ரூ.10

ஆகஸ்ட்








தமிழரசு

R.N.I. No.21446/70 - Regn. No. TN/ARD/48/06-08

TN/PMG(CCR) WPP 518/06-08

# சுதந்திரத் திருநாள் விழா 15.8.2006



சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஊனமுற்றோருக்கு மிகச் சிறந்த சேவை புரிந்த திருவாரூர் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திருமதி. இரா. சியாமளா - சிறந்த மருத்துவருக்கான விருது மரு. ஏ. சின்னதுரை பார்வையற்றோர் இசைக்குழு நடத்தும் திரு. எம். ஜான்சன் செரி கோமகன் மற்றும் மதுரை இந்திய பார்வையற்றோர் சங்கம் ஆகியோருக்கும், மகளிர் நலனுக்கான சிறந்த நிறுவன விருது பள்ளப்பட்டி தமிழ்நாடு மகளிர் நலவாழ்வுச் சங்கத்திற்கும் - சிறந்த சமூகநலப் பணியாளருக்கான விருது டாக்டர் அ. பிச்சை மற்றும் முனைவர் திருமதி கோ. மீனா ஆகியோருக்கும் விருதுகள் வழங்கிப் பாராட்டினார்.





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான 'கல்பனா சாவ்லா' விருதினை சமூகநீதிக்காகப் போராடிய திருமதி. வசந்தா கந்தசாமி அவர்களுக்கு


# தமிழரசு

செய்தி - மக்கள்தொடர்பு துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 2006
மலர் : 38 இதழ் : 2



**2** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை (15.08.06)

**9** சமுதாய நல வளர்ச்சியில் அக்கறை உள்ள அரசு – மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் உரை

**25** முதற்கட்டமாக 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசுநிலத்தை மேம்படுத்தி வழங்க பணிகள் தொடக்கம்

**29** அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த புதிய முறை – மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் அறிக்கை

**36** தமிழக அரசின் நூறு நாள் சாதனைகள்

**59** குழந்தைகள் திரைப்பட விழா

**62** சென்னை தினம் – சிறப்புக் கட்டுரை

**64** தமிழ் மாமலை பரிதிமாற் கலைஞர் – வரலாறு

**72** சாசனம் – சிறுகதை


**குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றிநிற்கும்.

**– கலைஞர்**

திருக்குறள் உரையிலிருந்து...

## அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : 15.8.2006 அன்று சுதந்திர தின விழாவில் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், சென்னை தலைமைச்செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றினார்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி. கோசலராமன்**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு, சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in



**கடிகாரத்தின் முள் ஓய்வின்றி சுழல்வதுபோல,**
**காற்று எங்கும் எப்பொழுதும் நீக்கமற இயங்குவதுபோல,**
**ஒவ்வொரு மணித்துளியும் தமிழ்நாடு, தமிழ் மக்கள்,**
**தமிழ்மொழி வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம்**
**என்பனவற்றையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு**
**இந்த அரசு செயல்படுகிறது**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை
(15.08.06)

அருமைத் தாய்மார்களே,
அன்புப் பெரியோர்களே,
சட்டப் பேரவைத் தலைவரவர்களே,
உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே,
மற்றும் நீதி அரசர்களே,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,
சட்டப்பேரவை – நாடாளுமன்ற உறுப்பினர்களே,

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே.

அனைவருக்கும் என் இனிய – இதயங்கனிந்த வணக்கத்தையும் சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



<u>நிலையற்றது</u>

ஒரு நீர்க்குமிழி!
அந்தக் குமிழி தான்
சில மனிதர்களுக்குக்
கொற்றக் குடை!

<u>நிலையானது</u>

தியாகம்
உறுதி
உழைப்பு
மானம்
மரியாதை
மதிப்பு

மனிதர்கள் மறைந்தாலும்
என்றைக்கும் மறையாத
வெற்றிக் குடை!

இந்தக் குடை பிடித்து நடை தளராமல்
நாட்டு விடுதலைக்குப் படை முகத்தில்
அணி வகுத்து; அழியாத வரலாறுகள்
ஆகிவிட்ட அஞ்சா நெஞ்சன் பகத்சிங்;
ஏற்றிட நினைத்த நமது கொடி –
அறப்போர் வீரன் திருப்பூர் குமரன்
திருக்கரம் ஏந்திய தேசியக் கொடி –
பற்று மிகக்கொண்டு; நாட்டின் மீது –
பாஷ்யம் என்ற வீர இளைஞன் –
கோட்டை கொத்தளத்தில் ஏறி கொடிக்கம்பத்தில்
பறக்கவிட்ட
பார்புகழும் மணிக்கொடி –
அல்லும் பகலும் அணுப் பொழுதும் மறவாமல்
அன்னைத் திருநாட்டின் அடிமைத்தனம் அகற்றிட
அண்ணல் காந்தியடிகள் உயர்த்திப் பிடித்த
உரிமைக் கொடி –
வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில்
பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும்
வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி
பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும்

அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகம் சுளிக்காமல் – முகாரி பாடாமல் – முதுகு காட்டாமல் –

"முன்னேறு நீ" "முன்னேறு நீ"
என்று முரசொலித்து எஞ்சிய வீரர்களை
நெஞ்சுரங் கொள்ளச் செய்து
எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ
எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு பாயுமோ என்று
சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்கு பார்ப்பதும்
வீரர்களுக்கு அழகில்லை என்ற
போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும்
மறந்து விடாமல் –
மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு,
மங்கையின் இதழை விடச் சுவையானது என்ற
மனோபலத்துடன் இந்த மண் மீட்கப் போர் புரிந்து
மாண்டவர்களின் குருதிப் புனலிலே
தோய்த்தெடுத்த கொடி;
இன்று கம்பீரமாக நமது கோட்டை முகப்பிலே
உயர்ந்து நிற்கும் கொடி!
சுதந்திரம் பெற்ற பல ஆண்டுகளுக்குப் பிறகும்
நமது சுதந்திரக் கொடியை நமது மாநிலத்தில்
நமது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் ஏற்றி
வைக்க முடியாத நிலையிருந்ததை இந்தியப்

பிரதமர் அன்னை இந்திரா காந்தியிடம் சுட்டிக்காட்டி; வலியுறுத்தி வாதாடி – 1974ஆம் ஆண்டு; தேசியக் கொடியை ஆகஸ்டு 15 விடுதலை நாளில் அனைத்து மாநில முதல் அமைச்சர்களும் ஏற்றுவதற்கான உரிமையை ;

முதன் முதலில் பெற்றிடுவதற்குக் காரணமாக இருந்தவன் என்ற பெருமிதத்துடன்;

இன்று ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள,

நான் உங்கள் முன்னிலையில் உவகை பொங்கிட,

உணர்வு பொங்கிட அந்தக் கொடியை ஏற்றி வைத்துள்ளேன்.

கொடியேற்றுவது – விடுதலை நாளைக் கொண்டாடி மகிழ்வது மட்டுமல்ல;

நமது நாட்டுக் குடிமக்களின் வாழ்வு உயரவும், இந்நாளில் நாம் சூளுரை மேற்கொண்டாக

வேண்டும் – ஆம்; ஆண்டு தோறும் அது தொடர் சூளுரையாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைதல் வேண்டும்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள்; நமக்குச் சுதந்திரத்தைத் தேடித்தந்த நாள்! மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு, சுதந்திர இந்தியாவின் பிரதமர் ஆனார்; நமது மூத்த தலைவர்கள் எல்லாம் நாட்டு மக்கள் அனைவரும் நலம்பெறும் நோக்கில், வளம்பெறும் திக்கில் பல்வேறு பொறுப்புகளைச் சுமந்து பாடுபடத் தொடங்கினர்.

சுதந்திரத்தின் பயன்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைத்திட, அண்ணல் அம்பேத்கர் வகுத்துத் தந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் நமது நாடு; குடியரசு நாடாக மலர்ந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குடியாட்சி பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை;

"மக்கள் தமது செயலில் எல்லாம் குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டு ஒழுக வேண்டும்.

பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் தெளிவும், தமது கருத்துக்களை எடுத்துக் கூறும் பயிற்சியும் அதற்கு மாறான கருத்துக் கூறப்படும்போது, கேட்டுக் கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் நிரம்ப வேண்டும்;

'நான் எவ்வாறு ஓர் அடிமையாக இருக்கமாட்டேனோ, அவ்வாறே ஓர் எஜமானனாகவும் இருக்கமாட்டேன்', என்றார் ஆப்ரகாம்லிங்கன்.

இந்தத் தத்துவத்தின்மீது கட்டப்படுவதே உண்மையான குடியாட்சி

எது நல்லது; எது கெட்டது என்பதைக் கண்டறியும் திறமை எல்லோருக்கும் உண்டு என்ற நம்பிக்கையின்பேரில் குடியாட்சி முறை அமைக்கப்படுகிறது".

– இவ்வாறு; அண்ணா அவர்கள், குடியாட்சியாம் மக்களாட்சி குறித்து எடுத்துரைக்கிறார். இதைத்தான் நாம் ஜனநாயகம் என்கிறோம்.

அந்த ஜனநாயகம் தந்த இந்த அரசின் துணை கொண்டு, தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் நலவாழ்விற்கும் தொண்டாற்றிட வேண்டும் என்னும் உணர்வோடு, தோழமை இயக்கங்களின் துணையோடு பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.





"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருள்மொழிக் கேற்ப தமிழகத்தில் வறுமை எனும் சொல்லே ஒழிந்து வளம் கொழித்திட, நோயற்று வாழும் சூழ்நிலை குறைவற்ற செல்வமாய்ச் செழித்திட, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உணர்வு எங்கும் ஒளிவீசிட, பகைமை இருள் பறந்து விலகிட, இந்த அரசு பாடுபடும்.

வலிவையும் பொலிவையும் வழங்கிடும் வாய்ப்புகள் அனைத்தையும் உறவாக்கிக் கொள்ளும் நெறியில் திட்டமிட்டுச் செயல்படுகிறது, தமிழக அரசு. மத்திய அரசுடனும், அண்டை மாநில அரசுகளுடனும் இணக்கமான நல்லுறவு கொள்ளுவதன் மூலம் தமிழகத்தின் வளர்ச்சி தடைபடாமல் செல்ல, வாய்ப்புகள் அமையும் என்றும் கருதுகிறேன்.

இந்த அரசினுடைய திட்டங்கள் குறித்த முடிவுகளை விவாதித்து உடனுக்குடன் மேற்கொள்வதற்காக, இந்த மூன்று மாதங்களில் இதுவரை ஏழுமுறை அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் மீது முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசு அமைவதற்கு முன்னால் நடைபெற்ற தேர்தலையொட்டி தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் மிகப் பெரும்பான்மையானவை நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டு; தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தாய்மார்கள் மனம் மகிழ தரமான அரிசி ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்திற்கு முதல் கையெழுத்து.
- இரண்டாவதாக விவசாயிகளின் வேதனைகள் தீர 7,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி;
- மூன்றாவதாக, மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டு முறை முட்டை;
- பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டு, பள்ளிகள் அனைத்திலும் விழா நிகழ்ச்சிகள்;
- 1 முதல் 10ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம்.
- ஒப்பந்தமுறை ஆசிரியர்கள் நியமனம் அடியோடு ரத்து செய்யப்பட்டு, 400 கோடி ரூபாய் செலவில் சுமார் 50 ஆயிரம் ஆசிரியர்களுக்கு 2006 ஜூன் திங்கள் முதல் காலமுறை ஊதியம்;
- பள்ளிகளில் 17,185 ஆசிரியர்கள், அரசுக் கல்லூரிகளில் 1,020 விரிவுரையாளர்கள், அரசு பொறியியல் கல்லூரிகளில் 180 விரிவுரையாளர்கள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 559 விரிவுரையாளர்கள் புதிதாக நியமனம்.
- 293 கோடி ரூபாய் செலவில் 429 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள்; 281 கோடி ரூபாய் செலவில் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 14,354 கூடுதல் வகுப்பறைகள்.
- இடையில் நிறுத்தப்பட்ட மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவி ரூ. 15 ஆயிரமாக உயர்வுபெற்று மீண்டும் தொடக்கம்.
- கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துள்ள உணவுக்காகவும், அவர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யவும் தலா ரூ.6,000 உதவி.
- அரசு பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்லூரிக் கல்வி கட்டணம் ரூ. 12,550 என்பது ரூ. 7,550 ஆக குறைப்பு.
- கடந்த சில ஆண்டுகளைப் போல் அல்லாமல், எந்த ஒரு சிறு சிக்கலும் இல்லாமல் தனியார் சுயநிதி கல்லூரிகள் 65 விழுக்காடு இடங்களை அரசு ஒதுக்கீட்டின்படி நிரப்பிட இசைவளித்து அதன்படி மாணவர் சேர்க்கைகள் மாநிலம் முழுவதும் தங்குதடையின்றி நடைபெற்று வரும் சாதனை.

- மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இடஒதுக்கீடு அளித்திட வலியுறுத்தி சட்டப் பேரவையில் தீர்மானம்.
- சுயநிதிக் கல்லூரிகளில் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சட்டம்;
- 13,000 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை.
- நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்!
- கூட்டுறவு விவசாய வங்கிக் கடன் வட்டி விகிதம் 9 விழுக்காடு என்பது 7 விழுக்காடாக குறைப்பு.
- சுயநிதி மூலம் மின்சாரம் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்;
- விவசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் பெரும் பயன்கள் நல்கக்கூடிய புரட்சிகரமான சமூகப் பாதுகாப்பு – நல உதவிச் சட்டம்.
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் தனித்தனி நலவாரியங்கள்.
- வேலைவாய்ப்புகளை பெருக்கிடும் வண்ணம் புதிய தொழிற்சாலைகள்.
- 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மோட்டரோலா தொழிற்சாலை.
- 520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அப்போலோ ரேடியல் டயர்ஸ் தொழிற்சாலை.
- 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பெரும்புதூரில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் இங்கிலாந்து நாட்டின் கபாரோ இந்தியா தொழிற்சாலை;
- இந்தத் தொழிற்சாலைகளின் மூலம் 11,250 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு.
- தந்தை பெரியார் காண விரும்பிய சமத்துவ சமுதாயத்தைப் படைப்பதில் ஒரு முக்கிய அங்கமாக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணை.
- இலங்கையில் தமிழ் இனமே அழிந்திடுமோ எனும் பதற்ற நிலையில் வாழ்வில் அமைதியைத் தேடி அலுத்து தமிழகத்தில் தஞ்சமடையும் நிலைக்கு ஆளாகித் தவித்திடும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மாத உதவித்தொகை இரட்டிப்பு.
- திரைப்படத் துறைக்குத் தாராளமான சலுகைகள்; படப்பிடிப்புக் கட்டணங்கள் வெகுவாகக் குறைப்பு; சின்னத் திரைக்கான








**“ விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களில் சமையல் செய்யும் போது பெண்கள் படும் இன்னல்களைக் களையும் வகையில், அந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், எரிவாயு அடுப்பும் கிடைத்திட வகை செய்யப்படும் என்பதை இந்நாளில் ஏழையெளிய மகளிரின் இதயம் குளிர்ந்திட அறிவிக்கின்றேன். இத்திட்டம் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில், வரும் பொங்கல் திருநாளன்று தொடங்கித் தொடர்ந்து செயல்படுத்தப்படும் ”**

படப்பிடிப்புக் கட்டணங்கள் பாதியாகக் குறைப்பு.

- புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால் கேளிக்கை வரி முழுமையும் விலக்கு.
- அகற்றப்பட்ட, தமிழரின் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு.
- சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுடைய நினைவைப் போற்றிட இன்று ஆகஸ்ட் 15; அஞ்சல்தலை வெளியீடு.
- செம்மொழிக்கு முதல் குரல் கொடுத்த பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த வீடு நினைவகம்.
- நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 500 ரூபாய் என்றிருந்தது 1,000 ரூபாயாக உயர்வு.
- முதியோர், விதவைப் பெண்கள், ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 400 ரூபாயாக உயர்வு.
- மத மாற்றத் தடைச் சட்டம் நீக்கம்.
- அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை அச்சுறுத்திய எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் நீக்கம்.
- அரசு அலுவலர்கள் முழு ஒய்வூதியம் பெற 33 ஆண்டுகள் தேவை என்பதை 30 ஆண்டுகளே போதுமென ஆணை.
- ஆசிரியர், பஸ் தொழிலாளர் மற்றும் அரசு ஊழியர்களின் போராட்ட நாட்கள் பணிக்காலமாக அறிவிப்பு;
- பெண்கள் மகிழத் தக்க வண்ணம் பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி முழுமையாக ரத்து;
- சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கு ;
- மொத்தத்தில் வரியில்லாத நிதிநிலை அறிக்கை
- முந்தைய ஆட்சிக் காலத்தில் வறட்சி காரணமாக உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இன்று சுதந்திரத் திருநாளில் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி.

இவைபோலப் பல்வேறு திட்டங்களை மிக மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றியுள்ள இந்த அரசு, தேர்தல் வாக்குறுதிகளில் இந்தியாவின் கவனத்தையே ஈர்த்த முக்கியமான வாக்குறுதிகளாகிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தினை அண்ணா பிறந்த நன்னாளாகிய செப்டம்பர் 15ஆம் நாளன்றும்,

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கும் திட்டத்தினை தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17ஆம் நாளன்றும்,

வேலையின்றி வேதனைப்படும் படித்த இளைஞர்களுக்கு, மாதாந்திர நிதியுதவித் திட்டத்தை உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளாம் அக்டோபர் 2ஆம் நாளன்றும், தொடங்கிடத் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்படி ஆட்சிப் பொறுப்பேற்ற 95 நாட்களுக்குள் இந்தியாவின் தியாகத் திருவிளக்கு சோனியா காந்தி அவர்களையும், பிரதமர் உள்ளிட்ட மத்திய அமைச்சர் பெருமக்களையும், தோழமைக் கட்சித் தலைவர்களையும், பிற சான்றோர்களையும், அண்டை மாநிலங்களின் முதலமைச்சர்களையும் சந்தித்துத் தமிழக வளர்ச்சிக்காகவும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை மக்கள் உரிமைகளுக்காகவும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் கோரியுள்ளோம்.

அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிவிட்டு, எஞ்சியுள்ள ஒரு சில வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்களைக் குறித்துத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

இதனைத் தொடர்ந்து, ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ள அறிவிப்புகளில் ஒன்றான, விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களில் சமையல் செய்யும் போது பெண்கள் படும் இன்னல்களைக் களையும் வகையில், அந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், எரிவாயு அடுப்பும் கிடைத்திட வகை செய்யப்படும் என்பதை இந்நாளில் ஏழையெளிய மகளிரின் இதயம் குளிர்ந்திட அறிவிக்கின்றேன்.

இத்திட்டம் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில், வரும் பொங்கல் திருநாளன்று தொடங்கித் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், இந்தக் குடும்பங்களுக்குத் தரப்படும் இலவச சமையல் எரிவாயு இணைப்பிற்கான வைப்புத்தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதுடன், எரிவாயு அடுப்பையும் இலவசமாக வழங்கும்.

வேலைவாய்ப்பைப் பெருக்கிடவும், இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திடவும் மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் போலவே இளைஞர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கவிருப்பதோடு, தகவல் தொழில் நுட்பத் துறையின் மூலம் மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி போன்ற நகரங்களில் மென்பொருள் பூங்காக்களை உருவாக்கிடுவோம்.

கடிகாரத்தின் முள் ஓய்வின்றிச் சுழல்வது போல, காற்று எங்கும் எப்பொழுதும் நீக்கமற இயங்குவது போல, ஒவ்வொரு மணித்துளியும் தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம் என்பனவற்றையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு செயல்படுவதை நீங்கள் கவனித்துக் கொண்டு வருகிறீர்கள். உங்களைப் போலவே, இந்த அரசின் இயக்கத்தினை இந்திய நாடு முழுவதுமே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தினை இந்தியா முழுமையிலும் செயல்படுத்திட வேண்டுமெனக் கோரிக்கைகள் பிற மாநிலங்களில் எழுந்துள்ளன. இது இந்த அரசுக்கும் தமிழகத்திற்கும் கிடைத்துள்ள பெருமையல்லவா!

என் அருமைத் தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் வாழ்வு வளம் பெற, வருங்காலம் உயர்ந்திட, நீங்களும் நாங்களும் நாம் அனைவரும் உழைக்கிறோம்! இந்தக் குறிக்கோள் நிறைவேறிட இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பினை நல்கிடுவீர் என உங்கள் அனைவரையும், தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புகளால்தான் அரசின் திட்டங்கள் முழு வெற்றி பெற்றிட முடியும்; இன்று நாம் கொண்டாடும் சுதந்திரத்தின் முழுப் பயனும் சிந்தாமல் சிதறாமல் உங்கள் இல்லம் தேடி வந்திடக்கூடும் என்று கூறி, என் இனிய சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம். ✶



# சமுதாய நல வளர்ச்சியில் அக்கறை உள்ள அரசு

**2006–2007 ஆம் ஆண்டிற்கான**
**நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்து**
**மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்**
**ஆற்றிய பதிலுரை (31.7.2006)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தினை நான் இந்த அவைக்கு வழங்கி, கடந்த 5 நாட்களாகப் பேசி இன்று 6ஆவது நாள் பேசும் நிலையில் இதிலே 50 பேர் கலந்துகொண்டு இன்றைக்கு மூன்று பேர் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கலந்துகொண்டு ஏறத்தாழ 22 மணி நேரம் இந்த விவாதம் நடைபெற்றிருக்கின்றது. இப்பொழுது நான் விடையளிப்பதற்காக பேசத் தலைப்பட்டு இருக்கிறேன். சாதாரணமாக ஒரு மணி நேரமாவது குறைந்தபட்சம் பதிலளிக்க வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் கடைசியாக அவர்கள் சொல்கிறபோது, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு புதைக் குழி, சேறு போல தெரியும், இறங்கினால் உள்ளே இழுத்துவிடும். Quicksand என்று சொல்லி நாட்டு மக்களுக்கு அவர் எச்சரிக்கை கொடுப்பதுபோல தெரிவித்தார்கள். நாட்டு மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற அந்தச் செய்திகளையெல்லாம் தேர்தல் அறிக்கையிலே பார்த்திருக்கிறார்கள்.

இரண்டு மணி நேரம் உரையாற்றி இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், நான் பதில் சொல்ல எழுந்து ஒரு நிமிடம் ஆவதற்குள்ளாக இந்த அவையைவிட்டு அவர் வெளியேறி இருக்கிறார். ஜனநாயக மரபு தெரிந்த யாராக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சார்ந்த எந்தத் தலைவராக இருந்தாலும், ஆளும் கட்சியைச்



சேர்ந்தவர், அதிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு வழங்கிய நான் பதில் சொல்கிறபோது என்னுடைய பதில் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காகவாவது இந்த அவையிலே இருந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் ஒரு புதைக் குழியைப் பற்றிச் சொன்னார். அந்தப் புதைக்குழி, அதிலே கால் வைத்து இறங்குகிறவர்களை, சேறு என்று கருதிக்கொண்டு இறங்குகிறவர்களை உள்ளே இழுத்துவிடும். அதைப்போன்ற நிதிநிலை அறிக்கை இது என்றார். உள்ளபடி இந்த நிதிநிலை அறிக்கைதான் ஏற்கெனவே தேர்தல் அறிக்கையாக வெளியிடப்பட்டு, ஏறத்தாழ இந்தக் கருத்துகள் எல்லாம் வெளியிடப்பட்டு, பொதுமக்கள் அவற்றையெல்லாம் பார்த்து, பார்த்ததற்குப் பின்னர்தான் தி.மு.க.–விற்கு ஆதரவாக வாக்களித்து, இந்தக் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்து, இந்த அணி வெற்றிபெற்று வந்திருக்கிறது என்று சொன்னால், அது புதைக் குழி அல்ல என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) – இன்று புதைக் குழி என்று சொல்கிறவர்கள், அன்றைக்கு அப்படிப்பட்ட பிரசாரத்திலே ஈடுபட்ட போது மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருவேளை இது புதைக் குழியாக இருந்தால் கனமாக உள்ளவர்களுக்குதான் அதிக ஆபத்தே தவிர, என்னைப் போன்றவர்களுக்கு ஆபத்து இல்லை என்பதை, நான் அதிலிருந்து வெளியிலே வந்து விடுவேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஒன்று, கடைசி நேரத்திலே அவர் பேசுகிறபோது, நாட்டிலே உள்ள பண்படுத்தப்படாத நிலம், அந்த நிலத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்கள். தான் எழுதி வந்த அந்தக் கருத்துகளையே திரும்பத் திரும்பக்கூடப் படித்தார்கள். ஒரு முறை படித்தால்கூட குற்றம் இல்லை. ஆனால் திரும்பத் திரும்ப அந்தப் பக்கத்தைப் புரட்டிப் படித்து, தொடர்ந்து படித்தார்கள். அது அவருடைய வசதியைப் பொறுத்தது. ஆனால் எனக்கு நேரத்தைப் பற்றித்தான் கவலை.

இருந்தாலும்கூட, நான் ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தரிசு நிலத்தைப் பற்றிய கருத்து, எவ்வளவு ஏக்கரா என்பதற்காக ஏற்பட்டதல்ல, எத்தனை பேருக்கு என்பதற்காக ஏற்பட்டதல்ல, முறையில்



முதலாளிகளுக்குக் கொடுப்பதா, பெரிய தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதா, சாதாரண ஏழைகளுக்குக் கொடுப்பதா என்ற கொள்கை அடிப்படையிலேதான் அது தொடங்கியது. அது எவ்வளவு ஏக்கராக இருந்தாலும், கிடைத்தாலும், அது ஏழைகளுக்கு தலா 2 ஏக்கர் மட்டும் தரப்படும், ஏனென்றால் எல்லா ஏழைகளுக்கும் தரமுடியாது. எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறதோ, 2 ஏக்கர் நிலமாகப் பிரித்து, அது அந்தந்தப் பகுதியிலே உள்ள ஏழைகளுக்கு அந்த நிலத்திற்குத் தொடர்புடையவர்களுக்கு, பக்கத்திலே வாழ்கிற பரம ஏழைகளுக்குத் தரப்படும் என்பதுதான் கருத்து. இது ஒருவேளை தோற்றுப் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், நாட்டிலேயே நிலம் இல்லாவிட்டால், நாங்கள் தோற்றுப் போனால் என்ன நஷ்டம்? நாட்டிலேயே அந்த நிலம் இல்லை என்று சொன்னால், நாங்கள் தோற்றுப் போவதைப்பற்றிக் கவலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை நான் தொடருகின்றேன். நான், 'ஓடிவிட்டார்' என்று சொன்ன அந்தச் சொல்லுக்காக, எதிர்ப்பு தெரிவித்து, அவையை நடத்தவிடாமல் செய்து, தங்களால் இப்போது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். நான் அந்தச் சொல்லை புதிதாகச் சொல்லவில்லை. நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர், எப்பொழுது அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்கள் என்று கேட்டார். அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்களா என்று கேட்கலாம் என்றால், அவையை விட்டு வெளியேறியவரை 'ஓடிவிட்டார்' என்று நான் சொல்லக்கூடாது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், நான் சொன்னேன். மற்றொன்று. இந்த அவையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கட்சித் தலைவர் நினைத்தபடி பேசுவதற்காக இந்த அவையிலே இருந்து, அவருக்குத் தேவையான முறையில் குரல் எழுப்பிவிட்டு, அவர் பேசி முடித்தவுடன், நான் பேசுவதற்கு இடையூறு செய்ய வேண்டுமென்று கருதி, பேசுகிறபோது குறுக்கிட்டிருக்கிறார். ஆகவே, ஜனநாயக மரபைக் காப்பாற்றாத ஒரு கட்சிதான், இன்றைய எதிர்க்கட்சி என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தரிசு நிலம் என்று அவர்கள் சொன்னதைப் பற்றி, ஒரு குறிப்பை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். 2001–2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் 20 இலட்சம் ஹெக்டேர், அதாவது, 50 இலட்சம் ஏக்கர் என்று தெரிவித்து, அதை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவோம் அந்த நிலத்தை என்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தது. அவ்வாறே தற்போது நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அவர்கள் குறைவுபடுத்திப் பேசுகிறார்கள். நீங்கள் இதிலே இறுதியிலே தோல்வியடையப் போகிறீர்கள் என்கிறார்கள். ஏழைகளுக்கு நிலம் கொடுப்பது என்றால், அது எப்படியாவது தோல்வியடைய வேண்டும் என்ற ஓர் ஆர்வத்தோடு எதிர்க்கட்சியினுடைய தலைவர் இங்கே பேசியிருக்கிறார்.

உள்ளபடியே,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்றார் வள்ளுவர். நினைப்பதுதான் உயர்ந்த நோக்கத்தோடு இருக்க வேண்டுமே தவிர அது நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அது நம்முடைய குற்றம் அல்ல. நல்லதை எண்ண வேண்டும். நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். தோற்றுப் போனால் அதற்காக அந்த உயர்ந்த நோக்கத்தைக் கைவிட்டுவிடக் கூடாது. எனவே இதை நான் அடிப்படையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அவையிலே 53 பேர் பேசியதில் 52 பேர் பேசுகின்றபோது பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. கருத்துக்களைச் சொன்னார்கள். கருத்துக்களை நாமும் தெரிவித்தோம். 52 பேர் பேசியதில் பிரச்சினை இல்லை. 53–வதாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் தான் எழுதிக் கொண்டுவந்த அந்த உரையிலேயே ஆளுங்கட்சித் தலைவரைத் தாக்குவதற்கு, இழிவாகப் பேசுவதற்கு பல சொற்களை எழுதிக் கொண்டு வந்து அவற்றைத் திரும்பத் திரும்ப வேறு படித்தார்கள். இந்த அவையிலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் குறைவுபடுத்திப் பேசினார். ஏற்கெனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த என்னை, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களை, மணி அவர்களை, இன்னும் சொல்லப் போனால், ஒவ்வொரு கட்சித் தலைவர்களையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உள்பட அத்தனைப் பேரையும் அன்றைக்கு இருந்தவர்களை எல்லாம் அவர் ஏளனம் செய்து குறைவுபடுத்தியே பேசினார். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே வந்து அமர்ந்தும் இன்னும்கூட தாம் கையாண்ட முறை தவறு என்பதை உணராமல் இப்பொழுதும்கூட எதிர்க்கட்சித் தலைவர்கள்

எல்லாம், 'படித்துப் புரிந்துகொள்ளாமல்' " என்று சொல்லக்கூடிய ஒரு மனப்பான்மை ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிறது என்று சொன்னால் நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். வேதனைப் படுகின்றேன். மறுப்பு எழுப்பலாம். மாறுபாடு இயற்கை. கருத்து ஒன்றுபடுவது முடியாத காரியம். ஆனால் அதற்காக கண்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் இந்த அவையிலே முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன். அதனால் இந்த அவையிலே பேசிய மற்ற தலைவர்கள் எல்லாம் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள், யசோதா அம்மையார் அவர்கள், அதற்கு முன்னாலே பேசிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அதேபோல பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், அதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், அவர்கள் எல்லாம் உரையாற்றுகின்றபோது உளமார இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி இருக்கின்றார்கள்.

வெளியிலே உள்ள தலைவர்களும்கூட இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பாராட்டு தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அறிக்கையை குறித்து, முதலமைச்சர் கலைஞர் ஏழையெளிய, நடுத்தர மக்கள்மீது வைத்துள்ள அக்கறையும், அவரது அரசியல் நுண்ணறிவும், தொலைநோக்குச் சிந்தனையும் இந்த பட்ஜெட்டில் பிரதிபலித்துள்ளது என்று பாராட்டினார். மேலும் சொல்கிறார். பொதுவாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் மற்றும் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் — நான் இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுகின்றபோது இந்த அவையிலே இடம்பெற்றிருக்கின்ற மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கண்ணப்பன் அவர்களையும் அதேபோல மற்றொரு கட்சித் தலைவராக இங்கே வீற்றிருக்கின்ற விஜயகாந்த் அவர்களையும் பெயர் குறிப்பிடத் தவறி இருக்கின்றேன். அதற்குக் காரணம் அவர்கள் முழுவதுமாக பாராட்டவில்லை என்பதால், அவர்கள் சில கருத்து மாற்றங்களை, தங்களுடைய கருத்து மாறுபாடுகளைத் தெரிவித்தார்கள் என்பதால் அந்தக் கருத்து மாறுபாடுகள் குறித்து நான் பேசும் இடத்திலே அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுள்ளேன்.

அதேபோல, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலேயும் இங்கே அதனுடைய கட்சித் தலைவர் பாதி பாராட்டினாலும், சில கருத்து வேறுபாடுகளையும் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் பேசியதையும் நான் மதிக்கின்றேன். பேசிய ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்தையும் நான் வரவேற்கின்றேன்.

அவர்கள் சொன்ன கருத்துக்களைப் பற்றி நிச்சயமாக அரசின் சார்பில் முழு அளவில் ஆய்வு செய்து, யார் யாருடைய கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் நிச்சயமாக ஏற்றுச் செயல்படுத்துவோம் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக பேசிய எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்துக்கு மாறாக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள், பொதுவாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் மற்றும் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், மாணவர்கள், மீனவர்கள் போன்ற எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றம்பெறத்தக்க வகையில் அமைந்த வரியில்லா பட்ஜெட் இது, பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அவர் இந்த நாட்டிலே தமிழ்நாட்டு மக்களால் பாராட்டப்படுகிற வரவேற்கப்படுகிற ஒரு தலைவர்தான்.

அதே போல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் பேசுகிறபோது, தன்னுடைய அரசின் நிதிநிலை அறிக்கையாக இந்தத் தேர்தல் அறிக்கை வெளிவரும் என்று தேர்தலின்போது சொன்னதை மெய்ப்பித்துக் காட்டி சாதனையில் புரட்சி செய்திருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். மொத்தத்தில் வரிகள் இல்லை, வசதிகள் நிறைய இருக்கின்றன, குறையே சொல்ல முடியாத ஒரு நிதிநிலை அறிக்கை இது. இதிலேயும் குறை கண்டு சொல்வார்கள் என்றால் அவர்களது மனதில் குறை இருக்கிறது என்றுதான் தமிழக மக்கள் கருதுவார்கள் என்றும் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள், விவசாயிகள் பயிர்க் கடன் இரத்து, வட்டி விகிதம் குறைப்பு, இளைஞர்களுக்கு நிவாரணம், அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குச் சலுகைகள், பொது விநியோக



முறையில் அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான அமைப்பு, பொது விநியோக முறையில் நடவடிக்கை போன்ற பல ஆக்கபூர்வமான அம்சங்களைக் கொண்டதால் இதனை சி.பி.எம். மாநில செயற் குழு வரவேற்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள், சகல துறைகளின் வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தியிருப்பதும், நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் தமிழக அரசு நாட்டம் காட்டுவதை உறுதிப்படுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது, இது பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தமிழ் மாநிலத் தலைவர் காதர் மொய்தீன் அவர்கள், இந்த பட்ஜெட் புழுக்கம் நிறைந்த தமிழகத்திற்குப் பூங்காற்றாய் வந்திருக்கிறது. எல்லோருடைய இதயங்களிலும் நிறைவையும், மகிழ்வையும் தந்திருக்கிறது. இந்த நல்ல அரசு வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்.

இந்தச் சட்டமன்றத்திலே ஒரு கட்சியாக இடம்பெறாவிட்டாலும், வெளியிலே சமுதாய சீர்திருத்தப் பணியிலே தன்னை முழு அளவிலே ஒப்படைத்துக் கொண்டிருக்கிற திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள், இந்த அறிக்கையைப் பல கோணங்களிலே எண்ணிப் பார்த்து, மிகவும் மகிழ்ந்து, கருத்தினிக்கும் திட்டங்களின் பட்டியலினைப் பார்த்து மலைத்தேன், இது ஒரு சுவைத்தேன், பூரித்து புளகாங்கிதம்கொள்ளச் செய்கிறது, இது போன்ற துணிவும், தெளிவும் மிக்க அறிவிப்புகளைச் செய்ய கலைஞர் ஆட்சியைவிட்டால் திராவிட இனத்திற்கு, தமிழர்களுக்கு வேறு நாதி ஏது? (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, நன்றி, என்று அவர்களும் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் பலர் தெரிவித்த கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், ஏடுகள் பாராட்டி எழுதிய கருத்துக்கள் இருந்தாலும், நேரம் கருதி அந்தப் பாராட்டை முழு அளவில் நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும், எதிர்க்கட்சியைத் தவிர, எதிர்க்கட்சிக்குத் துணை போன இரண்டொரு கட்சிகளைத் தவிர, இந்த அறிக்கையை, இந்த நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டுள்ள செய்திகளை மறுப்பவர்கள், கண்டிப்பவர்கள் யாரும் இல்லை என்பதையும், வரவேற்பவர்கள்தான் தமிழ்நாட்டினுடைய பெரும்பான்மை மக்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டம், பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதை நடுநிலையாளர்கள் பலரும் ஏடுகளிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த விவாதத்தில் நான் தெரிவிக்க விரும்பும் பதில் இது. தமிழ்நாட்டிலே மூன்று ஆண்டுகள் தொடர்ந்த வறட்சி நிலை.

சுனாமிப் பேரலை அழிவு மற்றும் மழை வெள்ளப்பெருக்கு என இயற்கையின் கோரப்பிடியில் தமிழக விவசாயிகள் சிக்கித் தவிக்கையில், முந்தைய அரசால் கடந்த 5 ஆண்டுகளில், விவசாயிகள் அதனுடைய கோரப் பிடியிலே சிக்கி, அன்றாட உணவுக்குக்கூட தவித்துக்கொண்டு இருந்த கால கட்டத்தில், முந்தைய அரசு கடந்த 5 ஆண்டுகளில் மொத்தமாக, வட்டி தள்ளுபடி மற்றும் கடன் ஒத்திவைப்பு ஆகிய வகைகளில் ரூ.403.65 கோடி மட்டுமே நிவாரண கடமைகளுக்காகச் செலவிட்டுள்ளது. 5 ஆண்டுகளில் செலவிட்டது, செலவிடுவதாக அறிவித்து கூட்டுறவு வங்கிகள் மூலமாக செய்த செலவு ரூ.403 கோடிதான். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுடைய கடன் சுமையை அறவே அகற்றவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ரூ.6,866 கோடி அளவிலான கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்து ஆணையிட்டது இந்த அரசுதான், கலைஞர் அரசுதான்.

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயப் பெருமக்களும் வரவேற்றுள்ள இந்த நடவடிக்கையின் செயலாக்கத்தைப் பற்றிய சில ஐயப்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தனர். கூட்டுறவு அமைப்புகளிடமிருந்து தமிழக விவசாயிகள் பெற்றுள்ள மொத்தக் கூட்டுறவுக் கடன்களின் அளவு ரூ.6,866 கோடி ஆகும். இக்கடன்கள் முழுவதும் இரத்து செய்யப்பட்டு உள்ளதால் (in total) கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய கடன் நிலுவைத் தொகை எதுவும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவு வங்கிகளில் வைப்பீடு (Deposit)செய்துள்ள வைப்பீடுதாரர்களுக்கு வைப்பீடுகள் முதிர்வு அடையும்போது, அந்தக் காலக் கட்டத்தில் உரிய வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இந்த அரசு உரிய நேரத்தில், மேலும் நிதி

உதவி செய்து, அந்த வைப்பீடுகளை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்யும்.

நபார்டு வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள், உரிய காலத்தில் அரசால் திருப்பிச் செலுத்தப்படும். அது அவர்களோடு – நபார்டு வங்கிகளினுடைய நிர்வாகிகளோடு தமிழக அரசினுடைய நிதித் துறைச் செயலாளர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கெனவே தள்ளுபடி செய்த கடனை 4 ஆண்டுகளில் ஒப்படைப்பதாகவும், தொடர்ந்து அவர்கள் கடன்களை வழங்க வேண்டுமென்று கேட்டும் இருக்கிறார். முதற்கண் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1,668 கோடி அளவிலான கடன்களை, அரசே முழுவதும் ஏற்று, இந்த ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையான ரூ.435 கோடியைச் செலுத்தவும் நிதி ஒதுக்கி உள்ளது.

மேலும், நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வேளாண் கடன்கள் வழங்கப்படுவதை சந்தேகப்பட்டார்கள். அந்தக் கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களுக்கான இழப்பீடாகவும், ரூபாய் ஆயிரம் கோடி கூட்டுறவு வங்கி அமைப்புகளுக்கு உதவித் தொகையாக இந்த வரவுச் செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதுவரை சுமார் ரூபாய் 200 கோடி நிதி உதவி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 1,435 கோடி போக, எஞ்சியுள்ள ரூபாய் 5,431 கோடிக்குத் தேவையான ஒதுக்கீடுகளும் வரும் ஆண்டுகளில் வட்டியுடன் செலுத்தப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த நடவடிக்கைகளினால் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து செயல்படுவதும், கூட்டுறவு வங்கிகளின் வைப்பீடுதாரர்கள் நலனும் அங்கு பணிபுரிவோர் நலனும் காக்கப்படுவதுடன், விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேளாண் கடன்கள் வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படும். விவசாயம் தழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த விவசாயத்திலே தொய்வு விழாமல் தொடர்ந்து விவசாயம் நடக்க வேண்டும் என்பதற்கு, தொடர்ந்து கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்கான அரசாணையைத் தொடர்ந்து 75 நாட்களிலே 22,19,000 விவசாயிகளுக்கு ரூ.5,416 கோடி அளவிலான தொகைக்கு கடன் தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இது ஒரு சாதனை ஆகும். இதுவரையில் தமிழகத்திலே இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இவ்வளவு பேருக்கு, இவ்வளவு பெரிய தொகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட அந்தக் கடனுக்கு, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இந்தச் சான்றிதழ்கள் இருக்கின்ற காரணத்தால் மேலும் கடன் வாங்குவதற்கு வேறு வங்கிகளிலே கடன் வாங்குவதாக இருந்தாலும், எனக்குக் கடன் பாக்கி இல்லை. ஆகவே, கடன் கொடுங்கள் என்று கேட்டு வாங்குவதற்கு இந்தச் சான்றிதழ்கள் நிச்சயமாக அவர்களுக்குப் பயன்படும்.




இது ஒரு பெரும் சாதனை. மேலும், நடப்பு சாகுபடி காலத்தில் இதுவரை மாநிலமெங்கும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.195 கோடி அளவிற்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சில நாட்களில் வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.195 கோடி. கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட உயர் அளவுத் தொகை 2005–2006ல் ரூ.1,132 கோடி என்பது அந்தத் தொகையாக இருக்கிறபோது இந்த நடப்பு ஆண்டில் அதைவிட அதிகமாக ரூ.1,235 கோடி அளவு பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை சிறப்பாக மேற்கொண்டு வரும் காவல் துறை மற்றும் மற்ற துறைகளின் நவீனமயமாக்கல் திட்டம் ஆகியவற்றிற்கு இந்த அரசால் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அ.தி.மு.க. வைச் சேர்ந்த சேகர்பாபு குறிப்பிட்டார். காவல் துறைக்கு கலைஞர் அரசு எப்பொழுதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தி.மு.க. ஆட்சி காலத்தில் மட்டுமே காவலர் நலம் பேணும் வண்ணம் போலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. மேலும் இந்த முதல் வரவு செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கான ஒதுக்கீடுகளை இந்த அரசு எந்த அளவிற்கு உயர்த்தியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சி காலத்தின்போது 2005–2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடுகளின்படி காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1,339.33 கோடி ஆகும். இந்த ஒதுக்கீட்டை 22.9 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தி ஏறத்தாழ 23 சதவிகிதம் உயர்த்தி 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,645.6 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதிலேயே இந்த அரசு காவல் துறைக்கு எந்த அளவிற்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்வர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை கடந்த அரசின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1,575.98, ரூ.1,576 கோடியை விட அதிகமே என்பதையும் இந்தத் தருணத்தில் நான் சுட்டிக் காட்ட விழைகின்றேன். மேலும், வேலை நியமனத் தடை காவல் துறைக்குப் பொருந்தாது என ஏற்கெனவே அவர்களாலே அறிவிக்கப்பட்டும் கடந்த ஆட்சி காலத்தில் இருந்து இத்துறையில் காலி இடங்கள் விடப்பட்டு இருப்பதையும் அந்த இடங்களை நிரப்ப இந்த அரசு ஆவன செய்துள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.







அதுமட்டுமன்றி அரசின் பல்வேறு முக்கிய துறைகளுக்கான ஒதுக்கீடுகள் 2005–2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளைவிட எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2005–2006 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.1,652.24 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ரூ.1951.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.1,652 கோடி அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். இப்போது நாம் ரூ.1,951 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். சென்ற ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.2,991 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ரூ.3,583 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. ரூ.2,991 கோடியிலிருந்து சுமார் 600 கோடி அதிகமாக்கி ரூ.3,583 கோடியாக இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.2,416 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இந்தத் துறைக்காக ரூ.3,212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆட்சி போய் இந்த



ஆட்சி வந்த காரணத்தால் ரூ.800 கோடி அதிகம் ஊரக வளர்ச்சித் துறைக்கு. அதேபோல் 2005–2006 ஆம் ஆண்டில் சமூக நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட ரூ.5,58.18 கோடி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு இந்தத் திருத்த வரவு செலவு திட்டத்தில் ரூ.967.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.558 கோடி – ரூ.967 கோடியாக உயர்த்தப்பட்டது.

கடந்த ஆண்டில் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூபாய் 1,490 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2,381 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.1,400 கோடி என்பது 1,500 கோடி என்பது ரூ.2,400 கோடியாக 1½ மடங்குக்கு மேலாக உயர்த்தப் பட்டிருக்கிறது.

2005–2006 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூ.269 கோடி என்ற அந்தத் தொகை இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.484 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தை மிகக் குறைந்த சதவிகிதமே பற்றாக்குறை உள்ள வரவு–செலவுத் திட்டமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் அரசின் நிதிப் பற்றாக்குறை உயர வாய்ப்புள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர் மறுமலர்ச்சி தி.மு.க.வைச் சார்ந்த கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். மக்கள் நலன் கருதி இந்த அரசு அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதன் விளைவாக 2005–2006 ஆம் ஆண்டில் ஏற்பட்டதைவிட இந்த ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை சிறிது உயர்ந்துள்ளது.

ஏழை மக்களின் பசிப் பிணியைப் போக்கிட ரூபாய் இரண்டுக்கு ஒரு கிலோ அரிசி வழங்குதல். ரூபாய் இரண்டுக்கு — ஒரு கிலோ அரிசி; 3½ ரூபாய்க்கு ஏறத்தாழ 15 ஆண்டு காலமாக, 12 ஆண்டுகட்கு மேலமாக வழங்கி வந்த அந்த அரிசி இடைக் காலத்திலே, செல்வி ஜெயலலிதாவினுடைய ஆட்சிக் காலத்திலே 6 ரூபாய் வரையிலே உயர்த்துவதற்கு முயற்சிக்கப்பட்டு பின்னர் எதிர்ப்பால் கைவிடப்பட்ட அந்த அரிசி இந்த ஆண்டு மக்களுடைய நிலை கருதி, குறைந்த விலையில் அரிசி வழங்குவதுதான் ஏழைகளுடைய பசிப் பிணியைப் போக்கும் மருந்து என்று கருதி இரண்டு ரூபாய்க்கு — ஒரு கிலோ அரிசி வழங்குவதால். இதற்காக இந்தப் பற்றாக்குறையை, நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளலாம். இரண்டு ரூபாய்க்கு வழங்குகிற வகையிலே எவ்வளவு இழப்பு என்றால், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ரூ.650,700 கோடி ரூபாய் இதற்காக அதிக செலவு. மொத்தத்திலே அரிசி விலை காரணமாக ரூ.1,900 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசு இழப்பை ஏற்றுக்கொள்கிறது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி, நலிந்தோருக்கான உதவித் தொகைகளை அதிகப்படுத்தி வழங்குதல், மகப்பேறு உதவி என சமுதாயத்தின் அனைத்து தரப்பினரும் பயன் பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நல்ல அரசு என்பது, இன்னும் சொல்லப்போனால் Social Welfare என்பது சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட நிறைவை ஏற்படுத்துகிறதோ, எந்த வகையிலே அந்த அடித்தட்டு மக்களுடைய குறைகளை மெல்ல, மெல்ல போக்குகிறதோ அதுதான் சிறந்த சமுதாய நல அரசு, சமுதாய நல வளர்ச்சியிலே அக்கறை உள்ள அரசு. அந்த அடிப்படையில்தான் இவை எல்லாம் ஏற்று செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



நலிந்த பிரிவினரின் சமூகப் பாதுகாப்புக்காக 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தது ரூ.8,118 கோடி. அது இப்போது 39 சதவிகிதம் உயர்த்தப்பட்டு 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 11,292 கோடியாக உயர்த்தி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு நலத் திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ.3,175 கோடி (additional) – கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களால் வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையைவிட நம்முடைய இந்த அறிக்கையின் மூலமாக சமூக நலத்தின் அடிப்படையில் அதிகப்படுத்தப்பட்ட தொகை மட்டும் ரூ.3,175 கோடி ரூபாய். அப்படி ஒதுக்கப்பட்ட போதிலும் எந்த புதிய வரிகளும் விதிக்கப்படாமலேயே, அனைத்து நிதி ஆதாரங்களையும் திரட்டி வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1,129 கோடி அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை இவ்வளவு செலவுக்குப் பின்னரும் ரூ.1,129 கோடி ரூபாய். நிதிக் கமிஷன் அறிவித்திருக்கிற, தெரிவித்திருக்கிற ஒரு கட்டுப்பாடு, நிதிப் பற்றாக்குறை 3 விழுக்காட்டுக்கு மேல் அமையக்கூடாது என்பது. இப்போது ரூ.1,129 கோடி ரூபாய் என்பது ரூ.1,200 கோடியானால்தான் 3 விழுக்காடு ஆகும். அதைவிடக் குறைவாகத்தான் இன்றையதினம் நமக்கு வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த வருவாய்ப் பற்றாக்குறையும் 12வது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள 2006–2007 ஆம் ஆண்டிற்கான இலக்கைவிட, அவர்கள் குறித்த வரம்பைவிட குறைவானதே என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2008–2009 ஆம் ஆண்டில் எய்தப்பட வேண்டிய இலக்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 3 சதவிகிதத்திற்கு மேற்படாமல் நிதிப் பற்றாக்குறை இருக்கலாம் என்ற வரம்பினை மீறாத நிலையிலேயே, நிதிப் பற்றாக்குறைக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வரவு–செலவுத் திட்டத்தில், திட்டச் செலவுகள் குறைந்துள்ளதாகவும், திட்டப் பணிகள் இல்லாத இனங்களுக்கான செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு.கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்ட மதிப்பீடு, இதுவரை முன் எப்போதும் இல்லாத உயர்ந்த அளவான ரூபாய் 12,500 கோடிக்கு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது; திட்டக் குழுவிடமிருந்து அந்த இசைவைப் பெற்றிருக்கிறோம். இது, 2005–2006 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைவிட 37 சதவிகிதம் அதிகமாகும். மூன்றிலே ஒரு பங்கு அதிகமாகும் என்பதை நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இத்திட்டப் பணிகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகள், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் முழுமையாகச் செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத அனைத்துக் குடுமபங்களுக்கும் -- வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பெரும்பான்மையாக இருப்பார்கள் -- வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. -- மற்ற ஏழைகளுக்கும் -- அவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. இதுகுறித்து ஏற்கெனவே வரவு–செலவுத் திட்ட உரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.



முதற்கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், அங்கே வாழ்கின்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காக ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதன்பின்னர், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் மேற்பார்வையில் திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் — open tender — திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில், அந்த முறையின்மூலம் மேலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கத் தீர்மானித்து, அதற்காக ரூ.750 கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.வரும் நிதியாண்டுகளில், மேலும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோருக்கான நலத் திட்டங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசால், 2001ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. பின்னர் வந்த அரசால், இந்த நல வாரியம் செயற்படாது முடக்கப்பட்டு, நாலரை ஆண்டுகளாக நலத் திட்ட உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், நடக்கவிருந்தத் தேர்தலை முன்னிட்டு, 2005 ஆவது ஆண்டில், அன்றைய முதலமைச்சர், உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்கும் ஒரே நோக்கத்துடன் அப்போது அமைக்கப்பட்ட, விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை இப்பொழுது மீண்டும் சட்டபூர்வமாக இந்த அரசு அமைத்து, அவர்களின் நலனைக் காக்க உறுதிபூண்டிருக்கிறது. தற்போது சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, சட்டமுன்வடிவின் இணைப்பைப் படித்தாலே, கடந்த கால அரசால் அறிவிக்கப்பட்ட சலுகைகளைவிட, அதிக சலுகைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் இந்த வாரியத்தின் மூலம் வழங்கப்பட உள்ளதைப் புரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள், இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, தொலைநோக்குக் கொண்ட ஒரு விரிவான திட்டம் தேவை என்பதை அவர் வலியுறுத்திப் பேசினார். வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உதாரணமாக, 15-6-2006 அன்று, தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள WIPRO




மற்றும் Infosys நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆலோசனை நடத்தியதன் அடிப்படையில், Infosys நிறுவனம், ரூ.1,250 கோடி முதலீட்டில் 50 இலட்சம் சதுர அடிகள் கொண்ட மென்பொருள் நிறுவனத்தினை தமிழகத்தில் தொடங்கி, அதற்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டி 25,000 மென் பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் அந்தத் திட்டத்தைக் குறித்த நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மென்பொருள் தொழிலில் பல்லாயிரக்கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைப் பணிகளில் இலட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பைத் தரவல்லதாக அது விளங்கும்.



தகவல் தொழில்நுட்பத் துறைக்கு முன்னுரிமை அளிக்கும், ஒரு புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கை வகுக்கப்படும். A new policy. ஒரு புதிய தகவல் தொழில் நுட்பத் துறைக்கான கொள்கை வகுக்கப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் இரண்டாவது டைடல் பூங்காவும், முதல் டைடல் பூங்கா நம்முடைய ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டு, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அதைத் துவங்கி வைத்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதைத் தொடர்ந்து, இப்பொழுது இரண்டாவது டைடல் பூங்காவும், கோவையிலும் டைடல் போன்ற ஒரு அமைப்பை உருவாக்குவது குறித்தும், இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளை நிறுவ, தொழில் முனைவோர்களை ஈர்க்கும் வகையில், ஒரு பெரும் விற்பனை வரி விலக்குத் திட்டம், விற்பனை வரியை அந்த வகையிலே விலக்குவது மூலமாக, ஒரு புதிய ஊக்கத்தை ஏற்படுத்துகிற திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல புதிய கணினி தொழிற் சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்படுவதுடன், இந்தப் புதிய தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போதுள்ள அரசின் அணுகுமுறை, தொழில்களை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. தொழில் முதலீட்டை ஈர்க்கவும், தொழில் துறையில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், ஒரு புதிய தொழில்கள் கொள்கை அறிவிக்கப்பட உள்ளது. தொழில் கொள்கை புதியதாக உருவாக்கப்படவுள்ளது.

தமிழகத்தில் தொழில் பெருகுவதற்கு ஏதுவாகுமாறு, சிறப்புத் தொழில் பெரு வழிச்சாலை ஒன்றினை, தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகும் பெரு வழிச்சாலை ஒன்றினை உருவாக்க கருதப்பட்டுள்ளது. Highway. அது புதிய தொழில்கள் அமைவதற்கு ஏதுவான முறையில் அந்த Highway அமைக்கப்படும். இச்சிறப்பு தொழில் பெரு வழிச்சாலை, உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும் என்பதால், பெருமளவில் புதிய தொழிற்சாலைகள் அமையவும், அதன் காரணமாக வேலைவாய்ப்புகள் பெருகவும் நல்ல வாய்ப்பு ஏற்படும்.




தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், இப்பகுதிகளில் நிறுவப்படும் சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கான முதலீட்டு மானியச் சலுகைத் திட்டத்தை, முதலீட்டிலே மானியம் வழங்குவது, அந்த மானியச் சலுகைத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் தொழில் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகளில் புதிய குறுந் தொழில்கள் மூலம், சிறு தொழில்கள் மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு

செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறை மட்டுமின்றி அரசுத் துறைகளிலும், இளைஞர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு உருவாகும் வகையில், இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளாக அரசுப் பணிகளில் நேரடி நியமனம் தடை செய்யப்பட்டிருந்ததை கருத்தில் கொண்டு, அதனால் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள், மறுபடியும் வாய்ப்பு பெறுமாறு அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அந்த வாய்ப்பை பெறுமாறு, அதிகபட்ச வயது வரம்பைத் தளர்த்தி, தற்போதுள்ள




வயதை 5 ஆண்டுகள் வரை நீட்டிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், வேலை நியமனத் தடை ஆணை நீக்கப்பட்டு, பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக இருக்கும் பல்லாயிரக்கணக்கான பணியிடங்களை நிரப்ப, துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த அரசு, தனியார் துறைகளிலும், அரசுத் துறைகளிலும், வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்பாக எடுத்து வருகிறது என்பதை நான் அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடு முழுவதும் மதிப்புக் கூட்டு வரி அறிமுகப் படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் அந்த வரி அறிமுகப் படுத்தப்படாத நிலை இருந்ததால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது என அரசு கூட்டிய கலந்தாய்வுக் கூட்டத்தில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகச் சங்க அமைப்பின் பிரதிநிதிகளால் அவர்கள் சார்பில் முறையிடப்பட்டது. மேலும், இவ்வரி மதிப்புக் கூட்டு வரி அறிமுகப் படுத்தப்படாததால், புதிய தொழில் முனைவோர் தமிழ்நாட்டிற்கு வர விரும்பாமலும் ஏற்கெனவே இருக்கக்கூடிய பெரும் தொழில்கள் புதிய உற்பத்தி அலகுகளை ஏற்படுத்துகிறபோது new production unit ஏற்படுத்துகிறபோது வேறு மாநிலங்களில் அமைக்கக்கூடிய நிலையும் இருந்து வந்தது. இதை கருத்தில் கொண்டு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் தொழில்கள் தமிழ்நாட்டில் அமையப்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கப்பட்டு இந்த மாநிலத்திலே வரும் ஜனவரி முதல் தேதி முதலாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதனால் புதிய தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப் படுவதுடன், மூலப்பொருள்கள் மீதாக செலுத்தப்பட்ட வரியை உற்பத்திப் பொருள்களின்மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சந்தையில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறும் என்பதையும் இதனால் சந்தையில் போட்டியிடுவதற்கு ஏற்ப விலை குறையும் என்பதனை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிறு வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியின்கீழ் பதிவு செய்து கொண்டு கணக்கு வைப்பதிலிருந்து, வரிக் கணக்கு வைப்பதிலிருந்தும் வரி செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும். மதிப்புக்



கூட்டு வரி இங்கே கொண்டு வருகிறபோது பெரிய தொழிலதிபர்கள், வணிகர்கள் மட்டும்தான் பயன்பெறுவார்கள் என்ற கருத்து சிறு வணிகர்களுக்கு இருக்கிற காரணத்தால், அந்தச் சிறு வணிகர்களைக் கண்டறிய ஒரு வரம்பாக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் வரையிலே, அதற்கு மிகாமல் வியாபாரம்—வணிகம் செய்கிறவர்களுள் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருள்களைக் கொடுத்து வாங்குபவர்களுக்கு இந்த மதிப்புக் கூட்டு வரியிலேயிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று அரசு சார்பாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. மேலும், நிதிநிலை அறிக்கையில் சில விற்பனை வரிகள் குறைக்கப் பட்டிருக்கின்றன, நீக்கப் பட்டிருக்கின்றன. அது உள்ளபடியே தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பாக தெரிவிக்க விரும்புகிறேன். முழு விவரமும் தெரிவிக்க ஆரம்பித்தால் ஒரு வேளை நீங்கள் உங்களைப் பட்டினி போட்டதாகக் கருதுவீர்கள். விற்பனை வரியைக் குறைத்து, உணவுப் பண்டங்களின் விலையை குறைக்க வழி செய்துவிட்டு, உங்களைப் பகல் உணவு இல்லாமல் நிறுத்தி வைப்பது முறையல்ல. ஆகவே நான் கூறக்கூடிய முழு விவரம் எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. தெரிந்த உண்மைகளை நான் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய ஒரு அவசியம் இல்லை என்றும் நான் கருதுகிறேன். குறிப்பாக மட்டும் சொல்கிறேன், நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பருப்பு, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் மீதான விற்பனை வரி நீக்கத்தின் விளைவாக இந்தப் பொருட்களின் சந்தை விலை உடனடியாகக் குறையத் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக, உளுந்து, பச்சைப் பயறு, துவரம் பருப்பு, போன்றவற்றின் விலை 4.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரை குறைந்துள்ளது. துவரம் பருப்பு கிலோ ஒன்று ரூ.34 என்று இருந்தது, ரூ.32 ஆகக் குறைந்துள்ளது. உளுந்து கிலோ ஒன்று ரூ.50 என்று இருந்தது, ரூ.48 ஆகக் குறைந்துள்ளது. மேலும், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், வனஸ்பதி போன்றவற்றின் விலைகள் இரண்டு சதவீதம் முதல் நான்கு சதவீதம் வரை குறைந்துள்ளது. கடலை எண்ணெய் லிட்டர் ஒன்று ரூ.53லிருந்து ரூ.52 ஆகக் குறைந்துள்ளது. தேங்காய் எண்ணெய் லிட்டர் ஒன்று ரூ.73 லிருந்து ரூ.70 ஆகக் குறைந்துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. சேகர்பாபு கடந்தகால ஆட்சியில் அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு குறைவான எண்ணிக்கையிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள்




தொடங்க அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். கடந்த ஆட்சியில் புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான ஆண்டு இலக்கு, கடந்த முதல் மூன்று ஆண்டுகளில் 25,000 ஆக மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைபெறவிருந்த தேர்தலை உள்ளத்தில் கொண்டு, மனதில் கொண்டு 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆண்டுக்கு 25,000 வழக்கமாக உருவாக்குவது எங்கே, ஒரே ஆண்டிலே இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்படுவது எப்படி? அதன்படி, ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 608 குழுக்கள் அமைக்கப் பட்டன. அவற்றில் உறுப்பினர் சேர்க்கையின்போது செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்தும் ஏற்கெனவே

இந்த அவையிலே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார். ஒரு அமைப்பிலே இருப்பவர்கள் பலர் இன்னொரு அமைப்பிலும் இடம் பெற்று, பெயர்ப் பட்டியலை மாற்றி, மாற்றி அமைத்து, குழுக்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியிருக்கிறார்கள் என்று விவரமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள்.




ஆகவே, அவர்கள் தெரிவித்ததுபோல, தவறான காரியங்கள் நடைபெற்று, முறை கேடுகள் நடைபெற்று, 1,16,000 குழுக்கள் என்று ஒரு புள்ளிவிவரம் காட்டப் படுகிறது. இந்த அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களை, மகளிர் மேம்பாட்டை உயர்த்துவதற்கான ஒரே நோக்கத்துடன் அமைக்கும் என்பதையும் மகளிருடைய முன்னேற்றத்திற்குப் பயன் படுவதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்படும் என்பதையும், சுய உதவிக் குழுக்கள் செம்மையாகச் செயல்பட அனைத்து அரசு உதவி–களையும் நல்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், சிமெண்ட், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். மணல் விலையைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) பொதுப் பணித் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, புதிய மணல் குவாரிகளைக் கண்டறிவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(2) குவாரிகளில் மூன்று ஷிப்டுகளில் மணல் எடுக்கவும், அதிக இயந்திரங்களை ஈடுபடுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(3) கள்ளத்தனமாக மணல் எடுப்பதைத் தடுப்பதற்காக இரவு நேரங்களில் காவலருடைய ரோந்துப் பணிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

(4) 5–7–2006 அன்று அவசரச் சட்டத்தின் மூலம் கள்ளத்தனமாக மணல் அள்ளுவோரை, அதை விற்றுப் பணம் சம்பாதிப்பவர்களை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்ய உரிய சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கருங்கல் ஜல்லி, செங்கல் ஆகியவற்றின் விலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தொழில் துறை செயலர் அவர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையருடன் முதற்கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் மற்றும் ஜல்லி உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, இவற்றின் விலையை உடனடியாகக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதன்படி 17–7–2006 அன்று முதல் கட்டுக்கல் 20m.m. மற்றும் 40m.m. ஜல்லி ஆகியவற்றின் விலையைக் குறைத்துவிற்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் இவற்றின் விலை குறைந்துள்ளது. இதுபோலவே மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கோவை, சேலம், நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் இவற்றினுடைய விலை குறைக்கப் பட்டிருக்கிறது.



சிமெண்டைப் பொறுத்தவரையில், இந்தப் பொருள் விலைக் கட்டுப்பாடு வரையறைக்கு உட்பட்டது அல்ல என்பதால் மாநில அரசு சிமெண்டின் விற்பனை விலையை நிர்ணயம் செய்வதில்லை. மாநில அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. உற்பத்தி மற்றும் தேவையைப்பொறுத்து, வெளிச் சந்தை நிலவரப்படி சிமெண்டின் விலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது ஏறத்தாழ இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களிலே உள்ள தேவைகள் காரணமாக விலை ஏற்றம், விலை குறைவு, என்று அவ்வப்போது அமைகின்றன. நமது நாட்டின் கட்டுமானத் துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக சிமெண்டிற்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் நாடெங்கிலும் சிமெண்ட் விலை உயர்ந்துள்ளது. உதாரணமாக, சராசரி விலையாக, டெல்லியில் ரூ.205–க்கும், மும்பையில் ரூ. 240–க்கும் பெங்களூரில் ரூ.225–க்கும் திருவனந்தபுரத்தில் ரூ. 220–க்கும் என்ற அந்த அளவில், அந்த விலையில் சிமெண்ட் விற்கப்படுகிறது. சென்னையில் சிமெண்ட் விலை சராசரியாக ரூ. 200 என்ற அளவில் உள்ளது. எனவே, மற்ற நகரங்களை ஒப்பிடும்போது சென்னையில் சிமெண்டின் விலை அதிகமாக இல்லை என்பதை எல்லோரும் ஏற்பார்கள்.

இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்தும், கச்சத் தீவு பகுதியில் அவர்கள் மீன்பிடிக்க வசதியான, மீன்பிடி உரிமைகள் குறித்தும் இவ்வரசு உரிய நடவடிக்கை எடுக்கும். கச்சத் தீவு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்தல், வலைகளைக் காய வைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள இலங்கை அரசிடம் தொடர்பு கொண்டு, கொள்கை முடிவு எடுக்க மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ளும், வலியுறுத்தும். இந்திய மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றால், நம்முடைய இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றால், அவர்களைக் கைது செய்தாலும்கூட, உடனடியாக விடுவித்து, எந்தவிதமான கொடுமைக்கும் ஆளாக்காமல், சுட்டுத் தள்ளுவது போன்ற கொடுமைக்கு ஆளாக்காமல் இருக்க, இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஒப்பந்தம் ஏற்பட வழிவகை செய்ய இந்த அரசு மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தும்.

நலிந்த பிரிவினருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி இங்கு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நலிந்த, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு நிலம் கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான திட்டம் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இடையில், கடந்த ஆட்சியில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்த அந்த நிலையை இப்போது மாற்றி, மீண்டும் செயல்படுத்தத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவற்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்வதற்காக போதிய நிதி ஒதுக்கீடுகள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.




தென்னை மற்றும் பனை மரங்கள் சார்ந்த மரம் ஏறும் தொழிலாளர்கள் சந்தித்து வரும் இன்னல்களைக் குறிப்பிட்டு, கள் இறக்கி விற்க அனுமதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன் அவர்கள் இங்கே கோரிக்கை விடுத்தார்கள். அத்தகைய அனுமதியை வழங்க இயலாது என்றாலும், தென்னை மற்றும் பனைத் தொழிலாளர்கள் நலனைக் காப்பாற்றுவதற்காக பனைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல உதவிகள் அவர்களுக்கு வழங்குவது மேலும் செம்மையாக்கப்பட்டு, இந்தத் தொழிலாளர் நலம் –

அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் காக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை இந்த அவைக்கு நான் அரசு சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் – நான் வேறு பல செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்கலாம், தெரிவிக்கும் ஆர்வத்தோடுதான் வந்தேன். தெரிவிக்கிற வாய்ப்பு குறைந்திருக்கிறது, நேரம் இல்லாத காரணத்தால். எனவே என்னுடைய உரையைச் சுருக்கமாக நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய அத்தனை பேரும் கருத்துக்களோடு பேசினார்கள். ஏறத்தாழ 52 மணி நேரம், பஜனை இல்லாமல், இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக பல்வேறு பிரச்சினைகள் இந்த அவையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.




ஜனநாயகம் தழைக்கும் வழி என்று சொன்னாலே அது கருத்துப் பரிமாற்றம்தான். அந்தக் கருத்துப் பரிமாற்றம் முழு அளவில் நடைபெற வேண்டும் என்பது கலைஞருடைய நீண்ட நாள் விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே வந்த நாங்கள், அதை என்றும் வரவேற்போம். எல்லோரும் பேசுங்கள், எப்போதும் பேசுங்கள், என்றும் உங்களுடைய பேச்சு தடைப்படாமல் தொடரட்டும், நமது எண்ணங்கள் கலந்து பரிமாறப்படட்டும். அதன் விளைவாக நாடு தழைக்கட்டும் என்று எண்ணுகிறவர்கள் நாங்கள். இருந்தாலுங்கூட, அந்த வகையிலே இந்த முறை நம்முடைய சட்டமன்றத்திலே 52 மணி நேரம் விவாதம் நடைபெற்றது என்றால் கடந்த கால நடைமுறையில் அது சாதாரணமானது அல்ல, அது ஒரு பெரிய வெற்றி, பேரவைத் தலைவருடைய வெற்றி என்று நான் அவரைப் பாராட்டிக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்கீழ் தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்னும் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதையும் செய்வோம், சொன்னதற்கு மேலும் செய்வோம் என்பது இன்றைய நிலை. இருந்தாலும் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற இந்த ஆட்சியின் சூளுரையை மெய்ப்பித்துள்ளது என்பதை நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்வதுடன், நடைபெற்ற பொது விவாதத்தில் மாண்புமிகு சட்மன்ற உறுப்பினர்கள் கூறிய பல்வேறு அரிய கருத்துக்கள், வேண்டுகோள்கள் குறித்து இந்த அரசு ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்து அதைச் செயலாற்றும் என்று நான் இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை இம்மாமன்றத்தின் முன் வைக்க எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, பேரவைத் தலைவர் அவர்கள் நான் உரையாற்றுவதற்கு அனுமதித்து நேரத்தை நீட்டித்துத் தருவதற்கு முன்வந்ததற்காக அவருக்கும் நன்றி தெரிவித்து உங்களை எல்லாம் இப்போது நான் விடுதலை செய்கிறேன். வணக்கம்.

* * *



228651

# முதற்கட்டமாக 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தை மேம்படுத்தி வழங்க பணிகள் தொடக்கம்

தமிழக சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
1.8.2006 அன்று சட்டப்பேரவையில்
படித்தளித்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நேற்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு போதிய நேரம் கிடைக்காத காரணத்தால் நான் இங்கே சொல்வதாக இருந்த சில கருத்துக்களை, சில செய்திகளை வேறு வழியின்றி 110ஆவது விதியின் கீழ் இந்த மாமன்றத்தில் வைக்கிறேன்.





நடந்து முடிந்த 2006ஆம் ஆண்டு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவுடன் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் இந்த மூன்று மாதக் காலத்திற்குள்ளாகவே பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்
* பள்ளிக் குழந்தைகள் சத்துணவில் வாரம் இரு முட்டைகள்.
* ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கூட்டுறவு கடன் ரத்து.
* பள்ளிகளில் தமிழ் கட்டாயம்.
* திருமண நிதி உதவித் திட்டம்.
* மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் குறைப்பு.




* வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை.
* நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்.
* கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு வட்டிக் குறைப்பு.
* சுயநிதி சிறப்புத் தொகை கட்டி முன்னுரிமை பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.
* அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குத் தனித்தனி வாரியம்.
* ஒப்பந்தமுறை ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு காலமுறை ஊதியம்.
* அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக ஆணை.
* காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிப்பு.
* திரைப்படத் துறைக்குத் தாராளச் சலுகைகள்.
* சமூக நீதி – இடஒதுக்கீடு தீர்மானம்.
* கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு.
* சிவாஜி சிலை திறப்பு.






* விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவி சட்டம்.
* முதியோர், நலிந்த கலைஞர்கள், ஊனமுற்றோருக்கு உதவித் தொகை உயர்வு.
* எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் நீக்கம்.
* மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம்.
* வணிகர்களுக்கு வரிச் சலுகைகள்.
* அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி நீக்கம்.
* அரசு அலுவலர்களுக்கு அளப்பரிய சாதனைகள்.



தேர்தல் வாக்குறுதிகள் ஒரே கட்டமாக நிறைவேற்றப்படுவதும் – பல கட்டங்களில் நிறைவேற்றப்படுவதும்தான் நடைமுறை சாத்தியமானதாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனுபவரீதியாக அறிவார்கள்– அவற்றில் ஒன்றான வண்ணத் தொலைக்காட்சியில்லாத வீடுகளுக்கு அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட ஒரு அனைத்துக் கட்சிக் குழுவையே அமைத்து ஆலோசனைகளைப் பெற்று முதல் கட்டமாக வரும் செப்டம்பர் மாதம் 30 ஆயிரம் வீடுகளுக்கு அத்தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தருவதென்றும் – அடுத்த கட்டமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை தொடர்ந்து வழங்குவதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




மற்றொரு வாக்குறுதியான தரிசு நில வாக்குறுதி பற்றி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான ‘‘தீக்கதிர்’’ 1.8.2006 அன்று எழுதியுள்ள தலையங்கத்தில்,

‘‘தேர்தல் வாக்குறுதியாக தொடங்கி, பட்ஜெட் அறிவிப்பாக இரண்டு ஏக்கர் தரிசு நிலத் திட்டம் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. நல்ல அம்சம் என்றும், இந்த அறிவிப்பை அமலாக்குவது அவ்வளவு சுலபமல்ல என்பது உண்மை எனினும் இத்திட்டம் நிறைவேற ஆக்கபூர்வமான யோசனைகள் கூறுவதே மாநில மக்கள் நலனில் அக்கறையுள்ளோரின் தலையாய பணியாகும் – என்றும்;

அ.தி.மு.க. அரசு முன்பு சமர்ப்பித்த பட்ஜெட் உரையில் ஐம்பது இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்; இந்தியா முழுவதும் உள்ள விவசாய நிலப் பரப்பில் 3.5 சதவீதமே மேற்கு வங்கத்தில் உள்ளது ஆனால் இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்ட நிலத்தில் 20 சதவீதம் மேற்கு வங்கத்தில் விநியோகிக்கப்பட்டவை என்பது சாதாரணச் செய்தியல்ல – என்றும்; அதிலும் 10.63 இலட்சம் ஹெக்டேர் நிலங்களை 26 இலட்சத்து 46 ஆயிரம் குடும்பங்களுக்கு விநியோகித்துள்ளனர் – என்றும்; தரிசு நில விநியோகத் திட்டம் உரிய முறைப்படி செயல்படுத்தப்பட்டால் அதன் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கவே செய்யும்'' – என்றும்;

கருத்தமைந்த பகுதியைச் சுட்டுக் காட்டுவதோடு, தரிசு நிலம் பற்றிய தேர்தல் அறிக்கை வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு தொடக்கம் செய்து விட்டது. என்பதற்கான புள்ளி விவரத்தையும் இந்த அவைக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த விவரம் வருமாறு :–

தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களை பண்படுத்தி நிலமற்ற ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என்று தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தற்போது தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வட்டாட்சியர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்று, முதற்கட்ட புள்ளி விவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன.

ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்படை செய்யக் கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் 95 ஆயிரம் ஏக்கர்.

சிறு–குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசுநிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

சிறு –குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் ஏழு இலட்சம் ஏக்கர். இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாகும்.

1. ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் தரிசு நிலத்தினை மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

2. சிறு–குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரை பண்படுத்தி, அதனை ஆக்கிரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது.

3. சிறு–குறு விவசாயிகளுக்குச் சொந்தமான ஏழு இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்த வரையில் அவர்களாகவே விரும்பிக் கேட்டுக் கொண்டால் அந்த நிலத்தினை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

எனவே இந்த வகையில் முதற்கட்டமாக தமிழகத்திலே உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தை மேம்படுத்தி இந்த அரசினால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

> **“ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் தரிசு நிலத்தினை மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன”**



# அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த புதிய முறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



தமிழகத்திலுள்ள அனைத்து நகரப் பகுதிகளிலும் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் மற்றும் அந்தப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிப்போம் என்று தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி குறித்த அறிக்கை ஒன்றை, சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் தங்கள் அனுமதியுடன் இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகளில், மனைகளை வாங்கி வீடுகள்



**தமிழ்நாடு சட்டமன்ற விதி 110இன் கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை (25-7-2006)**



கட்டியுள்ள பெருவாரியான பொதுமக்களிடமிருந்தும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும், இம்மனைகளை வரன்முறைப் படுத்துவதற்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. நான் பல்வேறு மாவட்டங்களுக்கு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யச் சென்ற போதும் இக்கோரிக்கை, மக்கள் பிரதிநிதிகளாலும், மக்களாலும் வலியுறுத்தப்பட்டது.

3. தற்போது தமிழகத்தில் உள்ள நகர்ப்புறங்களில் சுமார் 2,600 மனைப்பிரிவுகள் (LAYOUTS) அங்கீகரிக்கப்படாத நிலையில் உள்ளன. இதனால் ஏறக்குறைய சுமார் 90,000 மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன. இதற்கு முன்பு நான்கு முறை அரசால் இந்த அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப் படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அரசாணைகளும் 1999, 2000, 2001 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதற்கான முதல் முயற்சியை 1999ஆம் ஆண்டிலேயே மேற்கொண்டதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட கழக அரசுதான் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

4. கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின்படி, அபிவிருத்திக் கட்டணம், திறந்த வெளிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் என்று மூன்றுவித கட்டணங்களை மனைகளுக்குச் சொந்தக்காரர்கள் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் திறந்தவெளிக் கட்டணம், இன்றைய வழிகாட்டி நில மதிப்பீட்டின் அடிப்படையிலும், அபிவிருத்திக்கட்டணம் இன்றைய கட்டுமான விலை நிலவரப்படியும் செலுத்த வேண்டியிருந்ததால், கூடுதலான தொகையை மக்கள் செலுத்த வேண்டியிருந்தது. எனவே, இந்தத் திட்டங்கள் யாவும் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்கவில்லை. இதுவரை இத்திட்டங்களின் கீழ் 5 விழுக்காடு மனைகள் மட்டுமே வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளன.

5. இதுதவிர அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழ்ந்து வருவோர்க்கு, உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் பொது நிதியிலிருந்து லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்கின்றன. இதனால் உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்கள் அதிகரிக்கின்றன. அங்கீகாரம் பெறப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள மனைகள் விலை குறைவாக கிடைக்கிறது என்பதால் பெரும்பாலும் ஏழை – எளிய மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் இவற்றை வாங்கியுள்ளனர். அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகள் என்பதால் அவற்றிற்கும் கட்டட

*"அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அரசாணைகளும் 1999, 2000, 2001 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதற்கான முதல் முயற்சியை 1999ஆம் ஆண்டிலேயே மேற்கொண்டதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட கழக அரசுதான் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்."*



வரைபட அனுமதி பெற முடியாது; கட்டடம் கட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் கடன் பெற முடியாது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களும் குடிநீர், சாலைகள், தெருவிளக்கு, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளையும் இப்பகுதிகளுக்குச் செய்து தர இயலாத நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

6. விதிகளின்படி அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளுக்கு பரிவு காட்டுதல், இதுபோன்ற தவறுகளை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும் என்ற கருத்து ஒரு புறம் இருப்பினும், இப்பகுதிகளில் வாழ்ந்து வருவோர்க்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான குடிநீர், சாலை, தெருவிளக்கு மற்றும் சாக்கடை வசதிகள் போன்றவற்றை ஒரு பொறுப்புள்ள அரசு வெகுகாலம் செய்து தராமல் இருக்கவும் முடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு வர வேண்டிய வருமானத்தைக் கருத்தில் கொண்டும், ஏழை – எளிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளையும் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு இம்முறை நிரந்தர தீர்வு காண எளிமைப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றிற்கு, 20.7.2006 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி திறந்த வெளிக் கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் ஆகிய மூன்று வகையான கட்டணங்களை வசூலிப்பதற்கு பதிலாக பின்வருமாறு ஒரே ஒரு கட்டணத்தை மட்டுமே வசூலித்துக் கொண்டு 1.1.1980க்குப் பிறகு அங்கீகரிக்கப்படாது உள்ள மனைப் பிரிவுகளை முறைப்படுத்தலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது.

| | |
|---|---|
| அ. மாநகராட்சிப் பகுதிகள் (சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதி நீங்கலாக) | ஒரு சதுர அடிக்கு 5 ரூபாய் |
| ஆ. நகராட்சிப் பகுதிகள் | ஒரு சதுர அடிக்கு 2 ரூபாய் |
| இ. பேரூராட்சி பகுதிகள் | ஒரு சதுர அடிக்கு 1 ரூபாய் |

7. அத்துடன், 1.1.1980க்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் அனைத்தும் ஒரு சதுர அடிக்கு 1 ரூபாய் என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித்த பின்னர் முறைப்படுத்தப்படும். ஏனைய அடிப்படை நிபந்தனைகள் தொடரும்.

8. இத்திட்டம் 31.12.2006 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்பதுடன் இத்திட்டம் மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் களிடமிருந்து வீட்டுமனை வாங்கியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மனைப் பகுதி அபிவிருத்தியாளர்கள் விற்காமல் வைத்திருக்கும் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு இந்தச் சலுகை பொருந்தாது.

9. இந்த புதிய திட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்தி வரன் முறைப்படுத்தப்பட்டவுடன், ஒப்புதல் பெறப்படாத கட்டட வரை படங்களுக்கு விதிகளின் படி ஏற்பளிப்பு வழங்கப்படும். மேலும் குடிநீர் வசதி, சாலைகள், தெரு விளக்கு மற்றும் சாக்கடை வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உடனடியாகச் செய்து தர நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கும்.

10. இனி வரும் காலங்களில் இது போன்ற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாவதை தடுத்திட இது தொடர்பான விதிகளில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளவும், இதுபோன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு ஏழை எளியோரை ஏமாற்ற முயற்சிப்போர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திடவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

11. இதனால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான அரசு எடுத்துள்ள இந்த முடிவின் காரணமாக, தமிழ்நாட்டில் நீண்ட காலமாகத் தீராமல் இருந்து வரும் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்பதையும், இப்பகுதிகளில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெறுவார்கள் என்பதையும், மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. இன்று இதற்கான விரிவான அரசாணை தனியே வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை (சென்னை பெருநகர்ப் பகுதி நீங்கலாக) முறைப்படுத்துதல் மற்றும் அப்பகுதிகளுக்கு குடிநீர், சாலை, தெருவிளக்கு, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 1) துறை

அரசாணை (நிலை) எண். 59 நாள். 25.07.2006.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 3.6.1999
2. அரசு கடித எண். 26331/நநி 1/99–10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 8.1.2000
3. அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 16.6.2000
4. அரசாணை (நிலை) எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 1.2.2001
5. அரசு கடித எண். 33105/நநி 1/ 2001 –3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 20.3.2002
6. அரசாணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 19.1.2006

மீண்டும் படிக்கப்பட்டது:

7. நகராட்சி நிர்வாக ஆணையரது நேர்முகக் கடிதம் எண். 39153/2006/டிபி 3 நாள். 11.7.2006.

ஆணை :–

மேலே படிக்கப்பட்ட பல்வேறு அரசாணைகளின் வாயிலாக தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை (சென்னை பெருநகர்ப் பகுதியைத் தவிர) முறைப்படுத்தவும் அங்கு குடிநீர், சாலை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான சில நிபந்தனைகளை விதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணைகளின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :–

1. அரசாணை (நிலை) எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 3.6.1999.

* குடியிருப்போர் சங்கம் அமைக்க வேண்டும்.
* சங்கம் மூலம் கூட்டாக விண்ணப்பிக்க வேண்டும்.



* 3 ஆண்டுகளுக்குள் 6 தவணைகளில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்த வேண்டும்; அபிவிருத்திக் கட்டணம் இருமடங்காக செலுத்த வேண்டும். முறைப்படுத்த இறுதி நாள். 30.11.1999.
* மனைப்பிரிவு 31.3.99–க்கு முன் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.
* 50 சதவீதம் மனைகள் விற்கப்பட்டிருக்க வேண்டும்.
* மனைப்பிரிவு சாலை குறைந்தது 20 அடி அகலம் இருக்க வேண்டும்.
* நகர் ஊரமைப்பு திட்டப்படி குடியிருப்பு மற்றும் கலப்பு குடியிருப்புப் பகுதியில் அமையும் மனைப்பிரிவுகளை மட்டுமே முறைப்படுத்த வேண்டும்.
* திறந்த வெளிக்கட்டணம் மனைப்பரப்பின் 10% பரப்பிற்கு இணையான மதிப்பிற்கு செலுத்த வேண்டும்.

II. அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 16.6.2000

* மனைப்பிரிவுகளில் உள்ள மொத்த சாலைகளில் 75% சாலைகள் 20’ அகலத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.
* 20 அடிக்கு குறைவாக அகலம் உள்ள சாலைகளில் உள்ள மனைகளின் உரிமையாளர்கள், அந்த சாலையினை 20’ அகலத்திற்கு விரிவாக்கத் தேவையான இடத்தினை அளிக்க முன்வர வேண்டும்.
* திறந்தவெளி கட்டணமாக மனையின் நிலப்பரப்பில் 10% பரப்பிற்குண்டான விலையில் 50 சதவீதம் தொகை செலுத்த வேண்டும். அபிவிருத்திக் கட்டணம் இருமடங்கிலிருந்து 1.5 மடங்காக குறைக்கப்பட்டது.

III. அரசாணை (நிலை) எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 1.2.2001.

* மனைப்பிரிவு 22.9.2000–க்கு முன்னர் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
* அபிவிருத்திக் கட்டணம் ஒரு மடங்காக குறைக்கப்பட்டது.
* முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்த வேண்டும்.

IV. அரசாணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள். 19.1.2006.

* அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவானது ஏற்கெனவே உள்ள பொது சாலை வழியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு சாலையிலிருந்து வழி பெறுவதாக இருத்தல் வேண்டும்.
* கல்குவாரி, கல் உடைக்கும் பகுதிகளைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதியாக அபிவிருத்தி செய்ய தடை செய்யப்பட்ட பகுதி நீங்கலாகவும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கடற்கரைப் பகுதி, விமான நிலையப் பகுதி போன்றவற்றிற்கான கட்டுப்பாட்டு விதிகளுக்குட்பட்டதுமாக வீட்டு மனைகள் இருக்க வேண்டும்.
* அபிவிருத்திக் கட்டணம் ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.
* 22.9.2000க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகளுக்கு மனை பதிவு செய்யப்பட்ட தேதிய வழிகாட்டி மதிப்பீட்டிலும் 22.9.2000 வரை பதிவு செய்யப்படாத மனைகளுக்கு மனை வழங்கப்பட்ட தேதிய வழிகாட்டி மதிப்பீட்டிலும் 50 சதவீதம் தொகை திறவிட கட்டணமாக வசூலிக்க வேண்டும்.

2. பார்வை 7ல் படிக்கப்பட்ட நேர்முகக் கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மேற்கூறப்பட்ட அரசாணைகள் வெளியிடப்பட்ட பின்பும் இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து 5 சதவீதத்திற்கும் குறைவான வரவேற்பே இருந்தது எனவும் பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள திறந்தவெளிக் கட்டணம் (Open Space Reservation Charges) மற்றும் அபிவிருத்திக் கட்டணம் (Development Charges) மிக அதிகமாக உள்ளதாக ஆட்சேபணை தெரிவித்துள்ளதாகவும் இவ்விரண்டு கட்டணத்தையும் ஒரே தவணையில் செலுத்துவதில் சிரமம் இருப்பதால் இதனை எளிமைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள பகுதிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் பொது நிதியிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதால் உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்கள் அதிகரிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

3. தற்போது தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சுமார் 2,600 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் சுமார் 90,000 மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன என்பதால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் பல்வேறு கட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டனர். மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் சிறப்பு சிற்றூராட்சி இயக்குநர் ஆகியோருடன் விவாதிக்கப்பட்டது. மேலும், 20.7.2006 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பொருள் விவாதிக்கப்பட்டது. இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அரசாணைகள் வாயிலாக பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டும் இத்திட்டம் வெற்றி பெறவில்லை என்பதால் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகத்தான் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதை எளிமைப்படுத்தும் வகையில், திறந்த வெளிக் கட்டணம் (Open Space Reservation Charge), அபிவிருத்திக் கட்டணம் (Development Charge), முறைப்படுத்துதல் கட்டணம் (Regularisation fee), ஆகிய மூன்று கட்டணங்களை தனித்தனியே வசூலிப்பதற்கு பதிலாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரே ஒரு தொகையை வசூலித்துக் கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தலாம் என அப்போது முடிவெடுக்கப்பட்டது.

4. அதற்கிணங்க நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் (சென்னை பெருநகர்ப் பகுதி நீங்கலாக) உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாமென அரசு ஆணையிடுகிறது :–

i) குடும்ப பாகப்பிரிவினைக்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக நிலத்தை 8 மனைகள் வரை உட்பிரிவினை செய்வது ஒரு மனைப்பிரிவாகக் கருதப்படமாட்டாது;

ii) இத்திட்டம் மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களிடமிருந்து வீட்டு மனை வாங்கியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்கள் விற்காமல் வைத்திருக்கும் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு இந்த சலுகை பொருந்தாது.;

iii) 1.1.1980–க்கு முன்னர், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளும், ஒரு சதுர அடிக்கு ரூ.1/– என்ற வீதம் கட்டணம் வசூலித்த பின் முறைப்படுத்தப்பட வேண்டும்.

iv) 1.1.1980 – க்குப் பின்னர், ஆனால் இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட நாளுக்கு முன்னர்வரை உருவாக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் அமைந்துள்ள வீட்டு மனைகள் பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும்.

அ) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு, ஒரு பொது சாலையை அல்லது முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவிலுள்ள ஒரு சாலையை ஒட்டியிருக்க வேண்டும். இவ்வாறு அணுகுசாலை இல்லாத மனைப் பிரிவுகளில் உள்ள உரிமையாளர்கள் அதற்கான அணுகுசாலையை அவர்களே சொந்தப் பொறுப்பில் ஏற்படுத்தித் தர வேண்டும்.;



ஆ) அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவில் அமைந்த வீட்டுமனை குறைந்தது 16 அடி (4.8 மீட்டர்) அகலமுள்ள சாலையை ஒட்டியிருக்க வேண்டும்.;

இ) வீட்டு மனைகள், கடற்கரையோர முறைப்படுத்து மண்டலம், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஏனைய விதிமுறைகளுக்கு ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்பதுடன், அபாயகரமான மண்டலங்கள், கல்லுடைக்கும் இடங்கள், கல் வெட்டியெடுக்கும் இடங்கள் முதலியவற்றைச் சுற்றியுள்ள இடங்கள் போன்று, குடியிருப்பு மேம்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கக் கூடாது.;

ஈ) அபிவிருத்திக் கட்டணம், திறவெளிக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துவதற்கான கட்டணம் ஆகியவை தனித்தனியே வசூலிக்கப்படாமல், கீழ்க்கண்ட ஒரே ஒரு தொகையை ஒட்டுமொத்தமாக பெற்றுக் கொண்டு வரன்முறை செய்ய வேண்டும் :–

<u>வரன் முறைப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்</u>

| | | |
|---|---|---|
| i) | மாநகராட்சிப் பகுதிகள் (சென்னை பெருநகரப் பகுதி நீங்கலாக) | ரூ. 5/– ஒரு சதுர அடிக்கு |
| ii) | நகராட்சிப் பகுதிகள் | ரூ. 2 /– ஒரு சதுர அடிக்கு |
| iii) | பேரூராட்சி பகுதிகள் | ரூ. 1 /– ஒரு சதுர அடிக்கு |

v) மனை உரிமையாளர்களிடமிருந்து மேற்கண்ட தொகையினை வசூலித்துக்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் பெறாத வீட்டுமனைப்பிரிவுகளுக்குப் பொதுவான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக குடிநீர் வசதியை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi) இந்தத் திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தப்பட்ட இனங்களில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொருந்தக்கூடிய வைப்பீட்டுத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணங்களை வசூலித்த பின்னர் தனிப்பட்ட மனைகளுக்கு குடிநீர் இணைப்பு போன்ற வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செய்து தர வேண்டும்.;

vii) இத்திட்டத்தின்படி வரன்முறைப்படுத்தப்பட்ட இனங்களில் இதுவரை ஒப்புதல் பெறாத கட்டட வரைபடங்களுக்கு விதிகளின் படி ஏற்பளிப்பு வழங்கப்பட வேண்டும்.;

viii) இதற்கு முந்தைய ஆணைகளின்படி தொகை செலுத்தி வரன்முறை செய்யப்பட்ட மனைப் பிரிவுகள் / வீட்டு மனைகளுக்கு இத்திட்டம் பொருந்தாது.

ix) இத்திட்டம் 31.12.2006 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

5. இவ்வரசாணையை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் உடனடியாக செயல்படுத்த வேண்டும். மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும். இத்திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த தக்க வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பி, இருவார முன்னேற்ற அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

6. மேலும், எதிர்காலங்களில் இது போன்று அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து அதைக் கண்காணிக்குமாறும், சம்பந்தப்பட்ட விதிகளில் தேவையான திருத்தங்களைச் செய்ய கருத்துருக்களை அரசுக்கு விரைவில் அனுப்புமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர்.



# ஆட்சி கடந்திருக்கும் நாட்கள் நூறு
# மக்களின் மதிப்பீடு நூற்றுக்கு நூறு

# ஒரு வரலாற்றின் இனிய உதயம்

**மக்களின் துயர் துடைக்க**
**எடுத்த சபதம் முடித்து**
**தமிழக முதலமைச்சர்**
**கலைஞர் அரசு**
**நிகழ்த்தியுள்ள வான் சாதனை**



## முதல் நூறு நாட்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்

* 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம்
* விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி
* மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டு முறை முட்டை
* 1 முதல் 10 வகுப்பு வரை தமிழ் கட்டாயக் கல்விப் பாடம்
* திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் அமலாக்கம் . ரூ.15,000 ஆக உயர்வு
* கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 6,000 உதவி
* 17,185 ஆசிரியர்கள், 1,759 கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் விரிவுரையாளர்கள் புதிதாக நியமனம்
* ஒப்பந்த முறை ஆசிரியர்கள் நியமனம் அடியோடு ரத்து
* ரூ.574 கோடி செலவில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட ஆணை
* 13,000 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை
* நெசவாளர்களுக்கும், சுயநிதி மூலம் மின்சாரம் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்
* அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கட்டணம் குறைப்பு
* அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் தனித் தனி வாரியங்கள்
* விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு – நல உதவித் திட்டம்.
* வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வண்ணம் புதிய தொழிற்சாலைகள்
* ரூ.135 கோடியில் மோட்டரோலா, ரூ.520 கோடியில் அப்பல்லோ ரேடியல் டயர்ஸ், ரூ.300 கோடி மதிப்பீட்டில் கபோரா இந்தியா மற்றும் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் டெசால்வ் செமிகண்டக்டர் தொழிற்சாலைகள் தொடங்க ஒப்பந்தங்கள்
* முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகை இரட்டிப்பாக உயர்வு
* திரைத்துறைக்குச் சலுகைகள்
* வரியில்லாத நிதிநிலை அறிக்கை
* கட்டாய மதமாற்றத் தடை சட்டம் ரத்து
* சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கு
* அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி நீக்கம்

### மிக விரைவில் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் :

* இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
* நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம்
* இளைஞர் சுயஉதவிக் குழுக்கள், தொழில்நுட்பப் பூங்காக்கள்
* வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவித் திட்டம்
* இலவச எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்புக்கு வைப்புத் தொகை



# ஒரு இலட்சம் மகளிருக்கு புதிய சுயஉதவிக் குழுக்கள் மூலம் கடனுதவி

தமிழக சட்டமன்றத்தில்
கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கை
மீதான விவாதத்திற்கு பதிலளித்து
ஆற்றிய உரையின் போது மாண்புமிகு
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **கோ.சி.மணி** அவர்கள்
அறிவித்த அறிவிப்புகள் (2.08.06)



1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அறிவித்ததற்கேற்பவும் மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் தேவையினை யொட்டியும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள 125 உதவி மேலாளர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

2. அதே போன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களில் முதல் கட்டமாக 250 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இதில் 75 உதவியாளர் பணியிடங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணைப்புச் சங்கங்களான பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் பணியாற்றும் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் காலியாக உள்ள 2,200 விற்பனையாளர்கள் மற்றும் 300 கட்டுநர்கள் ஆக மொத்தம் 2,500 பணியிடங்கள் நிரப்பப்படும்.

4. கூட்டுறவுச் சங்கங்களில் பணியில் இருக்கும் போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

5. தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மூலமாக பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் தனி நபர்களும் பயிற்சி பெறும் வகையில் 2006–07ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3,000 நபர்களுக்கு நகை மதிப்பீடும் மற்றும் அதன் நுட்பங்களும் குறித்தான பயிற்சி வழங்கப்படும்.

6. கடந்த ஆட்சியில் 199 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை கலைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை ரத்து செய்து இந்த



தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டி வாழ்திறனுள்ள சங்கங்களாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. ஏற்கெனவே கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாயக் கடன் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் புதிய சங்கங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பால் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் தள்ளுபடி சலுகை பெற்ற விவசாயிகளுக்கு அவர்கள் வங்கிகளில் அடமானம் வைத்துள்ள சொத்துப் பத்திரங்கள் திருப்பி வழங்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப, 31.8.2006க்குள் அனைத்து பத்திரங்களும் திருப்பி வழங்கப்படும். மேற்சொன்னவாறு கடன் தள்ளுபடி சான்றிதழ் பெற்ற, கடன்தாரர்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகி, சொத்தின் மீதுள்ள அடமானத்தை ரத்துசெய்து சொத்தின் மீதான வில்லங்கத்தை விலக்கிக் கொள்ளலாம்.

9. சிறுவணிகக் கடன் திட்டத்தின் கீழ் தற்போது மகளிர் வணிகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இனி, இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் சிறுவணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டு வாராந்திரக் கடனாக ரூ.2,000 வழங்கப்படும்.

10. விவசாயிகளின் பயிர்க்கடன் மீதான வட்டிச் சுமையைக் குறைக்க நடப்பு குறுவைப் பருவத்திலிருந்து பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த 2 சதவிகித வட்டிக்குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புத் தொகையை அரசே ஏற்று அத்தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும்.

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், பண்ணைசாராக் கடன் பெற்றுள்ளவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வண்ணம், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பண்ணை சாராக் கடன் பெற்று தற்போது நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தவணை தவறிய கடன்தாரர்களுக்கு 31.12.2006க்குள் தவணை தவறிய தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட வட்டிக்குறைப்புடன், அபராத வட்டி 3 சதவிகிதம் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

12. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,000 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 500 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

13. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 2,000 மகளிருக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

14. நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண்

உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 1,000 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

15. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அவர்களது கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, நபர் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக 1,000 பெண்களுக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

16. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள சங்கம் ஒன்றுக்கு ரூ.4.30 இலட்சம் வீதம் அதாவது ரூ.2.10 இலட்சம் கடனாகவும், ரூ.2.20 இலட்சம் மானியமாகவும் இரண்டு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

17. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகத்தை சீராக செயல்படுத்த நடப்பாண்டில் பழுதடைந்துள்ள மண்ணெண்ணெய் பேரல்களுக்குப் பதிலாக புதிய பேரல்கள் வாங்குவதற்கு ரூ.35 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

18. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய 2,000 நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு எடை இயந்திரம் வாங்குவதற்கு நடப்பாண்டில் ரூ.1 கோடி மானியமாக வழங்கப்படும். படிப்படியாக அனைத்து நியாய விலைக் கடைகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

19. பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்களில் தனி நபர் கடன் உச்ச வரம்பு தற்போதுள்ள ரூபாய் இரண்டு இலட்சம் அளவிலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்படும்.

20. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை வெளிப்படையாக பொதுமக்கள் தகவல் அறியும் வண்ணம், நடப்பாண்டில் தொடுதிரை தகவல் அறியும் கணினிகள் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் அமைக்கப்படும்.

21. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் ரூ.53 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

22. கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கணினி மயமாக்கப்படுவதோடு கூட்டுறவுத் துறையும் படிப்படியாக கணினி மயமாக்கப்படும்.

23. கூட்டுறவுச் சங்கங்களின் ஆய்வு முறைகளை நெறிப்படுத்தி கடன் வழங்கல் மற்றும் நியாய விலைக் கடைகளின் ஆய்வினை தீவிரப்படுத்தும் வகையில் வாகன வசதி இல்லாமல் இருந்த 2 மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் 19 துணைப் பதிவாளர்களுக்கு முறையே இரண்டு அம்பாஸிடர் சீருந்து மற்றும் 19 ஈப்புகள் எண்பத்தியேழு இலட்சத்தி தொண்ணூற்றி ஐந்து ஆயிரம் ரூபாய் (ரூ.87.95 இலட்சம்) செலவில் வழங்கப்படும்.

24. 1996ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அப்போதைய அரசு 2001ஆம் ஆண்டு மே திங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழுவினை ஒட்டு மொத்தமாக கலைத்து விட்டு, தனி அலுவலர்களை நியமித்தது. கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களை தனி அலுவலர்கள் சேர்க்க வழிவகை செய்ய பிரிவு 89 (A) என்ற ஒரு புதிய பிரிவினை கூட்டுறவுச் சட்டத்தில் சேர்த்து, 2001 ஜூன் திங்களில் ஒரு அவசரச் சட்டத்தினை முந்தைய அரசு பிறப்பித்தது. இப்புதிய சட்டப் பிரிவினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு புதிதாக சேர்க்கப்பட்ட மேற்படி சட்டப்பிரிவு 89 (A) செல்லாது என தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முந்தைய அரசால் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேல் முறையீட்டினைத் திரும்பப் பெற்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினையொட்டி தனி அலுவலர் நியமனத்திற்கு முன்பாக, அதாவது 25.5.2001க்கு முன்னர் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்திட இவ்வரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

25. நடப்பாண்டில் ஒரு இலட்சம் மகளிருக்கு புதிய சுயஉதவிக் குழுக்கள் மூலம் கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படும்.

26. கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கப்படும் வழிமுறைகளை மேலும் எளிதாக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

27. கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் பயிர்க்கடனுக்கான காப்பீட்டுத் திட்டத்தில் மாறுதல் செய்து அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டை நீட்டிக்கும் வகையில் அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

28. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட 14 மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் படிப்படியாக செயல்படுத்தப் படும்.

29. தமிழக அரசு, இந்திய ஆட்சிப்பணி மற்றும் அகில இந்திய பணிகளுக்கான தேர்வுக்கு, ஏற்கெனவே நடத்தி வரும் பயிற்சித் திட்டங்களில் சேர்ந்து படிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

30. கடந்த ஆட்சியிலே நியாயவிலைக் கடைகளின் காலிச் சாக்குகள் விற்பனையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரே விலை என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த முறையை மாற்றிவிட்டு சரக வாரியாக காலிக் கோணி விற்பனைக் குழு அமைத்து திறந்த முறை ஒப்பந்தப் புள்ளி மற்றும் பகிரங்க ஏல முறையில் சாக்குகள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஆணையிட்டது. இப்புதிய முறையின் காரணமாக இன்றைய நிலவரப்படி கணக்கிட்டால் சாக்கு ஒன்றுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை அதிகமாகக் கிடைப்பதால், ஆண்டொன்றுக்கு ரூ.5 கோடி முதல் ரூ.8 கோடி வரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலாக வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

## அறிவியல் அறிவோம்



**தொலைத்தொடர்புப் பணிகளுக்காக செயற்கைத் துணைக்கோள்கள் (Satellite) ஏவப்படுகின்றன. அதற்குப் பதிலாக இயற்கைக்கோளாகிய நிலாவை ஏன் பயன்படுத்தமுடிவதில்லை?**

தொலைத்தொடர்புச் செயற்கைக்கோள்கள் பொதுவாக மூன்று வகையில் செயல்படுகின்றன. பூமியில் அமைந்திருக்கும் தரை நிலையத்திலிருந்து சமிக்ஞைகளைப் பெறுதல், அவற்றைச் செயல்முறைப்படுத்துதல், பின்னர் அச்சமிக்ஞைகளை மற்றொரு செயற்கைக்கோளுக்கோ அல்லது பூமியில் அமைந்துள்ள வேறொரு தரை நிலையத்திற்கோ செலுத்துதல் ஆகியனவே அவை. செயற்கைக்கோளில் அமைந்துள்ள பல நுட்பமான மின்னணு அமைப்புகளால் மேற்சொன்ன மூன்று செயல்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அடுத்து எல்லா தொலைத்தொடர்புச் செயற்கைக் கோள்களும் குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் (Orbit) செலுத்தப்படுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட துணைக்கோள் தரை நிலையத்தோடு எளிதில் தொடர்புகொள்ள முடியும். ஆனால், நிலாவைப் பொறுத்தவரை அத்தகைய வசதி எதுவும் அங்கில்லை. அடுத்து செயற்கைக்கோளுக்கும் தரைநிலையத்திற்கும் இடையே சமிக்ஞைப் பரிமாற்றத்திற்கு கால் வினாடிக்கும் குறைவான நேரமே ஆகும். ஆனால், நிலா மிக அதிக தொலைவில் இருப்பதால் தேவைப்படும் நேரம் அதிகமாவதுடன், பெறப்படும் சமிக்ஞைகள் தளர்ந்து போயும் மெலிந்தும் எத்தகைய ஆற்றலுமின்றி இருக்கும். எனவே, நிலவுக்கோளைத் தொலைத்தொடர்புப் பணிகட்குப் பயன்படுத்த இயலுவதில்லை.

# விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டம்



தமிழக சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. **வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள் ஆற்றிய உரையில் அறிவித்த புதிய அறிவிப்புகள் (3.8.2006)

## வேளாண் காப்பீட்டுத் திட்டம்

- கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக காப்பீட்டுத் திட்டத்தின் பலனைப் பெற்றிட முடியாமல் இருக்கும் விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் அவர்களுக்கென தனியே காப்பீட்டுத் திட்டமொன்றை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து இலட்சம் விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் இந்த 2006–2007ஆம் நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 50 சதவீதம் காப்பீடு மானியமாக விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் ரூ. 8 கோடி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
- முதல் கட்டமாக 2006–2007ஆம் நிதியாண்டில் 10 வட்டங்களில் புதிய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
- தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களில் இதுவரை 2.76 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 77.24 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கும் மண்வள அட்டையை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக மாநில அரசில் இருந்து இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மண்வள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- வேர்வாடல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரங்களை வெட்டி அகற்றுவதற்காக ஒரு மரத்திற்கு ரூ. 250 வீதம் ரூ.317.21 இலட்சம் செலவில் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் தென்னை வளர்ச்சி வாரிய 100 சதம் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். அவ்வாறு வெட்டி அகற்றப்படும் 1 இலட்சத்து 26ஆயிரத்து 885 மரங்களுக்கு பதில் புதிய கன்றுகளை நட்டால், அவை காய்ப்பதற்கு சுமார் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். இதனை ஈடு செய்யும் பொருட்டு ஒரு தென்னை மரத்துக்கு ரூ. 1050ஐ 2006–2007ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு ஈட்டுதொகையாக வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ.13.33 கோடியை தென்னை வளர்ச்சி வாரியத்திடம் அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பரிந்துரைப்படி 223.53 இலட்சம் தென்னை மரங்களில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த ரூ.53.65 கோடி செலவாகும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு பரிட்சார்த்தமாக சில மாவட்டங்களில் அமல்படுத்த, தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு அனுப்பி குறைந்தபட்ச 50 சதம் நிதி உதவி பெற்று 2006–2007ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, மாநில அளவில் விவசாயக் கடன் உட்பட வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து உடனடி நிவாரண நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு உரிய நியாயவிலை கிடைக்க விலை நிர்ணயம் செய்வதற்கும் விவசாய மேம்பாட்டுக் குழு 2006–2007ஆம் ஆண்டிலேயே அமைக்கப்படும்.



<u>பயோ டீசல்</u>

- தமிழக விவசாயிகளுக்கு 2006–2007ஆம் ஆண்டில் 20 ஆயிரம் எக்டேர் வீதம் 5 வருடத்திற்கு ஒரு இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் காட்டாமணக்கு சாகுபடி செய்யவும், கன்றுகள் மானிய விலையில் வழங்கவும், சொட்டு நீர்ப்பாசன கருவிகள் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளின் விலையை ஒப்பந்த பண்ணைய அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- தென்னிந்திய அளவிலான தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சிக்காக மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம் ஒன்றை சென்னையில் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்க, மைய அரசுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்து பிறமாநிலங்களில் கடைபிடிக்கும் நவீன தொழில் நுட்பங்களில் பயிற்சியும் மற்றும் இஸ்ரேல், சீனா மற்றும் ஐரோப்பா போன்ற வெளிநாடுகளுக்கும் அழைத்துச் சென்று உயர் தொழில்நுட்ப முறைகளான ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, இயற்கைப் பண்ணையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்த்தல், சொட்டு நீர்ப்பாசனம், உணவு பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல், சொட்டு நீர் மூலம் உரமிடுதல் போன்ற பயிற்சிகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள் தாங்கள் அறிந்த தொழில் நுட்பங்களை இதர விவசாயிகளுக்கு தெரிவித்து வேளாண் உற்பத்தியை தமிழகத்தில் பெருக்க, தேசிய தோட்டக்கலை இயக்க நிதியிலிருந்து 2006–2007ஆம் நிதி ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் முன்னோடி விவசாயிகளுக்கான பயிற்சி அளிக்கப்படும்.
- பூக்கள் உற்பத்தியை பெருக்க ஒரு மலரியல் ஆராய்ச்சி நிலையம் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ரூ.342 இலட்சம் செலவில் 2006–07 ஆம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் தென்னைக்கென ஒரு வணிக வளாகம் ரூ.400 இலட்சம் (ரூ. 4 கோடி) செலவில் மாநில மற்றும் மத்திய அரசு தனியார் பங்கேற்பு நிதியுதவியுடன், 2006–07ஆம் நிதியாண்டிலேயே தொடங்க முடிவு செய்து இருக்கிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தக்காளி பயிரிடும் விவசாயிகளின் நலனுக்கென குளிர்பதன கிடங்கு வசதியுடன் கூடிய வணிக வளாகம் மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் மற்றும் தனியார் பங்கேற்புடன் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.
- தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் திராட்சையை தரம் பிரித்து பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யும் வகையில் ரூ. 3.75 கோடி செலவில் குளிர்பதன கிடங்குடன் அமைக்க 2006 – 2007 ஆம் நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயனடைய கடலூரில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் 2006 – 2007 ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்பட உள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.150 இலட்சம் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
- கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கென ரூ.2 கோடி செலவில் ஒரு வணிக வளாகம் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்படும்.
- சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் ரூ. 2 கோடி செலவில் வெங்காயத்திற்கென ஒரு வணிக வளாகம் அமைக்கப்படும்.
- வேளாண் விற்பனைக் கூடங்களில் இயங்கி வரும் இலவச மருத்துவமனையில் பணியாற்றிவரும் பகுதி நேர மருத்துவர்களுக்கு தொகுப்பூதியம் ரூ. 3,500 லிருந்து ரூ. 4,500 ஆகவும் மருத்துவ உதவியாளருக்கு ரூ. 1,250லிருந்து ரூ. 1,750 ஆகவும் உயர்த்தி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
- ஆராய்ச்சியின் மூலம் மிக நீண்ட இழை பருத்தி இரகங்களை உருவாக்க பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் புதியதாக ஆராய்ச்சி நிலையம் 25 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 75 இலட்சம் செலவில் 2006–07 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

- திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் ரூ.75 இலட்சம் நிதி செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் 2006 -2007 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்.
- நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தலின்போது 5 தென் மாவட்டங்களில் வேளாண்மைப் பட்டய படிப்பு தொடங்கப்படும் என அறிவித்தார். 2006-07ஆம் ஆண்டு இரண்டு மாவட்டங்களில் மட்டும் பட்டயப் படிப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் தொடங்கப்படும். இத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
- முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொகுப்பு ஊதியம் பெறும் 133 உதவி ஆசிரியர்களுக்கும் (8000-275-13000) காலமுறை ஊதியம் 1.6.2006 முதல் வழங்கப்படும் .
- தமிழ்நாட்டில், மைய அரசின் ரூ. 57.60 கோடி நிதியுதவியுடன் ஒரு தேசிய உயிரிய தொழில் நுட்பவியல் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ. 45.15 கோடியை மத்திய அரசிடமிருந்து பெற்று, தமிழகத்தில் தேசிய தாவர உயிரியல் நிறுவனம் 2006-07 ஆம் நிதி ஆண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- 1999-2000ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை அறிமுகப்படுத்தும் பாடத்திட்டம் 200 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சியில் செயல்படுத்தப் படாத இத்திட்டம் மீண்டும் விரிவுபடுத்தி அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தப் படும். இத்திட்டம் வரும் கல்வி ஆண்டில் கூடுதலாக 100 பள்ளிகளில் செயல்படுத்தப் படுவதோடு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளில் அனைத்து பள்ளிகளிலும் வேளாண்மையை ஒரு பாடமாக கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள்</u>**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2006-2007ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட உள்ளது. 1. பி. டெக். (உயிர் தகவலியல்) 4 ஆண்டு பட்டப்படிப்பு, 40 மாணவர்கள், 2. முதுநிலைப் பட்டயப் படிப்பு (மூலதனம் மற்றும் வணிக பொருள் சந்தைகள்) 25 மாணவர்கள், 3. முதுநிலைப் பட்டயப் படிப்பு (அங்கக வேளாண்மை ) 25 மாணவர்கள். ஒரு பட்டப்படிப்புக்கும், இரண்டு பட்டயப் படிப்புக்கும் ஆகும் செலவினத்தை சுயநிதிக் கல்வித் திட்டத்தின் மூலம் பெறப்படும் தொகையிலிருந்தே செலவு செய்யப்படும்.

**<u>தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள்</u>**

- புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, சொட்டு நீர்ப்பாசன முறை செயல்படுத்தி நீர்மேலாண்மை, உயிரியியல் ஆய்வு மையம், திசு வளர்ப்பு மையம் மற்றும் புதிய கரும்பு ரகங்கள் சாகுபடி செய்தல் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அவர்களது ஆலைப்பரப்பில் செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையோடு, 2006 – 2007ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்திய கூறுகள் உள்ள பகுதிகளில் புதியதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க அனுமதி வழங்கப்படும்.

**<u>கரும்பு உற்பத்தியில் சொட்டு நீர்ப்பாசனம்</u>**

- கரும்பு உற்பத்தி திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 40 சதவீதம் பாசன நீர் சேமிக்கப்படுகிறது. ஆகையால், விவசாயிகள் பயன்பெறும் வகையில், சொட்டு நீர்ப்பாசனத்தை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும் 2006-07ஆம் ஆண்டில் 15,000 எக்டேர் பரப்பில் ரூ. 84 கோடி திட்ட செலவில் சொட்டு நீர்ப்பாசன வயல்கள் அமைக்கப்பட உள்ளது. ஒரு எக்டேர் சொட்டு நீர்ப்பாசன வயல் அமைக்க ரூ. 56,000 செலவாகும். இச்செலவில் 50 சதவீத மானியமாக ரூ. 28,000க்கு மிகாமல் அரசு ஏற்றுக் கொள்ளும். மேலும், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 8.5 எக்டேரில் மாதிரி வயல்களை ஆலைக்கரும்பு பண்ணைகளில் அமைத்து கரும்பு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.
- விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மீண்டும் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பொதுத்துறை பாண்டியராஜபுரம் மதுரா சர்க்கரை ஆலை தொடங்குவது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும் . ★



# தமிழ்நாட்டில் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்



தமிழக சட்டமன்றத்தில் உயர் கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் **க.பொன்முடி** அவர்கள் ஆற்றிய உரையின் போது அறிவித்த அறிவிப்புகள் **(4.8.2006)**

**நுழைவுத் தேர்வு ரத்து பற்றிய வல்லுநர் குழு**

தொழில் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு ரத்து செய்வது குறித்து ஆலோசனை தெரிவிக்க அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் அனந்தகிருட்டிணன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வு ரத்து பற்றி அரசு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும்.

**தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கான சட்டம்**

தொழில் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை குறித்து விரிவான சட்டம் இந்த ஆண்டே கொண்டுவரப்படும்.

**பொதுப் பல்கலைக்கழகச் சட்டம்**

தமிழ்நாட்டில் 18 பல்கலைக்கழகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் ஒரு சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனால் பல்வேறு நிருவாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்த்திட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான சட்டம் ஒன்று இந்தக் கல்வியாண்டு முடிவதற்குள்ளேயே கொண்டுவரப்படும்.

**அரசுக் கல்லூரிகளில் சுழற்சி முறை**

ஏழை, எளியோர் மிக அதிக அளவில் அரசுக் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஒரு சில கல்லூரிகளில் 50 இடங்களுக்கு 1,000 விண்ணப்பங்கள் வருகின்ற சூழ்நிலை. ஆகையால், அதிக மாணவர்களைச் சேர்க்கின்ற முகத்தான் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், அடுத்த ஆண்டு முதல் சுழற்சி (Shift) முறை அறிமுகப்படுத்தப்படும். இந்த ஆண்டு கீழ்க்கண்ட 10 கல்லூரிகளில் முதற்கட்டமாக சுழற்சிமுறை அமல்படுத்தப்படும்.

1. காயிதேமில்லத் அரசு பெண்கள் கலைக்கல்லூரி, சென்னை.

2. அரசு ஆண்கள் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை.

3. மாநிலக் கல்லூரி, சென்னை.

4. டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை.

5. அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்.

6. ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி.

7. குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்.

8. அரசு ஆண்கள் கலைக்கல்லூரி, கும்பகோணம்.

9. அரசினர் பெண்கள் கலைக்கல்லூரி, கும்பகோணம்.

10. அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு.

**அரசுக் கல்லூரிகளில் சுயநிதி பாடப்பிரிவுகளை பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றல்**

ஏழை மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் சேர்ந்து படிப்பதற்கு வசதியாக, முந்தைய ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, வசதி உள்ளவர்கள் மட்டுமே படித்துவந்த சுயநிதி பாடப்பிரிவுகள் அத்தனையையும் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றி அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பாடப்பிரிவுகளுக்கு கட்டணமும் வெகுவாகக் குறைக்கப்பட்டு மற்ற பொதுப்பாடப்பிரிவுகளுக்கு இணையாக மாற்றப்பட்டுள்ளது.

**தேசிய தர நிர்ணய மதிப்பீட்டுக் குழு**

தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டுக் குழு, கலை அறிவியல் கல்லூரிகளின் கற்பித்தல் முறை, கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்களுடைய தகுதி இவைகளின் அடிப்படையில் கல்லூரிகளுக்கு தர நிர்ணயம் செய்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 670 கல்லூரிகளில் 175 கல்லூரிகளுக்கு தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கல்லூரிகளும் 2 ஆண்டுகளில் தர நிர்ணயம் பெறவேண்டும் என அரசு உத்தரவிடவுள்ளது.

**அரசுக் கல்லூரிகளில் நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

மாநிலம் முழுவதும் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,175 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதில் உடனடியாக 1,020 பணியிடம் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்ய உத்தரவு இடப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அரசு பொறியியல் கல்லூரிகளில் 1.5.2006இல் 180 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. இவற்றில் 66 பணியிடங்கள் இந்த ஆட்சி வந்தவுடன் நிரப்பப்பட்டுவிட்டன. அதேபோல பாலிடெக்னிக் கல்லூரிகளில் 559 பணியிடங்கள் 1.5.2006இல் காலியாக இருந்தன. அதில் 123 பணியிடங்கள், 24.7.06 அன்று நிரப்பப்பட்டு விட்டன. மீதம் உள்ள பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் இன்னும் நான்கு மாதங்களில் நிரப்பப்படும்.

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய கட்டடங்கள்**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய கட்டமைப்புகள் உருவாக்க வேண்டும் என்று இந்த அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இந்த



ஆண்டு ரூ.3.40 கோடியில் 80 கூடுதல் வகுப்பறைகள் கீழ்க்கண்ட 13 கல்லூரிகளில் கட்டப்படும்.

1) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் .................. 10

2) திரு.வி.க அரசு கலைக் கல்லூரி, திருவாரூர் .................. 8

3) ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி .................. 8

4) பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர் ..... 8

5) அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை . 6

6) காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை –2. .................. 6

7) மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை .................. 5

8) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு .................. 5

9) மன்னை ராஜகோபால சுவாமி அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி .................. 5

10) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி .................. 5

11) அரசு ஆடவர் கலைக் கல்லூரி, (தன்னாட்சி) நந்தனம், சென்னை .................. 5

12) அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி .................. 5

13) இரா. வே. அரசினர் கலைக் கல்லூரி, செங்கல்பட்டு .................. 4

**கட்டடங்களைப் புதுப்பித்தல்**

ஒரத்தநாடு கல்வியியல் கல்லூரியின் பொன்விழா ஆண்டினையொட்டி இக்கல்லூரியில் பொன்விழா நினைவுக் கட்டடம் ரூ.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.3.23 கோடியில் புதுப்பிக்கப்படும். சென்னை எழும்பூரில் உள்ள ஆசியாவிலேயே மிகப் பழமையான ஆவணக் காப்பகங்களில் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழமையான ஆவணங்களைப் பாதுகாக்க இந்த ஆண்டு ரூ. 7.71 கோடி செலவிடப்படும்.

**அண்ணா பல்கலைக்கழகம்**

அண்ணா பல்கலைக்கழகம் உலகத் தரம் வாய்ந்த மாணவர்களை உருவாக்கி புகழ் மிக்கதாக விளங்குகிறது. ஆனால், இங்கு உள்கட்டமைப்பு வசதிகள் மிகக் குறைவாக உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு அண்ணா பல்கலைக்கழகத்தை ஒட்டியுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி மையத்திற்கு சொந்தமான 34 ஏக்கர் நிலத்தில் ரூ.100 கோடி செலவில் மாணவர்கள் தங்கும் விடுதிகள், சோதனைக் கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவை உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் உருவாக்கப்படும்.

*ஒரத்தநாடு கல்வியியல் கல்லூரியின் பொன்விழா ஆண்டினையொட்டி இக்கல்லூரியில் பொன்விழா நினைவுக் கட்டடம் ரூ.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.3.23 கோடியில் புதுப்பிக்கப்படும். சென்னை எழும்பூரில் உள்ள ஆசியாவிலேயே மிகப் பழமையான ஆவணக் காப்பகங்களில் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழமையான ஆவணங்களைப் பாதுகாக்க இந்த ஆண்டு ரூ. 7.71 கோடி செலவிடப்படும்.*

### சென்னை திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு புதிய வளாகம்

வளர்ந்து வரும் திறந்தநிலைப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இதனை கருத்தில் கொண்டு சென்னை திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு ரூ.10 கோடியில் புதிய வளாகம் உருவாக்கப்படும். கட்டடப் பணிகள் இந்த ஆண்டே துவக்கப்படும்.

**"உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இப்பல்கலைக்கழகத்திற்கு, கேளம்பாக்கத்தில் 125 ஏக்கர் நிலத்தில் புதிய வளாகம் உருவாக்கப்படும்".**

### உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்குப் புதிய வளாகம்

உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இப்பல்கலைக்கழகத்திற்கு, கேளம்பாக்கத்தில் 125 ஏக்கர் நிலத்தில் புதிய வளாகம் உருவாக்கப்படும்.

### புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எல்லா பொறியியல் கல்லூரிகளையும் ஒரே பல்கலைக் கழகத்தின் மூலம் நிருவாகம் செய்வது மிகுந்த சிக்கலை ஏற்படுத்துகிறது. இதனைக் கருத்தில் கொண்டு,திருச்சியில் அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி என்றும், கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்றும், இரண்டு புதிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்படும்.

### உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்

உயிரி தொழில்நுட்பம் (Bio-Technology), தகவல் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் ஒரு துறை ஆகும். உயிரி தொழில் நுட்பத்துறையில் நம்முடைய மாநிலம் சிறப்பிடம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை தரமணியில் இருக்கிற அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய உயிரி தொழில்நுட்ப மையத்தில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும். மேலும், டைசல் உயிரி தொழில் நுட்பப் பூங்கா, சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் இணைந்து உயிரி தொழில்நுட்பத் தொழில்களுக்குத் தேவையான ஆராய்ச்சியை இந்த மையத்தில் மேற்கொள்ளும். இந்த ஆண்டே இந்த மையம் செயல்படத் தொடங்கும்.

**உயிரி தொழில்நுட்பம் (Bio - Technology), தகவல் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் ஒரு துறை ஆகும். உயிரி தொழில் நுட்பத்துறையில் நம்முடைய மாநிலம் சிறப்பிடம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை தரமணியில் இருக்கிற அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய உயிரி தொழில்நுட்ப மையத்தில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும்.**

### அதிக கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது நடவடிக்கை

நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தை விட அதிகமாக வசூலிக்கும் பொறியியல் கல்லூரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ❖



# நிலவரி தள்ளுபடி

**தமிழக சட்டமன்றத்தில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள் ஆற்றிய உரையின்போது அறிவித்த அறிவிப்புகள் - 8.8.2006**



1) **தலைமைச் செயலகம்**

* வருவாய்த் துறையில் கணினிகள், நிகரி இயந்திரங்கள், ஒளி நகலிகள் முதலிய வசதிகளை உருவாக்க ரூ. 6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) **வட்ட அலுவலகம் கட்டுதல்**

* நடப்பு நிதியாண்டில் திருக்குவளை, காட்பாடி, ஆலங்குளம், திருக்கழுக்குன்றம், ஸ்ரீரங்கம், கீழ்வேலூர் மற்றும் மணச்சநல்லூர் ஆகிய வட்டங்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்படும். காட்டுமன்னார் கோவில் வட்டாட்சியர் அலுவலகம் புனரமைக்கப்படும். இந்தப் பணிகளை முடிப்பதற்கான மொத்த செலவு ரூ. 10.20 கோடி ஆகும்.

3) **வருவாய் அலுவலர்களுக்கு செல்லிடைத் தொலை பேசி (Mobile phone) வழங்குதல்**

* நடப்பு நிதியாண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து 73 வருவாய் கோட்டாட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து 206 வருவாய் வட்டாட்சியர்களுக்கும் முதல் முறையாக மொபைல் போன்கள் வழங்கப்படும். இதற்காக ரூ. 19.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
* வருவாய் நிருவாகத் துறைக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் முதலிய பணிகளுக்காக ரூ. 8.67 இலட்சமும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 7.30 இலட்சமும், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கரூர், திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் EPABX (Electronic Automatic Private Branch Exchange) ஏற்பாட்டு முறையை நிறுவுவதற்காக ரூ. 25.01 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4) **நிலவரி தள்ளுபடி**

* காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய 22 மாவட்டங்களில் 2005-ஆம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பயிர்கள் சேதமடைந்தது. மேற்படி வெள்ளப்பெருக்

பாதிக்கப்பட்ட 4,92,722 ஹெக்டேர் பரப்பிற்கு உண்டான நிலவரித்தொகை ரூ.11,52,40,077 (பதினொன்று கோடியே ஐம்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து எழுபத்தேழு மட்டும்) 1,415 ஆம் பசலி (1.7.2005 முதல் 30.6.2006) ஆண்டுக்கான நிலவரி தள்ளுபடி செய்யப்படும்.

5) <u>மாவட்டம், வட்டங்கள் பிரிப்பு</u>

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பேரவையில் 25.7.2006 அன்று பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு தொடர்ந்து வந்த ஆட்சியால் கைவிடப்பட்ட, அரியலூர் மாவட்டம் மீண்டும் உருவாக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். எனவே, இனி தமிழகத்தின் 31ஆவது மாவட்டமாக அரியலூர் மாவட்டம் ஏற்படுத்தப்படும். இதற்கான தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போலவே திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்தை பிரித்து தண்டராம்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டமும், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டமும் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக எல்லை வரையறை ஆணையத்தை அணுகி மாவட்டம், வட்டங்கள் பிரிப்பது குறித்து அனுமதி பெறப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6) <u>வட்டாட்சியர்களுக்கு (துயர் துடைப்பு பணிகள்) ஈப்புகள் வழங்குதல்</u>

* மக்கள் நலப் பணிகளை மேற்கொள்வதுடன், விவசாயத் தொழிலாளர் விவசாயிகள் சமூக பாதுகாப்பு (ம) நலத்திட்டத்தை நிறைவேற்றும் பணிக்காக தமிழ்நாட்டில் உள்ள 201 துயர் துடைப்பு வட்டாட்சியர்களில், முதற்கட்டமாக 67 வட்டாட்சியர்களுக்கு வாகனம் வழங்கப்படும். மேலும், தமிழக அரசின், ஒரு கிலோ அரிசி ரூ. 2/–க்கு வழங்கும் திட்டத்தை கண்காணிக்கவும், ரேஷன் அரிசி பதுக்கல் / கடத்தல் / கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதை தடுக்கவும் வட்ட வழங்கல் அலுவலர்களும் மேற்படி வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளவும். ஓட்டுநர் உள்ளிட்ட 67 ஈப்புகள் ரூ. 2,83,23,701/–(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எழுநூற்றி ஒன்று மட்டும்) செலவிலும் ரூ. 2,42,200/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து இருநூறு மட்டும்) செலவில் எரிபொருளும் வழங்கப்படும்.

7) <u>நில நிருவாகம்</u>

* நில நிருவாகத் துறையில் கணினிகள், ஏனைய துணைப் பாகங்கள், வாங்குவது உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக ரூ. 7.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8) <u>நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்</u>

* வட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை இடங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதியை உருவாக்குவதற்கு ரூ. 11 இலட்சமும், கணினி வரைபட மையத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 34.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. □





# விவசாயிகள் வசதிக்காக புதிதாக நெல் கொள்முதல் நிலையங்கள்

தமிழக சட்டமன்றத்தில் உணவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தண்டராம்பட்டு **எ.வ.வேலு** அவர்கள் அறிவித்த அறிவிப்புகள் (2.08.2006)

1. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு முழுமையாக சென்றடைவதையும், அவை பொது மக்களுக்கு முறையாக வழங்கப் படுவதையும் கண்காணிப்பதற்கு ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய மின் ஆளுமை குழுமத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தில் தற்போது பயன் பெறுவோரின் பட்டியலில் தகுதியற்ற பயனாளிகள் உள்ளதாக பல புகார்கள் எழுந்துள்ளன. எனவே, இந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்து தகுதியான பயனாளிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறத்தக்க வகையில் ஒரு குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

3. நியாய விலைக் கடைகளை தீவிரமாகக் கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு உள்வட்ட அளவிலும் (பிர்க்கா) வருவாய் ஆய்வாளரை அல்லது கூட்டுறவுத் துறை சார் பதிவாளரை



ஒருங்கிணைப்பாளராக கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் 2 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், 3 பொது நல ஆர்வலர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இடம் பெறுவர். இந்தக் குழு மாவட்டத்திலுள்ள 5 உள் வட்டங்களில் (பிர்க்கா) பரீட்சார்த்தமாக செய்து பின்பு படிப்படியாக அனைத்து வருவாய் உள் வட்டங்களிலும் அமைக்கப்படும்.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை மலைப்பகுதிக்கு, நீலகிரி மாவட்ட மலைப் பகுதிக்கு வழங்கப்படும் அளவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

5. பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதை சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 36 மண்ணெண்ணெய் நிலையங்களும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்படும்.

6. வெளிமாநிலங்களுக்கு அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்துவதைத் தடுப்பதற்கு கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்புப்படை வீதம் 5 சிறப்புப் படைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு சிறப்புப் படையிலும் 1 துணை கண்காணிப்பாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 6 காவலர்களும் இடம் பெறுவர். இச்சிறப்புப்படை மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

7. பொது விநியோகத்தினை சிறப்பாகக் கண்காணிப்பதற்கும், அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தலை கட்டுப் படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர் அனைவருக்கும் நடப்பாண்டில் வாகன வசதி செய்து தரப்படும்.

8. நியாய விலைக் கடைகளை கண்காணிக்கவும், பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் மண்ணெண்ணெய் வெளிச் சந்தைக்கு கடத்தப்படுவதைத் தடுக்கவும், நுகர்பொருள் வழங்கல் துறையின் களப்பணியாளர்களுக்கு செல்லிட தொலைபேசி இணைப்புகள் ரூ.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

9. அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் கடத்துபவர்களைப் பற்றி துல்லியமாகத் தகவல் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். இவர்களின் பெயர் மற்றும் முகவரி இரகசியமாக வைக்கப்படும். உணவு அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலர், சிறப்பு ஆணையர், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு இத் தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டும். சன்மானம் வழங்குவதற்கான இரகசிய நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிருவகிக்கப்படும்.

10. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் எல்லையோர மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றிற்கு ஒரு பிரிவு வீதம் நான்கு பிரிவுகள் கூடுதலாக அமைக்கப்படும்.

11. போலி குடும்ப அட்டைகளை வைத்திருக்கும் ஒரு சில நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவற்றை திருப்பி ஒப்படைக்கவில்லையென்றால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்படுவார்கள். காலக்கெடு முடிந்த பின்னர், அவர்களிடம் போலி அட்டைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதோடு குற்ற நடவடிக்கையும் தொடரப்படும். நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் செய்யும் விற்பனையாளர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

12. நெல் கொள்முதல், நிலையங்களில் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்து விற்பனை செய்ய ஏதுவாக கிடங்கு, களம், அலுவலகம் ஆகிய வசதிகளுடன் 2001–2002ஆம் ஆண்டு வரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால், முந்தைய ஆட்சியில் 2002–2003ஆம் ஆண்டு முதல் இப்பணி



நிறுத்தப்பட்டு விட்டது. விவசாயிகளின் வசதிக்காக இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தவும் நடப்பு நிதியாண்டில் 10 கொள்முதல் நிலையங்கள் கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது.

13. ஆண்டுதோறும் நெல் கொள்முதல் செய்யும்பொழுது கொள்முதல் நிலையங்களில் தவறுகள் நடைபெறுவதாகவும், விவசாயிகள் துன்புறுத்தப்படுவதாகவும் புகார்கள் எழுவதுண்டு. இத்தகைய புகார்கள் இந்தாண்டு எழாத வண்ணம், நெல் கொள்முதல் பணி குறைபாடின்றி நடைபெற ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் சட்டமன்ற அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவை அமைத்து, கொள்முதலில் ஏற்படும் குறைபாடுகளை அவ்வப்போது களைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட ஆட்சியர்கள் நியமிப்பார்கள்.

14. தமிழ்நாட்டில் தற்பொழுது 209 வட்டார செயல்முறை கிடங்குகள் மூலமாக பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது. இதில் 37 கிடங்குகள் தனியாருக்கு சொந்தமான வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கிடங்குகளில் போதிய வசதிகள் இல்லாததாலும், அறிவியல் நுட்பப்படி அமைக்கப்படாததாலும் படிப்படியாக இந்த இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக புதிய கிடங்குகள் அமைக்கப்படும். இந்த ஆண்டு பவானி, பேரையூர், வால்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் வட்டார கிடங்குகள் ரூ.125 இலட்சம் செலவில் கட்டப்படும்.

15. நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் எடை குறைவை தவிர்ப்பதற்கு மின்னணு எடை இயந்திரங்களே இனி முழுமையாகப் பயன்படுத்தப்படும். இதனால் கிடங்குகளில் எடை சீரமைப்பு பணி துரிதப்படுத்தப்படும்.

16. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,149 அமுதம் நியாய விலைக்கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில், 824 கடைகளில் மின்னணு எடை இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அனைத்து கடைகளிலும் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவும் நோக்கத்துடன் மீதமுள்ள 325 கடைகளிலும் ரூ.16.25 இலட்சம் செலவில் நடப்பாண்டில் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவப்படும்.

17. நடப்பாண்டில் தமிழ்நாடு சேமிப்பு நிறுவனம், 6,250 மெ.டன். கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றினை தருமபுரியிலும், 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை பல்லடத்திலும், 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை அவிநாசியிலும் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

18. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு ஏற்படும் எந்தவொரு குறைபாட்டினையும் உணவு அமைச்சருக்கும், அவருடைய அலுவலகத்திற்கும் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் தெரிவிப்பதற்கு, தொடர்பு தொலைபேசி எண்கள் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரப்படுத்தப்படும். குடும்ப அட்டைகள் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள், எடை குறைவு, பொருட்கள் வழங்கப்படாதது, கூடுதல் விலையில் பொருட்களை விற்பது, கடைகளை உரிய நேரத்தில் திறக்காமல் இருப்பது, இதர பொருட்களை வாங்குவதற்கு நிர்பந்திப்பது போன்ற குறைகளைக் குறித்த தகவல்களை இந்தத் தொலைபேசி எண்களுக்குத் தெரிவிக்கலாம். தகவல்கள் பெற்ற 48 மணி நேரத்திற்குள் இக்குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

19. பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டு பகுதி நேர கடைகள் திறக்க இரு நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் என்பதை 1 1/2 கிலோ மீட்டராக குறைத்தும், ஒரு நியாய விலைக் கடைக்கு குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்பதை தளர்த்தி 150 குடும்ப அட்டைகள் என்றும் வழிமுறைகள் மாற்றி அமைக்கப்படும். இதனால், பல குக்கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் அப்பகுதியிலேயே பொது விநியோகத் திட்டத்தில் பொருட்களைப் பெற இயலும். •



# கல்வி வளர்ச்சிக்கு புதிய அறிவிப்புகள்

தமிழக சட்டமன்றத்தில்,
கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து,
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்
(4.8.2006)

**கூடுதலாக புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

2006–07 ஆம் கல்வியாண்டில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க கூடுதலாக 7,979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

மேலும், வேலையில்லா பட்டதாரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிவுடன் ஏற்று, இப்பணியிடங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையில் தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாசிரியர்கள் உரிய புத்தாக்கப் பயிற்சி பெற்று பணியிடங்களில் அமர்த்தப்படுவார்கள்.





மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 - 07 ஆம் கல்வியாண்டில் இந்த 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்துள்ளார்கள்.

**பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

கடந்த சில ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டது.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 – 07ஆம் கல்வியாண்டில் இந்த 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்துள்ளார்கள்.

இப்பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்படும் 7,979 பணியிடங்களில் அடங்கும்.

**500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தல்**

அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணிபுரியும் வட்டார வளமைய ஆசிரியர்களின் கோரிக்கையினை இவ்வரசு ஏற்று, நடப்பு கல்வியாண்டில் 500 வட்டார வளமைய ஆசிரியர்களின் பணிமூப்பு அடிப்படையில் தற்பொழுது அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் மாற்றம் செய்ய ஆணையிட உள்ளது.

**உதவி தொடக்க கல்வி அலுவலர்களின் பணி மாறுதல்**

தொடக்க கல்வித் துறையில் பணிபுரியும் உதவி தொடக்க கல்வி அலுவலர்கள், இதுவரை அவர்கள் கடைசியாக நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்த கல்வி மாவட்டத்தில் பணிபுரிய அனுமதிக்கவில்லை.

இவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் கடைசியாகப் பணிபுரிந்த ஒன்றியத்தை தவிர மற்ற ஒன்றியங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

**மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் நலன்**

தற்பொழுது அரசு மற்றும் நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் / நிருவாகத்தால் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்று பணிபுரிபவர்களில், முழு கல்வித் தகுதி பெற்ற 213 தொழிற்கல்வி ஆசிரியர்கள், அரசால் அனுமதி வழங்கப்பட்டு காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் முன்னுரிமைப்படி நியமனம் செய்யப்பட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கி உள்ளார்கள்.

**கணினி ஆசிரியர்கள் நலன்**

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது தொகுப்பூதியத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் கணினி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவ்வாசிரியர்களின் கோரிக்கையை அரசு ஏற்று, முழு கல்வித் தகுதியோடு பணிபுரியும் கணினி ஆசிரியர்களை போட்டித் தேர்வின் மூலம் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிவுடன் பரிசீலனை செய்ய முடிவெடுத்துள்ளது.

**அனைத்து பள்ளிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளை அமைத்து கொடுத்தல்**

மாநிலத்தில் செயல்படும் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் அடுத்த மூன்று ஆண்டுகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வுக்கூடம், அறிவியல் உபகரணங்கள், மாணவர் இருக்கைவசதி, கழிப்பறை

வசதி, குடிநீர் வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் நபார்டு வங்கி உதவி, அனைவருக்கும் கல்வித் திட்டம், சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றைக் கொண்டு இவ்வரசு செய்து தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப் படுகிறது.

### நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளும் பணி

இதுவரை 5 கட்டங்களில் 1,154 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 413.87 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

நடப்பு கல்வியாண்டில் 6, 7 கட்டங்களில், 429 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 293 கோடி மதிப்பில் இவ்வசதிகள் செய்து தரப்படும்.

### நபார்டு வங்கியின் 8ஆவது கட்டத்திற்கான பணிகள்

இதுவரை நபார்டு வங்கி அனுமதிக்கப்படாத அறிவியல் உபகரணம், மாணவர்களுக்கான பெஞ்சு, டெஸ்க் இருக்கைகள் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற அடிப்படை வசதிகளையும் 8ஆவது கட்டத்திலிருந்து பள்ளிகளுக்கு அளித்திட நபார்டு வங்கி முன்வந்துள்ளதால், 8ஆவது கட்டத்தில் தெரிவு செய்யப்படும் அனைத்து பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது.

முதல் 7 கட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 1,583 பள்ளிகளுக்கும் கூடுதலாக அறிவியல் உபகரணங்கள் மற்றும் மாணவர்களுக்கான இருக்கை வசதிகள் செய்து தரப்படும்.

### அனைவருக்கும் கல்வித் திட்டம்

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில் 1,075 பள்ளி தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் நடைபெற கட்டடங்கள் ரூ. 21. 75 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மேலும், 14, 354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ரூ. 281. 28 கோடி மதிப்பில் நடப்பு கல்வி ஆண்டில் கட்டப்படும்.

### 207 மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் ஏற்படுத்துதல்

12ஆம் வகுப்பு மற்றும் CLIS தகுதிப் பெற்று மாதம் ரூ.1,500 தொகுப்பூதியத்தில் 207 பேர், பகுதிநேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்கள்.

இவர்களின் கோரிக்கையை ஏற்று பணிமூப்பு அடிப்படையில் இவர்களை மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

### புதிய உயர்நிலைப் பள்ளிகள்

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் இவ்வரசு ஏற்கெனவே 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று இக்கல்வி ஆண்டில் கூடுதலாக மேலும் 20 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### புதிய மேல்நிலைப் பள்ளிகள்

2006–2007 ஆம் ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது.

தற்போது பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று நடப்பு கல்வி ஆண்டிலேயே கூடுதலாக மேலும் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



## அறிந்துகொள்வோம் அரசாணையை

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

உயர்கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**உயர்கல்வித் (ஜி1)துறை**

அரசாணை (நிலை)எண்.230 நாள் 20.7.2006

படிக்கப்பட்டவை:

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்.7152/C1/2006/நாள் 12.6.2006

*******************

ஆணை:

அரசுக் கல்லூரிகளில் சுயநிதிஅடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் மிகவும் அதிகமாக இருப்பதால் ஏழை எளிய மாணவர்கள் அக்கட்டணத்தை செலுத்தி பாடப் பிரிவுகளில் படிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும், எனவே, அப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் முறையான பாடப்பிரிவுகளாக மாற்றும்படி அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. இதனடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் கருத்துரு கோரப்பட்டது.

2. 51 அரசு கலைக் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள சுயநிதி பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், அந்தந்த கல்லூரி முதல்வர்களால் ரூ.4,000/– சம்பளத்தில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர் என்றும், இப்பாடப்பிரிவுகளில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் கட்டணம் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்தும் மாறுபடுகிறது என்றும், அரசுக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் அக்கல்லூரி முதல்வரால் தனியாக பராமரிக்கப்படும் கணக்கில் பற்று வைக்கப்பட்டு கௌரவ விரிவுரையாளர்களுக்கான சம்பளம் அதிலிருந்து வழங்கப்படுகின்றன என்றும், சுயநிதி பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் புதிதாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், அரசு கலைக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களின் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப் பிரிவுகளில் இக்கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து சுயநிதி பாடப் பிரிவுகளுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கும் என்றும், எனவே இப்பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால், கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டியிருக்கும் என்றும், மேலும் உடனடியாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், அரசுக்குத் தெரிவித்து இப்பொருள் குறித்து கீழ்க் குறிப்பிட்டுள்ளவற்றிற்கு தெளிவுரை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

i. சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை இக்கல்வி ஆண்டிற்கும் சுயநிதி அடிப்படையிலேயே நடத்தலாமா? அடுத்த கல்வியாண்டு முதல் இப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றலாமா?

ii. இக்கல்வி ஆண்டிலேயே சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திரும்ப வழங்கலாமா?

iii. இப்பாடப் பிரிவுகளுக்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா அல்லது நிரந்தர விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா ?

iv. இப்பாடப்பிரிவுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு எத்தகைய கட்டணங்களை பின்பற்றுவது ?

v. இத்தகைய மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தை அரசுக் கணக்கில் செலுத்துவதா அல்லது இச்செலவினங்களை மேற்கொள்ள தனியாகப் பராமரிக்கப்படும் கணக்கில் செலுத்துவதா ?

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்கண்ட கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

i. அரசுக் கல்லூரிகளில் தற்போது சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் அனைத்து பாடப்பிரிவுகளும் இந்த கல்வி ஆண்டு முதல் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்படுகிறது.

ii. சுயநிதி பாடப்பிரிவு மாணவர்களிடமிருந்து கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் உடனடியாக திருப்பி வழங்க உத்தரவிடப்படுகிறது. இது இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் பொருந்தும்.

iii. தற்பொழுது நடைமுறையில் உள்ள 264 சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுவதால், அந்த வகுப்புகளை கையாளுவதற்குத் தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்களுக்கு கௌரவ விரிவுரையாளர்களை அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்கான மாத ஊதியம் ரூ.4,000/- அரசு நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. மேற்படி செலவினத்திற்காக ரூ.5,06,88,000/- (ரூபாய் ஐந்து கோடியே ஆறு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) வழங்க அரசு ஒப்புதலளித்து ஆணையிடுகிறது. இச்செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி - 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் - 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது - AZ ஆடவர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் - 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் - 02 ஊதியம் (த.தொ.கு.2202 03 103 AZ 3320)

"2202 பொதுக்கல்வி - 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் - 103 அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது - BA மகளிர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் - 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் - 02 ஊதியம் (த.தொ.கு.2202 03 103 BA 3329)

5. இச்செலவினம் **"புதுப்பணித்திட்டமாக"** கருதப்படும். துணை மதிப்பீடுகளில் மேற்காணும் செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ-1) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதித் (வ.செ.தி.பொ-1) துறைக்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.199/SS (KSG) / 06 நாள் 20.7.2006-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.305.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு செயலாளர்



# சென்னையில் தமிழக அரசு நடத்திய குழந்தைகள் திரைப்பட விழா



தமிழக அரசின் செய்தித்துறை சார்பில் குழந்தைகள் திரைப்பட விழா மீண்டும் நடத்தப்பட்டது.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 1.8.2006 முதல் 9.8.2006 வரை குழந்தைகள் திரைப்படவிழா, தமிழக அரசின் செய்தித்துறை சார்பில், குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழகம் மற்றும் யூனிசெப் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் தொடக்க விழா 1.8.2006 அன்று நடந்தது. செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையுரையாற்றினார். குழந்தைகள் திரைப்பட விழாவினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

'குழந்தைகள் அரங்கம்' என்று வழங்கப்பட்டு வந்த இந்த கலைவாணர் அரங்கத்தில், மறுபடியும் குழந்தைகளுக்காக திரைப்பட விழா நடத்தப்படுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மைய அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகின்ற குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து ஏழு நாட்கள் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவது வரவேற்கத்தக்க ஒன்று. குழந்தைகள் இதயத்தில் நல்ல கருத்துக்களையும், நம்பிக்கையையும் சரியான விகிதத்தில் விதைத்துவிடுவோமேயானால் எதிர்காலச் சமுதாயம் காப்பாற்றப்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எது நல்ல திரைப்படம் என்பதை அவர்கள் அறிந்து கொண்டால் நச்சுப் போல்



பொழுதுபோக்குகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள்.

ஒரு நல்ல திரைப்படம் விதையைப் போல் விழுந்து அவர்கள் உள்ளத்தில் வளர்ந்து விருட்சமாக செழித்து, அவர்கள் செயல்களிலும், சிந்தனைகளிலும் நறுமணத்தைப் பரப்பும் ஆற்றல் வாய்ந்தது. தான் சிறுவயதில் பார்த்த நாடகமே, தன் வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடிக்க உந்துதலாய் இருந்தது என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுவது உண்டு. நல்ல பொழுதாக்கமாக திரைப்படம் இருக்க வேண்டுமே தவிர, வீண் பொழுதுபோக்காக இருக்கக் கூடாது.

குழந்தைகள் தங்கள் காதுகளில் விழுகிற கருத்துக்களை இதயத்தில் பதியம் போட்டுக் கொள்ளுகிற பருவத்தில் இருப்பவர்கள். அவர்களுக்கு நல்ல செய்திகளே தரப்பட வேண்டும். அவர்கள் இதயத்தில் மலர்களைப் போல, மௌனமாக அவை தூவப்பட வேண்டும். உழைப்பு, நேர்மை, திறமை ஆகிய ஒப்பற்ற பண்புகளை அவர்களுக்கு ஆழமாக வேர்விட வைத்துவிடுவோமேயானால், ஒரு மாபெரும் சமுதாயக் கடமையை ஆற்றியவர்களாக நாம் அங்கீகரிக்கப்படுவோம். மூளை மட்டும் வலுவாகிற கல்வி ஒரு பகுதியை மட்டுமே நிறைவு செய்யும். மனத்தையும் பண்படுத்தும் கல்வி அதோடு இணையும்போது தான் தேவைப்படுகிற போது பாறையைப் போல் திடமாகவும், அவசியம் ஏற்படுகிறபோது பஞ்சைப் போல் மென்மையாகவும், வாழ்வதற்கு அவர்களுக்கு சாத்தியப்படும்.

என்னதான், சின்னத்திரையில் படங்களைப் பார்த்தாலும் அது பெரிய அரங்கத்தில் பார்க்கிற தாக்கத்தை ஏற்படுத்தாது. சம வயது குழந்தைகளோடு திரைப்படங்களைப் பார்க்கிறபொழுது ஏற்படுகிற குதூகலம் அலாதியானது. அந்த வாய்ப்பைச் செய்தித்துறை ஏற்படுத்தி இருக்கிறது என்பது பாராட்டுக்குரியது. இதற்காக அயராது உழைத்த கல்வித்துறை அதிகாரிகளும் போற்றுதலுக்குரியவர்கள்.

"யுனிசெப்" நிறுவனம் இந்தக் குழந்தைகள் திருவிழாவிற்குப் பெருந்தன்மையுடன் உதவி புரியவும் அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டவும் முன் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தத் திரைப்படங்களைப் பார்த்து மட்டும் சென்றுவிடாமல் அவை குறித்து எழுதப்படுகின்ற கட்டுரைகளுக்கு பதக்கங்கள் தருவதற்கும் "யுனிசெப்" முன்வந்திருக்கிறது. எனவே, மாணவர்கள் திரைப்படங்களை உன்னிப்பாகப் பார்த்து அவற்றிலிருக்கும் சிறந்த காட்சிகளை உருவகப்படுத்தி, அது எவ்வாறு தன்னுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை விரிவாக எழுதி பரிசுகள் பெறுவதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



மாணவர் பருவம் கொண்டாட்டத்திற்குரியது. அதை நீங்கள் உற்சாகமாக ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சி மகரந்தம் பூசி திருவிழாவாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் பூரிப்பு அடைகிறேன்".

விழாவில் குழந்தைகள் திரைப்பட வளர்ச்சி கழக விநியோக அலுவலர் திரு. கே. பி. ராமகிருஷ்ணன், யுனிசெப் நிறுவனத்தின் திரு. தாமஸ் ஜார்ஜ், மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் திரு. தர்மராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். செய்தி மக்கள் தொடர்பு துறையின் துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. கா. சம்சுதீன் நன்றி கூறினார்.

ஆகஸ்டு 1 முதல் 9 வரையில் நடைபெற்ற இந்த விழாவில் மல்லி, வெற்றிப்பாதை, அதிசய கோட், துபாஸி, தன்னம்பிக்கை, பால்யமேதை, ஹலோ ஆகிய 7 திரைப் படங்கள் திரையிடப்பட்டன. ஒவ்வொருநாளும் 3 காட்சிகள் என 21 காட்சிகள் திரையிடப்பட்டன. சென்னை முழுவதிலுமிருந்து 152 பள்ளிகளைச் சேர்ந்த 21,000 குழந்தைகள் இத்திரைப்படங்களைக் கண்டுகளித்தார்கள்.

குழந்தைகள் திரைப்பட விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி 9.8.06, அன்று, முதன்மைக் கல்வி அலுவலர் திரு. தர்மராஜேந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள், குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழக விநியோக அலுவலர் திரு. கே. பி. இராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நிறைவு விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர், "மிகச் சிறப்பாக இந்த குழந்தைகள் திரைப்பட விழா நடைபெற்றிருக்கிறது. படங்களைப் பார்த்த குழந்தைகள் அதிலிருந்து அவர்கள் என்ன உணர்ந்து கொண்டோம் என்பதை கட்டுரையாக எழுதி அனுப்பினால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைக்கு பரிசுகளை "மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்குவார்கள்", எனக் கூறினார். முடிவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

* * *

# விடுகதைகள்

1. தள்ளாடிப் போகும். ஆனால் தடம் மாறிப் போகாது ................ அது என்ன ?
2. பூத்தபோது மஞ்சள். காய்த்தபோது சிவப்பு. பழுத்தபோது கறுப்பு ................ அது என்ன ?
3. வட்ட வட்ட குயில்களாம் வாயில்லாக் குயில்களாம் சுற்றுகின்ற போதிலே சுகமான ராகமாம். ................ அது என்ன ?
4. எண்ணெய் இல்லை திரியும் இல்லை ஏற்றிவைக்க ஆளும் இல்லை, ஆனாலும் வெளிச்சம் தரும் ................ அது என்ன ?
5. வளைந்து நெளிந்து போனாலும் வழியைச் சொல்லும் சரியாக. ......... அது என்ன ?
6. பறந்து திரியும் அதன் படுக்கை மட்டும் தலைகீழ் இருக்கும். ................ அது என்ன ?
7. ஊரில் இருந்து வாங்கிவந்த மாட்டுக்கு உரிக்க உரிக்கத் தோல். ................ அது என்ன ?
8. எட்டி நின்று பார்ப்பான் பெட்டியுள் போட்டுக் கொள்வான் ................ அவன் யார் ?
9. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் ................ அவன் யார் ?
10. உலகமெல்லாம் திரிவான் அவனை ஒருவரும் கண்டதில்லை ................ அவன் யார் ?

விடைகள்

1. ரயில் 2. பேரீச்சம் பழம் 3. இசைத்தட்டு 4. சூரியன் 5. சாலை 6. வௌவால் 7. வெங்காயம் 8. கேமரா (புகைப்படக்கருவி) 9. கடல் 10. காற்று

சென்னை மெரினா கடற்கரை



# சென்னை தினம்



சென்னை எழும்பூர் இரயில் நிலையம் (உள்தோற்றம்)

நமது சென்னை மாநகரத்திற்கு, இந்நாள் வரை பிறந்த நாள் விழா எடுக்கப் பட்டதில்லை. நாம் நம்முடைய சென்னை மாநகரை அவ்வாறு ஒதுக்கி விடுதல் கூடாது அல்லவா ?

சென்னை மாநகரின் 300ஆவது ஆண்டு நிறைவினையொட்டி, சென்னை மாநகரம் குறித்தும் மக்கள் பற்றியும் குறிப்பிடத்தக்க நிறுவனங்களின் விவரங்களையும் உள்ளடக்கிய தொகுப்பு ஒருமுறை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், அதன் பிறகு சென்னை மாநகர் உருவான தினமாகக் கருதப்படும் 1639 ஆகஸ்ட் 22 ஆம் நாள் மறக்கப்பட்டு விட்டது. அன்றைய தினத்தில்தான் தற்பொழுது தலைமைச் செயலகமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கிழக்கிந்திய கம்பெனியிடம் ஒப்படைக்கப் பட்டது. அதற்கான ஒப்பந்தம் பிரான்சிஸ் டே, துபாஷ் பெர்ரி திம்மப்பா மற்றும் ஆன்ட்ரூ கோகன் ஆகியோருக்கும், நாயக்க மன்னர்களுக்கும் இடையே 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாள் ஏற்பட்டது.



சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம்



சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம்



கொத்தவால்சாவடி (காய்கறிச்சந்தை)

அந்தக் கோட்டைக்குப் வெளிப்புறத்தில் குடில்கள் உருவாயின. சுற்றுப்புறங் களிலிருந்த கிராமங்கள் ஒருங்கிணைக்கப் பட்டன. அதனைத் தொடர்ந்து பழைய மற்றும் புதிய நகரங்கள் இணைக்கப்பட்டு, ஒரு மாநகரமாக சென்னை உருவெடுத்தது.

இன்றைய நாளில் சென்னை மாநகரில் கல்வி, மருத்துவம், தகவல் தொடர்பு, வரலாறு, சுற்றுலா, திரைப்படம், மோட்டார் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகள் உயரிய நிலையை எட்டியுள்ளன. இத்தகையச் சூழலில் இந்தியாவில் உள்ள ஒரு சில மாபெரும் நகரங்களில் ஒன்றான சென்னையின் வரலாற்றை நினைவு கூறும் வகையில் சென்னை தினத்தை கொண்டாட முடிவு செய்து, வரலாற்று வல்லுநர் திரு. எஸ். முத்தையா, பத்திரிகையாளர்கள் திரு. சசி நாயர் மற்றும் பி.டி. சௌகா ஆகிய மூவரும் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து சென்னை தினத்தினைக் கொண்டாடி வருகின்றனர். சென்னை மாநகரின் கடந்த கால மற்றும் நிகழ் கால வரலாற்றை கொண்டாட்டங்களின் வாயிலாக மக்கள் மனதில் பதியச் செய்வதே, இந்தச் சென்னை தினக்கொண்டாட்டத்தின் நோக்கமாகும்.

சென்னைக்குள் நடைப் பயணங்கள், புகைப்படக் கண்காட்சி, பள்ளிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டி, இசை மற்றும் வினா – விடை போட்டிகள், உணவு விழாக்கள், ஊர்வலங்கள், மோட்டார் பயணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் வானொலிகள், உணவு விடுதிகள், பள்ளி மற்றும் கல்லூரிகள், குடியிருப்போர் சங்கங்கள், மனமகிழ் மன்றங்கள், சுற்றுலா இயக்குநர்கள் மற்றும் பல்வேறு சங்கங்கள் பங்கேற்கின்றன.

இந்த ஆண்டும் (2006) ஆகஸ்ட் 20ஆம் நாள் தொடங்கி 27ஆம் நாள் வரை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சென்னை தினம் கொண்டாடப் பட்டது. அதனையொட்டி சென்னையின் பழைய தோற்றங்களைக் காட்டும் புகைப்படங்கள் சிலவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம். ✶



பாரதி சாலை (பைகிராப்ட்ஸ் சாலை)

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்
தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்
ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்
றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

– தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்





# தமிழ் மாமலை பரிதிமாற் கலைஞர்

**தோற்றம் : 06.07.1870** **மறைவு : 02.11.1903**

தமிழ் மொழியாம் செம்மொழியைத் தம் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தவர் அவர். நலிவடைந்திருந்த நாடகத் தமிழுக்கு புத்துயிரூட்டிய பெருமகனார் அவர். 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் ஒப்பற்ற நூலைப் படைத்த பெரும்புலவர் அவர். அனைத்திற்கும் மேலாகத் தமிழை முதன் முதலில் செம்மொழி என அறிவித்த அருந்தமிழ்ச் செம்மலார். இத்தனைப் பெருமைகளுக்கும் உரியவர் யார் என்று எண்ணத்தோன்றுகிறதல்லவா ? அவர்தான் சூரிய நாராயண சாஸ்திரியார் என்று அழைக்கப்பட்ட பரிதிமாற் கலைஞர் ஆவார்.

## பிறப்பு

செட்டிநாட்டைச் சேர்ந்த 96 ஊர்களில் கண்டரமாணிக்கம் என்னும் ஊரும் ஒன்று. அவ்வூரில் வாழ்ந்த அந்தணர் ஒருவரின் திருப்பெயர் கோவிந்தராச சாஸ்திரியர் என்பது. அவருடைய குடும்பம் மதுரைக்குத் தெற்கே 4 மைல் தொலைவிலுள்ள விளாச்சேரி என்னும் ஊருக்குக் குடிப் பெயர்ந்தது. அவ்வூரில்தான் 6.7.1870–ஆம் ஆண்டு அன்னைத் தமிழின் கண்ணீரைத் துடைத்தெறிந்த பரிதிமாற் கலைஞர் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சூரிய நாராயணன் என்பது. தமிழின் மேல் இருந்த தணியாத பற்றின் காரணமாகத் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞன் என மாற்றியமைத்துக் கொண்டார். (பரிதி – என்றால் சூரியன்; மால் – என்றால் நாராயணன்; கலைஞர் எனின் சாஸ்திரியார். ஆக சூரிய நாராயண சாஸ்திரியார் என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமே பரிதிமாற் கலைஞர் என்பது.)

## கல்வி

பரிதிமாற் கலைஞர் தமது 15ஆவது வயதிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்றார். இளமை முதலே இவருக்கு இலக்கண, இலக்கியங்களின்







மேல் தணியாத ஈடுபாடு இருந்து வந்தது. தாய் மொழியில் வல்லவராக இருப்பவருக்கு மற்ற மொழிகள் மிக எளிதில் புரிய ஆரம்பித்து விடும். அதுவும் இருந்ததால் தத்துவ நூல்களையும், ஆங்கில நூல்களையும் மிக விரைவில் கற்றுத் தேர்ந்தார்.

1892ஆம் ஆண்டு பி.ஏ. (இளங்கலை) தேர்வில் தமிழ் மொழியிலும், தத்துவத்திலும் மாநிலத்திலேயே முதன்மையாகத் தேறினார். இதனால் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கிப் பாராட்டினார்.

## தமிழ் மொழியின் பால் ஆழ்ந்த ஈடுபாடு

பரிதிமாற் கலைஞர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த வேளையில் அவருக்கு ஆசிரியராக இருந்தவர் வில்லியம் மில்லர் என்னும் ஸ்காட்லாந்துப் பேராசிரியராவர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியவர். மில்லர் இளங்கலை வகுப்பில் ஒரு நாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கையில் ஆங்கிலப் பெருங்கவிஞரான டென்னிசனின் பாடல் ஒன்றை மிகவும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

மில்லர் பாராட்டிக் கொண்டிருந்த டென்னிசனின் வர்ணனை இதுதான். "ஒரு படகானது இரண்டு பக்கங்களிலும் துடுப்புகள் தள்ள நீரில் மிதந்து சென்று கொண்டிருக்கிறது. அது எவ்வாறு தோன்றுகின்றதெனில், ஓர் அன்னப்பறவை தன் இரண்டு சிறகுகளையும் வீசி அழகாகப் பறந்து செல்வதுபோல் உள்ளது. டென்னிசனின் இந்த அழகான வர்ணனை எந்த மொழிப் பாடல்களிலும் இருக்க முடியாது. ஏன்! தொன்மை மொழியாகிய தமிழில் கூடிய இத்தகைய வர்ணனையுடன் கூடிய பாடல் இருக்கிறதா என்பது எனக்கு சந்தேகமே'' என்று முடித்தார்.

பேராசிரியரின் பேச்சைக் கேட்ட மாணவர்கள் பதிலேதும் பேசாமல் அமைதியாய் அமர்ந்து கொண்டிருந்தனர்.

### தமிழ்ப் பணிகள்

பரிதிமாற் கலைஞர் தமிழ் மொழியின் பால் மிகுந்த பாசம் கொண்டவர். முத்தமிழுள் ஒன்றான நாடகத் தமிழுக்கு உயர்வளித்தவர். பரிதிமாற் கலைஞர் எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ரூபாவதி
2. கலாவதி
3. மான விஜயம்
4. தனிப்பாசுரத் தொகை
5. பாவலர் விருந்து
6. மதிவாணன்
7. நாடகவியல்
8. தமிழ் வியாசங்கள்
9. தமிழ்மொழியின் வரலாறு

என்பன. இவற்றுள் 'நாடகவியல்' என்னும் நூலானது நாடக இலக்கணங்களை விரிவாகக் கூறுகிறது.

'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூல் தமிழுக்குக் கிடைத்த அரிய கருவூலமாகும். பரிதிமாற் கலைஞர் இந்நூல்களேயன்றி மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளியான 'செந்தமிழ்' என்னும் இதழில் பல கட்டுரைகளையும் வரைந்துள்ளார்.

வேகமாய்ச் செல்லும் வானவூர்தி போலத் தம் இருக்கையிலிருந்து எழுந்தார் பரிதிமாற் கலைஞர். " பேராசிரியர் அவர்களே, உங்கள் கூற்று தவறு. உங்கள் பெருங்கவிஞனான டென்னிசன் பிறப்பதற்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் தமிழ்ப் புலவர் இதே கற்பனை அமைந்த பாடல் ஒன்றை இயற்றியிருக்கிறார் என்பது தாங்கள் அறியாத செய்தியாகும்'' என்று துணிவுடன் கூறினார்.

"அப்படியா, நீங்கள் சொல்வது உண்மையெனில், அந்தப் புலவரின் பெயரையும், அப்பாடலையும் கூறுங்கள் பார்க்கலாம்'' என்றார் மில்லர் பெருமகனார்.



பரிதிமாற்கலைஞர் நிதானமாக, கவிச் சக்கரவர்த்தி எனத் தமிழ் மக்களால் போற்றிப் பாராட்டப்படும் கம்பர் என்னும் புலவர் தாம் இயற்றிய ஒப்பற்ற காவியமான கம்பராமாயணத்தில் இக்கற்பனை சார்ந்த பாடல் ஒன்று வருகிறது. அப்பாடல் இதுதான்.

"முடுகின நெடு நாவாய் முரிதிரை
நெடுநீர்வாய் கடிதனில்
மட அன்னம் கதியது செல நின்றார் ''

என்று கூறினார். இவ்விளக்கத்தைக் கேட்ட மில்லர் பெருமகனார் பெரிதும் அக மகிழ்ந்தார். மிக்க நன்று என்று பரிதிமாற் கலைஞரைப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியால் பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்று உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்குகின்ற தன்றோ ?

இம்மட்டோ! இந் நிகழ்ச்சிக்குப் பின்பு மில்லர் பெருமகனார் பரிதிமாற் கலைஞர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் அமர்த்தினார்.

***திராவிட சாஸ்திரீ***

*சி.வை.தாமோதரம் பிள்ளையவர்கள் தலைசிறந்த தமிழறிஞர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும்புலவர், எண்ணற்ற தமிழ் நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பித்தவர். அவர் நமது பரிதிமாற் கலைஞரை, "வடமொழி பயில்வதையே தமது குலக் கடமையாகக் கொள்ளும் அந்தணர் வகுப்பில் பிறந்திருந்தும், திராவிட மொழியான தமிழின் மீது பற்றுக் கொண்டு, அதன் பெருமையை உலகுக்கு உணர்த்துவதில் உயரிய குறிக்கோள் கொண்ட உம்மைத் 'திராவிட சாஸ்திரி' என அழைப்பதே பொருத்தமானது!'' என அழைத்து மகிழ்ந்தார்.*

**'தமிழ் மொழியின் வரலாறு' தரும் சில செய்திகள்**

" வடமொழி தமிழ் மொழியாக கலக்கப் புகு முன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. ஏட்டு வழக்கொன்றுமேயுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷையொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன் சொற்களே பின்னதன்கட் சென்று சேருமேயன்றிப் பின்னதன் சொற்கள் முன்னதன்கட் சென்று சேரா. இது பாஷை நூலின் உண்மைகளுளொன்று, இதுவே வழக்காற்று முறை. இம்முறை பற்றியே வடசொற்கள் பல தமிழின் கட் புகுந்தன''

– 'தமிழ் மொழியின் வரலாறு' பக்கம் : 9

சமஸ்கிருத மொழியின் கண்ணே பால் வகுப்புச் சொன்னோக்கத்தாலேற்பட்டுளதேயன்றிப் பொருளோக்கத்தாலேற்பட்டிலது. உதாரணமாகக் கையெனப் பொருள்படும் 'கரம்' என்ற சொல் ஆண்பால்; மனைவியெனப் பொருள் படுஞ் சொற்களிலே, 'தாரம்' என்பது ஆண்பால். 'களத்திரம்' என்பது அலிப்பால், அஃதாவது ஒன்றன்பால் என ஓராற்றானமைக்கலாம். இவ்வாறுளது வடமொழிப்பால் வகுப்பின் சிறப்பு. மற்றுத் தமிழ் மொழியிலோபால் வகுப்பெல்லாம் பொருணோக்கத்தாலேற்பட்டுளவே யன்றிச் சொன்னோக்கத்தாலேற்படவேயில்லை. இது தமிழ் மொழியின் சிறப்புக்களுள் ஒன்று. வட நூன்முறை குறைபாடு உடையது. ஆரிய பாஷைகளோடியையுபட்ட பாஷைகளெல்லாம் சொன்னோக்கப்பால் வகுப்புக் குறைபாடுடையன வாகுமாறு காண்க. தமிழ் மொழியின் வழிமொழிகளெல்லாம் பொருணோக்கப்பால் வகுப்புச் சிறப்புடையன. இவ்வுண்மையொன்றே தமிழ் மொழியின் தனி நிலையை நன்கு விளக்குவதற்குத் தக்க சான்று பகரும்.

அகப்பொருளும் அதன் றுறைகளும், புறப் பொருளும் அதன் றுறை களும் இவ்விருவகைப்







பொருள்களினியை புகளும் வடமொழியினின்றும் என்றென்றும் கிடைத்தலியலாத அரிய தனித்தமிழ் விவிலியங்களாம்.''

–'தமிழ்மொழியின் வரலாறு ' பக்கம் : 9

மேற்கண்ட செய்திகளை நோக்கும்போது பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்று இனிது விளங்குகிறது.

" அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
"இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

என்னும் தாயுமானவரின் கூற்றுக்கு ஒப்பவும், "என்னை இறைவன் நன்றாகப் படைத்தான் தன்னை அழகாய்த் தமிழ் செய்யுமாறே'' என்னும் திருமூலரின் பொன்வரிகளுக்கு ஏற்பவும் பரிதிமாற் கலைஞர் இறுதிவரைத் தமிழைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என நூல்களில் எழுதி வந்தார். அவர் இயற்றிய அரிய நூலான 'தமிழ் வியாசங்கள்' என்னும் நூலைக் கற்போர் இவ்வுண்மையை அறிவர். இங்ஙனம் ஒல்லும் வகையிலெல்லாம் தமிழ்ப் பணியாற்றிய பரிதிமாற் கலைஞர் 2.11.1903 ஆம் ஆண்டு இறைவனோடு இணைந்துவிட்டார். 32 வயது வரை மட்டுமே வாழ்ந்த பரிதிமாற் கலைஞர் நூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் எண்ணற்ற தமிழ்ப்பணிகள் ஆற்றியிருப்பார். இவர் மறைந்தபின் இவருடைய பேராசிரியர் மில்லர் பெருமகனார் கதறியழுத காட்சி நெஞ்சை நெக்குருகச் செய்வதாகும். அக்கதறல் வருமாறு :

"என் புருவம் சுருக்கம் ஏறி, கண்களை மறைக்கும்
முதுமையில் வாடுகின்றேன் நான். ஆனால்
நடு வயது வருவதற்கு
முன்னரே நற்றமிழ்ப் பரிதி அகன்றானே''

என்று கண்ணீர் வடித்தார் அப்பெருமகனார். பரிதிமாற் கலைஞரைத் தொடர்ந்து அவர் வழியில் தமிழுக்குத் தொண்டு புரிவதே அனைத்துத் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

"பரிதிமாற் கலைஞரை நினைத்திடுவோம்
பயிர் போல் தமிழை வளர்த்திடுவோம்''

– "இரு நூற்றாண்டுகளும்
50 தமிழ் அறிஞர்களும்"
என்ற நூலிலிருந்து–

◇◇◇



*பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்படும், மதுரையில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* ***கலைஞர் மு. கருணாநிதி*** *அவர்களுக்கு 25.7.2006 அன்று பரிதிமாற் கலைஞர் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர். உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் உள்ளனர்.*

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், "பெரியார்" திரைப்படத்துக்கு தமிழக அரசின் சார்பில் நிதி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, தலைமைச் செயலகத்தில் அதற்கான காசோலையை அந்த திரைப்பட தயாரிப்பாளரிடம் வழங்கினார். அப்போது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி, மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. தண்டாரம்பட்டு எ.வ.வேலு ஆகியோர் இருந்தனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 30.07.2006 அன்று சென்னையில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் நடைபெற்ற இந்தியத் திரைப்பட உலகின் சாதனையாளர் திரு.ஏவி. மெய்யப்பன் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு ஏவி. மெய்யப்பன் அவர்களின் திருவுருச்சிலையைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உடன் உள்ளார்.






மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் 15.8.2006 அன்று தலைமைச் செயலகத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார்கள். உடன் மாண்புமிகு மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, இந்திய தபால் துறை வாரிய உறுப்பினர் திருமதி. வத்சலா ரகு, தமிழக தலைமைச் செயலர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 28.7.2006 அன்று சென்னையில் புதிதாக வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்திற்கு வாங்கப்படவுள்ள புதிய பேருந்துகளை பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோர் உள்ளனர்.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் இன்னல் மேலாண்மை திட்ட அவசர கால செயல் மையம்

இந்தியாவின் பல பகுதிகளில் பூகம்பம், புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைப் பேரிடர்கள் அவ்வப்போது நிகழ்கின்றன. இத்தகைய நிகழ்வுகளால் பொருள் சேதம் மட்டுமின்றி விலைமதிப்பற்ற ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. பூகம்ப நிகழ்வுகளின் தன்மைக்கேற்ப இந்திய துணைக்கண்டம் குறைந்த அளவு (Zone II) மிதமான அளவு (Zone III) அதிக அளவு (Zone IV) மிக அதிக அளவு (Zone V) என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டம் மிதமான அளவு (Zone III) பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம், பூச் பகுதியில் 2001 –ஆம் ஆண்டு ஜனவரி 26–ஆம் நாள் ஏற்பட்ட பூகம்ப அழிவுகளுக்குபின் மாநிலம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் இயற்கை பேரிடர் அவசர கால செயல்மையங்கள் ஏற்படுத்த மத்திய அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி மாவட்ட தலைநகர் நாகர்கோவிலில், அவசர கால செயல்மையக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவும், கட்டட வடிவமைப்பும் வழங்கப்பட்டு ரூ. 6.11 இலட்சம் மதிப்பீட்டில் 970 சதுர அடி பரப்பளவில் இக்கட்டடம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தினுள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் மிதமான பூகம்பத்தை (Zone III) தாங்கும் தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளது. பூமி






அதிர்வைத் தாங்கும் வகையில் அடித்தளம், தரைத்தளம் மட்டம், கதவு மேல் மட்டம் மற்றும் கூரை இவைகளில் கம்பிகளால் பலப்படுத்தப்பட்ட கான்கீரீட் அமைத்து கட்டப்பட்டுள்ளது. சிறப்பு அம்சமாக மூலைப்பகுதிகள் மற்றும் கதவு, ஜன்னல் ஓரங்கள் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளதோடு சுற்றிலும் கான்கீரீட் அமைத்து பலப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் பூகம்ப அதிர்வின்போது கட்டடம் இடிந்து விடாமல் உறுதியாக நிலைத்து நிற்கும்.

இக்கட்டடத்தில் மாவட்ட நிருவாக மூலம் இயற்கை பேரிடர் அவசர கால செயல்மையம் பேரிடர் கிராமங்களில் தேவையான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் இயங்கி வரும்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.6.11 இலட்சத்தில் பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அவசரகால செயல்மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல்பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து தெரிவித்ததாவது :

“கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டத்தின்கீழ் அவசர கால செயல்மையம் (Emergency Operation Centre) ரூ.6.11 இலட்சத்தில் 970 சதுர அடியில் கட்டப் பட்டுள்ளது. இந்தக் கட்டடம் நிலநடுக்கத்தால் பாதிக்காத வண்ணம் அஸ்திவாரம், சுற்றுச்சுவர் மற்றும் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. எந்தவகையான பேரிடர்கள் ஏற்பட்டாலும் பாதிக்கப்படாதவகையில் இந்தக் கட்டடம் சிறந்த முறையில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு அரசு உதவியுடன் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டுள்ளது. நிலநடுக்கம், மழைவெள்ளம் போன்றவை ஏற்பட்டால் கூட இந்தக் கட்டடத்திலிருந்து அவசரகால பணிகள் மேற்கொள்ளுகின்ற வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக அறை, கூட்ட அரங்கம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. நிலநடுக்கம், மழைவெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும்போது உபயோகப்படுத்தப்படுகின்ற வகையிலான மருத்துவப் பொருட்கள், மரம் மற்றும் கட்டட அறுவை இயந்திரம், கம்பூட், உயிர் காப்பு கவச ஆடை, ஏணி, நைலான் கயிறுகள் போன்ற உபகரணங்கள் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகளின் போது ஒலி எழுப்புகின்ற சைரன் ஆகியவை இந்தக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இயற்கை இடர்ப்பாடுகளில் பாதிக்கப்படாதவகையில் வருங்காலங்களில் கட்டடங்கள் எவ்வாறு கட்டுவது என்பதற்கு இந்தக் கட்டடம் ஒரு மாதிரி கட்டடமாகும்’’ என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஜோதிநிர்மலா, மாவட்ட திட்ட அலுவலர் திரு. மயிலேறும் பெருமாள், பேரிடர் இன்னல் மேலாண்மை மாவட்ட திட்ட அலுவலர் திரு. தங்கமணி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கோபால், உதவி செயற்பொறியாளர் நம்பிராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

செய்தி – மக்கள்தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

* * *

# சாசனம்

சந்தேகம் தோன்றிய பத்திரத்தை எடுத்து வெளிச்சத்தில் சின்ன சத்தத் ... துப் பார்ப ... ாட்களில் மன சில் என ... பா தீவிரமாய் நினை ... ாக வேறு எதை ... வையும் பெட்டி ... கையில் அப்பா முகத்தில் வேர்வையும் அதிருப்தியும் தெரியும்.

## கந்தர்வன்



அப்பா வெளியூருக்குப் போகையில் வண்டிக்குள் யார் பேச்சுக் கொடுத்தாலும், எவ்வளவு முக்கியமாக அது இருந்தாலும் தலையை வெளியே நீட்டி அந்தப் புளிய மரத்தை ஒரு தடவை பார்த்துக் கொள்வார். ஊர்க் கோடியில் குறவர் குடிசைகளுக்கு மத்தியில் பிரம்மாண்டமான மரம் அது. அடியில் பன்றிகள் அடைந்து உரம் கொடுக்க ஊர் பூராவிலும் உள்ள மரங்களில் செழித்துக் கொழித்து நிற்கும் அது. அப்பாவுக்குச் சொந்தமான மரம்.

ஒரு செவ்வக வாக்கில் ஐந்து மைல் விஸ்தீரணத்தில் ஆறு சின்னக் கிராமங்களிலும் இந்தத் தாய்க் கிராமத்திலும் அப்பாவுக்கு நிலங்களுண்டு. அத்தனை நஞ்சை புஞ்சை வீடு மரங்களிலும் அப்பாவுக்கு ரொம்பப் பிடித்தமானது இந்தப் புளியமரம்தான். வெகு தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு குன்று பச்சையாய் நிற்பது போலிருக்கும். அருகில் வந்து அண்ணாந்து பார்த்தால் ஆயிரங்கிளையோடு அடர்ந்து அந்த மரத்திற்குள் ஒரு தோப்பு அசைந்தாடுவது போலிருக்கும்.

எண்ணெய் பூசியது போல வழுவழுவென்றிருக்கும் சிமிண்டுத் திண்ணையில் பகல் பூராவும் அப்பா உட்கார்ந்திருப்பார். நாலு பண்ணையாள்களுக்கும், அஞ்சு கிராமத்து குத்தகைக்காரர்களுக்கும்



உட்கார்ந்த இடத்திலிருந்தே உத்தரவுகள் போகும். எப்போதாவது பர்மாக் குடையை விரித்து நடப்பார்.

ஒரு நாளைக்கு இத்தனை தடவை என்று எண்ணி விடலாம் இறங்கி நடப்பதை.

அப்பா நடந்திருக்க வேண்டிய நடையையெல்லாம் தாத்தா நடந்திருந்தார். சமஸ்தானத்தில் தாத்தா இந்தப் பிரதேசத்தின் பேஷ்கார்.

மஹாராஜா இந்தப் பக்கமாய் ஒருமுறை திக்விஜயம் செய்தபோது தாத்தா ஒவ்வொரு வேளை விருந்தையும் ஒரு உற்சவமாய் நடத்தியிருக்கிறார். மஹாராஜாவின் நாக்கு அதுவரை அறிந்திராத ருசியும் பண்டமும் விருந்துகளில், பரிவாரங்கள் தங்கள் வயிறுகளைத் தாங்கள் தூக்கிச் சுமக்க வேண்டிய நிலை.

மரியாதை காட்டி வெகுவாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்த தாத்தாவை அழைத்து விரலை அவ்வப்போது நீட்டிக் கொண்டே வந்தார் மஹாராஜா. பின்னால் அந்த நிலங்களெல்லாம் தாத்தாவுக்குச் சாசனமாய் வந்தன.

தாத்தா அரண்மனைக்குப் போய் சாசனங்களையும் பட்டயங்களையும் வாங்கி வந்த நாளிலிருந்து எட்டு நாட்களுக்குள் இருபத்தோரு கிராமங்களில் ஆட்களைத் திரட்டினார். தங்களுடையதென்று எண்ணி உழுது கொண்டிருந்த குடியானவர்களை நிலங்களிலிருந்தும் ஊர்களிலிருந்தும் மஹாராஜாவின் சாசனங்களைக் காட்டி விரட்டினார். அடிதடிகளும் நாலு கொலைகளும் நடந்ததாகப் பேச்சுண்டு.



தாத்தா வீட்டிலிருந்து எப்போது புறப்பட்டுப் போனார், எந்த ஊரில் யார் வீட்டிலிருக்கிறார், ராத்திரி எத்தனை மணிக்கு வருவார் என்பதெல்லாம் வீட்டில் யாருக்கும் தெரியாது. உள்ளூரில்தான் தங்கயிருக்கிறார் "ஒரு வீட்டில்'' என்பது போல் நக்கலாக ஒருவர் சொல்ல "அதெல்லாமில்லை. சிறைக்குளமோ, பண்ணந்தையோ, கீரந்தையோ எங்கேயிருக்காகனு யார் கண்டா'' என்று அழுத்தமாய் அடுத்த ஆள் பேசிவிடும்.

சில சமயம் விடியற்காலையில் சிவந்த கண்களோடு வந்து சேர்வாராம். வந்ததும் பரபரவென்று வீட்டு ஆள்கள் ஒரு அண்டா நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்து வாசலில் வைப்பார்கள். குளிரக் குளிரக் குளித்து வேட்டி துண்டை நனைத்துப் போட்டுவிட்டு வீட்டிற்குள் நுழைவாராம்.

தாத்தா கையைப் பிடித்துக் கொண்டு அப்பா நடக்கையிலேயே மஹாராஜா இந்தியப் பிரஜையாகிவிட்டார். சாசனங்களையும் பட்டயங்களையும் அப்பா கையில் ஒப்படைத்துவிட்டுத் தாத்தா கிழக்குக் காட்டில் எரிந்த போது முதல் தேர்தல் முடிந்து ஓட்டுகளை எண்ணிக் கொண்டிருந்த நேரம்.

கிராமங்களில் நீண்டு கிடந்த புஞ்சைகளை அப்பா அந்தந்த கிராமத்துப் பெருங்குடியானவர்களிடம் வாரத்துக்கு விட்டுவிட்டார். செவற்காட்டுப் பனைகளை பாட்டத்துக்கு விட்டார். தை மாசியில் வீட்டு மச்சிலும் குளுமைகளிலும் பட்டக சாலையிலும், நெல்லும் கம்பும் வரகும் கேப்பையும் ஒரு புறமாகவும், மிளகாய், கொத்தமல்லி, நிலக்கடலை, துவரம்பருப்பு, கருப்பட்டி வட்டுகள் என்று மறுபுறமும் குவிந்து கிடக்கும். ஆள்பத்தி அறைக்குள் மட்டும் அப்பா எதையும் வைக்க விடமாட்டார். அப்பாவைத் தவிர யாரும் அந்த அறைக்குள் நுழைய முடியாது.

**"ஒருநாள் சுப்பையா மாமா அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்து பேச்சுவாக்கில் "மண்டபத்து மல்லி, மண்டபத்துப் புளி ரெண்டுக்கும் சமமா ஓலகத்துலெ எங்கேயும் கிடையாது'' என்று சொல்லிவிட்டார். அப்பா இதைக் கேட்டதும் அம்மாவைக் கூப்பிட்டார். " அந்தக் கொறட்டுப் புளியிலே கொஞ்சங் கொண்டாந்து மாப்பிள்ளட்ட குடு'' என்று சொல்லிவிட்டு " இன்னைக்குக் குழம்பு ஓங்க வீட்டிலெ இந்த புளியிலெ, விடிய வந்து சொல்லுங்க மாப்பிள்ளை, மண்டபத்துப் புளி ஒசத்தியா, கொறட்டுப் புளி ஒசத்தியானு.''"**

நாலு ஆள் சேர்ந்தாலும் தூக்க முடியாத மாதிரி ஒரு பெரிய இரும்புப் பெட்டி அறையின் கிழக்கு மூலையில் இருக்கிறது. அப்பா உத்திரத்தையோ தூணையோ நிலைப்பாச்சாகக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் ஆழமான யோசனையிலிருக்கிறாரென்று அர்த்தம். அது முடிந்ததும் அறைக்குள் நுழைந்து அந்த இரும்புப் பெட்டியைத் திறப்பார். அதற்குள்ளிருந்து பழைய சாசனங்களையும் பட்டயங்களையும் பத்திரங்களையும் பூக்களை எடுப்பது போல் எடுப்பார். மேல் துண்டால் தூசி தட்டுவார்.

சந்தேகம் தோன்றிய பத்திரத்தை எடுத்து வெளிச்சத்தில் சின்ன சத்தத்தோடு படித்துப் பார்ப்பார். சில நாட்களில் மனசில் எதையோ தீவிரமாய் நினைத்துக் கொண்டு குடைந்து குடைந்து அந்தச் சாசனங்கள் நீங்கலாக வேறு எதையோ ஒன்றைத் தேடுவது போலிருக்கும். ஒவ்வொரு தடவையும் பெட்டியைத் திறந்து மூடிவிட்டுத் திண்ணையில் உட்கார்கையில் அப்பா முகத்தில் வேர்வையும் அதிருப்தியும் தெரியும்.

ஊர்க்கோடி புளியமரம் தளதளவென்று நிற்கிறது. அதிலிருந்துதான் வருசத்திற்குண்டான புளி வருகிறது. ஆனால் ஒப்படைத்து விட்டுப் போன சாசனங்கள் பத்திரங்கள் எதிலும், ஏன், ஒரு சின்னத்துண்டுக் காகிதத்தில் கூட இந்த மரத்தைப் பற்றி ஒருவார்த்தை இல்லை.

ஒருநாள் சுப்பையா மாமா அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்து பேச்சுவாக்கில் "மண்டபத்து மல்லி, மண்டபத்துப் புளி ரெண்டுக்கும் சமமா ஓலகத்துலெ எங்கேயும் கிடையாது'' என்று சொல்லிவிட்டார். அப்பா இதைக் கேட்டதும் அம்மாவைக் கூப்பிட்டார். " அந்தக் கொறட்டுப் புளியிலே கொஞ்சங் கொண்டாந்து மாப்பிள்ளட்ட குடு'' என்று சொல்லிவிட்டு " இன்னைக்குக் குழம்பு ஓங்க வீட்டிலெ இந்த புளியிலெ, விடிய வந்து சொல்லுங்க மாப்பிள்ளை, மண்டபத்துப் புளி ஒசத்தியா, கொறட்டுப் புளி ஒசத்தியானு.''

மறுநாள் சுப்பையா மாமா திண்ணையில் வந்து உட்கார்ந்ததும் சொன்னார். "இந்தக் கொறட்டுப் புளிக்குச் சரியா மண்டபத்துப் புளியும் நிக்காது; மதுரைப் புளியும் நிக்காது.''



'கொறட்டுப் புளி' என்று அப்பா சொல்வது 'குற வீட்டுப் புளி' என்பதன் சுருக்கம். 'குறவீடு' என்று வருகிற எதையும் வேறு மாதிரித்தான் சொல்வார். அப்படிப் பேசி முடித்ததும் எதையோ மறைத்துத் தப்பித்துவிட்ட திருப்தியில் பலர் முன்னிலையில் தன்னை மறந்து சந்தோஷப்பட்டுக் கொள்வார்.

ஆள்பத்தி அறையின் இருப்புப் பெட்டியைத் திறந்து சாசனங்களையும் பத்திரங்களையும் பார்த்து முடித்த சில சமயங்களில் அப்பா திண்ணையிலிருந்து இறங்கிக் குடையை விரித்தும் விரிக்காமலுமாய் ஓடப் போகிற மரத்தைக் கயிறு போட்டு கட்டி வைக்கப் போவது போல் ஓடுவார். கொழுந்து விடும் நேரம், பூப் பூக்கும் நேரம், பிறை பிறையாய்ப் பிஞ்சு விடும் நேரங்களில் இப்படிப் போய் மரத்தடியில் நிற்பார்.

"அய்யா மகன் வந்திருக்கார் விலகுலெ'' என்று சத்தம் போட்டு, வேடிக்கை பார்க்க வரும் குறவீட்டுப் பிள்ளைகளை சேரிக் கிழவர்கள் விரட்டுவார்கள். மரத்தடியில் அடைந்து கிடக்கும் பன்றிகளை விரட்டி மேட்டுப்பக்கம் கொண்டு போவார்கள். பன்றிக் கழிவுகளைத் தள்ளி ஒரு புறமாய் ஒதுக்குவார்கள்.

மற்ற குடிசைகளிலிருந்து விலகி ஒரு குடிசை, மரத்திற்கு வடக்கில் தனியாய் உண்டு. வெளியில் உண்டாகும் சேரி அசுத்தங்கள் அந்தக் குடிசையருகே வந்து விடாதவாறு சுற்றி ஒரு தீ வட்டம் நின்று காப்பது போல் பளிச்சென்றிருக்கும்.

அப்பாவின் குரலைக் கேட்டதும் குடிசைக்குள்ளிலிருந்து ஒரு கிழவி கண்ணில் பூ விழுந்து பார்வை தெரியாமல் கம்பூன்றி வெளியில் வருவாள். குறவர் கூட்டத்திலிருந்து விலகித் தனியாய் ஆகாயத்திலிருந்து வந்து பறந்தது போல் கிழவியின் மகள் தாத்தா ஜாடையில் தாத்தா நிறத்தில் வந்து நிற்பாள். அப்பாவுக்கும் அந்தப் பொம்பிளைக்கும் பதினைஞ்சு வயது வித்தியாசமிருக்கும்; சின்னவள்.

அந்தப் பொம்பிளையும் அவள் புருஷனும் பிள்ளைகளும் குறவர் கூட்டத்திலிருந்தது விலகித் தனியாய் நிற்பார்கள். கிழவியும் மகளும் அப்பா பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வாஞ்சையோடு கேட்பார்கள். அப்பா புறப்பட்டுப் போகும் போது அந்தப் பொம்பிள அவர் பார்க்கும்படி முன்னே வந்து குப்பை கூளங்களைக் காலால் தள்ளி வழி செய்வாள். இவர்களின் இந்தச் செய்கைகளால் அப்பா தடுமாறி நடப்பார். வீடு வரும்போது மறுபடி முகம் மாறி வந்து சேர்வார். வெகு நேரம் யோசனையில் கிடப்பார். கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டுக் கேட்டு விடலாமென்று அப்பாவுக்கு பலமுறை தோன்றியதுண்டு. இந்த மரம் நிற்கும் நிலம் யாருக்குச் சொந்தம் என்று அவரிடம் கேட்கலாம். தன் பெயருக்கே ரசீது போடச் சொல்லலாம் வரி கட்டியதாக, ஆனால் மரம் இருக்கும் இடம் நம் பெயரிலில்லை என்று கணக்குப்பிள்ளைக்கு நாமே சொல்லிக் கொடுத்தது போலாகிவிடும். சொத்து விஷயத்தில் அவசரப் படக்கூடாது. போகிற வரை போக வேண்டும். அப்பா கணக்குப் பிள்ளைக்குச் சொல்லிவிடும். ஞாபகம் வந்து ஒவ்வொரு முறையும் நிறுத்தி வைத்தது போக அந்த எண்ணத்தையே சில நாளில் மறந்துவிட்டார்.

வருசா வருசம் புளியம்பழ உலுக்கல் அப்பா முன்னால் விமரிசையாய் நடக்கிறது. மூடை மூடையாய் புளி வீட்டுப் பட்டாளத்துக்கு வருசத்துக்கு புளியம்பழ



உலுக்கலுக்கு முதல் நாளே அப்பா ஆள் சொல்லி விடுவார். மறுநாள் காலை அப்பா போகும் முன்னால் பன்றிக் கழிவுகளைக் கூட்டிப் பொட்டலாக்கி வைத்திருப்பார்கள்.

அப்பா பத்து ஆள்களோடும் ஒரு கட்டுச் சாக்குகளோடும் வெயில் வந்ததும் வருவார். வருசா வருசம் இது ஒரு சடங்கு போல் நடக்கும். உலுக்கலுக்கு முன் கிழவியின் மகள் கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டு வந்து மரத்தருகில் நிறுத்துவாள். கிழவி மரத்தைத் தொடுவாள்; தடவுவாள், கும்பிடுவாள். குருட்டுக் கண்ணிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வடியும், மகள் மெல்லக் கிழவியை அகற்றி அழைத்துக் கொண்டு குடிசைப் பக்கம் போவாள்.

அப்பா இவையெல்லாம் பார்த்தும் பார்க்காதது போல் நிற்பார். சீக்கிரமாய் இந்தச் சடங்கு நடந்து முடியவேண்டுமென்பது போல் பொறுமை இழப்பார். இது முடிந்ததும் பலசாலிகளாயுள்ள எட்டுப் பேர் திசைக்கு ஒருவராய் ஒரே நேரத்தில் கிளைகளில் ஏறி நின்று மேற்கொப்பைப் பிடித்துக் கொண்டு கூத்தாடுவார்கள்.

பழங்கள் உதிர்த்து சடசடவென்று சத்தங் கிளப்பும், குற வீடுகளின் சின்னப் பிள்ளை எதுவும் பழம் பொறுக்க நடுவில் நுழைந்தால் மண்டையிலடிக்கும்.ஒரு பழமே ரத்தம் கசிய வைத்துவிடும்.

மொத்தக் கிளைகளையும் உலுப்பிய பின் அப்பா மரத்தைச் சுற்றி வந்து மேல் நோக்கிப் பார்வையிடுவார். ஒரு கிளை விட்டுப் போயிருந்தாலும் அவர் பார்வைக்குப் பட்டுவிடும். எல்லாமும் உலுப்பி முடிந்தவுடன் பத்துப் பேரும் பழங்களை வாரிக் கட்டுவார்கள்.

ஒரு சின்னக் குவியலை அப்பா காலாலேயே குவிந்து ஒதுக்குவார். அந்தப் பொம்பிளை வந்து அள்ளிக் கொள்ளும். அள்ளும்போது அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வடியும். மூட்டைகளை வண்டியிலேற்றி வீட்டில் கொண்டு வந்து இறக்குவார்கள். ஒருவாரம் முற்றத்தில் காயும். அப்புறம் பதினைந்து பேர்கள் பட்டாசாலையில் உட்கார்ந்து உடைப்பார்கள். மறுபடியும் முற்றத்துக்குப் போகும். அப்புறம் சால்களில் அடையும்.

ஒரு வருசம் உலுக்கலின் போது கிழவி மரத்தைத் தொட்டு அழுது கொண்டிருந்த போது மகள் புருசன் "ஓங்க ஆத்தாளை இங்கிட்டுக் கூப்பிடு. அசிங்கமாயிருக்கு; சனம் பூராவும் வேடிக்கை பார்க்குது'' என்று கோபமாய்ச் சொன்னான். அந்தப் பொம்பிளை தயங்கியது. "கூட்டிக்கிட்டு வரப்போறியா இல்லையாடி'' என்று எல்லோருமிருக்கக் காலால் ஒரு உதை விட்டான். ஓடிப் போய் கிழவியை இழுத்துக் கொண்டு வந்தாள். அன்று அப்பா காலால் தள்ளிக் குவிந்திருந்த புளிக்கு முன்னால் வந்து அவன் " இதையும் அள்ளிக்கிட்டுப் போயிருங்க'' என்றான்.

அவன் கை காலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. அப்பா சற்றுக் கலங்கிப் போனார். விட்டுக் கொடுக்காமல் "இதையும் அள்ளிக் கட்டுங்கடா'' என்று சொல்லி விட்டு நடந்தார். அன்று ஒரு பழம் விடாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தன.

அடுத்த வருசம் வழக்கம் போல் மறுநாள் புளியம்பழம் உலுக்க வரப் போவதாகச் சொல்லியனுப்பியிருந்தார் அப்பா. மறுநாள் பத்துப் பேரோடு மரத்தடிக்குப் போகையில் தரையெங்கும் பன்றிக் கழிவுகள். எங்கும் அசிங்கமும் நாற்றமும்.

கயிற்றுக் கட்டிலில் கிழவி உட்கார்ந்திருந்தாள். யாரோ வம்பாய் உட்கார்த்தி வைத்திருப்பது போலிருந்தது. அந்தப் பொம்பிளை புருஷனோடும் பிள்ளைகளோடும் நின்றாள். அப்பா அந்தப் பெண்ணைக் கடுமையாகப் பார்த்தார். "என்ன இதெல்லாம் ?'' என்று அதட்டினார். சொல்லி வைத்தது போல் யாரும் வேலை வெட்டிக்கு போகாமல் குறவீட்டு ஆள்கள் மொத்தமும் கூடியிருந்தது.

அந்தப் பொம்பிளை "இனிமேற்பட்டு இந்த மரத்தை நாந்தான் உலுக்குவேன் இதிலே எனக்கு பாத்தியதை உண்டு...'' என்று பேசத் துவங்கியது. அப்பாவுக்கு கால் நடுங்கியது; உதடு கோணியது. "போதும் போதும். பேச்சை நிறுத்து'' என்று அதற்கும் அப்பால் அந்தப் பொம்பிளை பேசப் போவதை பதறிப் போய் நிறுத்தினார். கயிற்றுக் கட்டிலின் மேல் அந்தக் கிழவி நிச்சலனமாய் உட்கார்ந்து இருந்தாள்.

கூட்டி வந்து ஆள்களைத் திருப்பியழைத்துக் கொண்டு தலையைச் சாய்த்து குனிந்து நடந்து வீடு வந்து சேர்ந்தார். அதற்கப்புறம் அப்பா ஆள்பத்தி அறைக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து சாசனம் எதையும் எடுத்துப் பார்க்கவே இல்லை.

– "நவீன தமிழ்ச் சிறுகதைகள்"
என்ற நூலிலிருந்து
(சாகித்ய அக்காதெமி வெளியீடு)

* * *



# அறிந்துகொள்வோம் அரசாணையை

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

**1939** ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் – திரைப்படங்கள் – தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (நிலை) எண். 72 நாள். 22.7.2006.

ஆணை :

**2006–2007**ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2. அதன்படி 1939ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) பிரிவு 4 உடன் படிக்கப்பட்டு பிரிவு 8ன் உட்பிரிவு 2இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி 22.7.2006ஆம் நாள் முதல் திரைப்படத் துறைக்கும் தமிழ்மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய திரைப்படங்களுக்கு தமிழிலேயே பெயர்சூட்டப்படுமானால், அந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்
அரசு செயலாளர்.

# எனது காலில் இருக்கிறது

குதிரைக்கு நான்கு கால்கள் நீளமாயும், உறுதியுடனும் இருந்தன. உருண்டு திரண்ட தொடை அதற்கு அழகாக இருந்தது. குதிரை கம்பீரமாக ஓடியது.

ஒரு சமயம் நரிக்குக் குதிரையின் தொடைக் கறியைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

தன்னைவிட உயரமாகவும் வல்லவனாகவும் இருக்கும் குதிரையை அடித்துக் கொல்வது எப்படி என்று அது யோசித்தது.

ஒரு நாள் ஓநாயைப் பார்த்தது. ''நண்பரே நீயும் நானும் ஒரே இனம். ஆனால், குதிரைக்கு இருக்கிற வலிவு நமக்கு இல்லை. குதிரையைக் கொன்று அதன் கறியைத் தின்றால் நாமும் வலிவுள்ள மிருகமாக மாறலாம் அல்லவா ?'' என்று கேட்டது.

''குதிரை உயரமாக இருந்தால் என்ன ? அதை அடித்துக் கடித்துப் போட முடியாதா ?'' என்று கூறியது ஓநாய்.

நரியும் ஓநாயும் சேர்ந்து சூழ்ச்சி செய்தன. ''நாம் இருவரும் சேர்ந்து குதிரையைப் பார்த்துப் பேசிக் கொண்டே செல்லலாம். அது ஏமாறும் சமயம் பார்த்து நான் அதன் ஒரு காலைக் கடித்துப்பிடித்துக் கொள்கிறேன். நீயும் அதைக் கடித்துப் பிராண்டு. தாக்கினால் நாம் இருவரும் சேர்ந்து குதிரையைக் கொல்வது சுலபம்'' இவ்வாறு நரியும் ஓநாயும் குதிரையைக் கொல்லக் கூட்டுச் சேர்ந்து கொண்டன.

ஒரு நாள் குதிரையைப் பார்த்துப் பேசிக்கொண்டே சென்றன. ''வேகமாக ஓடுகிறாயே! உனது சக்தி எங்கிருக்கிறது ?'' என்று ஓநாய் குதிரையைப் பார்த்துக் கேட்டது. '' என் காலுக்கு அடியில் இருந்து சக்தி வருகிறது ?'' என்று குதிரை கூறியது.

ஓநாயும் குதிரை ஏமாறும் சமயத்தில் அதைக் கடித்து விடலாம் என்று குதிரைக்குப் பின்னால் பேசிக்கொண்டே ஓடிச் சென்றது. நரி எச்சரிக்கையுடன் ஓநாய்க்குப் பின்னால் வந்தது.

''எந்தக் காலுக்கு அடியிலிருந்து சக்தி வருகிறது'' என்று ஓநாய் மீண்டும் குதிரையைக் கேட்டது.



''கிட்டே வந்தால் காட்டுகிறேன்'' என்று குதிரை சொல்லிற்று. ஓநாய் குதிரையின் குளம்புக்கு மிக அருகில் வந்தது. குதிரை 'படார்' என்று ஓர் உதையைத் திடீரென்று முகத்தில் விட்டது. ஓநாயின் பற்கள் உடைந்து விழுந்தன. முகத்தில் இரத்தம் ஒழுகியது. அதைப் பார்த்துக் கதி கலங்கிய நரி ஓடிவிட்டது.

'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.'

*ஏ.ஜி.எஸ். மணி எழுதிய*
*''உலகம் போற்றும் கதைகள்''*
*என்ற நூலிலிருந்து...*



# ஊரக வளர்ச்சிக்கு உன்னத முயற்சி

## கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அங்குச்செட்டிப்பாளையம் ஊராட்சியில் கால்வாய் ஆழப்படுத்தும் பணி



பணி தொடங்கும் முன்...



பணி முடிவுற்ற பின்...

தமிழரசு
R.N.I. No.21446/70 - Regn. No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP - 518/06-08

# ஊரக வளர்ச்சிக்கு உன்னத முயற்சி

## கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், சித்தரசூர் ஊராட்சியில் நெசரூரான் கால்வாய் தூர்வாரும் பணி



பணி தொடங்கும் முன்...



பணி முடிவுற்ற பின்...

தமிழரசு
செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு
செப்டம்பர் 2006
விலை ரூ.10







## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின் செயலாக்கம்





ஆழ்துளை குழாய் கிணறு அமைப்பு



முட்புதர்கள், கூழாங்கற்கள் அகற்றுதல்



பண்படுத்தப்பட்ட நிலம்



சமப்படுத்துதல்



பயன்பெற்ற ஏழை விவசாயக் குடும்பம்

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஆவணி - புரட்டாசி
செப்டம்பர் 2006
மலர் : 38 இதழ் : 3

**புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.**

பிறர்க்கு உதவிடும் பண்பாகிய 'ஒப்புரவு' என்பதைவிடச் சிறந்த பண்பினை இன்றைய உலகிலும், இனிவரும் புதிய உலகிலும் காண்பது அரிது.

- கலைஞர்
திருக்குறள் உரையிலிருந்து

## இந்த இதழில்...

2 ஐந்தாண்டுகளுக்குள் நிலமற்ற ஏழை-எளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கிட தொடர்ந்து பணியாற்றுவோம் -மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

காவல்துறை அறிவிப்புகள் 6

13 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.750 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும் - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

தொழில்துறை அறிவிப்புகள் 19

தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்புகள் 34

நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அறிவிப்புகள் 37

பலாப்பழம் - சிறுகதை 66

### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தந்தை பெரியார் பிறந்தநாளான 17.9.2006 அன்று ஏழை விவசாயக்குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார்கள்.

**மூன்றாம் பக்க அட்டை**

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாடு (18.9.2006)

**நான்காம் பக்க அட்டை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அறிஞர் அண்ணா பிறந்தநாளான 15.9.2006 அன்று, இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : சி. கோசலராமன், இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in



# ஐந்தாண்டுகளுக்குள் நிலமற்ற ஏழை-எளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கிட தொடர்ந்து பணியாற்றுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

"வயதில் அறிவில் முதியார்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்
உயர் எண்ணங்கள் மலரும் சோலை"

தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளில் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்குகின்ற இந்த நாள் – இன்பநாள்; நிலங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரமல்ல; அந்த நிலங்களை வழங்கிய எனக்கும், இதுபோன்ற இன்பநாள் என்றுமே வாய்த்ததில்லை. என்னுடைய வாழ்க்கையில் உணர்ச்சிகரமான உள்ளத்தை தொட்டு இழுக்கின்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றதுண்டு. ஆனால், அந்த நிகழ்ச்சிகளெல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு ஈடில்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு இன்று இந்த மாவட்டத்திலே, இந்தப் பகுதியிலே ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நிலங்களை வழங்குகின்ற திட்டத்தினுடைய தொடக்க விழாவை நடத்துகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.



பல்லாயிரக்கணக்கிலே இங்கே கூடியிருக்கின்றீர்கள், ஒவ்வொருவருக்கும் நிலம் தர நிலம் இல்லை. ஆனால், நிலம்தான் தரவில்லை என்றாலும், உட்கார இடமாவது தருவீர்களா என்றால் அதுவும் இல்லை நான் வருகிற வழியில் பந்தலுக்கு வெளியிலே பல்லாயிரக்கணக்கில் அங்கே இன்னொரு பந்தல் நிரம்பி வழிகின்ற அளவுக்கு நீங்கள் நிற்கின்ற காட்சியைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்தேன். என்னுடைய அருமை நண்பர் சுதர்சனம் கூட வெளியே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் பார்த்தீர்களா என்று சொன்னார்கள் முந்திக்கொள்ளாத காரணத்தால், அவர்கள் அங்கே நிற்க நேரிட்டிருக்கிறது. நான் அவர்களிடத்திலெல்லாம் வருத்தத்தையும் மன்னிப்பையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று உங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையைப் போக்க விரைவிலே இன்னொரு நாள், பந்தல் இல்லாத ஒரு கூட்டத்திலே பேசி உங்கள் அத்தனை பேரையும் சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெறுவேன் என்பதை முதற்கண் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன். திருக்குறளிலே ஒரு அருமையான குறள் உண்டு.

*"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்*
*நிலமென்னும் நல்லாள் நகும்"*

எதுவுமே இல்லையேன்று சோம்பி உட்கார்ந்திருப் பவரைப் பார்த்தால், நிலம் ஏளனப் புன்னகை புரியுமாம். நிலம் இல்லை என்றா சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கிறாய், நான் இருக்கிறேன்; என்னைப் பண்படுத்தி, உழுது பயிரிட்டு, உன்னுடைய வாழ்க்கையை நகர்த்து என்று சொல்லாமல் சொல்லி, நிலமகள் – பூமி சிரிப்பாள் என்று வள்ளுவர் அழகாகச் சொன்னார்.

அந்தச் சிரிப்பு என் காதிலே விழுந்த காரணத்தால்தான் தமிழகத்திலேயே நிலமில்லாத ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கெல்லாம் முடிந்த வரையில், இயன்றவரையில் நிலம் தருகின்ற பணியை ஆற்ற வேண்டும் என்று அந்தப் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறேன். தி.மு.கழகத் தினுடைய தேர்தல் அறிக்கையிலும், தொடர்ந்து நடைபெற்ற ஆளுநர் உரையிலும் அதைத்தொடர்ந்து வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும், குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் எப்படி நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் இங்கே பேசிய நண்பர்களெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

## தமிழகம் முழுவதும் 24,949 குடும்பங்களுக்கு 26,321 ஏக்கர் நிலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தினுடைய தொடக்க விழா நாளாக அமைந்துள்ள இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் முதல்கட்டமாக அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு இல்லாத நிலம் **6,881** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலமும், பண்படுத்தப்பட்ட நிலமாக **5,076** நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு இன்றைக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு உள்ள **10,564** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம், நிலமற்ற **14,083** சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. **5,790** சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான **8,876** ஏக்கர் பட்டா தரிசு நிலங்களை அரசின் செலவில் மேம்படுத்தி விளைநிலங்களாக மாற்றி அவர்களுக்கே வழங்கப்படுகிறது. இந்தக் கணக்கு இந்த ஒரு நாள் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆனால், இன்று மட்டும் தமிழகம் முழுவதும் நான் காட்டியிருக்கின்ற இந்தக் கணக்கின்படி மொத்தம் **24,949** ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு **26,321** ஏக்கர் நிலம் பண்படுத்தி வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வாழ்நாளில் நான் ஆற்றியிருக்கின்ற பணிகளில் மிகச்சிறந்த பணி இன்றைய பணி.

எப்படி பண்படுத்தப்படுகிறது ? என்னென்ன சீர்திருத்தங்கள் செய்து அவைகள் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுருக்கமாக கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

தரிசு நிலங்களில் இருந்த முட்புதர்களை அகற்றி உழுது, பண்படுத்தி, கற்களை அகற்றி, நிலத்தை சமன்படுத்தி, வரப்புகளை ஏற்படுத்தி, ஆழ்துளைக் குழாய் கிணறுகளை அமைத்து, பயன்தரும் பழ மரக்கன்றுகளையும், ஊடுபயிர்களையும் நடவு செய்து இன்றைய தினம் இந்த நிலங்களெல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியை நான் நிறைவேற்றி வைப்பதற்காக வெங்கடாபுரத்திலே சென்று இறங்கியதும் அங்கே குழுமியிருந்த மக்களைப் பார்த்தேன், சகோதரிகளைப் பார்த்தேன், தாய்மார்களைப் பார்த்தேன், பெரியவர்களைப்



பார்த்தேன், அவர்களுடைய முகமெல்லாம் எப்படி களைபொருந்திக் காணப்பட்டது. எவ்வளவு சிரித்த முகத்தோடு என்னை வரவேற்றார்கள் என்பதை எண்ணும்போது, மகனை வரவேற்கின்ற மாதாவைப்போல், பிள்ளையை வரவேற்கின்ற பெற்றோரைப்போல், தம்பியை வரவேற்கின்ற அண்ணனைப்போல், அண்ணனை வரவேற்கின்ற தம்பியைப்போல், உற்றார் உறவினர்களாக நின்று கொண்டு அங்கே என்னை வரவேற்ற அந்தக்காட்சி இருக்கிறதே, நான் சாகிற வரையில் மறக்கமுடியாத உணர்ச்சி மிக்க காட்சி அது.

## இந்தப் பணி தொடரும்

என்னுடைய வாழ்நாளில் பொதுவாழ்க்கையிலே பெரியாருடைய கட்டளைக்கேற்ப பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உத்தரவுக்கேற்ப எத்தனையோ காரியங்களிலே ஈடுபட்டிருக்கின்றேன். ஆனால், இன்று அவர்கள் இருவரும் உயிரோடு இல்லை உயிரோடு இல்லாவிட்டாலும், என்னுடைய உணர்வோடு கலந்திருக்கின்றார்கள். உணர்வோடு கலந்திருக்கின்ற அந்த உத்தமர்களுடைய ஆணைக்கு ஏற்ப நான் ஆற்றியிருக்கின்ற பணிகளிலெல்லாம் மிகச் சிறந்த பணிதான் இன்றைய தினம் ஆற்றி உள்ள பணி என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணி தொடரும், இந்த ஒரு நாள் மாத்திரமல்ல;

இன்றைக்கு இங்கே 649 ஏக்கர் பட்டா தரிசு நிலங்களை பண்படுத்திக் கொடுத்தும், 588 ஏக்கர் அரசு நிலங்களை வழங்கியதும் உள்பட அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிலங்களைப் பண்படுத்த மட்டும் செலவு எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதைப்போல் 42 இலட்சம் ரூபாய் ஆகும். இது, எந்த சுயலாபத்தையும் கருதி அல்ல. இது உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்காக வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காக, அமைக்கப்பட்ட ஒரு ஆதாரம் என்பதை மறந்துவிடக்கூடாது.

## தோழமைக் கட்சியினர் – கழகத்தினரின் ஒத்துழைப்பு

நான் ஆவலோடு கேட்டேன் இங்கே தரப்பட்டிருக்கிற நிலத்தில் புஞ்சை பயிரிட்டால், ஆண்டொன்றுக்கு உங்களுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று கேட்டேன். 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று சொன்னார்கள் மா பயிரிட்டால், அவைகள் வளர்ந்தால் இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு, பத்தாண்டு காலத்திற்குப் பிறகு 10 ஆயிரம் 15 ஆயிரம் கூட கிடைக்கும் என்று பரவசமாக சொன்னார்கள். அந்த பரவசம், என்னுடைய உள்ளத்திலே எந்த அளவிற்கு தேன் பாய்ச்சியது, எந்த அளவுக்கு அருவியாகப் பாய்ந்தோடியது என்பதை நான்தான் உணர்வேன். மற்றவர்கள் அதை உணர முடியாது. காரணம், அவை சிந்தித்து செயல்படுத்தி இன்றைக்கு இது எப்படி நடைபெறுகிறது என்பதற்காக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும்கூட என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த நண்பர்களுடைய ஒத்துழைப்போடு தோழமைக்கட்சியில் இருக்கின்ற தோழர்களுடைய ஒத்துழைப்போடு இவைகளுக்கெல்லாம் மேலாக அரசு அலுவலாளர்கள், அரசு அதிகாரிகள் இவர்களுடைய ஒத்துழைப்போடு இந்தக் காரியம் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது.

நான் வெங்கடாபுரத்திலே போய் இறங்கியபோது சுற்றிப் பார்த்தேன், தலைமைச் செயலகமே – தலைமைச் செயலகம் என்றால் அண்ணா அறிவாலயம் அல்ல, நம்முடைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையே அங்கே



வந்திருக்கின்ற காட்சியைப் பார்த்தேன். எல்லா செயலாளர்களும் அங்கே வந்திருக்கிறார்கள் என்றால், ஏதோ திருமண வீட்டிற்கே வந்ததைப் போல வந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு அதிசயம், அந்த அதிசயத்தை நடத்திக் காட்டியிருப்பது இந்த அரசாக இருப்பதால்தான் அத்தனைபேரும் வந்தார்கள், அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு உணர்ச்சியோடு, எவ்வளவு உளமார்ந்த உணர்வோடு, இந்தப் பணியிலே ஈடுபட்டார்கள் என்பதை நான் மிக மிக நன்றாக அறிவேன்.

அதைப்போலவே தமிழகத்திலே ஒவ்வொரு மாவட்டத்திலும் நான் இங்கே இந்த நிகழ்ச்சியை நடத்தி வைப்பதைப்போல், ஒவ்வொரு மாவட்டத்திலும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் – முன்னோடிகள் இவர்கள் முன்நின்று நிலமற்ற விவசாயிகளுக்கு இந்த நிலங்களை வழங்குகின்ற – பிரித்து வழங்குகின்ற இன்னாருக்கு இவ்வளவு நிலம் என்று பிரித்து வழங்குகின்ற நிகழ்ச்சி இன்று காலை முதல் மாலை வரையில் தமிழகத்திலே பல பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காரணம், இன்றைக்கு 25 ஆயிரம் ஏக்கரா, 26 ஆயிரம் பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த நிகழ்ச்சி இன்றோடு முடியாது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

நான் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் பெரியசாமியையும் அதிகாரிகளையும், மேற்கு வங்கத்திற்கு அனுப்பி வைத்தேன்; கடந்த இரண்டு திங்களுக்கு முன்பு. அங்கே இப்படி நிலத்தை ஏழை – எளிய விவசாயிகளுக்குத் தருவதாக செய்தி வந்தது. அங்கே எப்படி எந்த முறையை கையாளுகிறார்கள் என்பதைச் சென்று பார்த்து விவரம் அளியுங்கள் அன்று அவர்களை அனுப்பி வைத்தேன். சென்றவர்கள் திரும்பி வந்து விளக்கினார்கள் எப்படி அங்கே வழங்கப்படுகிறது என்று கடந்த 10 ஆண்டு காலமாக, 15 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு நிலம் ஏழை – எளிய விவசாயிகளுக்கு பங்கிட்டுத் தருவதென்று அங்கே பங்கிட்டுத் தரப்படுகின்ற செய்தியை எனக்குச் சொன்னார்கள்.

நானும் சொல்லுகின்றேன் மேற்கு வங்கத்திலே 10 ஆண்டு காலத்திலே எவ்வளவு நிலம் கொடுக்கிறார்கள் என்ற விவரத்தை அறிந்து இந்த 5 ஆண்டு காலத்திற்குள்ளாக உங்கள் அனைவருக்கும் வழங்க ஏழை – எளிய விவசாயிகளுக்கு வழங்க தி.மு.கழக அரசு பாடுபடும் – பணியாற்றும் – இந்தப் பணி தொடர்ந்து நடக்கும் என்பதை உங்களுக்கெல்லாம் நான் உண்மையான உணர்வோடு, நெஞ்சார்ந்த உணர்வோடு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே பேசிய நண்பர்கள் சுதர்சனம் உட்பட அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி உட்பட அத்தனைபேரும் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் இந்தச் சாதனைகளையெல்லாம் எதிர்க்கட்சிகள் சில கிண்டல் செய்வதாகச் சொன்னார்கள். எதிர்ப்புக் காட்டுவதாகச் சொன்னார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை. எதிர்க்கட்சி என்று இருந்தால், அந்தக் கட்சியினுடைய வேலை ஆளுங்கட்சியை எதிர்த்துப் பேசுகின்ற வேலைதான். அந்த வேலையை அவர்கள் செய்யும் பொழுது நாம் அதை உற்சாகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எதிர்ப்பு இல்லாவிட்டால் நாம் இந்த அளவிற்கு வளர முடியாது – உயர முடியாது.

எனவே, எதிர்நீச்சல் போட்டே வளர்ந்த இயக்கம் இந்த இயக்கம், எதிர்நீச்சல் போட்டே வளர்ந்தவர்; ஒரு இயக்கத்தை வளர்த்தவர் தந்தை பெரியார் எனவே அவருடைய பேரப் பிள்ளைகளாகிய நாம், பேரறிஞர் அண்ணாவின் தம்பிகளாகிய நாம் நடத்துகின்ற இந்த ஆட்சியில் எவ்வளவுதான் எதிர்நீச்சல் போட வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் தயங்காமல் நீச்சல் போடுவோம்.

ஆனால் ஒன்று சொல்கின்றேன் கரையேறுவது நாங்களாகத்தான் இருக்கும் என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக்காட்டி; நாங்கள் கரையேறுவது மாத்திரமல்ல; தமிழ்நாட்டு மக்களையும் கரையேற வைப்போம். தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு வழங்குவோம். விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு பாட்டாளிகளுக்கு பக்கபலமாக இருப்போம். அதற்கு நீங்கள் எங்களுக்கு பக்கபலமாக எல்லா நேரங்களிலும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த நேரத்திலே உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கின்றேன்.

(திருவள்ளூரில்
தந்தை பெரியார் பிறந்த நாளான
17–9–2006 அன்று ஏழை விவசாயக்
குடும்பங்களைச்சேர்ந்த
1,036 பேருக்கு இலவச நிலம் வழங்கி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை)

# காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீனமயமாக்கும் திட்டம்



**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

1. தமிழ்நாட்டிலுள்ள 243 காவல் துறை உட்கோட்டங்களுள் (Dy.S.P. Office) வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் 69 அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்ட முடிவு.

முதற்கட்டமாக இந்த ஆண்டு பத்து அலுவலகமும், குடியிருப்பும் சேர்ந்த கட்டடங்கள் குடியாத்தம், ஆம்பூர் திருப்பத்தூர், (வேலூர் மாவட்டம்) பென்னாகரம், அரூர், பொள்ளாச்சி, செய்யார், திருவாரூர், சமயநல்லூர், ஆலங்குளம் ஆகிய நகரங்களில் கட்ட முடிவெடுக்கப் பட்டுள்ளது.

2. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் ரூபாய் இரண்டு கோடி மதிப்பில் ஆவடியில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டாம் அணிக்கு கட்டடம், கிடங்கு, காவலர்கள் தங்கும் இடம் ஆகியவற்றை கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3. திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி, கன்னியாகுமரி மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் காவலர்களுக்கான தங்கும் விடுதிகள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

4. இந்த ஆண்டு பின்வரும் 25 காவல் நிலையங்களுக்கான கட்டடங்களின் தரத்தினை உயர்த்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | வாலாஜாபாத் |
| 2. | வேப்பாக்கம் |
| 3. | ஆரணி தாலுகா |
| 4. | செய்யார் |
| 5. | ஒசூர் சிப்காட் |
| 6. | ஒசூர் நகரம் |
| 7. | மதிகோன்பாளையம் |
| 8. | பி1 பஜார் |
| 9. | பல்லடம் |
| 10. | பொள்ளாச்சி கிழக்கு |
| 11. | ஆண்டிமடம் |
| 12. | வெள்ளியணை |
| 13. | லாலாபேட்டை |
| 14. | சமயபுரம் |
| 15. | பி16 அண்ணாநகர் |
| 16. | திருவில்லிப்புத்தூர் நகரம் |
| 17. | திண்டுக்கல் வடக்கு நகரம் |
| 18. | இளையான்குடி |
| 19. | களக்காடு |
| 20. | புதுக்கடை |
| 21. | சின்னமனூர் |
| 22. | முரப்பநாடு |
| 23. | திருமங்கலம் நகரம் |
| 24. | இராமநாதபுரம் நகரம் |
| 25. | பாளையங்கோட்டை |

5. பின்வரும் 12 நகர காவல் நிலையங்களுக்கு ரூ.318 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | வந்தவாசி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 2. | போளூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 3. | செங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 4. | பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 5. | பீளமேடு |
| 6. | சரவணப்பட்டி |
| 7. | திருவரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 8. | லால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 9. | திருவாரூர் நகரம் |
| 10. | சிலைமான் |
| 11. | விக்கிரமங்கலம் |
| 12. | எம்.பாடுபட்டி |

6. பின்வரும் 14 ஊரக காவல் நிலையங்களுக்கு ரூ.224 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்ட முடிவு.

| வ.எண். | காவல் நிலையம் |
|---|---|
| 1. | திருவண்ணாமலை தாலுகா |
| 2. | தூக்கனம்பாக்கம் |
| 3. | ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையம் |
| 4. | ஜெகதாப்பட்டினம் |
| 5. | இலுப்பூர் |
| 6. | அரும்பாவூர் |
| 7. | குன்னம் |
| 8. | வடக்காடு |
| 9. | ஆத்தூர் |
| 10. | ராதாபுரம் |
| 11. | சாத்தான்குளம் |
| 12. | களியக்காவிளை |
| 13. | திருப்பூர் ஊரக |
| 14. | நெகமம் |

7. இராமநாதபுரம் மாவட்டம் கமுதி ஆயுதப்படைப் பிரிவில் உள்ள காவலர்களுக்கு தங்கும் விடுதி கட்டப்படும்.

8. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுதங்களை வைக்கும் பாதுகாப்பு அறையும், ஆயுதப்படை வளாகமும் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் அமைக்கப்படும்.

9. சென்னைப் பெருநகரில், வியாசர்பாடி, பழவந்தாங்கல், புழல் ஆகிய காவல் நிலையங்களுக்கு ரூ.190 இலட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

10. மருதம் வளாகத்திலுள்ள அதிரடிப்படைப் பள்ளி, ஆண் மற்றும் பெண் காவல் பணியாளர்களுக்கும், அதிரடிப்படையினருக்கும் ரூ.144 இலட்சம் மதிப்பீட்டில் தனியான பயிற்சி மையம் ஒன்றும், தங்குமிடங்களும் கட்டப்படும்.

11. தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு ரூ. 228 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.

12. இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட தமிழ்நாடு காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீன மயமாக்கும் திட்டத்திற்கு ரூ.378 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. ஊர்க்காவல் படை பற்றி இங்கே பேசப்பட்டது. ஊட்டியில் உள்ள ஊர்க்காவல் படைப் பயிற்சி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்.

14. சிவகங்கை, புதுக்கோட்டை, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய நான்கு நகரங்களில் உள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்படும்.

15. கடற்கரை காமராஜர் சாலையில் தற்போதுள்ள காவல் துறை இயக்குநர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே, புதிதாக கூடுதல் கட்டடம் ரூ.22 கோடி செலவில் கட்டப்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது. காவல்துறை இயக்குநர் அலுவலகம் தற்போது இயங்கி வரும் பாரம்பரியமிக்க கட்டடத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படாமல், இதே பாணியில் இந்தப் புதிய கூடுதல் கட்டடமும் கட்டப்படும்.

இரண்டாண்டு காலத்தில் முடிவடையக்கூடிய இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு முதற்கட்டமாக பத்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது.

16. சென்னை, எழும்பூர், பாந்தியன் சாலையில் உள்ள சென்னை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தில் இட வசதி போதுமானதாக இல்லை.

தற்போது போக்குவரத்துப் பிரிவு செயல்படும் பழைய கட்டடத்தை காவல்துறை வீட்டு வசதிக் கழக அதிகாரிகள் ஆய்வு செய்து பயன்படுத்துவதற்கு அது ஏற்றதல்ல என்று அறிவித்துள்ளனர். அந்த வளாகத்தில் 5.5 ஏக்கர் காலி இடம் உள்ளது. அங்கே அனைத்து மாநகர காவல் அலுவலகங்களும் ஒருங்கே செயல்படும் வகையில், அடுக்கு மாடி கட்டடம் ஒன்று ரூ. 15 கோடி திட்ட மதிப்பீட்டில் இரண்டு கட்டங்களாக கட்டப்படும். இந்நிதியாண்டிலேயே ரூ.10 கோடி செலவில் முதற்கட்ட வேலைகள் தொடங்கும்.

17. வண்டலூர் அருகிலுள்ள ஊனமாஞ்சேரியில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் கட்டப்பட்டு வரும் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகக் கட்டடத்திற்கான முதல் கட்டப் பணி 2007ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முடிவுறும்.

அதன் பின், அங்கு பயிற்சிக் கழகம் செயல்படும்.

முதற்கட்டமாக கணினி மற்றும் அதன் உபகரணங்கள், வாங்குவதற்காக ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது.

18. 31.12.1988 வரை குழல் ஊதும் காவலர்களாக பணியமர்த்தப்பட்ட 55 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, பத்து ஆண்டு காலம் பணி முடித்த நிலையில், 31.12.2004 முதல், முதல்நிலைக் காவலர்களாக பதவி தரம் உயர்த்தப்படுவார்கள்.

19. 1989 ஆம் ஆண்டில், தி.மு.கழக ஆட்சியில் இரண்டாம் நிலைக் காவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்ட 94 பேர், தரம் உயர்த்தலுக்கு முழுத் தகுதி பெற்றிருந்தும், முன்னர் அளிக்கப்பட்ட கருத்துருவில் இவர்களது பெயர் விடுபட்டதால், அவர்களை முதல்நிலைக் காவலர்களாக தரம் உயர்த்துவதோடு, தற்போது அவர்கள் 15 ஆண்டுகாலப் பணியை முடித்துள்ளதால், அவர்களது பணியை தலைமைக் காவலர்களாக தரம் உயர்த்தப்படுவார்கள்.

> **“இந்த ஆண்டில் சென்னைப் பெருநகர் உள்ளிட்ட தமிழ்நாடு காவல்துறையை கணினிமயப்படுத்தி நவீனமயமாக்கும் திட்டத்திற்கு ரூ.378 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.”**



20. 1995 ஆம் ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில் பணியில் அமர்த்தப்பட்ட 2,207 இரண்டாம் நிலைக் காவலர்கள், 2005 ஆம் ஆண்டில் பத்து ஆண்டு காலப் பணியை முடித்துள்ள நிலையில், இவர்கள் அனைவரையும் முதல் நிலைக் காவலர்களாக தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது 6,563 ரூபாய் மாத ஊதியம் பெற்று வரும் இரண்டாம் நிலை காவலர்கள் இனி முதல் நிலை காவலர்களாகப் பதவி உயர்வு பெற்று மாத ஊதியமாக ரூ. 6,842 பெறுவார்கள்.

21. (Band Men) 2000 ஆம் ஆண்டில் குழல் ஊதும் முதல்நிலைக் காவலர்களாக தரம் உயர்த்தப்பட்ட 47 பேர், ஐந்தாண்டு காலப் பணியை முடித்துள்ள நிலையில் அவர்களை குழல் ஊதும் தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்துவதோடு, எவ்வித பதவி உயர்வுமின்றி 20 ஆண்டுகாலம் குழல் ஊதும் காவலர்களாகப் பணிபுரிந்தவர்களின் தரத்தை, அவர்களோடு பணியில் சேர்ந்தவர்களுக்கு இணையாக, 07.07.2000 முதல் குழல் ஊதும் முதல் நிலைக் காவலர்களாக தரம் உயர்த்துவதோடு, குழல் ஊதும் தலைமைக் காவலர்களாகவும் தரம் உயர்த்தப்படுகிறார்கள்.

22. ஆயுதப் படையில் 01.06.2005 அன்று தலைமைக் காவலர்களாக 10 ஆண்டு காலம் பணி முடித்ததோடு, மொத்தம் 25 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ள 42 தலைமைக் காவலர்களுக்கு, அ.தி.மு.க. ஆட்சி கொடுக்கத் தவறிய பதவி உயர்வினை 01.06.2005 முதலே முன்தேதியிட்டு வழங்கி, அவர்களை சிறப்பு சார்பு ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துருக்களின் மூலம், 2,447 காவல் பணியாளர்கள் பயனடைவார்கள் என்பதோடு இதற்காக ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒரு லட்சம் ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக செலவாகும்.

23. தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துக்களைக் குறைக்கவும், போக்குவரத்தைச் சீர்படுத்தி, விதிகளை செயல்படுத்துவதில் சிறப்பான கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும் பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றிலும் தலா ஓர் ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள், 4 தலைமைக் காவலர்கள், 4 முதுநிலைக் காவலர்கள், 12 இளநிலைக் காவலர்கள் மற்றும் ஓர் இரண்டாம் நிலை வாகன ஓட்டுநர் காவலர்களைக் கொண்ட 20 போக்குவரத்துக் காவல் நிலையங்களை 8.27 கோடி ரூபாய் செலவில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவையாவன :-

| வரிசை எண். | போக்குவரத்து காவல் நிலையம் அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|
| 1. | 1. கூடுவாஞ்சேரி |
| | 2. செங்கல்பட்டு |
| | 3. திருப்பெரும்புதூர் |
| 2. | 4. உளுந்தூர்பேட்டை |
| | 5. விக்கிரவாண்டி |
| 3. | 6. பெருமாநல்லூர் |
| | 7. சமயபுரம் |
| 4. | 8. திருமங்கலம் |
| | 9. சமயநல்லூர் |
| 5. | 10. புதுச்சத்திரம் |
| 6. | 11. ஓமலூர் |
| | 12. சங்ககிரி |
| | 13. ஆத்தூர் |
| 7. | 14. காங்கேயம் |
| | 15. பவானி |
| 8. | 16. வேடசந்தூர் |
| | 17. ஒட்டன்சத்திரம் |
| 9. | 18. வள்ளியூர் |
| | 19. சாத்தூர் |
| | 20. பெரம்பலூர் |

24. தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல், திருநெல்வேலி ஆகிய பத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நடமாடும் நீதிமன்றங்களைப் போல ஒரு கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

25. கோவை மாவட்டத்தில் கே.ஜி. சாவடி புறக்காவல் நிலையம், திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடம், மணிகண்டம் புறக்காவல் நிலையங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் மூங்கில் துறைப் பட்டு புறக்காவல் நிலையம், கடலூர் மாவட்டத்தில் நடுவீரன் பட்டு புறக் காவல் நிலையம், வேலூர் மாவட்டத்தில் மேல்பட்டி புறக்காவல் நிலையம், மதுரை மாவட்டத்தில் அப்பன் திருப்பதி புறக் காவல் நிலையம், தேனி மாவட்டத்தில் ஹைவேவிஸ் புறக் காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் கொட்டியோடு புறக்காவல் நிலையம், திருச்சி இரயில்வே மண்டலத்தில் திருப்பூர் புறக்காவல் நிலையம் ஆகியவற்றை காவல் நிலையங்களாக 2.96 கோடி ரூபாய்ச் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

26. சென்னை நகரத்தில் எம்.எம். காலனியில் உள்ள எம்.2 காவல் நிலையத்தை 4ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல்

> "31.12.1988 வரை குழல் ஊதும் காவலர்களாக பணியமர்த்தப்பட்ட 55 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டில் முறையான இரண்டாம் நிலைக் காவலர்களாக மாற்றப்பட்டு, பத்து ஆண்டு காவல் பணி முடித்த நிலையில், 31.12.2004 முதல், முதல்நிலைக் காவலர்களாக பதவி தரம் உயர்த்தப்படுவார்கள்."

நிலையமாகவும், மாங்காட்டில் உள்ள டி.14 காவல் நிலையத்தை 4ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், குன்றத்தூரில் உள்ள டி.13 காவல் நிலையத்தை 5ஆம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், முத்தா புதுப்பேட்டையில் உள்ள டி.8 காவல் நிலையத்தை நான்காம் தரத்திலிருந்து இரண்டாம் தர காவல் நிலையமாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்பாக்கத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும், கடலூர் மாவட்டத்தில் சிதம்பரத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தருமபுரி மாவட்டத்தில் மதிகோண் பாளையத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரத்தில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை மூன்றாம் தர காவல் நிலையமாகவும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊத்தங்கரையில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும், மதுரை மாவட்டத்தில் ஒத்தக்கடையில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை மூன்றாந்தர காவல் நிலையமாகவும், திருப்பரங்குன்றத்தில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை மூன்றாந்தர காவல் நிலையமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் உள்ள ஐந்தாம் தர காவல் நிலையத்தை நான்காம் தர காவல் நிலையமாகவும், வேலூர் மாவட்டத்தில் (ஞானசேகரன் வேண்டுகோளையேற்று) சத்துவாச்சேரியில் உள்ள நான்காம் தர காவல் நிலையத்தை இரண்டாம் தர காவல் நிலையமாகவும் 4.18 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்த முடிவு செய்யப் பட்டுள்ளது.

27. தமிழ்நாடு காவல்துறையில் மொத்தம் 98,897 காவல் பணியாளர்கள் உள்ளனர். தற்போது 42,016 குடியிருப்புகள் உள்ளன. இதன் மூலம், 42.48 சதவிகித காவல் பணியாளர்களுக்கு வீட்டு வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 56,881 குடியிருப்புகளைக் கட்டுவது அவசியமாகிறது. தற்போது 5,373 காவல் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. அரசு கொள்கையின்படி ஒவ்வொரு ஆண்டும் 3000 குடியிருப்புகள் கட்டப்படுகின்றன. அது போல இந்த ஆண்டும் 3,000 குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்படும். இதற்கு 135 கோடி ரூபாய் ஆகுமென தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

28. தலைமைக் காவலர் ஒருவர் காவல்நிலைய உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 53 என்றும், தலைமைக் காவலர் ஒருவர் ஆயுதப் படையில் இருந்து உதவி ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், உதவி ஆய்வாளர் பதவியிலிருந்து காவல் நிலைய ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்சவரம்பு 55 என்றும், ஆய்வாளர் பதவியிலிருந்து துணைக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற வயது உச்ச வரம்பு 55 என்றும் தற்போது நிபந்தனைகள் உள்ளதால் பெரும்பாலானவர்கள் பதவி உயர்வு பெற முடியாமல் ஓய்வு பெற வேண்டிய நிலைமை உள்ளது.



அரசுப் பணிகள் பெரும்பாலானவற்றில் இவ்வாறு வயது உச்ச வரம்பு இல்லாத நிலை உள்ளதால், காவல் துறையினர் இந்த நிபந்தனை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே, பதவி உயர்வு பெற தற்போது இவர்களுக்குள்ள இந்த வயது உச்சவரம்பு அறவே நீக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். வயது உச்ச வரம்பை நீக்குவதன் காரணமாக உடனடியாக 450 காவல் துறை அதிகாரிகள் மற்றும் சார்நிலை காவல் பணியாளர்கள் பயனடைவதோடு, வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பல்லாயிரவர் பயனடைவர்.

29. தமிழ்நாடு காவல்துறை சார்புப் பணி சிறப்பு விதியின்படி சரக பதவி உயர்வுக்கான வாரியம், எழுத்துத் தேர்வையும், எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு உடற்பயிற்சித் தேர்வுகள் உள்ளிட்ட நேரடித் தேர்வுகளையும் நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற தலைமைக் காவலர்களை உதவி ஆய்வாளர்களாக (உள்ளூர் மற்றும் ஆயுதப்படை) பதவி உயர்வு அளிக்க தேர்ந்தெடுக்கும் முறை தற்போது உள்ளது.

காவல் துறையில், உதவி ஆய்வாளர் பணிக்குக் கீழே உள்ள பதவிகளுக்கோ, உதவி ஆய்வாளர் பணிக்கு மேல் உள்ள பதவிகளுக்கோ இத்தகைய பதவி உயர்வுக்கான தேர்வுகள் நடத்தப்படுவதில்லை. எனவே, தலைமைக் காவலர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கான தேர்வுகளைத் தற்போது எழுதி வருகின்றனர். இத்தகைய போக்கு தலைமைக் காவலர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பணிமூப்பு மற்றும் பணிப் பதிவேடுகளை ஆதாரமாகக் கொண்டு, இதர பதவிகளுக்கு பதவி உயர்வு அளிப்பதைப் போன்று, இவர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை தலைமைக் காவலர்களிடையே நீண்ட பல ஆண்டுகளாக இருந்து வருவதையேற்று, இந்த அரசு இனி தலைமைக் காவலர் பதவியிலிருந்து உதவி ஆய்வாளராக பதவி உயர்வுக்கு நடைபெறும் தேர்வு முறையை ரத்து செய்கிறது.

30. பத்தாயிரம் இரண்டாம் நிலைக் காவலர்களை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டு, அதிலே முதற்கட்டமாக இந்த ஆண்டு 5,000 பேரை தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

31. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் காவலர் குடும்பங்களைச் சார்ந்த பெண்களுக்குப் பொருளாதாரப் பயன்கள் கிடைக்கும் வகையில், ஏற்கெனவே தி.மு. கழக ஆட்சியில் நடைமுறையில் இருந்தது போல், தமிழ்நாடு சிறப்புக் காவலர் பெண்கள் பனியன் தயாரிப்போர் தொழில் கூட்டுறவு சங்கத்திலிருந்து நேரடியாக விலைப் புள்ளிகள் பெற்று பனியன்களை தயாரித்து வழங்கிட இந்தச் சங்கத்திற்கு ஆணைகள் வழங்கப்படும்.

32. இதுவரை தமிழ்நாடு ஆயுதப் படையில் பணியாற்றும் காவலர்களுக்கு விடுப்புப் பயணச் சலுகை (Leave Travel Concession) கிடையாது.

இனி அவர்களுக்கு காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு இருப்பதைப் போல விடுப்புப் பயணச் சலுகை வழங்கப்படும்.

33. காவல் துறையில் பணியாற்றுவோர் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்க வேண்டிய நிலையில் பணியாற்றி வருகிறார்கள். சமூக விரோத சக்திகளையும் தொடர்ந்து கொடும் குற்றங்களைப் புரிவதையே தொழிலாகக் கொண்டிருப்போரையும் அடக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது காவல் துறையில் இருப்போர் உயிரையே பணயம் வைத்து கடமைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு இடர்ப்படி என்ற தலைப்பில் ஊக்க நிதி மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிதியின் அளவு நெடுங்காலமாக உயர்த்தப் படாமலே இருந்து வருகிறது. எனவே காவலர் முதல் ஆய்வாளர் வரை தற்போது மாதம் ஒன்றுக்கு தலா 60 ரூபாய் என்ற அளவில் வழங்கப்படும் இடர்ப்படியை இனி 120 ரூபாயாக உயர்த்துவது என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அதைப் போலவே துணைக் கண்காணிப்பாளர்களும், கூடுதல் கண்காணிப்பாளர்களும் தற்போது இடர்ப்படியாகப் பெற்று வரும் ரூபாய் 70 என்பதை இனி 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இந்த உயர்வு 1–9–2006 முதல் காவல் துறையில் நடைமுறைக்கு வரும்.

34. காவல் துறையில் "இடர்ப்படி" உயர்த்துவது என்று முடிவெடுக்கப்பட்டதைப் போலவே, தீயணைப்புத் துறையிலும் தீயணைப்போருக்கு (Fireman) தற்போதுள்ள இடர்ப்படி மாதம் ஒன்றுக்கு நாற்பது ரூபாய் என்பதை இனி 120 ரூபாயாக உயர்த்துவதென்றும், மாவட்டத் தீயணைப்புத் துறை அலுவலருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 60 ரூபாய் என்பதை 140 ரூபாயாக உயர்த்துவது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்வு 1–9–2006 முதல் அமலுக்கு வரும்.

35. முதல் தகவல் அறிக்கைக்கான படிவங்களை அச்சியற்றுவதிலும், வினியோகிப்பதிலும் சரியான நெறிமுறைகள் கையாளப்படாத காரணத்தால் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனைக் கருத்திற் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கான படிவங்களை அரசு அச்சகங்களில் மட்டுமே அச்சியற்ற வேண்டுமென்றும், தனியார் அச்சகங்களில் அச்சியற்றும் நடைமுறையை அறவே ஒழித்திட வேண்டுமென்றும் அரசு அச்சகங்களில் படிவங்களை அச்சியற்றும்போது "பரிசு சீட்டு"க்களை அச்சியற்றிய போது மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முறைகள் அனைத்தையும் கையாண்டு அச்சியற்றப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

36. காவல் நிலையங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது பற்றி ஓர் அறிவிப்பு.

சம்பவம் எந்தக் காவல் நிலைய எல்லையில் நடைபெற்றது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், வழக்கு பதிவு செய்யத்தக்க குற்றம் நிகழ்ந்துள்ளதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் பெறப்படும்போது, நிலைய அதிகாரி, முதல் தகவல் அறிக்கையை அங்கேயே பதிவு செய்து, தக்க சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சம்பவம் தங்கள் எல்லைக்குள் நடைபெறவில்லை என்ற காரணத்தைக் கூறி, புகார் மனுவினை ஏற்றிட மறுக்கக் கூடாது.

பிற காவல் நிலைய எல்லைக்குள் குற்றம் நிகழ்ந்துள்ளதாக புகாரில் குறிப்பிடப் பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு, மேல் நடவடிக்கைக்காக அந்த முதல் தகவல் அறிக்கை மாற்றம் செய்யப்படும்.

வழக்குப் பதிவு செய்ய அவசியமில்லாத புகார்கள் அளிக்கப்படும்போது, அவை விசாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தால் தக்க தீர்வு காணப்பட வேண்டும்.

அனைத்துப் புகார்களும் பதிவு செய்யப் படுவதிலும், காலதாமதமின்றி சட்டரீதியான தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதிலும், இந்த அரசு முனைப்பாக செயல்படும்.

37. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப் பேரவை குழுத் தலைவர் சிவபுண்ணியம் அவர்கள் நேரிலும், இங்கே பேசும்போது கூறிய கோரிக்கையினையேற்று அவரது தொகுதியில் உள்ள திருமக்கோட்டை என்ற ஊரை மையப்படுத்தி புதிய காவல் நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தருவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

38. தேர்தல் அறிக்கையிலும், நிதி நிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டுள்ள மூன்றாவது போலீஸ் கமிஷன் தலைவராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஆர். பூர்ணலிங்கம் அவர்களையும்; துணைத் தலைவராக சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களையும்; உறுப்பினர்களாக ஓய்வுபெற்ற டி.ஜி.பி. திரு.பி. காளிமுத்து, மற்றும் ஓய்வு பெற்ற சிறைத்துறை டி.ஜி.பி. திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களையும், உறுப்பினர் செயலாளராக திரு. ராமானுஜம், ஐ.பி.எஸ். அவர்களையும் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

39. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் தேவைக்கேற்ப போக்குவரத்துப் பிரச்சினைகளை கையாளவும் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கவும், வளர்ந்த நாடுகளில் உள்ளது போல சமீபத்திய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை (Latest High Tech Gadgets) கொண்ட நடமாடும் கண்காணிப்புப் பிரிவுகளை காவல் துறையில் ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி, இருங்காட்டுக் கோட்டையில் உள்ள ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் நல்லெண்ண அடிப்படையில் (as a measure of goodwill) சென்னைப் பெருநகர காவல் துறையினரின் பயன்பாட்டுக்கென குளிர்சாதன வசதியுடன் கூடிய 100 ஆக்சண்ட் ரகக் கார்களை நன்கொடையாக வழங்கிட முன் வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாகனங்களில் வளர்ந்த நாடுகளில் கையாளும் சமீபத்திய தொழில்நுட்ப சாதனங்களைப் பொருத்தி காவல் துறையினர் கண்காணிப்பு மற்றும் நெறிமுறைப்படுத்தும் பணிகளை மேற்கொள்வார்கள். இந்தக் கார்களை பயன்படுத்தும் அதிகாரிகள் கார்களுக்காக தனியே ஓட்டுநர்களை நியமனம் செய்து கொள்ளாமல் தாமே ஓட்டி சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்துகளை கண்காணித்து நெறிமுறைப்படுத்தும் பணிகளைக் கவனிப்பார்கள். இது ஒரு முன்னோடித் திட்டமாக சென்னை மாநகரில் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்படும். இந்தியாவிலேயே முன் மாதிரியாக செயல்படுத்தவிருக்கும் இத்திட்டம் வெற்றி அடைந்த பிறகு தமிழகத்தின் மற்ற மாநகரப் பகுதிகளிலும் படிப்படியாக விரிவு படுத்தப்படும்.

❖ ❖ ❖





# 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் ரூ.750 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்

## 15-9-2006 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

இன்று "பேரறிஞர் அண்ணா" அவர்கள் பிறந்த நாள் அனைவரும் "அண்ணா வாழ்க" என்று முழக்கமிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பெருமக்களும், ஆன்றோரும் சான்றோரும் இந்த வட்டாரத்திலே உள்ள சாதாரண சாமான்ய மக்களும், பாட்டாளி மக்களும், உழவர் பெருங்குடி மக்களும் திரண்டுள்ள இந்த மாபெரும் நிகழ்ச்சியில் – அண்ணா பிறந்த இந்த மாவட்டத்தில் தி.மு.கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய வெற்றியை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்ற தொடரில், அந்த வாக்குறுதிகளில் ஒன்றான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற விழா இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சட்டமன்ற உறுப்பினர் யசோதா அவர்கள், அந்த வாய்ப்பு 234 தொகுதிகள் இருந்தும் கூட யாருக்கும் கிடைக்காமல் தனக்குக் கிடைத்ததாக இங்கே பெருமிதம் கொண்டார். அவருடைய பெயரே யசோதா புராணக் கதையில் கண்ணன்; வாசுதேவனுக்கும் தேவகிக்கும் பிறந்தாலும்கூட, அவனை வளர்த்தது யசோதாதான். கண்ணன் நிலைதான் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்த எண்ணத்தை வெளியிட்டு அதை செயலாக்கியவன் சேப்பாக்கம் தொகுதிக்குச் சொந்தக்காரனாக (கலைஞர்) இருந்தாலும்கூட தேவகியினுடைய பிள்ளை யசோதாவினால் வளர்க்கப்பட்டதைப் போல இப்பொழுது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வளர்க்கின்ற பொறுப்பு, அதை வாழ்த்துகின்ற பொறுப்பு, அதற்கான விழாவில் முக்கிய பங்கேற்கின்ற பொறுப்பு யசோதா அம்மையாருக்கு ஏற்பட்டிருக்கின்றது. மற்ற வளர்ப்பு மகனைப்போல வளர்த்துவிடாமல், இதை வளமான வளர்ப்பு மகனாக, வலிமையுள்ள வளர்ப்பு மகனாக, நாணயமான வளர்ப்புமகனாக அவர் வளர்ப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற காரணத்தால்தான் இந்தத் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, அதிலும் அண்ணா பிறந்த மாவட்டத்தில் அமைந்துள்ள இந்தத் தொகுதியிலே இந்த விழாவை ஏற்பாடு செய்து நம்முடைய தோழமைக் கட்சிகளின் தலைவர்களை, பிரதிநிதிகளை எல்லாம் அழைத்து உங்களிடையே இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வழங்குகின்ற பேற்றினை நான் பெற்றிருக்கிறேன்.

### ரூ. 750 கோடி ஒதுக்கீடு

இன்றைய தினமும், நாளைய தினம் சேர்ந்து, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகின்ற தொடக்க விழா நிகழ்ச்சியிலே வழங்குகின்ற பெட்டிகளின் எண்ணிக்கை 25 ஆயிரத்து 245. முதலில் 30 ஆயிரம் பெட்டிகள் என்று அறிவிக்கப்பட்டு, சரியான கணக்கெடுப்பில் கொஞ்சம் குறைந்து 25 ஆயிரத்து 245 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை தொடக்க விழாவிலே இன்றும், நாளைய தினம் அமைச்சர்கள் வழங்குகின்ற விழாவிலும் அளிப்பது என்றும், இதோடு நிறுத்தி விடாமல் தொடர்ந்து இந்த நிதியாண்டில் – அதாவது அடுத்த பட்ஜெட் படிக்கப்படுவதற்கு முன்பு தொடர்ந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வண்ணத் தொலைக்காட்சி வசதி இல்லாத வீடுகளுக்கு வழங்க 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சில பேர் "இதற்கு நிதி எங்கே ? நிதி எங்கே ?" என்று கேட்டார்கள். அந்த நிதியை எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று நிதிநிலை அறிக்கையிலே தொடக்கத்திலேயே எடுத்துக்காட்டியிருக்கிறோம். இப்படி இன்றைக்கு தொடங்கி நாளைய தினம் வழங்க இருக்கின்ற தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி 9 கோடி ரூபாய்தான். 9கோடி ரூபாய்க்கு ஏறத்தாழ 30 ஆயிரம் பெட்டிகளை வழங்க முடிகிறது. என்றால், 750 கோடி ரூபாய்க்கு 25 இலட்சம் பெட்டிகள் வழங்க முடியும். வழங்கத்தான் போகிறோம். அதை இந்த ஆண்டுக்குள்ளாக செய்து முடிக்க போகிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு நமக்கென்று மக்கள் அளித்த தீர்ப்பின்படி ஆண்டுதோறும் தொடர்ந்து "ஐந்தாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே கிடையாது தமிழகத்தில்" என்கின்ற அளவுக்கு இந்தப் பெட்டிகள் வழங்கப்படும். வேறிடத்திலே சில பெட்டிகள் பழைய காலத்திலே வழங்கப்பட்டதுண்டு. அந்தப்பெட்டி அல்ல நாம் வழங்கின்ற பெட்டி. இது உலகச் செய்திகளையெல்லாம் அறிவிக்கின்ற பெட்டி. கலையை விளக்குகின்ற பெட்டி. இலக்கியத்தை விளக்குகின்ற





பெட்டி. கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற பெட்டி. இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. இது எண்ணச் சோலையாக அமைகின்ற பெட்டி. இந்தப் பெட்டியை வழங்கப் போகிறோம் என்று அறிவித்தவுடன், யார் யாரோ என்னென்னவோ பேசினார்கள். அதையெல்லாம் எனக்கு முன்னால் இங்கே பேசிய அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த இந்தக் குழுவினுடைய உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அதற்கெல்லாம் விரிவான, விளக்கமான விடைகளைத் தேடிக் கொண்டிருக்கப் போவதில்லை.

"முப்பதாயிரம் பெட்டிகள்தானாம்" என்று முணு முணுக்கிறார்கள் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள். எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் அப்படி முணுமுணுத்தால் அது நியாயம். ஏனென்றால், எதிர்க்கட்சி என்று ஒன்று இருந்தால் எதையாவது சொல்ல வேண்டும். எதுவுமே சொல்லக்கூடாது என்று தடுப்பது ஜனநாயகம் ஆகாது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ன சொல்கிறது என்று உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தால்தான், ஆளுங்கட்சியே உருப்படும். எனக்கு நன்றாகத் தெரியும்.

### வள்ளுவரின் வாக்கு

"நட்பு என்பது ஒருவரை ஒருவர் நேசிப்பது மாத்திரமல்ல; சிரித்து மகிழ்வது மாத்திரமல்ல; தவறு காணுகிற நேரத்தில் இடித்துரைக்க வேண்டும்.

**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானுங் கெடும்**

இடித்துச் சொல்பவர்கள் இல்லாத மன்னன், யாரும் கெடுக்கத் தேவையில்லாமலே தானே கெட்டு விடுவான்."

என்று ஒரு எதிர்க்கட்சியினுடைய அவசியத்தை திருவள்ளுவர் – ஒரு நண்பர் எப்படி இருக்க வேண்டும் என்ற அந்தக் கருத்தினை திருக்குறளிலே அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அப்படிப்பட்ட நண்பர்கள் எங்களுக்கு வாய்க்கவில்லை. அப்படி வாய்த்தவர்கள் எல்லாம் தோழமைக் கட்சி நண்பர்களாகத்தான் இருக்கிறார்களே அல்லாமல், எதிர்க்கட்சியிலே அவர்கள் இல்லை. தோழமைக்கட்சியிலே உள்ளவர்கள், இப்பொழுது இதற்காக மாறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வள்ளுவருடைய வாக்கை நிறைவேற்ற வேண்டுமே என்று தி.மு.கழக ஆட்சியின் தோழமைக்கட்சித் தலைவர்களாக இருந்தாலும், "இடித்துச் சொல்வதற்காகவாவது ஒரு நாள் நாம் இப்படி மாறிக் கொள்வோம்" என்று மாறிக்கொண்டு எங்களுக்கு அறிவுரை கூறவேண்டிய அவசியத்திலே நிற்கிறார்கள். அது எங்களுக்கு தேவைப்படுகிறது. அந்தத் தேவையை நாங்கள் உணர்ந்து, அதை வரவேற்கிற காரணத்தால்தான், நாங்கள் ஒழுங்கான பாதையில், நீங்களெல்லாம் பாராட்டக்கூடிய அளவிற்கு நடைபோட முடிகிறது என்பதை நான் உணராதவன் இல்லை. அந்த வகையிலேதான் – முப்பதாயிரம் பெட்டிகள்தான் கொடுக்கப் போகிறார்கள் என்று முணுமுணுத்தபோது நான் அவர்களைப் பற்றி கவலைப்படவில்லை. எதிர்க்கட்சிகளை அலட்சியப்படுத்தி – கவலைப் படவில்லை என்று சொல்லவில்லை. அவர்கள்

“ஐந்தாண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே கிடையாது தமிழகத்தில்” என்கின்ற அளவுக்கு இந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

சொல்லித்தான் ஆக வேண்டும். ஆகவே சொல்கிறார்கள் என்ற நிலையிலே எதிர்க்கட்சிக்கு ஜனநாயக ரீதியிலே தரவேண்டிய மதிப்பை அளித்து நான் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். ஆனால், அதையே சாக்காக வைத்துக்கொண்டு பத்திரிகைகள் சில – முப்பதாயிரம்தான் கொடுக்கப் போகிறார், ஏமாற்றுகிறார் என்ற ரீதியிலும், பிரபல பத்திரிகைகள், சில வாரப் பத்திரிகைகள், நல்ல பத்திரிகைகள், நாணயமான பத்திரிகைகள், நடுநிலைப் பத்திரிகைகள் என்று நான் எண்ணுகின்ற ஏடுகள் கூட, “முப்பதாயிரம் தொலைக் காட்சிப் பெட்டிகள்தான், 6 கோடி தமிழ் மக்கள் வாழுகிற தமிழகத்தில் பாக்கி பேருக்கு அவர் என்ன கொடுக்கப் போகிறார்'' என்றெல்லாம் இன்றளவும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். படிப்படியாகத்தான் எதையும் செய்ய முடியும்.

## வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

இந்த மேடைக்கு வரவேண்டும் என்றால் அங்கே இருக்கின்ற ஒவ்வொரு படியிலும் கால்வைத்து நடந்துதான் இங்கே மேடைக்கு வர முடியும். அங்கிருந்து தாவ முடியாது. தாவினால் அவன் மனிதன் அல்ல. தாவமுடியாது. தாவக்கூடாது. நாம் மனிதர்கள் என்பதால், காலை வைத்து நடந்து ஒவ்வொரு படியாக பாதம் பதித்துத்தான் மேடைக்கு வரவேண்டும்.

கிராமங்களில் கல்யாண வீடுகளுக்குப் போகிறோம், கல்யாணம் முடிந்து விருந்து வைக்கிறார்கள். சாப்பிடுகிறோம். சாப்பிட்டு வீட்டுக்கு வந்த பிறகு, பக்கத்து வீட்டுக்காரர், “இன்றைக்கு எத்தனை பந்தி'' என்று கேட்கிறார். “நான்கு பந்தி போட்டார்கள் நான் மூன்றாவது பந்தியில் சாப்பிட்டேன்'' என்று சொல்கிறோம்.

நான்கு பந்தியையும் சேர்த்து ஏன் ஒரே நேரத்தில் போடவில்லை. இடம் குறைவு. மக்கள் அதிகம். தயாரிக்கப்பட்ட பதார்த்தத்தின் அளவு நமக்குத் தெரியும். வந்திருக்கின்ற விருந்தினரின் எண்ணிக்கையும் நமக்குத் தெரியும். எனவேதான், நான்கு பந்தி, ஐந்து பந்தி என்று போட்டு திருமண விருந்தை நடத்தி முடிக்கிறோம். “எல்லோரும் வந்துவிட்டீர்கள், பாவம் உங்களையெல்லாம் தனித்தனியாக உட்கார வைக்க நான் பிரியப்படவில்லை. எல்லோரும் சாப்பிடுங்கள்'' என்று சோறு, குழம்பு எல்லாவற்றையும் கொண்டு வந்து ஒரே இடத்தில் குவித்து ஆளுக்குக் கொஞ்சம் அள்ளிக் கொள்ளுங்கள் என்று சொன்னால், அது விருந்தாக இருக்காது. வேடிக்கையாக ஆகிவிடும். விஷமத்தனமாக ஆகிவிடும். எப்படி ஒரு திருமணத்திற்கு வருகிற விருந்தினர்களை பந்தி பந்தியாக உட்கார வைத்து இரண்டு பந்தி முடிந்தது, மூன்று பந்தி முடிந்தது, நான்காவது பந்தி நடக்கிறது வாருங்கள் என்று அழைத்து, அவர்களை திருப்தியாகச் சாப்பிட்டுப் போங்கள் என்று சொல்லி வழியனுப்பி வைக்கிறோமோ அதைப்போலத்தான், முப்பதாயிரம் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்கிறோம். அடுத்து ஒரு இலட்சம் பெட்டிகள் கொடுப்போம். அதற்கு அடுத்து இரண்டு இலட்சம் பெட்டிகள் கொடுப்போம். கடைசியாக கொடுக்க வேண்டியது முப்பது இலட்சம் பெட்டிகள் என்றால், அல்லது ஒரு கோடி பெட்டிகளே கொடுக்க வேண்டும் என்றாலும் அத்தனையையும் கொடுப்போம், திருமணத்தை நடத்துவோம். “திருப்தியாக சாப்பிட்டு விட்டுப்போங்கள். பந்தி பந்தியாக உட்காருங்கள்'' என்றுதான் சொல்கின்றோம். ஆனால், “பந்தி என்று சொல்கின்றான். பந்தி என்று சொன்னால், எவ்வளவு நேரம் காத்திருக்க முடியும் ?” என்று திருமணத்திற்கு வந்தவர்கள் யாரும் கோபிப்பதில்லை. அவர்களெல்லாம் நாகரிகம் தெரிந்தவர்கள், பண்பாடு புரிந்தவர்கள் அப்படிப்பட்டவர்கள்தான் இன்றைக்கு இந்த அரசில் இதுபோன்ற உதவிகளைப் பெறுகின்றவர்கள் என்ற எண்ணத்திலேதான் எதையும் படிப்படியாகச் செய்கிறோம்.

நாளை மறுநாள் தந்தை பெரியாருடைய பிறந்த நாளில் திருவள்ளூர் மாவட்டத்தில் – நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு தரிசு நிலங்களையும் தருகிறோம். அரசு நிலங்களையும் தருகிறோம். ஏற்கெனவே ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களை பண்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டால் அதையும் தருகிறோம். இப்படி தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் ஏறத்தாழ 25,000 ஏக்கருக்கு மேல் ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை பங்கிட்டு பகிர்ந்தும் பண்படுத்தியும் வழங்குகின்ற நிகழ்ச்சி நாளை மறுநாள் தந்தை பெரியார் பிறந்தநாளில் நடத்தப்படவிருக்கின்றது.



அண்ணா, பெரியாரோடு நாங்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில், கல்விக் கண் திறந்தவராயிற்றே அவர்–அவரை மறக்கலாமா என்ற நன்றி உணர்வோடுதான் அவர் பிறந்த ஜுலை 15–ஆம் தேதி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் விழா எடுக்கவேண்டும். கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று ஜுலை 15–ஆம் நாளை பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளை கொண்டாடினோம். இதை ஏதோ அரசாணையாக மட்டும் பிறப்பித்தால் அடுத்து வருகின்ற ஆட்சி, எப்படி இருக்குமோ ? கடந்த ஆட்சியைப் போலிருந்தால் என்னாகுமோ ? என்ற அச்சத்தின் காரணமாகத்தான், அதை சட்டமாகவே ஆக்கினோம். சட்டமாக ஆக்கிவிட்டால், சட்டமன்றத்தில்தான் அதை மாற்ற வேண்டும். அது சாமான்யமாக நடக்காது. எனவே சட்டமாகவே ஆக்கியிருக்கிறோம். ஜி.ஓ. போட்டால் மாற்றி விடுவார்கள். ஜி.ஓ.வுக்கே ஆங்கிலத்தில் “G O” - GO தான். அது போய்விடும். அதனால், அதை சட்டமாகவே போட்டிருக்கிறோம்.

## செய்நேர்த்தி செய்து பண்படுத்தி நிலம் வழங்கப்படும்

அதைப்போல இன்றைக்கு அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில் வண்ணத் தொலைக்காட்சியை தொலைக்காட்சி இல்லாத வீடுகளுக்கு ஏழை எளியவர்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, சாதாரண சாமான்ய மக்களுக்கு வழங்குகின்றோம். நாளை மறுநாள் தந்தை பெரியார் பிறந்த நாளில் நிலம் வழங்குகின்றோம். நாங்கள் குறிப்பிட்டது 2 ஏக்கர் நிலம் என்றால் கூட, இங்கே பேசியவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கறாராக 2 ஏக்கர். அதிலே ஒரு அங்குலம், இரண்டு அங்குலம் குறைந்தால், நாங்கள் விமர்சிப்போம் என்று யாரும் சொல்லக்கூடாது. அந்த 2 ஏக்கர் நிலம் என்பதில் பண்படுத்தப்பட்ட நிலமாக, நீங்கள் பயன்படுத்துகிற நிலமாக, அது 1 ஏக்கராகக் கூட இருக்கலாம். நான் சாட்சி வைத்துக்கொண்டே சொல்லுகின்றேன். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள் இங்கே வந்திருக்கின்றார்கள். திருவாரூரிலேகூட நான் பேசினேன். தோழர் தா. பாண்டியனை மேடையிலே வைத்துக் கொண்டே பேசினேன். அவரே சொன்னார் “நிலம் என்று கொடுத்தால் போதும். நிலத்தை ஏழை எளியவர்களுக்கு மிட்டா மிராசுதாரர்களிடமிருந்து பிடுங்கியல்ல – அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப – அவர்களுக்கு சட்டப்படி சேர வேண்டிய உரிமையை – ஏழை எளியோர்களுக்குத் தருகின்ற அந்தக் காரியத்தை ஒரு அரசு செய்ய வேண்டும். அதுதான் எங்கள் செங்கொடி இயக்கத்தினுடைய கொள்கை'' என்று சொன்னார்கள் அல்லவா ? அந்தக் கொள்கையை நிறைவேற்றுகின்ற வகையில் நான் சொன்னேன். சட்டசபையிலேயே எதிர்க்கட்சித் தலைவர்கூட கேட்டார் – எவ்வளவு கொடுக்கப் போகிறாய் ? எங்கே இருக்கின்றது அவ்வளவு நிலம் ? என்றெல்லாம்கூட கேட்டார்.

எனக்கொரு அச்சம், அவ்வளவு நிலம் வைத்துவிட்டு வந்தோமே – எங்கே இருக்கிறது நிலம் என்கிறார்களே ?



அந்த நிலத்தை எல்லாம் என்ன செய்தார்கள்? அப்படி ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டு விட்டது.

நான் சொன்னேன் அப்பொழுது கையளவு நிலம் இருந்தாலும், அதை ஜமீன்தாருக்குக் கொடுக்கமாட்டேன். ஏழை எளிய விவசாயிகளுக்குத்தான் அதைக் கொடுப்பேன் என்று அன்றைக்கு உறுதி அளித்தேன். அந்த உறுதியை உயிர் இருக்கிற வரையிலே காப்பாற்றுவேன் என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

அதனால் 2 ஏக்கரா? 1 ஏக்கரா? என்ற அளவல்ல. எத்தனை பேர் இதிலே பயன் பெற்றார்கள்? எப்படி பயன் பெற்றார்கள்? மூன்றாகப் பிரித்திருக்கிறோம். அண்மையிலேகூட நமது அமைச்சர் பெருமக்களை வருவாய்த்துறை அமைச்சரை மேற்கு வங்கத்திற்கு அனுப்பி, அங்கு எப்படி நிலம் பங்கிட்டுத் தருகிறார்கள் என்பதைப் பார்த்து வருமாறு கேட்டிருந்தேன். அங்கே பல இலட்சக்கணக்கான மக்களுக்கு நிலத்தை பகிர்ந்தளித்திருக்கிறார்கள் என்றாலும்கூட இன்னமும் அது முழுமையாக அங்கு முடியவில்லை என்று சொன்னார்கள். ஓரளவுதான் அங்கேகூட நடைபெற்றிருக்கிறது. நாம் அங்கு எந்த அளவுக்கு நடைபெறுகிறதோ அதைவிட, அதற்கு நேராக இன்னும் சொல்லப் போனால், அதற்கு மேலாக இந்த நிலங்களை, தரிசு நிலங்களை பாத்தியப்பட்ட நிலம் எங்களுக்கு என்று யாராவது சொன்னால், அவர்களுடைய விருப்பத்தை ஏற்று அதை வாங்கி, அதை செய்நேர்த்தி பண்ணி, கிராமத்தில் சொல்வார்களே செய்நேர்த்தி என்று அப்படி செய்நேர்த்தி செய்து, அவைகளையெல்லாம் பண்படுத்தி, மேன்மைப்படுத்தி, அதை நீங்களே உழுது நீங்களே பயிரிட்டு, நீங்கள் அனுபவித்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்குக் கொடுக்கின்ற அந்தவகை ஒன்று அரசு நிலமாக இருந்தால் அரசு நிலத்தை எடுத்து அவர்களுக்கு "இந்தாருங்கள்" என்று தானமாகக் கொடுக்கின்ற வகை ஒன்று.

## பல கட்டங்களாக தரிசு நிலம் வழங்கப்படும்

இந்த வகையில் எல்லாம் நிலம் வழங்குகின்ற இத்திட்டத்தைத் தான் 17ஆம் தேதி பெரியார் பிறந்தநாளிலே இந்த அரசு தொடங்க இருக்கின்றது. அப்படி கொடுக்கப்படும் நிலம் தமிழகம் முழுவதும் கொடுக்கப்படும். ஒரு கட்டத்தோடு முடிவடைவதில்லை. பல கட்டமாக தொடர்ந்து அந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசு அதிகாரிகள் எங்கெங்கே நிலம் இப்படி வழங்கப்படுவதற்கு இந்த மூன்று வகையிலே எந்த வகையில் வழங்குபடுவதாக இருந்தாலும், அவைகளை வழங்குவதற்கு அரசு அதிகாரிகள் அந்த வட்டாரத்திலே உள்ள பொதுமக்களை அணுகி, விவசாயப் பெருங்குடி மக்களை அணுகி, அவர்களுக்கு நிலங்களை ஒப்டைக்கின்ற அந்த காரியத்தில் ஈடுபடுவார்கள். எனவே, நிலமில்லாமல் இவ்வளவு நிலம் இருக்கின்ற நாட்டில் நிலம் இல்லாத நிலைமை – வாழ முடியாத நிலைமை – கிஞ்சிற்றும் இருக்கக் கூடாது என்ற அந்த உறுதியை நிறைவேற்றத்தான் இந்த அரசு பாடுபட விரும்புகிறது. பணியாற்ற விரும்புகின்றது–அப்படி விரும்புவதை நிறைவேற்றுகின்ற வகையிலே நீங்கள் உங்களுடைய ஆதரவைத் தர வேண்டும் என்றுதான் எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் கேட்டுக் கொண்ட வேண்டுகோள். தம்பி தயாநிதிமாறன், நீங்கள் எப்படி எங்களுக்கு நன்றி கூறப் போகிறீர்கள் என்று மக்களைப் பார்த்துக் கேட்டார். நன்றியை எதிர்பார்த்து இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறவில்லை என்று நான் சொல்லித் கொள்ள விரும்புகின்றேன். நீங்களாக நன்றி கூறினால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. எப்படி நன்றி கூற வேண்டும் என்பதை நம்முடைய தம்பி ஸ்டாலின் சாடையாக உணர்த்தினார். அவர் உணர்த்துவது சுலபம். காரணம், அவரே உள்ளாட்சித்துறை அமைச்சராக இருப்பதால், உள்ளாட்சியைப் பற்றி பொருத்தமாக அவர் பேசிவிட்டார். நான் எல்லோருக்கும் பொதுவான முதல் அமைச்சராக இருப்பதால், உங்களுக்கும் பொதுவானவன் என்ற முறையில் பொதுவான ஒரு வேண்டுகோளை உங்கள் முன்னால் வைக்கின்றேன்.

## சாதி – பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்

இது தமிழ்நாடு – நாம் வாழ்கிற நிலம் தமிழ் நிலம் – நம்முடைய உணர்வுகள் மானத்தின் அடிப்படையிலே உருவான உணர்வுகள். நம்மை மானமுள்ள மனிதர்களாக ஆக்குவதற்கு பாடுபட்டவர்கள் இன்றைக்கு இந்த மண்ணுக்குள்ளே இருக்கிறார்கள். தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும் அவர்கள் எல்லாம் இந்த மண்ணுக்குள்ளே இருக்கிறார்கள். அவர்கள் மண்ணுக்குள்ளே இருந்தாலும், எங்கே இருந்தாலும், நம்முடைய மனதுக்குள்ளேயும் இருக்கிறார்கள் என்கின்ற அந்த உணர்வோடு அவர்கள் வழி நடப்போம் – அவர்கள் கொள்கைகளைப் பின்பற்றுவோம் – சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் – பகுத்தறிவுள்ள சமுதாயத்தைப் படைப்போம் என்ற உறுதிமொழியை இந்த நல்ல விழாவிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அனைவருக்கும் நன்றி கூறி இந்த விழாக் குழுவினர் – இவ்வளவு சிறப்பாக இந்த ஏற்பாடுகளைச் செய்தமைக்காக அவர்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும், என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, இந்தக் குழுவிலே இடம் பெற்றுள்ள நம்முடைய சுதர்சனம் அவர்களும், கோ.க.மணி அவர்களும், கோவிந்தசாமி அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும், அப்துல் பாசித் அவர்களும், ஜெகன்மூர்த்தி அவர்களும் வருகை தந்து விழாவினை சிறப்பித்தமைக்காகவும் நான் அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்து வராதவர்களுக்கும் மானசீகமாக என்னுடைய நன்றியை அவர்களுக்கு அனுப்பி வைத்து விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖





# கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் நெல்லையில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்

**கலைஞர் மு. கருணாநிதி**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



1. சிப்காட் நிறுவனத்தின் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்கள் தொழில் மையங்களாக உருவெடுத்துள்ளன. தினந்தோறும் தமிழகத்தில் தற்போது புதிய தொழில் முதலீட்டுக்கான திட்டங்கள் வந்த வண்ணம் உள்ளன. புதிய முதலீடுகளையேற்று புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தேவைப்படும் நிலங்களுக்கான கோரிக்கைகள் அதிகரித்து வருவதால் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் தொழில் பூங்காக்களை விரிவாக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2,000 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவுள்ளது.

2. ஹுண்டாய், போர்டு, மிட்சுபிஷி, பி.எம்.டபிள்யூ, அசோக் லேலண்ட் போன்ற பெரும் மோட்டார் உற்பத்தி நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற்சாலைகள் அமைத்ததன் காரணமாக சென்னை ஆசியாவின் டெட்ராய்ட் (Detroit) என்று வர்ணிக்கப்படுகிறது. இந்தியாவின் மோட்டார் உதிரிபாகங்கள் உற்பத்தியில், 35 சதவிகிதம் சென்னையில் உற்பத்தி யாகின்றன. இந்த உதிரி பாகங்கள் உற்பத்தியாளர்களில் பலர் பெரும் ஏற்றுமதியாளர்களாகவும் உள்ளனர். இத்துறையில் புதிய முதலீடுகளின் மூலமாக ஏற்படக்கூடிய தேவையை நிறைவு செய்ய ஒரகடம் சிப்காட் தொழில் பூங்காவில் மோட்டார் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Automotive Special Economic Zone) ஏற்படுத்தப்படும்.

3. மிகப்பெரிய சுற்றுலாத் தலமாகவும், கோயில் நகரமாகவும் விளங்கி வரும் மதுரையில் நீண்ட காலமாக பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் மதுரை அருகில் சிப்காட் நிறுவனம் மூலமாக ஒரு புதிய தொழில் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

4. தோல் பதப்படுத்துதல் மற்றும் தோல்பொருள் உற்பத்தி தமிழகத்தின் தொழில் துறையில் நீண்ட காலமாக ஒரு முக்கியப் பங்கு வகித்து வருகிறது. இத்துறையால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினை சரிசெய்யும் வகையில் ரூ.115 கோடி மதிப்பில் 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் ரிவெர்ஸ் ஆஸ்மாசிஸ் (Reverse Osmosis) சாதனங்களை அமைப்பதற்கு நிதியுதவி கோரி மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் நான் நேரடியாக வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

தோல் பதப்படுத்தும் மற்றும் தோல் பொருள் உற்பத்தி வளாகம் ஒன்று அமைப்பதற்கு சென்னை அருகில் சிப்காட் நிறுவனம் மூலமாக 250 ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தோல் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும்.

5. கரூர் மாவட்டம், புகளூரில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2,30,000 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி ஆகி வருகிறது. இந்த உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்போது காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை நவீனப்படுத்தி விரிவாக்கம் செய்வதற்கான திட்டத்தை **மொத்தம் ரூ. 650 கோடியில் செயல்படுத்திட** முடிவெடுக்கப் பட்டுள்ளது. இந்த திட்டத்தினால் ஆண்டொன்றிற்கு கூடுதலாக 1,20,000 மெட்ரிக் டன் உற்பத்தித்திறன் கொண்ட ஒரு புதிய அதிநவீன தொழில் நுட்பத்துடனான காகித இயந்திரம் அமைக்கப் படவுள்ளது. மேலும், இந்த நிறுவனத்தின் சார்பில் ரூ. 30 கோடி முதலீட்டில், ஐந்து புதிய காற்றாலைகளை நிறுவி 6.25 மெகாவாட் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

6. சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி (Cogeneration) செய்வதன் மூலம் அந்த ஆலைகளின் செயல்திறன் அதிகரிப்பதுடன் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கும் உதவுகிறது. கள்ளக்குறிச்சி இரண்டாவது கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ.13.50 கோடி செலவில் 6 மெகாவாட் திறன்கொண்ட ஒரு இணை மின்நிலையம் அமைக்கப்படும்.

7. தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றை நிறைவேற்றும் வகையில் சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 6 கோடி ரூபாய் செலவில் எத்தனால் எனும் எரிபொருள் உற்பத்தி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் பொதுத் துறைகளில் அமையும் முதல் எத்தனால் உற்பத்தி நிலையம் இதுவாகவே இருக்கும்.

8. பெரம்பலூர் மாவட்டம் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டம் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (டிட்கோ) இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தொழிற் பூங்காவுடன் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினையும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தப் பகுதிக்கு படிப்படியாக ரூபாய் 5,000 கோடி அளவிலான முதலீடும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

9. தமிழகத்தில் உள்ள இயற்கை எரிவாயு பெரும்பகுதி காவேரிப்படுகை பகுதியில் காணப்படுகிறது. புதிய ஆய்வு தொழில்நுட்பத்தின் மூலமாக, இந்த இருப்பை பயன்பாட்டிற்குக் கொண்டுவர இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்தில் உள்ள கிருஷ்ணா கோதாவரிப் படுகையிலும் இயற்கை எரிவாயு இருப்பு கண்டறியப்பட்டுள்ளது. தமிழகத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்த இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இக்குறிக்கோளை அடையும் வகையில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஒரு புதிய இணைத்துறை நிறுவனத்தை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அமைக்கும். இப்புதிய நிறுவனம் தமிழகம் முழுவதும் தேவையான குழாய் கட்டமைப்பை அமைத்து இயற்கை எரிவாயு விநியோகத் தொகுப்பினை (Natural gas distribution network) உருவாக்கும். அரசின் இப்புதிய முயற்சி இம்மாநிலத்தின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதோடு தமிழகத்தின் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்கும் மாநில அரசின் வருவாய்ப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும்.

10. தற்போது பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு எடுத்துச் செல்லும் லாரி வாடகையை கரும்பு விவசாயிகளே செலுத்துகின்றனர். பத்து கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக உள்ள



பகுதிகளுக்கான லாரி வாடகையை இந்த ஆலைகளே ஏற்றுக்கொள்கின்றன. தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள மற்றொரு வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வண்ணம், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு பத்து கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளிருந்து கொண்டு வரப்படும் கரும்புக்கான லாரி வாடகையை வரும் அரைவைப் பருவத்திலிருந்து சர்க்கரை ஆலைகளே ஏற்றுக் கொள்ளும். இதனால் கரும்பு விவசாயிகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக 40 கோடி ரூபாய் பயன் கிடைக்கும்.

11. காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் மற்றும் ஒரகடம் பகுதிகள் முக்கியமான தொழில் மையமாக உருவாக்கி வருகிறது. இதனால், தொழிற் சாலைகளின் வசதிக்காக சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே, 24 கிலோ மீட்டர் நீள சிங்கபெருமாள் கோவில் திருப்பெரும்புதூர் சாலை மற்றும் 20 கிலோ மீட்டர் நீள வண்டலூர் வாலாஜாபாத் சாலை ஆகிய சாலைகளின் முக்கியப் பகுதிகளை ஆறு வழித்தடச் சாலையாகவும், பிற பகுதிகளை நான்கு வழித்தடச் சாலையாகவும் சுமார் 300 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பவியல் துறை

1. தகவல் தொழில்நுட்பத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பலன்களை ஒன்று திரட்டி – அத்துறை மேலும் வேகமாகவும் பயனுள்ள வகையிலும் வளர்ச்சி அடைவதற்கு புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கை ஒன்று வகுத்து அறிவிக்கப்படும்.

2. 4.7.2000 அன்று டைடல் தகவல் தொழில் நுட்பப் பூங்கா தொடங்கி வைக்கப்பட்ட போது அறிவிக்கப்பட்டபடியும், தொடர்ந்து தேர்தல் அறிக்கையிலும், நிதி நிலை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடியும் – இரண்டாவது டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று சென்னை தரமணியில் நிறுவப்படும்.

3. தமிழக அரசும், மத்திய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவனமும், தனியார் துறையும் இணைந்து கோவையில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும்.

4. சென்னையில் மட்டும் பெரிதும் மையம் கொண்டுள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி, தமிழ்நாட்டில் உள்ள மற்ற நகரங்களிலும் பரவி பலனளித்திடும் வகையில் மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

5. மத்திய அரசு அறிவித்துள்ள – உலகத் தரத்திலான தகவல் தொழில்நுட்பம், வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றுக்கான இந்தியக் கல்வி நிறுவனம் சென்னைக்கு அருகே நிறுவப்படும்.

6. தகவல் தொழில்நுட்பத் துறையில் வெகுவான முதலீடுகளை ஈர்ப்பதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்திட முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டு, இடைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த தகவல் தொழில்நுட்பப் பணிமுனைப்புக் குழு (I.T. Task Force) ஒன்று மீண்டும் உருவாக்கப்படும்.

7. மின்னணு ஆளுமை (e-governance) நகரங்களில் உள்ள மக்களைப் போலவே கிராமங்களில் உள்ள மக்களுக்கும் பயன் அளித்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு தமிழகம் ஒரு முன்னோடி மின்னணு ஆளுமை மாநிலமாகத் திகழ்ந்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

8. தற்பொழுது சென்னையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்கென தனியே சொந்தமாக கட்டடம் அமைவதற்கேற்ற நிலமும், ஒரு கோடி ரூபாயும் வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

9. முன்னர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, நான்கு வழித் தடங்கள் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டு, இடையில் தொய்வு ஏற்பட்ட, தகவல் தொழில்நுட்ப விரைவுச்சாலை (I.T. Expressway) திட்டத்தின் முதற்கட்டமாக பழைய மாமல்லபுரம் சாலையில் தரமணி முதல் சிறுசேரி வரை உள்ள சாலையை உலகத் தரம் வாய்ந்த ஆறு வழித்தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகள் 205 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இச்சாலையினை மேம்படுத்தும் வகையில் இரண்டாம் கட்டமாக சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையுள்ள சுமார் 25 கிலோ மீட்டர் நீள சாலையை ஆறு வழித் தடங்கள் கொண்ட சாலையாக மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். *




# கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைத்திட அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது

## 18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய தலைமை உரை

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! காவல் துறைத் தலைவர் அவர்களே! அரசு உயர் அதிகாரிகளே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே! காவல்துறை அதிகாரிகளே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.

ஆழிப் பேரலையால் அவதிக்குள்ளாகி அதன் தொடர்ச்சியாக நிவாரணப் பணிகள் நடைபெற்று வரும் மாவட்டங்களின் ஆட்சியர்களை அழைத்து 24.6.2006 அன்று கலந்துரையாடியதற்குப் பிறகு, தமிழகத்திலே உள்ள எல்லா மாவட்டங்களின் ஆட்சியர்களையும், காவல்துறை அதிகாரிகளையும் ஒன்று கூட்டி இன்றைக்குச் சந்தித்து உரையாடுவதில் நான் மிகுந்த உவகை அடைகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் அயராது உழைத்து வரும் இந்த அரசு 13.5.2006 அன்று பதவியேற்றுக் கொண்ட உடனேயே – பதவியேற்ற அரங்கத்திலேயே கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கிடையே – திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் அடையாளமாக – ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்; விவசாயிகளின் பயிர்க்கடன் 7 ஆயிரம் கோடி ரூபாய் அறவே இரத்து; பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டை – என்ற வாக்குறுதிகளுக்கான மூன்று கோப்புகளில் நான் கையெழுத்திட்டேன்.

**"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்"**

அதாவது, செய்யக்கூடாததைச் செய்வதால் கேடு ஏற்படும்; செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும் கேடு ஏற்படும் – என்று அய்யன் திருவள்ளுவர் அறிவுறுத்தியதற்கு ஏற்ப, செய்யக்கூடாததைத் தவிர்த்து, செந்தமிழ் நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை உங்கள் அனைவரது உதவியோடும், மக்களின் மகத்தான ஒத்துழைப்போடும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறோம்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு சட்டப் பேரவை மாண்பமைந்த மன்றம் என்பதால் – பொறுப்பேற்ற இந்த 128 நாட்களுக்குள்ளாகவே – ஆளுநர் உரைக்கும், விவாதத்திற்கும் 2006, மே மாதம் 24ஆம் நாள் முதல் மே மாதம் 31ஆம் நாள் வரையிலும், நிதிநிலை அறிக்கைக்கும், விவாதத்திற்கும், துறை வாரியான மானியக் கோரிக்கைகளுக்கும் 2006, ஜூலை 22ஆம் நாள் முதல் செப்டம்பர் 2ஆம் நாள் வரையிலும், சட்டப் பேரவையைக் கூட்டி பல்வேறு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வழி கண்டிருக்கிறோம் என்பதையும், இதுவரை 9 முறை அமைச்சரவையைக் கூட்டி நாட்டு மக்களுக்கான நல்ல முடிவுகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

தேர்தல் அறிக்கையில் மொத்தம் 177 வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம். 62 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். நிதி ஒதுக்கீடு தேவையில்லாத 74 வாக்குறுதிகளில், 45 வாக்குறுதிகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலாவது ஆண்டிலேயே 107 வாக்குறுதிகளை, அதாவது சுமார் மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம்.

அப்படி மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம் என்று நான் உறுதியாகச் சொல்கிறேன் என்றால்; உங்கள் அனைவரது உழைப்பையும், அறிவையும், அனுபவத்தையும் நம்பித்தான் அப்படிச் சொல்கின்றேன். வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டுவதாலேயே – நிதியை ஒதுக்கீடு செய்வதாலேயே அல்லது சட்டத்தை இயற்றுவதாலேயே வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேறி விடும் என்று நான் நம்பிடத் தயாராக இல்லை. தலைமைச் செயலகத்திலே தீட்டப்படுகிற திட்டங்களை, திட்டங்களின் வேர்களாக உள்ள நோக்கங்களை நீங்கள் அனைவரும் செம்மையாகப் புரிந்து கொண்டு, ஒதுக்கப்படுகிற நிதியை முழுமையாகப் பயன்படுத்தி, சமுதாயத்தின் எந்தப் பிரிவு மக்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறதோ அவர்களுக்கு அந்த நிதியின் பலன்கள் அனைத்தும் சென்றிடும் வகையில் செயல்படுத்தினால்தான் வாக்குறுதிகள் நல்ல முறையிலே நிறைவேறியதாக நாடு ஏற்றுக் கொள்ளும். எனவே, அந்தத் திசையிலே நீங்கள் அனைவரும் உங்களுடைய நேரத்தையும், நினைப்பையும் செலவிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

### சட்டம்–ஒழுங்கு

நமது மாநிலத்தில் சட்டம்–ஒழுங்கு நிலைமை – இதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் நிறைவளிக்கத்தக்க வகையிலே அமைந்துள்ளது. இதற்குக் காரணமான காவல்துறை அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சியர்களையும் பாராட்டி எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாத நடவடிக்கைகளை நமது தமிழகத்தில் தலை தூக்கவிடாமல் தடுப்பதும், களைவதும் நமது நுண்ணறிவிலும், முன்னெச்சரிக்கை உணர்விலும், நடவடிக்கையிலும்தான் அமைந்திருக்கிறது. உங்களது மாவட்டங்களில் பிரச்சினைக்குரிய இடங்கள், புதிய புதிய பிரச்சினைகளுக்கு உட்படுத்தப்படும் இடங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்து, எவ்வித அசம்பாவிதமும், எந்த நேரத்திலும் ஏற்பட்டுவிடாதபடி தொடர்ந்து கண்காணித்திட வேண்டியது அவசியம்.

### காவல் கைதி மரணங்கள்

காவலில் உள்ள கைதி மரணமடைவது கடுமையானதும் கொடுமையானதும் ஆகும். அத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படாவண்ணம் காவல் துறை அதிகாரிகள் கவனத்துடனும், கனிவுடனும் செயல்பட்டு மனித உரிமைகளைப் பேணிக் காத்திட உறுதியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### அகதிகள் வருகை

தற்போது இலங்கையில் பதற்ற நிலை காரணமாக 12–01–2006 முதல் மீண்டும் இலங்கைத் தமிழர்கள் தமக்கு வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் தேடும் அகதிகளாக வரத் தொடங்கியுள்ளனர். இதுவரை 13 ஆயிரத்து 844 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்துள்ளனர். அகதிகளாக வரும் தமிழர்களுக்கு "உடுக்கை இழந்தவன் கை போல" உதவிடுவது நமது உணர்வோடு கலந்த கடமையாகும். அதே நேரத்தில், அகதிகள் என்ற போர்வையில் சமூக விரோதிகளை நாம் நமது மண்ணில் அனுமதிக்கக் கூடாது. எனவே, உண்மையான அகதிகள் யார், சமூக விரோதிகள் யார் என்பதனை ஆழ்ந்து பகுத்தறியக் காவல் துறையினரும், வருவாய்த் துறையினரும் இணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### போக்குவரத்து நெரிசல்

தற்போது பெருகிவரும் மக்கள் தொகை, வளர்ந்து வரும் நகரங்கள், பல்கிப் பெருகி வரும் வாகனங்கள், புதிய புதிய தொழிற் சாலைகள் போன்றவற்றால் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி வருகிறது. இதனைக் காவலர்கள் ஒழுங்குபடுத்துவது மிகவும் அவசியம். மேலும், நாளிதழ்களைத் தினமும் காலையில் படிக்கும்போது, சாலை விபத்து இல்லாத நாளே இல்லை என்ற செய்திதான் நமது நெஞ்சத்தை உலுக்குகிறது. சாலை விபத்தினால் குறைந்தது நாள் ஒன்றிற்கு 10 மனித உயிர்கள் பலியாகின்றன என்பது நம்மை பதைபதைக்க வைக்கும் சோகமாகும். காவல் துறையினரும், போக்குவரத்துத் துறையினரும் இணைந்து சோதனைச் சாவடிகள் அமைத்து வாகனத் தணிக்கை மேற்கொள்ள வேண்டும். மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டுபவர்களின் ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும். காவல் துறையும் போக்குவரத்துத் துறையும் இணைந்து கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் சாலை விபத்துகள் குறையும். மாவட்ட ஆட்சியர்கள் சட்டம்–ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தில் இதனை ஒரு முக்கியப் பொருளாக விவாதிக்க வேண்டும்.

> தேர்தல் அறிக்கையில் மொத்தம் 177 வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறோம். 62 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். நிதி ஒதுக்கீடு தேவையில்லாத 74 வாக்குறுதிகளில், 45 வாக்குறுதிகளில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் முதலாவது ஆண்டிலேயே 107 வாக்குறுதிகளை, அதாவது சுமார் மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம்.

### ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம்

இந்தியத் துணைக் கண்டத்திலேயே 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இத்திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு, ஏழை மக்கள் அனைவரும் எவ்வித இடர்ப்பாடும் இன்றி, தரமான அரிசியைப் பெற்றிடச் செய்வது மாவட்ட ஆட்சியர்களின் முதன்மைப் பணியாகும். இத்திட்ட செயலாக்கத்தில் தரமான அரிசியைத் தொடர்ச்சியாக வழங்குதல், பொது விநியோகத் திட்டத்திற்கான அரிசி கடத்தப்படுவதைக் கட்டுப்படுத்துதல், போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிதல், நியாயவிலைக் கடைகளை மேற்பார்வை யிடுதல், எல்லையோர மாவட்டங்களில் அரிசிக் கடத்தலைத் தடுத்து நிறுத்துதல் போன்ற ஆக்க பூர்வமான காரியங்களை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

### விவசாய கூட்டுறவுக் கடன் தள்ளுபடி மற்றும் புதிய பயிர்க்கடன் வழங்குதல்

விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய கடன் சுமையைத் தாங்க முடியாமல் தள்ளாடி அல்லல்படுவதைக் கருத்தில் கொண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன், இதுவரை எந்த மாநில அரசும் மேற்கொள்ளாத நடவடிக்கையாக 31–3–2006 வரை கூட்டுறவு வங்கிகளுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்களையும், அவற்றின் மீதான வட்டிகளையும் தள்ளுபடி செய்ததால், 6–9–2006 வரை 5 ஆயிரத்து 813 கோடி ரூபாய் கடன்கள் இரத்து செய்யப்பட்டு; 24 இலட்சத்து 26 ஆயிரத்து 566 கடன்தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு ஆயிரத்து 235 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 6–9–2006 வரை கூட்டுறவு வங்கிகள் 311 கோடியே 50 இலட்சம் ரூபாயை பயிர்க்கடனாக வழங்கியுள்ளன. தள்ளுபடி செய்யப்பட்டுள்ள தொகையை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு வழங்கி வருவதால் 1,200 நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் உயிர் பெற்று எழ வாய்ப்புகள் தோன்றியிருக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் சிறப்பாக இயங்குவதற்கான ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்கள் தெரிவித்திட வேண்டும் என விரும்புகிறேன்.

### இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம்

10 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டம் வரும் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தன்று, தொடங்கி தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று விடுதலை நாள் விழா உரையில் அறிவித்துள்ளேன். இத்திட்டத்திற்காக தற்போது 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பெற இருப்போரைத் தேர்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள குழுக்களையே – இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்தில் பயன்பெறுவோரைத் தேர்வு செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

இந்த அரசு பதவியேற்றபின் அறிவித்த மற்றுமொரு மகத்தான திட்டம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம். அறிஞர் அண்ணா பிறந்த செப்டம்பர் 15ஆம் நாளன்று வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கரசங்கால்–துண்டல்கழனி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் நான் தொடங்கி வைத்துள்ளேன். முதல்கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்டங் களிலுமுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கும், நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் பழங்குடியினர் குடும்பங்களுக்கும், சென்னை மாநகரில் வட சென்னையில் ஒன்றும் தென் சென்னையில் ஒன்றுமாக இரு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளில் வாழ்ந்து வருவோர்க்கும், மறு வாழ்வு இல்லங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் அடுத்தகட்டமாக, 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கத் திட்டமிடப்பட்டு, அதற்காக இவ்வாண்டில் மட்டும் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்தைச் சிறப்புற நடைமுறைப்படுத்திட மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தி வரவேண்டும்.

### மின் ஆளுமை

தமிழ்நாடு இந்தியத் துணைக் கண்டத்திலேயே முன் மாதிரி மின் ஆளுமை மாநிலம் என்று எல்லோரும் பெருமைப்படும் வகையில் – மக்களுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளும் எளிமையாகவும் விரைவாகவும்

கிடைக்கக் கூடிய வழிகளில் – எணினி ஆளுமையினை(Digital Governance) அறிமுகம் செய்து – மின் ஆளுமை முகமை என்ற நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. கணினிப் புரட்சியினால் நகர்ப்புறம் மற்றும் ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களிடையே ஏற்பட்ட எணினி இடைவெளியை (Digital Divide) நிரப்பிச் சரி செய்திடவும் – கிராமப்புற மக்களுக்கு வலிமை சேர்த்திடவும் – தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராமப்புற தகவல் மற்றும் சேவை மையங்களை (Village Resources and Service Centre) ஏற்படுத்த முடிவு செய்துள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இத்திட்டத்தின் செயலாக்கத்தை ஆய்வு செய்து, நல்ல முறையில் நடைமுறைப்படுத்த உதவிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**மக்களுக்குத் தேவையான அனைத்துச் சேவைகளும் எளிமையாகவும் விரைவாகவும் கிடைக்கக் கூடிய வழிகளில் – எணினி ஆளுமையினை(Digital Governance) அறிமுகம் செய்து – மின் ஆளுமை முகமை என்ற நிறுவனத்தைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது**

## உள்ளாட்சித் தேர்தல்கள்

தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கான பதவிக்காலம் 24.10.2006 அன்று முடிவடைகிறது. வரும் உள்ளாட்சித் தேர்தலில் மூன்றடுக்கு ஊராட்சிகளில் வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் வார்டுகளின் எல்லைகளில் மாற்றமின்றி அதே நிலையில் தொடர்வது என அரசு முடிவெடுத்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் செய்து தயார் நிலையில் இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். உள்ளாட்சித் தேர்தல்களைச் சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டும், அமைதியாகவும், ஒழுங்காகவும், அனைத்துத் தரப்பினரும் அச்சம் தவிர்த்து வாக்களித்திடும் வகையிலும் நடத்தி – மக்களாட்சியின் வேர்கள் ஆழமாகப் பரவி அனைவர்க்கும் பலனளித்திடத் தேவையான ஒத்துழைப்பை மாவட்ட நிர்வாகத்தின் எல்லா நிலைகளிலும் உருவாக்கிட வேண்டுகிறேன்.

## மகளிர் சுய உதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் முதன் முதலாக 1989 ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. இதன் வெற்றியைத் தொடர்ந்து, இத்திட்டம் மகளிர் திட்டம் என்ற பெயரில் 1997–ஆம் ஆண்டு முதல் மாநில அரசின் நிதி உதவியுடன் அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக விரிவாக்கப்பட்டது. தற்போதைய நிலவரப்படி தமிழ்நாட்டில் 3 இலட்சத்து 20 ஆயிரத்து 42 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் பதிவு செய்ய வேண்டுமென்பதை மாவட்ட ஆட்சியர்கள் உத்தரவாதப்படுத்த வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளில் மாவட்ட ஆட்சியர்கள் தேவையான ஈடுபாடு காட்ட வேண்டும்.

## அனைத்து கிராம அண்ணா மறு மலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடுத்த ஐந்தாண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்னும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. தற்போது செயலாக்கத்திலுள்ள அனைத்து மைய–மாநில திட்டங்களில் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் இதுதான் மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் 2,500 கிராம ஊராட்சிகளுக்கு, ஒரு கிராம ஊராட்சிக்கு, 20 இலட்சம் ரூபாய் வீதம், ஒவ்வோர் ஆண்டும், 500



கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கீடு செய்யும். ஒவ்வொரு ஊராட்சியின் மறுமலர்ச்சிக்கும் தன்னிறைவுக்கும் உருப்படியான வழி அமைத்துக் கொடுக்கும் இத்திட்டத்தை முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்துவதில் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டுமென்று விரும்புகின்றேன்.

## ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டம்

தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப் பட்டதற்கிணங்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்களது மாவட்டங்களிலுள்ள தரிசு புறம்போக்கு நிலங்களை ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவிக்கும்படி கூறப்பட்டிருந்தது. 3.8.2006 அன்றைய நிலவரப்படி, (1) எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத தரிசு புறம்போக்கு நிலம் 1 இலட்சத்து 91 ஆயிரத்து 320 ஏக்கர் என்றும்; (2) 69 ஆயிரத்து 217 ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம் 98 ஆயிரம் சிறு குறு விவசாயிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளதென்றும்; (3) 6 இலட்சத்து 84 ஆயிரத்து 411 ஏக்கர் நிலம் 4 இலட்சத்து 25 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் என்றும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**படித்து விட்டு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் இருக்கும் இளைஞர்களின் துயர்துடைக்கும் வகையில் வேலை வாய்ப்பற்றோருக்கு உதவிடும் திட்டம் ஒன்றை நமது அரசு உருவாக்கியுள்ளது.**

தரிசு நிலங்களை விவசாயத்திற்கு ஏற்ற நிலங்களாகப் பண்படுத்திட வேளாண்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மைய–மாநில அரசுத் திட்டங்கள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும். தரிசாக உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன ஆதாரத்தை உருவாக்குவது மிகமுக்கியமான காரியமாகும். எனவே மாவட்ட ஆட்சியர்கள் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல், கசிவு நீர்க் குட்டை அமைத்தல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம். இத்திட்டத்தின் கீழ் தரிசு நிலங்களில் புதியதாக அமைக்கப்படும் பம்பு செட்டுகளுக்கு மின்சார வாரியம் தாமதமின்றி மின் வசதி செய்து தரவேண்டும்.

ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலங்களைப் பண்படுத்தி, வேளாண்மை செய்திட ஏற்றவையாக அவற்றை மாற்றி மேம்படுத்தி, இலவசமாக அவர்களுக்குத் தருவதென்பது மிக உயர்ந்த இலட்சியத்தை நிறைவு செய்கிற நெஞ்சில் நீங்காமல் இடம்பெறும் சாதனை ஆகும். இதன் மூலம் ஏழை விவசாயக் குடும்பம் நில உரிமையாளராக உயர்கிறது. தரிசாகக் கிடக்கும் நிலம் உற்பத்திக்கேற்ற விளைநிலமாவதால் உற்பத்தி பெருகுகிறது. இந்த உயர்ந்த நோக்கத்தை கருத்திலே கொண்டு மாவட்ட ஆட்சியர்கள் எவ்விதக் குறையும் ஏற்பட்டு விடாமல், எல்லோரும் பாராட்டும்வண்ணம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் என்பதால், மாவட்ட ஆட்சியர்களின் நீடித்த நிலையான கவனம் இதிலே வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

## தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம்

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்– விவசாயிகள் (சமூகபாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் என்ற புதிய திட்டத்தைச் செயல்முறைப்படுத்த ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பதிவு பெற்ற குத்தகைதாரர்கள் ஆகியோரின்

சமூகப் பாதுகாப்புக்கும், நலனுக்குமான கூறுகள் அனைத்தும் சரிவரச் செயல்படுகின்றனவா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாளில் அவர்களுடன் கலந்தாலோசித்து ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களுக்கு மகப்பேறுக்கு முன் மூன்று மாதமும், பின் மூன்று மாதமுமாக, ஆறு மாத காலத்திற்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஆறாயிரம் ரூபாய் வழங்கும் "டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு திட்டம்", பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15-ஐ "கல்வி வளர்ச்சி நாள்" என அனைத்துப் பள்ளிகளிலும் கொண்டாடும் வகையில் அறிவித்து, அன்று முதல் சத்துணவுடன் வாரத்திற்கு இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டம், ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 3.6.2006 முதல் 15 ஆயிரம் ரூபாய் வழங்கும் "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதிஉதவித் திட்டம்", மாதம் 200 ரூபாயில் இருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள "முதியோர் ஓய்வூதியத் திட்டம்", ஆகிய திட்டங்கள் சமூகப் பாதுகாப்புக்கான சாலச்சிறந்த திட்டங்கள். எனவே, அத்திட்டங்கள் எவ்விதப் புகாரும் இன்றி நடைபெறுவதற்கு ஏற்ற கவனத்தை எப்போதும் செலுத்தி வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### வேலையில்லா இளைஞர்களுக்கு நிதி உதவித் திட்டம்

படித்து விட்டு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் இருக்கும் இளைஞர்களின் துயர்துடைக்கும் வகையில் வேலை வாய்ப்பற்றோருக்கு உதவிடும் திட்டம் ஒன்றை நமது அரசு உருவாக்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 150 ரூபாயும்; பள்ளி மேல் நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாயும்; பட்டதாரிகள் மற்றும் முதுநிலை பட்டதாரிகளுக்கு மாதம் 300 ரூபாயும்; நிதி உதவியாக 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் உத்தமர் காந்தி அடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2 முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர்கள் முறைப்படுத்தி, உரியவர்களுக்கு பலன் கிடைத்திடும் வகையில் கண்காணித்திட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

### நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம்

கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை இலவச மின்சாரம் 100 யூனிட் வரையிலும், மின்விசைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட் வரையிலும் வழங்கப்படுமென நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் 4 இலட்சம் கைத்தறி நெசவாளர்களும், 78 ஆயிரத்து 200 மின்விசைத்தறி நெசவாளர்களும் பயன் பெறுவர். இதன் செயலாக்கத்தை மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து மேற்பார்வையிட வேண்டுமென்று விரும்புகிறேன்.

### வருமுன் காப்போம் திட்டம்

கடந்த முறை இந்த அரசு பொறுப்பில் இருந்தபோது "வருமுன் காப்போம் திட்டம்" தொடங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டதை நீங்கள் அறிவீர்கள். தற்போது இத்திட்டம் புதுப்பொலிவுடன் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்தப் பன்முனை இலவச மருத்துவ பரிசோதனை திட்டத்தின்கீழ் 2006-2007; 2007-2008 ஆகிய இரண்டாண்டுகளில் 9 ஆயிரம் முகாம்கள் நடத்தப்படும்.

ஏழை எளிய மக்களுக்குச் சிறந்த நவீன சாதனங்கள் வாயிலாக முறையான சிகிச்சைகள், அலோபதி மருத்துவம் மட்டுமல்லாது, சித்த மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் மூலமும் உரிய சிகிச்சைகள் அளிக்கப்படும் இத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்தி; ஏழை எளியோர்க்கு உயர்ந்த மருத்துவ உதவி வழங்கினோம் என்ற – என்றும் மாறாத மனநிறைவை நீங்கள் அனைவரும் துய்த்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

சிக்குன் குனியா வைரஸைப் பொருத்தவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பள்ளி-கல்லூரி மாணவ மாணவியர், தொண்டு நிறுவனங்கள், சுகாதாரப் பணியாளர்கள் போன்ற அனைவரையும் ஒன்று திரட்டி – தடுப்பு நடவடிக்கையாக, மக்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திட மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

### கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் கடந்த 2000ஆம் ஆண்டில் நமது அரசால் தொடங்கப்பட்டு, அனைவராலும் வரவேற்கப்பட்ட திட்டமாகும். விவசாயிகளுக்கு உதவிடும் கால்நடைகளுக்கும் மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் சிறப்பு முகாம்கள் குக்கிராமங்களில் நடத்தப்படுகின்றன. முகாம் நடத்தப்படுவதற்கு முன்பு, சுற்றுப்புறக் கிராமங்களில் விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பிரச்சாரத்திற்கு உள்ளாட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகளையும், ஆர்வமுள்ள கால்நடை பராமரிப்புப் பணியாளர்கள் ஆகியோரின் உதவியையும் மாவட்ட ஆட்சியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

### 2007ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு இலவச வேட்டி சேலைகள் வழங்குதல்

கிராம மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்குப் பொங்கல் திருநாளின் போது இலவசமாக வேட்டி சேலை வழங்கும் திட்டம் 1990ல் இந்த அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2007 பொங்கல் திருநாளின்போது செயல்படுத்தப்படத் தேவையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 164 இலட்சம் சேலைகள் மற்றும் வேட்டிகளுக்கு உற்பத்திக் குறியீடும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரும் பொங்கலுக்கு முன்னதாகவே இலவச வேட்டி சேலைகள் கிடைக்கப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் மாதாந்தோறும் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் இவைகளின் உற்பத்தி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யும்படியும், பொங்கல் திருநாளுக்கு முன்னதாகவே இலவச வேட்டி சேலைகள் அனைவருக்கும் கிடைத்திட ஆவன செய்திடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

### புதிய திட்டங்கள்

கிராமப்புறங்களில் தேவையான அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால், கிராமங்களில் வாழ்ந்து வருவோர் நகர்ப்புறங்களுக்குக் குடிபெயரும் நிலை இன்றும் பல இடங்களில் ஏற்படுகிறது. எனவே, நமது நாட்டின் இரத்தநாளங்களாக விளங்கும் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு, அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைத்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் நமது அரசு மேற்கொண்டுள்ளது. அதன் விளைவாக, அடுத்த ஐந்தாண்டுகளில்: (1) ஓடி விளையாடிட குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டு மைதானம், (2) அமர்ந்து படிப்பதற்கு அய்யன் திருவள்ளுவர் நூலகம், (3) மேம்படுத்தப்பட்ட குளம், (4) குடியிருப்புகளுக்கெல்லாம் தெரு விளக்குகள், (5) முக்கியப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள், (6) முக்கியத் தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள், (7) சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, காத்திருக்கக் கூடம், விளக்கு போன்ற வசதிகளுடன் கூடிய மயானம்; என இந்த அடிப்படை வசதிகள் அனைத்தும் இல்லாத கிராம ஊராட்சியே தமிழ்நாட்டில் இல்லை என்ற தகுதிமிக்க நிலையினை உருவாக்கிட நாம் உறுதி பூண்டுள்ளோம்!

வளர்ந்து வரும் நகர்ப்புறங்களில் சரியான கழிப்பிட வசதியின்றி ஏழை எளியோர் அவதியுறும் நிலை இன்றைக்கும் இருக்கிறது. இந்த நிலையைக் களைந்திடும் வகையில், நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்கள், தமது இல்லங்களில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொள்ள – ஒரு இலட்சம் குடும்பங்களுக்குத் தலா 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளித்திடும் திட்டம் ஒன்றை – 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்துவோம்!

நகர்ப்புற ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வண்ணம், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு, கடன் வசதியுடன் கூடிய சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். நகர்ப்புறங்களில் உள்ள இளைஞர்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்திலிருந்தும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுய உதவிக் குழுக்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டிலிருந்தும், மொத்தமாக 10 கோடி ரூபாய் சுழல் நிதி மற்றும் மானிய நிதியுதவி அளிக்கப்படும். இது தவிர, மத்திய அரசின் "பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்" கீழ் தமிழ்நாட்டில் 27 ஆயிரம் படித்த வேலைவாய்ப்பற்ற

நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய குடும்பங்கள், தமது இல்லங்களில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொள்ள – ஒரு இலட்சம் குடும்பங்களுக்குத் தலா 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி அளித்திடும் திட்டம் ஒன்றை – 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்துவோம்!

இளைஞர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வரையிலான கடனுதவி மூலமாக சுய வேலைவாய்ப்பு வசதிகள் உருவாக்கப்படும். இத்திட்டங்கள் வாயிலாக நகர்ப்புறங்களில் காணப்படும் வேலை வாய்ப்பின்மையைப் பெருமளவுக்குக் குறைப்போம்.

அடுத்த இரண்டாண்டுகளில் கழிப்பறை வசதி இல்லாத பள்ளியோ, அங்கன்வாடி மையமோ தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம்.

அடுத்து வரும் இரண்டாண்டுகளில் தமிழ்நாட்டின் 12 கடலோர மாவட்டங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு – மீனவர் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் வாயிலாக – மீன் இறங்கு தளங்கள், ஏல மையங்கள், ஐஸ் பெட்டிகள், மீன் விற்கும் வாகனங்கள் போன்ற தேவையான கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் செய்து தருவோம்.

இந்த 12 மாவட்டங்களிலும் 50 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானமுடைய ஊனமுற்ற இளைஞர்களுக்கும்; 75 சதவீதத்திற்கும் அதிகமான கடும் ஊனமுள்ள இளைஞர்களின் பெற்றோருக்கும்; வாழ்வாதார நிதி உதவியாக தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்குவோம்.

"சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்ற இலட்சிய முழக்கத்தை எழுத்துக்கெழுத்து பின்பற்றி வரும் நாம்; தேர்தல் நேரத்தில் சொன்னதையெல்லாம் நிறைவேற்றிட முனைப்போடு ஈடுபட்டு வருகிறோம். இந்த முயற்சியில் உங்களது பங்களிப்பு மகத்தானது.

ஏழை எளியோர்பால் இரக்கம் காட்டுவீர்!

குறைகளைச் சொல்லவரும் மக்களுக்குச் செவி சாய்ப்பீர்!

நியாயமான குறைகளை நீக்கிட உடனே காரியம் செய்வீர்!

கிராம வளர்ச்சியில் ஈடுபாடு கொள்வீர்!

மக்கள் பிரதிநிதிகளை மரியாதைப் பண்புடன் நடத்துவீர்!

மாவட்டத்தில் சட்டம்–ஒழுங்கை உறுதியுடன் நிலைநாட்டுவீர்!

அரசின் கொள்கை அறிந்து அயராது பணிபுரிவீர்!

திட்டங்கள் அனைத்தையும் செம்மையாக நிறைவேற்றுவீர்!

அனைத்து அலுவலர்க்கும் முன்மாதிரியாக நடப்பீர்!

அரசின் கண்களாகவும், செவிகளாகவும் மட்டுமின்றி;

தலையும் நெஞ்சுமாகத் திகழ்வீர்!

"கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு"

– என்ற அய்யன் திருவள்ளுவரின் வாக்குக்கேற்ப, கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருந்திடுவீர்! என்று உங்கள் அனைவரையும் மனமார வாழ்த்தி – இந்த அளவில் எனது தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!



# உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றுங்கள்



18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை

**கா**லையிலிருந்து பல்வேறு விஷயங்களைப் பற்றி தீர விவாதத்தை நடத்தி நிறைவு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த விவாதத்தினுடைய விளைவுகள் நிறைவாக, மன நிறைவாக அமைய வேண்டுமென்பதற்காக நான் உங்களுக்கு விடுக்கின்ற வேண்டுகோள், காலையிலே என்னுடைய துவக்க உரையிலே குறிப்பிட்டதைப் போல, எத்தனை பிரச்சினைகள், எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலுங்கூட, அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அரசின் கடமைகளை ஆற்றுகின்ற தூதுவர்கள் நாம் என்ற அந்த உணர்வோடு அயராது பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம் முன்னால் இருக்கின்ற பல்வேறு திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய வழிமுறைகள் – இவைகளையெல்லாம் விவாதித்திருக்கிறோம். விவாதித்தோம், கலைந்தோம் என்ற அளவோடு நின்று விடாமல் எடுத்த முடிவுகளை விவாதிக்கும்போது சொல்லிய யோசனைகளை நாமும் பின்பற்றி வெற்றிகரமாக இவற்றை ஆக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு பணியாற்ற வேண்டுமென்று உங்களை யெல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு, என்னோடு சேர்ந்து மக்களுக்குப் பணியாற்றுகின்ற வாய்ப்பு உங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் இந்த வாய்ப்பை முழுமையாக, வாய்மையோடு எந்த மக்கள் நம்மை நம்பி இந்தப் பொறுப்பிலே உட்கார வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அணுவளவும் ஐயப்பாடோ, அல்லது அதிருப்தியோ ஏற்படாத வண்ணம் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஓர் அரசு, அரசின் தலைமை எவ்வாறு இருக்கிறதோ அப்படித் தான் அரசு அதிகாரிகளும், அரசு அலுவலர்களும், அவர்களின் கீழே இருக்கின்ற மற்ற மற்றவர்களும் இருக்க முடியும் என்பது தெளிவான உண்மை. நான் இந்த நேரத்தில் உங்களையெல்லாம் வைத்துக் கொண்டு அரசியல் பேசுவதாகக் கருதக் கூடாது. அரசியல் என்பது நம்முடைய வாழ்விலே ஒரு அங்கம் அது ஏதோ தனிப்பட்ட, விவாதிக்கத் தகாத ஒன்றல்ல. வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர், எழுதிய திருக்குறளில்

"அரசியல்'' என்ற ஒரு பகுதியே இருப்பதை நீங்கள் யாரும் மறந்து விட முடியாது. அந்த அரசியல் எப்படியிருக்க வேண்டும், அதிலே ஈடுபடுகிறவர்கள் எவ்வளவு கண்ணியத்தோடு உலாவ வேண்டும், இயங்க வேண்டும், அரசு நடத்துகின்றவர்கள் எப்படிப்பட்ட உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும், இன்னும் கூட வள்ளுவர் சொல்கிறார், "கடிதோச்சி மெல்ல எறிக'' என்று, கடிதோச்சவே கூடாது என்று சொல்லவில்லை, கடிதோச்சுவது அடுத்து மெல்ல எறிவதற்காகத் தான் என்கின்ற அளவிற்கு அவர் சொல்வதற்குக் காரணமே, கடிதோச்சுதல் இருந்தால் தான், ஓர் அரசை அமைதியாக நடத்த முடியும் என்பதை அவர் கருதிய காரணத்தால் தான் அவ்வாறு சொன்னார். அப்படி நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால அரசிலே பொறுப்பு வகித்தவர்கள் பலர் இங்கே இருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும், அப்படிப்பட்டவர்கள் யார் என்பதை நான் அறிவேன் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களை யெல்லாம் அறவே வீட்டிற்கு அனுப்பி விட வேண்டுமென்ற அளவிற்கு பழி வாங்குகின்ற மனப்பான்மை எனக்கும் இல்லை, என்னுடைய அமைச்சரவையிலே இருக்கின்றவர்களுக்கும் இல்லை, அப்படியெல்லாம் எங்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்பிக்கவும் இல்லை.

ஆனால் ஒன்றிரண்டு மாற்றங்களை, ஒன்றிரண்டு காரியங்களை நாங்கள் செய்தே தீர வேண்டிய அவசியம் எங்களுக்காக அல்ல, மக்களுக்காக, நாட்டிற்காக, இந்த அரசு ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காக நடத்தவேண்டியிருக்கின்றது. நாங்கள் 1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையிலே அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற போது, எங்களையெல்லாம் உட்கார வைத்துக் கொண்டு அவர் சொன்னார். கோப்புகளைப் பார்க்கத் தவறாதீர்கள், நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று காலந்தாழ்த்தி விடுவீர்களேயானால், நீங்கள் ஒரு மணி நேரமோ அல்லது ஒரு நாளோ அந்தக் கோப்புகளைப் பார்க்க மறந்து அல்லது அலட்சியப்படுத்தி வேறு வேலை பார்ப்பீர்களேயானால், அதனால் நூறு குடும்பங்களின் வாழ்வு பாதிக்கப்படும் என்பதை மறந்து விடாதீர்கள் என்று எங்களுக்கு அண்ணா அவர்கள் சொன்ன முதல் அறிவுரை ஆகும் அது. அதற்குப் பிறகு தனியாகவும் எங்களிடம் அவர் சொல்லியிருக்கிறார். கோப்புகளைப் பார்க்கும்போது, "Back File" பார்ப்பது முக்கியம். உங்களுடைய செயலாளர் அதனைக் காட்டாமல் கையெழுத்து போட வேண்டிய இடத்தை மாத்திரம் காட்டினால், அந்த இடத்திலே கையெழுத்தைப் போட்டுவிட்டு, முடிந்தது இந்தக் கோப்பு என்று உற்சாகமாக வேறு கோப்பைத் தேட ஆரம்பித்து விடாதீர்கள். ஒவ்வொரு கோப்பிலும் "Back File" என்று ஒன்றிருக்கிறது. அந்தக் கோப்பின் ஆரம்பம் எப்படி என்பது அதிலே தான் இருக்கும். அதை நீங்கள் படித்தால் தான், நல்ல முடிவினை அந்தக் கோப்பிலே நீங்கள் எடுக்க முடியும் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற அந்தக் காலக் கட்டத்திலேயே சொன்னார்கள்.

அதே செய்தியை நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து பொதுப்பணித்துறை அமைச்சராக அண்ணா அவர்களால் நியமிக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் மறைந்த சி.சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவரும் அதையே சொன்னார். "பைல்'' பார்க்கும்போது "Back File" முக்கியம், அதை நீங்களும் செய்யுங்கள், உங்கள் நண்பர்களுக்கும் சொல்லுங்கள் என்றார்.

ஆகவே சில நேரங்களிலே நம்முடைய செயலாளர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக, சொன்ன இடத்திலே கையெழுத்து போடலாம் என்ற அளவிற்கு இருப்பார்களேயானால், அப்போது "Back File''ஐத் தேட வேண்டிய அவசியம் கூட இல்லை. இருந்தாலுங்கூட "Back File" முக்கியம் என்பதை மறந்து விடக் கூடாது. கோப்புகளையே பார்க்காதவர்களைப் பற்றிக் கவலையில்லை. பார்க்கின்றவர்களுக்குச் சொல்கிறேன். எனவே அதுவும் மிகவும் முக்கியம்.

நான் வேறு இடத்திலே சொல்ல முடியாது, இந்த இடத்திலே தான் சொல்ல முடியும். உங்களைப் போன்ற பெரிய பொறுப்புகளிலே உள்ள செயலாளர்கள், அதிகாரிகள், மாவட்டங்களைப் பரிபாலிக்கின்ற பொறுப்பிலே உள்ள மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் மத்தியிலே தான் சொல்ல வேண்டும். தயவுசெய்து அரசியல் என்று நீங்கள் கருதிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் நான் பொறுப்பேற்ற இந்தக் காலக் கட்டத்தில் முதல் வாரமே 1,112 கோப்புகள்,முன்னாள் முதலமைச்சருடைய கையெழுத்து இல்லாத கோப்புகளை நான் காண நேர்ந்தது. பொய் அல்ல, ஜோடனை அல்ல. உண்மைக்கு மாறான செய்தி அல்ல. அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. 1,112 கோப்புகளின் எண்ணிக்கை அத்துடன் நிற்கவில்லை. நான் இந்தச் செய்தியை வெளியிட்ட பிறகு மிச்சம் உள்ள நாட்களில் ஒவ்வொரு நாளும் நான் கோப்பு பார்க்கும்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று கோப்புகள் முன்பிருந்த ஆட்சியாளர்களால், நிதியமைச்சரால் அல்லது பொதுப்பணித்துறை அமைச்சரால் பார்க்கப்பட்டு முதலமைச்சரால் பார்க்கப்படாத கோப்புகள் தான் வந்துகொண்டே இருக்கின்றன. நிதியமைச்சர் வரையிலே கோப்பு வந்திருக்கும், தலைமைச் செயலாளர் வரையிலே கோப்பு வந்திருக்கும், அவர்களின் கையெழுத்தோடு கோப்பு முடிந்திருக்கும். தலைமைச் செயலாளராக இருந்த நாராயணனாக இருந்தாலும் சரி, அல்லது லட்சுமி பிரனேஷ் ஆனாலும் சரி, அவர்களின் கையெழுத்தோடு முடிந்த கோப்புகள் பல. இவற்றை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படி பொறுப்பற்ற முறையிலே ஒரு காரியம் நடை பெற்றிருக்கின்றது, தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களால் நடைபெற்றிருக்கின்றது.



பல கோப்புகளில், இன்னும் சொல்லப் போனால் இங்கே விவாதித்தோமே, காலையிலிருந்து, சுனாமிக்காக வந்த நிதி எவ்வளவு என்று ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய் அளவிற்கு செலவழிக்க தலைமைச் செயலாளர் நாராயணன் அவர்களின் கையெழுத்து மாத்திரம் தான் தேவைப்பட்டிருக்கின்றது. முதல் அமைச்சரின் கையெழுத்து இல்லாமலேயே 2,000 கோடி ரூபாய் வரவு செலவு நடைபெற்றிருக்கின்றது. இப்படி பல கோப்புகள் நம்மிடையே உலா வந்தன. இன்றைக்கும் அவைகளில் பல தேங்கிக் கிடக்கின்றன. அவைகளையெல்லாம் ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்து மனம் புழுங்கி, இப்படி நடை பெற்றதா நாட்டின் நிர்வாகம் என்ற கவலையோடு நான் அவைகளில் கையெழுத்திட்டு முடித்திருக்கிறேன். பல விஷயங்கள் அப்படி.

ஒரு அதிகாரி குற்றஞ்சாட்டப்படுகிறார், அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்கிறார்கள். விசாரணையின் முடிவில் அவர் குற்றவாளி அல்ல, எந்தவிதமான புகாரும் நிரூபிக்கப்படவில்லை என்று கோப்பினை அனுப்புகிறார்கள். அந்தக் கோப்பு தலைமைச் செயலாளருக்கு வருகிறது. அவர் அதை ஏற்றுக் கொண்டு, அடுத்த நிலையிலே உள்ள சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்புகிறார். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டு, முதல் அமைச்சருக்கு அனுப்புகிறார். அவர் கையெழுத்திடாத காரணத்தால், ஐந்தாண்டு காலமாக புகார் கூறப்பட்ட அதிகாரி, எந்தவிதமான மேல் பொறுப்புக்கும் வர முடியாமல் தவியாய் தவித்து, தற்போது நான் வந்து கையெழுத்திட்ட பிறகு அவருக்கு கதி மோட்சம் கிடைக்கிறது என்றால் இது போன்றதொரு நிலைமை ஒரு குடும்பத்திற்கு அல்ல, பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளதே; நியாயமா?

ஒரு தாசில்தார் மணல் லாரியைத் தடுத்தார் என்ற காரணத்திற்காக லாரியையே அவர் மீது ஏற்றிக் கொன்று விடுகிறார்கள். அந்த லாரி ஏறிய காரணத்தால் அவர் அந்த இடத்திலேயே மாண்டதால், அதைப் பார்த்து வருந்திய திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், இறந்த அதிகாரி மீது பரிதாபம் கொண்டு, அவருடைய விதவை மனைவி எப்படி வாழ்வார் என்று, அவருடைய பெண்ணுக்கு ஒரு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். இப்படி ஒருவர் கடமையைச் செய்யும்போது கொல்லப்பட்டிருக்கிறார். அந்த அதிகாரியின் வாரிசுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் எழுதுகிறார். ஆனால் அந்தக் கோப்பு கிட்டத்தட்ட நான்காண்டு காலமாக கிடப்பிலேயே கிடந்து அதைப் பற்றி யாரும் கவலைப்படாமல், நான் தற்போது முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கையெழுத்திட்டு, அந்தக் குடும்பத்திற்கு வாழ்வளித்திருக் கிறேன், அந்தக் குடும்பத்தின் விளக்கையேற்றி வைக்க இப்போது தான் சந்தர்ப்பம் வாய்த்தது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, பல அரசியல் சார்பான விஷயங்கள், கொள்கை ரீதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகள். மனிதாபிமானத்தோடு செய்யப்பட வேண்டிய காரியங்கள்.

21 பேர் பத்திரிகை எழுத்தாளர்கள், செய்தியாளர்கள் இறந்திருக்கிறார்கள். அப்படி இறந்த பத்திரிகையாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும், அதற்குப் பிறகு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும் நிதி வழங்க வேண்டுமென்று உத்தரவுகள் போடப்பட்டுள்ளன. நாங்கள் ஆட்சியிலே இருந்த வரை அந்த உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டு, நடைமுறையிலே இருந்தன. அதற்குப் பிறகு கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த உத்தரவுகள் நாதியற்றுப் போயின. அந்த உத்தரவுகளை நிறைவேற்ற ஆள் இல்லை, நிறைவேற்றுங்கள் என்று சொல்லவும் ஆள் இல்லை. அதற்கு கையெழுத்து போட யாரும் முன்வரவில்லை. அதனால் அந்த 20 பேருக்கு இப்போது தான் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு தான் கையெழுத்திட்டு அந்தக் கோப்புகளை நகர விட்டு, அவர்களுடைய குடும்பங்களை வாழ வைக்க முடிந்தது என்பதை நான் சொல்வதற்குக் காரணம், இதெல்லாம் உங்களிடத்திலே ஏதோவொரு விஷயத்தைச் சொல்ல வேண்டும், குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு துறையிலும் கூட கோப்புகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. அரசு எவ்வழியோ, அதிகாரிகளும் அவ்வழி என்று இல்லாமல், நாமாவது அந்தக் கோப்புகளை உடனுக்குடன் பார்க்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும், அந்தப் பொறுப்பை உணர வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

கோப்புகளைப் பார்த்து, கடமைகளை நிறைவேற்றி, உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றி, நான் காலையிலே எடுத்துக்காட்டியதைப் போல மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை அடிக்கடி அதிகார வர்க்கத்தினர் ஏற்படுத்திக்கொண்டு, கோட்டையிலே இருக்கின்ற அதிகாரிகள், மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு, மாவட்டங்களில் இருக்கின்ற அதிகாரிகள், அவர்கள் கலெக்டர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அடுத்து இருக்கின்ற டி.ஆர்.ஒ. போன்ற அதிகாரிகளாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற பொது வாழ்க்கையிலே அரசின் கடமைகளிலே தக்கக் கவனத்தைச் செலுத்தி, தொடர்பு கொள்ள வேண்டியவர்களைத் தொடர்புகொண்டு, யாரையும் அலட்சியப்படுத்தாமல், யாரையும் பொருட்படுத்தமாட்டோம் என்ற அளவிற்கு நடந்து கொள்ளாமல், அனைவரையும் சந்திக்கின்ற பொறுப்பினையும் ஏற்று, சந்திக்க வருகின்றவர்களையும் மரியாதையோடு நடத்தி எல்லாவிதமான நற்காரியங்களையும் நீங்கள் செய்திட வேண்டும். காலை முதல் இது வரையிலே நாம் ஆய்ந்திருக்கின்ற, நாம் பரிசீலித்திருக்கின்ற, நாம் சிந்தித்திருக்கின்ற செயல்பாடுகளையெல்லாம் சிறப்புற நடத்துவதற்கு உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அது ஒன்று தான் நீங்கள் எனக்கு நன்றி காட்ட வேண்டுமென்று எண்ணினால் காட்டுகின்ற நன்றியாகும், நாட்டிற்குக் காட்ட வேண்டிய நன்றியாகும் என்று கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ❖

## தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அறிவிப்புகள் (25.8.2006)



# எழுத்தாளர்கள் நலம் காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

பேராசிரியர்
**க. அன்பழகன்**
மாண்புமிகு நிதித்துறை
அமைச்சர்

### தமிழ் வளர்ச்சி இயக்ககம்

1. ஆட்சிமொழிச் சட்டம் இயற்றப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இவ்வாண்டு ஆட்சிமொழித் திட்டப் பொன்விழா கொண்டாடப்படும்.

2. அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் தற்போது ரூ.500/– நிதியுதவி பெற்று வருகின்றனர். திங்கள்தோறும் வழங்கப்பட்டு வரும் இந்நிதியுதவி ரூ.500/– லிருந்து ரூ.1000/– ஆக உயர்த்தி இந்நிதியாண்டிலிருந்து வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு கூடுதல் தொடர் செலவினம் ரூ.13.38 இலட்சம் ஏற்படும்.

3. கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்புகள் முதலிய படைப்புகளைப் படைத்துத் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கம் நல்கும் எழுத்தாளர்கள் பலர் நலிவுற்ற நிலையில் உள்ளனர். தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு இத்தகைய படைப்பாளர்களைப் பேணிக் காக்க வேண்டியது இன்றியமையாதது என்ற நோக்கத்தில் 'எழுத்தாளர்கள் நலம் காக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டம் தொடங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 100 படைப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்படுவர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ உதவி பெறும் வகையில் காப்பீடு (Insurance) செய்து அதற்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய காப்பீட்டுத் தவணைத் தொகையை (Premium) அரசே செலுத்தும். இதனால் அரசுக்கு இவ்வாண்டு ரூ.5 இலட்சம் செலவினம் ஏற்படும்.

4. பிற மாநிலங்களில் தமிழ்மொழி வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் தமிழை ஒரு பாடமொழியாகப் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்விலும், பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்விலும் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படும். முதல் பரிசு ரூ.10,000/–, இரண்டாம் பரிசு ரூ.5,000/–, மூன்றாம் பரிசு ரூ.3,000/– எனப் பரிசுகள் வழங்கப்படும். புது தில்லி, மகாராட்டிரம், மேற்கு வங்காளம், கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரளா ஆகிய 6 மாநிலங்களில் ரூ.2,16,000 செலவில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

5. நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை (ஆங்கிலத்தில்) போன்ற நூல்கள் வைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும் புதுதில்லி தமிழ்நாடு இல்லம் மற்றும் சென்னை அரசினர் விருந்தினர் இல்ல அறைகளிலும் வைக்கப்படும். இந்த நூல்கள் அரசால் இலவசமாக வழங்கப்படும். இதனால் இந்த உணவக விடுதிகளில் தங்கும் வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் திருக்குறள் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.



இத்திட்டத்தைச் செயற்படுத்த ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

6. தமிழ் மொழியின் மேம்பாட்டிற்கும் வளமைக்கும் தொண்டாற்றிய – தொண்டாற்றி வருகின்ற தமிழ் எழுத்தாளர்கள், தமிழறிஞர்களைப் பற்றி விளக்கப்படச் சுருள் (Documentary film) தயாரிக்கும் திட்டம் ரூ.10 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

7. தமிழ்ப் படைப்பாளிகள் யார் ? எவர் ? எனும் தொகுப்பு நூல், தமிழ் இலக்கியக் கலைக் களஞ்சியம் மற்றும் தமிழ் இலக்கணக் கலைக் களஞ்சியம் ஆகிய நூல்களைத் தயாரித்து வெளியிட ஒரு குழுவை அமைத்துப் பணிகள் ரூ.6 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

8. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிராத தமிழ் முனைவர் பட்ட ஆய்வு மாணவர் ஒருவருக்கும், முனைவர் பட்டத்திற்கு மேற்பட்ட முதுநிலை ஆய்வு மாணவர் ஒருவருக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் ரூ.2 இலட்சம் செலவில் செயற்படுத்தப்படும்.

### செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்

9. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின்கீழ், திட்டமிடப்பட்ட 31 பகுதிகளில் இதுவரை 18 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் மேலும் 7 பகுதிகள் அச்சிட்டு வெளியிடப்படும்.

### கலை – பண்பாட்டு இயக்ககம்

10. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி இவ்வாண்டு இயல் இசை நாடக மன்றத்தின் பொன்விழா கொண்டாடப்படும்.

11. இசை, நடனம், நாடகம் என்று வாழ்க்கையை கலையே மூச்சாக வாழ்ந்த கிராமியக் கலைஞர்கள் உட்பட அனைத்துக் கலைஞர்களில் எவரும் வறுமையில் வாடக்கூடாது என்பதற்காக திங்கள்தோறும் நிதி உதவி வழங்கும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. இதுவரை 8,063 நலிவுற்ற கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. மாதம் ரூ.500/– ஆக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகையை தற்போது இந்த அரசு பொறுப்பேற்றதும் ரூ.1,000/– ஆக உயர்த்தி ஆணையிட்டது. நடப்பு ஆண்டில் மேலும் 500 பேருக்கு மாதம் ரூ.1,000/– நிதி நல்கையாக வழங்கப்படும். இதற்கு ஆண்டொன்றிற்கு ரூ.60 இலட்சம் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

12. 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகளில் தற்போது குரலிசை, பரதநாட்டியம், தேவாரம், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய பிரிவுகளில் இசை பயிற்றுவிக்கப்படுகின்றது. இவ்விசைப் பள்ளிகளில் கூடுதலாக

> **“நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் பைபிள் மற்றும் பகவத் கீதை (ஆங்கிலத்தில்) போன்ற நூல்கள் வைக்கப்பட்டுள்ளதைப் போன்று ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் பிரதியை உணவக விடுதிகளின் ஒவ்வொரு அறையிலும் வைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.”**

வயலின் மற்றும் மிருதங்கப் பிரிவுகள் ரூ.52.70 இலட்சம் செலவினத்தில் தொடங்கப்படும்.

13. நான்கு அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பதினேழு மாவட்ட அரசு இசைப்பள்ளி மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்காகப் பரதநாட்டிய அணிகலன்கள் ரூ.8.10 இலட்சம் செலவில் வாங்கப்பெறும்.

14. சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் சிற்பக்கலைப் பிரிவில் முதுகலைப் பட்ட மேற்படிப்பு தொடங்கப்பெறும்.

15. மாமல்லபுரம் அரசு கட்டட மற்றும் சிற்பக்கலைக் கல்லூரிக்கு நூலகம் மற்றும் கணினி மையம் ரூ.20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

16. தோற்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை ஊக்குவிக்கவும், பழங்குடியினா் கலை விழா நடத்தவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

17. தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு மூலம் கன்னியாகுமரியில் நிரந்தர ஓவியக் கலைக்கூடம் ரூ.4.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

18. கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு அலுவலகக் கட்டடம் ரூ.20 இலட்சம் செலவில் கட்டப்பெறும்.

**தொல்லியல் துறை**

19. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 87 வரலாற்றுச் சின்னங்களுள் 6 வரலாற்றுச் சின்னங்களுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் ரூ.11 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

20. மதுரை மாவட்டத்தில் உள்ள மாங்குளம் மற்றும் கரூர் மாவட்டத்திலுள்ள நெடுங்கூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணி ரூ.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

21. நாகப்பட்டினம், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் கல்வெட்டு நூல் அச்சிட்டு வெளியிடப்படும்.

22. கரூர் மற்றும் குற்றாலத்தில் உள்ள தொல்லியல் அருங்காட்சியகங்கள் மேம்படுத்தப்படும்.

23. மதுரையில் உள்ள பாதுகாக்கப்பட்ட சின்னமாக (Protected Monument) அறிவிக்கப்பட்ட திருமலை நாயக்கர் மகாலை செவ்வனே பாதுகாத்துப் பராமரிக்க மூன்று கோடி ரூபாய் செலவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

❖ ❖ ❖

**"தோற்பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப் பொம்மலாட்டம் ஆகிய கலைகளை ஊக்குவிக்கவும், பழங்குடியினர் கலை விழா நடத்தவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்."**





# மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் புதிய சாலைகள்



**திரு. மு.க.ஸ்டாலின்**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

1. பெருகி வரும் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி மற்றும் நகராட்சியின் வருமானத்தை கருத்திற் கொண்டு, அரசு திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தி உள்ளது. நாடாளுமன்ற, சட்டமன்ற இட எல்லைகளை திருத்தியமைக்கும் ஆணையம், தற்போதுள்ள நிருவாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றி அமைக்க தடை விதித்துள்ளது. ஆகவே, ஆணையத்தின் அனுமதியைப் பெற்று விரைவில் திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவோம்.

2. நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமைந்துள்ள அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருமளவில் மேம்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி பகுதி–2 திட்டங்களின் கீழ் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

3. சென்ற ஆண்டு பெய்த பெருமழையால் நகரங்களில் பாதிப்பிற்குள்ளான சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் இம்மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னர் சீர் செய்யப்படும். இதற்கு அரசு 13 கோடியே 32 இலட்சம் ரூபாயை முழு மானியமாக வழங்கும்.

4. நிதிப்பற்றாக்குறை உள்ள 37 நகராட்சிகளில் நிதியின்மை காரணமாக சரியான பராமரிப்பின்றி இருந்து வரும் குடிநீர்த் திட்டங்கள் 4 கோடி ரூபாய் மானியத்தில் உடனடியாக சீர் செய்யப்படும்.

5. தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய இறைச்சிக் கூடங்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் கட்டப்படும்.

6. இதுபோலவே, தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பன்னிரெண்டு கோடி ரூபாய் செலவில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும்.

7. நிதிப்பற்றாக்குறையால் நிலம் வாங்குவதற்கு இயலாத நிலையில் உள்ள 12 மூன்றாம் நிலை நகராட்சிகள் திடக்கழிவுகளைக் கையாள நிலங்களை வாங்கி உரக்கிடங்குகளை அமைப்பதற்கு 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மானியமாக அரசு வழங்கும்.

8. வாணியம்பாடி நகராட்சியில் ஜின்னா ரோட்டில் பாலாற்றின் குறுக்கே பாலாற்றைக் கடந்து செல்வதற்கென பயன்பட்டு வந்த இரும்புப் பாலம் 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், 85 இலட்சம் ரூபாய் மானியத்தில் வாணியம்பாடி நகராட்சி மூலம் புதிதாக ஒரு பாலம் கட்டப்படும்.

9. இதுவரை அறிவித்த பகுதி 2 (Part II) திட்டங்களைத் தவிர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், மாநில அரசு, மைய அரசு, மற்றும் அரசு நிறுவனங்கள் அளிக்கும் கடன் மற்றும் மானிய உதவிகளைக் கொண்டும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள சில முக்கியத் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

10. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போது சுமார் 2,000 கி.மீ. நீளத்திற்கு அமைந்துள்ள சரளைக்கல் சாலைகளையும், மண்சாலைகளையும் இன்னும் 4 ஆண்டுகளில், 200 கோடி ரூபாய் செலவில் குறுகிய சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பெரிய சாலைகள் தார்ச் சாலைகளாகவும் மாற்றப்படும்.

11. தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், புறநகர் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என்று திராவிட முன்னேற்ற கழக தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும் வண்ணம் முதற்கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

12. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம் நகரங்களில் நடைபெற்றுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டே இத்திட்டங்கள் யாவும் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

13. எஞ்சியுள்ள 23 மாவட்டத் தலைநகரங்களில் வேலூர், கடலூர், நாமக்கல், உதகமண்டலம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 18 மாவட்டத் தலைநகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 801 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

14. திருவள்ளூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்டத் தலைநகரங்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு வரும் நிதி ஆண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

15. திருவொற்றியூர் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

16. மேட்டூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் இறுதி செய்யப்பட்டு இந்த நிதி ஆண்டே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

17. மீதமுள்ள நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் படிப்படியாக வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற ஏதுவாக ஆய்வுப்பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

18. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்து கட்டடங்களும், அதாவது அலுவலகம், பேருந்து நிலையங்கள், பொதுக்கழிப்பிடங்கள், பள்ளிகள், மருத்துவ மனைகள், பூங்காக்கள், வணிகவளாகங்கள் போன்ற கட்டடங்களை உடல் ஊனமுற்றோரும் பயன்படுத்த ஏதுவாக தக்க மாற்றங்கள் இந்தாண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

19. மாநகராட்சி, மற்றும் நகராட்சிகளில் தெருநாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்தவும், ரேபிஸ் என்ற கொடிய நோயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும், இந்திய விலங்குகள் பாதுகாப்பு வாரியத்துடன் (Animal Welfare Board of India) இணைந்து ஒரு முன்னோடித் திட்டம் 50 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இந்தாண்டில் செயல்படுத்தப்படும்.

20. நெல்லிக்குப்பம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளிலும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.



**சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.**

21. திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர், புழுதிவாக்கம், பொள்ளாச்சி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய 6 நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.

22. மத்திய அரசால் கடந்த ஆண்டுமுதல் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மதுரை மாநகராட்சிக்கு 1,477 கோடியே 40 இலட்சம் ரூபாயிலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 1,311 கோடியே 81 இலட்சம் ரூபாயிலும், தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், மதுரை மாநகராட்சிக்கு கூடுதலாக குடிநீர் வழங்க இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டம் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டே செயல்படுத்தப்படும்.

23. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வராத ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில் 10 நகரங்களில் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளும் 13 நகரங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

## பேரூராட்சிகள்

24. பேரூராட்சிப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எந்த ஆண்டும் இல்லாத வண்ணம் இந்த ஆண்டு அரசு 17 கோடியே 20 இலட்சம் ரூபாயை பேரூராட்சிகளுக்கு முழு மானியமாக வழங்கும். இந்த நிதிஉதவியைக் கொண்டு 100 பேரூராட்சிப் பகுதிகளில், சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். புகழ்பெற்ற திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலாத் தலங்கள் அமைந்துள்ள 40 பேரூராட்சிகளில் 6 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். 20 பேரூராட்சிகளில் 1 கோடி ரூபாய் செலவில் சிறிய மற்றும் மிகச்சிறிய பாலங்கள் அமைக்கப்படும்.

25. மாமல்லபுரம், திருச்செந்தூர், போரூர் ஆகிய பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டு 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

26. பேரூராட்சிகளில் உள்ள சுமார் 663 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகளை பேருந்து செல்லும் சாலையின் தரத்திற்கு உயர்த்த 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் 393 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

27. மேற்படி திட்டங்களைத் தவிர பேரூராட்சிகள் தங்களுடைய நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல்படுத்தவுள்ள சில சிறப்புத் திட்டங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

28. நடப்பு ஆண்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அனைத்து பேரூராட்சிகளிலும் மொத்தம் 500 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும்.

29. சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.

30. இதுவரையில் அலுவலகக் கட்டடம் இல்லாத 4 பேரூராட்சிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் இருந்தும், மிக மோசமான நிலையில் பழுதடைந்து, வேறு கட்டடங்களில் இயங்கி வரும் 25 பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படும்.

## சென்னை மாநகராட்சி

31. குறைந்த வருமானம் உள்ள மக்கள் அதிகமாக வாழும் வட சென்னைப் பகுதியில் போக்குவரத்து, சாலை, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவிற்கு இல்லை என்று நீண்டகாலமாக இருந்து வரும் குறையைப் போக்கும் வகையில் வட சென்னைப் பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்க 217 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

32. வில்லிவாக்கம் (L.C.2) மற்றும் மணியக்காரச் சத்திரச் சாலை ஆகிய ரயில்வே சந்திப்புகளில் வாகனச் சுரங்கப்பாதைகள் அமைக்கப்படும்.

33. கத்திவாக்கம் காக்ரேன்பேசின் சாலை சந்திப்பில் மேம்பாலம், கொருக்குப்பேட்டை ரயில்வே சந்திப்பில் சுரங்கப்பாதை, ரங்கராஜபுரம் சந்திப்பில் மேம்பாலம் ஆகிய ஐந்து பணிகள் நடப்பாண்டில் 40 கோடியே 6 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

34. டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை–துரைசாமி சாலை சந்திப்பு ஜி.என். சாலை – திருமலை சாலை சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்டப்படும்.

35. அடையாறு ஆற்றின் குறுக்கே சைதாப்பேட்டை– ஆலந்தூர் சாலையில் அமைந்துள்ள தரைமட்டப்பாலத்திற்கு மாற்றாக 5 கோடியே 41 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.

36. பெரம்பூர் மேம்பாலப் பணி மீண்டும் தொடங்கப்படும். வடசென்னை மக்களை தென் சென்னையுடன் இணைத்திட முக்கியமான இணைப்பான, பெரம்பூர் மேம்பாலப் பணிகள், தி.மு.க. ஆட்சி காலத்தில் 1998ஆம் ஆண்டு 21 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. 2001 ஆகஸ்ட் மாதம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முந்தைய அரசு விசாரணைக் கமிஷன் நியமித்து நடைபெற்றுவந்த பணிகள் முழுவதையும் முடக்கியது. 5 ஆண்டுகள் எந்தவிதமான பணியும் நடைபெறாமல் மேம்பால வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதியுற்றனர். தி.மு.க. அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் இப்பணியை ஆய்வு செய்து மீண்டும் துவக்கி ஒரு வருடத்திற்குள் பாலத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் ஏற்பட்ட 5 ஆண்டுகால தாமதத்தால் கூடுதல் செலவு 5 முதல் 6 கோடி ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

37. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 15 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

38. அடையாறு பகுதியில் அடையாறு கிரீக் எனும் சிற்றோடையில் 58 ஏக்கர் நிலபரப்பில் ஒரு பூங்கா அமைப்பது குறித்து 1997ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. அரசு பரிசீலித்து வந்தது. முந்தைய அரசு இப்பகுதியை 50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த 2005 நவம்பர் மாதம் ஆணையிட்டது. இதற்கு ஒரு அறக்கட்டளை நிறுவவும் ஆணையிடப்பட்டது. ஆனால் மேற்கொண்டு முன்னேற்றம் இல்லாமல் இருந்து வந்த நிலையில் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்த இவ்வரசு அடையாறு கிரீக் பகுதியை மட்டும் மேம்படுத்துவதற்கு பதிலாக திரு.வி.க. பாலத்திற்கும் கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம், அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.



திரு.வி.க. பாலத்திற்கும் கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம், அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது.

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்

39. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, வாரியத்திற்கும் ஒப்பந்ததாரருக்குமிடையே போடப்பட்டுள்ள நிபந்தனைகளில் அரசுக்கும் வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களைச் செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

40. அதேபோல் மத்திய அரசு ஏற்கெனவே அறிவித்த நிதியுதவியைப் பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு பெரிய திட்டமும் செயல்படுத்தப்படும்.

41. தெலுங்கு கங்கைத் திட்ட ஒப்பந்தத்தின்படி அளிக்கப்பட வேண்டிய 12 டி.எம்.சி. தண்ணீரை ஒவ்வொரு ஆண்டும் தடையின்றிப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி 5.8.2006 அன்று நானும், மாண்புமிகு பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்களும் ஐதராபாத் சென்று ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததின் பலனாக வருகிற 20ஆம் தேதி அளவில் கண்டலேறு அணையில் இருந்து வரும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

42. சென்னை மாநகரில் குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் இல்லாத அனைத்து தெருக்களுக்கும் குழாய்கள் பதிக்கும் பணி நடப்பாண்டில் முடிக்கப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும்போது, சென்னை மாநகரப் பகுதி முழுவதும் குடிநீர் மற்றும் கழிவுநீரமைப்புகள் முழுமைபெற்றதாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

43. பொதுமக்கள் தங்கள் வசதிக்கேற்ப எந்த மையத்தில் வேண்டுமானாலும் குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தவும் புகார்களைப் பதிவு செய்யவும் 9 கோடி ரூபாய் செலவில் வழி வகை செய்யப்படும்.

44. சென்னை நகரின் அனைத்து குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறுபுனரமைப்புத் திட்டத்தின் கீழ் (JNNURM) மத்திய அரசின் நிதி உதவியுடன் 246 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர் பகிர்மான அமைப்புகள் மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, கீழ்ப்பாக்கம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் மண்டலங்களில் இப்பணிகள் 131 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

45. பழைய மாமல்லபுரம் சாலையில் மென்பொருள் நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்பப் பூங்காக்கள் மற்றும் அதைச்சார்ந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள்

போன்றவைகளின் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டு வருவதைக் கருதி, இப்பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 72 கோடி ரூபாய் செலவில் சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும்.

46. சென்னை நகரைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்டத்தினை சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்து வருகிறது. மணலி, அனகாபுத்தூர், பம்மல், திருவேற்காடு, பூந்தமல்லி ஆகிய ஐந்து நகராட்சிகளும், சின்னசேக்காடு, புழல், நாரவாரிக்குப்பம், மீஞ்சூர், நந்தம்பாக்கம், மாங்காடு, குன்றத்தூர், பெருங்குடி, பள்ளிக்கரணை, சோழிங்க நல்லூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, மீனம்பாக்கம், திருநின்றவூர், திருமழிசை ஆகிய 19 பேரூராட்சிகளும், கொட்டிவாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம், கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம், பொழிச்சலூர், கௌல்பஜார், அயனம்பாக்கம் ஆகிய 8 கிராமப் பஞ்சாயத்துகளும் புனித தோமையார் மலை என்ற ஒரு கன்டோன்மெண்ட் பகுதியும் இத்திட்டத்தின் மூலம் பயனடையும். ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## சென்னை குடிநீர் வடிகால் வாரியம்

47. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் மூலம் இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள், முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருப்புத்தூர், அபிராமம், இளையான்குடி, நெற்குப்பை, பொன்னமராவதி ஆகிய 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோர குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும். இதன் மூலம் சுமார் 16 இலட்சம் மக்கள் நிரந்தரமாக குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள்.

48. அதே போன்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 1,005 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் தேவைபற்றி மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். இதை அடுத்து, ஜப்பானிலிருந்து குழு ஒன்று சென்னைக்கு வந்து திட்டத்தினை ஆய்வு செய்து ஜப்பானிய அரசிற்கு அறிக்கை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை செயல் இயக்குநரும், குழும உறுப்பினரும் மற்றும் புதுடெல்லியில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதியும் 17.07.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்தபோதும் இத்திட்டத்தின் தேவை குறித்து அவர்களிடம் எடுத்துரைக்கப் பட்டது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்திட்டத்தை ஜப்பான் நாட்டின் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

49. இந்தத் திட்டம் செயலுக்கு வரும்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஒசூர் ஆகிய 3 நகராட்சிகள், காரிமங்கலம், அரூர், கடத்தூர், பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு, பர்கூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

50. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களை மாவட்ட வாரியாக தெரிவிக்க விரும்புகிறேன்.

51. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

52. 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்பு



களுக்கு சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

53. 49 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

54. 30 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு சுமார் 1 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

55. பெரம்பலூர் மாவட்டத்தில் 44 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 636 குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

56. திருநெல்வேலி மாவட்டத்தில் 43 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

57. புதுக்கோட்டை மாவட்டத்தில் 42 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள், அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 குடியிருப்புகளுக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

58. கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79 கடலோர குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

59. 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மூஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படும்.

60. நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேரன்கோடு ஊராட்சிக்கு 38 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

61. திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தணி மற்றும் அரக்கோணம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

62. திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் விரிவாக்கத் திட்டம்.

63. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

64. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

65. திருவள்ளூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெற்குன்றம் மற்றும் 48 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

66. வேலூர் மாவட்டத்தில் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

67. திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழ் பெண்ணாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

68. 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

69. 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

70. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

71. 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

72. 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

73. ஈரோடு மாவட்டத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

74. சேலம் மாவட்டத்தில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

75. மேலும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் ஏழு ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

76. நாமக்கல் மாவட்டத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

77. மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் நகராட்சி, எ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சி மற்றும் ஏழு ஒன்றியங்களைச் சார்ந்த 1,332 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

78. மேலும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பரங் குன்றம் நகராட்சி மற்றும் ஆர்விபட்டி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

79. விருதுநகர் மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர், விருதுநகர், அருப்புக் கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

80. தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

81. திருநெல்வேலி மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

82. மேலும் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங் கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

83. கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

84. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால்தான் முழுப் பயனும் மக்களைச் சென்றடையும். நான் பல்வேறு மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யச் சென்ற போது கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பு பற்றிய பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் என்னிடம் தெரிவித்தார்கள்.

85. பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர் திட்டங்கள் இயங்குவதற்குத் தடை இல்லாத மின்சாரம் பெறுவது அவசியமாகும். தற்போது இது போன்ற பல பெரிய திட்டங்களில் தனி மின் பாதை இல்லாததும் இதனால் குடிநீர் வழங்கலில் அடிக்கடி தடை ஏற்படுகிறது என்பதும் எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

86. திருநெல்வேலி மாவட்ட ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூட இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இது போன்ற திட்டங்களில் தனி மின்பாதை அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தார்.

87. இக்கருத்துக்களின் அடிப்படையில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 12 மணி நேரத்திற்கும் அதிகமாக இயங்க வேண்டிய திட்டங்களுக்கும், அதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட துணை மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறும் திட்டங்களுக்கும் தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின்பாதை புதிதாக அமைக்கப்படும்.

88. மேலும் மாவட்டங்களில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்புக் கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிருவாக கண்காணிப்பின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் குடிநீர்வழங்கல் வாரியங்கள் ஆகியவற்றின் பணியாளர்களுக்கான நலத்திட்ட அறிவிப்புகள்

89. அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் அரசுப் பணியாளர்கள் பெரும்பங்காற்றி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. முந்தைய அரசு அரசுப் பணியாளர்களை கடுமையாக நடத்தி அவர்களது உரிமைகளையும், சலுகைகளையும் பறித்ததையும் நாம் அறிவோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் அரசுப் பணியாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, இத்துறை சார்ந்த அரசுப் பணியாளர்கள் நலன் குறித்த சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்.

90. மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்பு கையுறைகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

91. சென்னை மாநகராட்சியில் மலேரியா துறையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 60 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

92. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணிபுரிந்து வரும் 170 சமுதாய அமைப்பாளர்களின் பணியை வரன்முறைப்படுத்தி அவர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

93. சென்னை மாநகரில் கழிவுநீர் அமைப்பைப் பராமரிக்கும் பணியாளர்களின் பாதுகாப்புக்காக 3 கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கும் பெல்ட், தலைக் கவசம், துர்நாற்றக் காற்று உட்புகாமல் தடுக்கும் கவசம், துர்நாற்றக் காற்றை கண்டறியும் உபகரணம், கையுறைகள், காலணிகள் வழங்கப்படும்.

94. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் C&D பிரிவு பணியாளர்களுக்கு கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004 –05க்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். இதனால், சுமார் 8,000 பணியாளர்கள் பயன் அடைவார்கள். அரசுக்கு கூடுதலாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

95. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் 881 பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

96. சென்னை மாநகராட்சியில் மழலையர் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 102 ஆசிரியர்கள், 102 குழந்தை பராமரிப்பு அலுவலர்கள் (ஆயாக்கள்) 30 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 234 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

97. முந்தைய அரசால் அறிவிப்பு செய்தபடி பேரூராட்சிகளில் ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு வரப்படாத 2,923 தொகுப்பூதியப் பணியாளர்கள் ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இந்த ஊதிய ஏற்ற முறையால் ஆண்டுக்கு 13 கோடியே 26 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். ❖

# அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயலாக்கம்

### உள்ளாட்சி அமைப்புகள்

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு குறித்த காலத்திற்குள் நடத்தப்படும்.

2. உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு **சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு,** தேர்தல் நடத்தப்படும்.

3. உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், அவைகளைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும்.

4. உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட இந்த அரசு ஒரு நிபுணர் குழு அமைக்க முடிவு எடுத்துள்ளது.

### அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

5. நடப்பு ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒரு புதிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளும் வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 2,500 கோடி அளவிற்கு மாநில அரசின் நேரடி நிதியுதவி பெறும். இத்துறையின்

மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநிலத் திட்டங்களில் இந்த புதிய திட்டமே மிகப் பெரிய திட்டமாகும்.

## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

6. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 1998ஆம் ஆண்டு முதல் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக 12,000 ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை, முந்தைய அரசு 2004ஆம் ஆண்டில் 9,000 ரூபாயாகக் குறைந்தது. ஆனால், இந்த ஆண்டு கட்டப்பட இருக்கும் 49,850 வீடுகளுக்கு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக இந்தத் தொகை 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக மாநில அரசு கூடுதலாக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

## சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

7. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தி உள்ளார் என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதனால் மாநில அரசிற்கு ஆண்டிற்கு 47 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

> **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தி உள்ளார்**

8. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கணினி, பிரின்டர் மற்றும் Broadband Internet Connection ஆகியவற்றை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் வாங்கிக் கொள்ளலாம்.

## சிறந்த ஊராட்சிகளுக்கான விருது

9. சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினை கௌரவிக்கும் வகையில் **உத்தமர் காந்தி ஊராட்சி விருது** வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி

10. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பேருந்துகள் செல்லும் 1,543 கிலோ மீட்டர் நீளம் உள்ள 889 சாலைகள் நபார்டு வங்கி உதவியுடன் 107 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு

11. 2002ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற புகார்கள் காரணமாக, தற்போதுள்ள பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் மறு ஆய்வுக்காக அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில்



பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஆட்சேபணைகள் இருப்பின் மறு ஆய்வு செய்து, இறுதிப் பட்டியல் மீண்டும் கிராம ஊராட்சிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். அத்துடன் இறுதிப் பட்டியல் இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

## நகரப்பகுதியில் உள்ள சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி

12. ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 10,000 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்படுகிறது. இதுபோன்று நகரப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வுபெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி தலா 10,000 ரூபாய் மானியமாக இந்த ஆண்டு மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஊக்குவிக்க விருதுகள்

13. சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒன்றிய மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மணிமேகலை விருது வழங்கப்படும். இதற்காக 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பிணை வைப்புத் தொகை விலக்கு

14. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசு ஒப்பந்தப் புள்ளிகளில் போட்டியிட ஏதுவாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பது போல் சுய உதவிக் குழுக்களுக்கும் பிணைவைப்புத் தொகை கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்க பரிசீலிக்கப்படும்.

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

15. ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுவான மக்கள் அமைப்புகளாக உருவாக்குவது இந்த அரசின் மிக முக்கியமான குறிக்கோளாகும். இதற்கு ஏதுவாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டு 4,000 கூட்டமைப்புகளுக்கு தொடக்க நிதியாக 10,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். மேலும் இக்கூட்டமைப்பு களுக்கு கூடுதலாக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்படும்.

## உலக வங்கி நிதி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம்

16. ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இத்திட்டம் 15 மாவட்டங்களிலுள்ள, 70 ஒன்றியங்களில், 2,432 கிராம ஊராட்சிகளில், 717 கோடி ரூபாய் செலவில், 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

## சென்னையில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு விற்பனை மற்றும் கண்காட்சி மையம்

17. தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங் களிலும் செயல்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சுய உதவிக் குழு பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி மையம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிறுவப்படும்.

## சுனாமி வாழ்வாதார மேம்பாட்டிற்கு பொருளாதார உதவிகள்

18. சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம்,

- ⇨ வங்கிக் கடன் பெற சிரமப்படும் உடல் ஊனமுற்றோருக்கு, பொருளாதார மேம்பாட்டிற்காக 10,000 ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும்.
- ⇨ சுயஉதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிட இத்திட்டத்தில் 30,000 ரூபாய் மானியமாகவும், 15,000 ரூபாய் வங்கி கடனாகவும் வழங்கப்படும்.

- பொருளாதார கடனுதவிக்கு 4% வட்டி மானியமாக வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதாரக் கடனுதவிக்காக 133 கோடி ரூபாயும், திறன் வளர் பயிற்சிக்காக 19 கோடி ரூபாயும், பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய உள் கட்டமைப்பு வசதிகளுக்காக 38 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

### ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த பணியாளர்கள் நலன்

முந்தைய அ.இ.அ.தி.மு.க.ஆட்சியில், ஊரக வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு எந்தவித நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அலுவலர் போராட்டத்தின் போது இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆட்குறைப்பு, காலிப்பணியிடம் நிரப்பப்படாத நிலை காரணமாக இத்துறையின் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்தத்துறை பணியாளர்களின் சிரமங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளின் தொடக்கமாக கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

19. தற்போது தகுதியுள்ள ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு 10 சதவிகிதம் ஒதுக்கீடு உள்ளது. இதை 20 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

20. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், தற்பொழுது பெறும் தொகுப்பூதியத்திற்குப் பதிலாக 1.9.2006லிருந்து, காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள். முழு நேர ஊராட்சி உதவியாளர்களின் காலமுறை ஊதியம் ரூ. 1300–20–1500–25–2000 என்றும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களின் காலமுறை ஊதியம் ரூ. 625–10–725–20–925 என்றும் மாற்றியமைக்கப்படும். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும். இதனால் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள உதவியாளர்கள் / பகுதி நேர எழுத்தர்கள் பயன் பெறுவார்கள்.

21. அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் சிறப்பு சேமநல நிதி ரூ.5,000லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

22. துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற தற்போதுள்ள விதிமுறைகளை தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கலாம் என உத்தரவிட அரசு பரிசீலித்து வருகிறது.

23. ஊரக வளர்ச்சித்துறையைச் சார்ந்த அலுவலர்கள் 4.5.2000 முதல் 15.5.2000 வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலம் இது வரை பணிக்காலமாக வரன்முறை செய்யப் படவில்லை. இந்த போராட்ட காலத்தை பணிக்காலமாக வரன்முறை செய்ய அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

❖ ❖ ❖

## மனித உடலில்...

- மனித உணவுப் பாதையின் சராசரி நீளம் – 8 மீட்டர்.
- நம் உடலில் காணப்படும் மிகப் பெரிய சுரப்பி – கல்லீரல்.
- மூச்சுக்குழலின் சராசரி நீளம் – 10 செ.மீ.
- இரு நுரையீரல்களில் பெரியது – வலது நுரையீரல்.
- மூளையில் சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி முகுளம்.
- ஒரு நிமிடத்திற்கு நாம் சராசரியாக 12 முதல் 15 முறை சுவாசிக்கிறோம்.
- உள் மூச்சின் போது காணப்படும் ஆக்ஸிஜனுடைய அளவு 20%.
- சுவாசித்தல் நடைபெறும் இடம் – மைட்டோகான்டிரியா.
- சராசரி மனிதனுடைய இரத்த அழுத்தம் – 120/80.
- நம் உடலில் யூரியா கல்லீரலில் தயாரிக்கப்படுகிறது.
- மனித இரத்தம் – காரத்தன்மையுடையது.
- நாளமில்லா சுரப்பிகளின் தலைமைச் சுரப்பி எனப்படுவது – பிட்யூட்ரி.



# உழவர் சந்தை

பெ. ராஜா முத்தையன்
வனப் பாதுகாவலர்,
சேலம்



உழவனின் நண்பன்! உழவர் சந்தை!
உண்மையான விலை! உழவர் சந்தை!

இந்தா எடுத்துக் கொள் ! இரண்டு ரூபாய் போதுமே! –
உழவர் சந்தை!
பந்தா இல்லாத உழவனின் பாசமிகு வியாபாரம் –
உழவர் சந்தை!

நூறு பேர் கூடி நின்று ! நூதனமாய் சட்டம் போட்டு !
காருக்குள்ளே உட்கார்ந்து ! கறாராய் பேசிவிட்டு – நாங்கள்
வைத்ததுதான் விலை என்று வம்பு பேசி மிரட்டி விட்டு !
இதுவரை பிழைத்து வந்த இடைத் தரகர்களின் விலா எலும்பை
நறுக்கென்று உடைத்து விட்டு ! நாளெல்லாம் பாடுபட்ட
நல்லவனாம் உழவனின், நேர்மிகு, நேரிடை வியாபாரத்தால் !
புல்லரிக்கும் மகிழ்ச்சியில் உழவன் பணப்பை நிரம்பும் இடம் –
உழவர் சந்தை!

அன்று நூறு ரூபாய் கொண்டு சென்றால் நூல் பையும் நிரம்பவில்லை !
பாட்டி சொன்ன கதையெல்லாம் காற்றினிலே போனதப்பா !
இன்று பட்டி தொட்டி மாந்தரெல்லாம் சுதந்திரமாய் நடந்து சென்று !
பத்து ரூபாய் விலையிலே பை நிரம்பும் வித்தையை காணுமிடம் –
உழவர் சந்தை!

பசுமையான காய்கறிகள் ! பல வண்ண காய்கறிகள் !
நித்தம் நித்தம் கூடையில் ! புதுப் புது காய்கறிகள் !
கொத்துக் கொத்தாய் கிடைக்கும் ! சத்தான காய்கறிகள்!
புதுமணத் தம்பதிக்கோ முருங்கைக்காய், வல்லாரை !
இளம் வயதினருக்கு வேண்டுமே ! தேங்காயும், தக்காளியும் !
இல்லற அப்பாவுக்கும் கிடைக்குமே ! அத்திப்பூ !
தொல்லைதரா காய்கள் ! முள்ளங்கியும், வெள்ளரியும்!
கிருமிநாசினி வெங்காயம் ! இரும்புச் சத்து கீரைகள் !
மருந்துகுண பூண்டு ! பாவையருக்கும் வண்ணப் பூக்கள் !
நீரிழிவு மனிதருக்கு ! நோய் தீர்க்க பாகற்காய் !
கோவைக்காய் ! அவரைக்காய்!

சிறு நீரகக் கல்லா ! செவ்வாழைத்தண்டு அங்குண்டு !
நரம்பு முறுக்கேற ! நாடுவீர் கேரட் கிழங்கு !
உடம்பும் இளமை பெற ! உண்ணுவீர் நெல்லி ! எலுமிச்சை !
இடையும், வயிறும் அழகு பெற ! எழில்மிகு இஞ்சி உண்டு !
கொழுத்த உடம்பு குதிரை ஆக ! கொள்ளு கேட்டு வாங்குவீர் !
கர்ப்பிணிக்கோ மாங்காய் ! கால் வீக்கத்திற்கு சுரைக்காய் !
எத்தனையோ காய்கறிகள் ! முத்தான விலையில் கிடைக்கும் –
உழவர் சந்தை !

* * *

# மறைந்த பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நிதியுதவி



தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகைத் துறையினரின் நலன் கருதி, உரிய பரிசீலனைக்குப் பின்னர், பத்திரிகைத்துறையில் தொடர்ந்து 20 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், மற்றும் புகைப்படக்காரர்கள் – இவர்களில் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், இயற்கை எய்துபவர்களுடைய குடும்பத்திற்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி திட்டத்தின் மூலம், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1997 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 25 பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1997 முதல் 2001 வரை 16 பத்திரிகையாளர்களுக்கும் 2001 முதல் 2006 வரை 9 பத்திரிகையாளர்களுக்கும் மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 29.8.2006 அன்று பின்வரும் நான்கு மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு இந்நிதியுதவியினை வழங்கினார்கள்.

**1. திரு. சாவி (எ) சா. விஸ்வநாதன் (ஆனந்தவிகடன், கல்கி, தினமணிக்கதிர், குங்குமம் மற்றும் சாவி, பருவ இதழ்கள், சென்னை)**

முதுபெரும் தமிழ் எழுத்தாளரும், பிரபல பத்திரிகை ஆசிரியருமான சாவி என்று அனைவராலும்









அன்புடன் அழைக்கப்பட்ட திரு. விஸ்வநாதன் அவர்கள் 9.2.2001ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய துணைவியார் திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்கள், இத்துறைக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி 25.5.2006 அன்று விண்ணப்பித்திருந்தார். அவரது விண்ணப்பம், பரிசீலிக்கப்பட்டு, சிறப்பு நிகழ்வாகக் கருதி, திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ், ரூபாய் 50,000 வழங்க ஆணையிடப்பட்டது. 29.8.2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், திருமதி ஜானகி விஸ்வநாதன் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

**2. திரு. தி. தேசிங்கு (வண்ணத்திரை வார இதழ், சென்னை)**

6–11–2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. தி. தேசிங்கு அவர்களின் துணைவியார் திருமதி. தே. ஆர்த்தி அவர்கள், 15–3–2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18–7–2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருமதி. தே. ஆர்த்தி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

**3. திரு. எம். இன்பராஜ், (மாலை முரசு நாளிதழ், மதுரை)**

28.8.2002 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். இன்பராஜ், அவர்களின் துணைவியார் திருமதி இ. வேல்தங்கம் அவர்கள், 29.10.2002 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூ.2,00,000 (ரூபாய் இரண்டு இலட்சம்) வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.07.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், திருமதி. இ.வேல்தங்கம் அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள்.

**4. திரு.எம்.சுப்புக்குட்டி (தினகரன் நாளிதழ், திருச்சி)**

13.4.2001 அன்று மறைந்த பத்திரிகையாளர் திரு. எம். சுப்புக்குட்டி அவர்களின் துணைவியார் திருமதி சு. சுப்புலட்சுமி அவர்கள், 19.8.2001 அன்று பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதி வேண்டி விண்ணப்பித்தார். மனுதாரருக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதியாக ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) வழங்க 23.7.2006 அன்று ஆணையிட்டார்கள். 29.8.2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் திருமதி. சு. சுப்புலட்சுமி அவர்களிடம், அதற்கான காசோலையினை நேரில் வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் செய்தி – மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப, ஆகியோர் உடன் இருந்தனர். ✶



# பெரியாரின் தொலைநோக்குப் பார்வை

தந்தை பெரியார் பிறந்தநாள் - செப்டம்பர் 17

இப்போது மக்களில் ஒரு சிலர் மேற்கண்ட "ஆத்மார்த்தம்'' முதலிய "சூட்சமங்களில்'' உள்ள கவலையையும் மூடநம்பிக்கையையும் விட்டு, தம் அறிவையும், அனுபவத்தையுமே நம்பிச் சிந்தித்ததன் காரணமாகவே பல அற்புதங்களும் அதிசயங்களும் காணமுடிந்தபின், மேல்நாடுகளிலே அதிகம்பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்து விட்டார்கள். பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். புதிய உலகத்தைப் பற்றியே சிந்திப்பதும், சித்தரிப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்க வேண்டும் ? சகல சவுகரியங்களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபட வேண்டும் ? ஏன் சாகவேண்டும் ? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்த சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை. இன்று தெளிவாக்கப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டு வருகிற காலம் நடக்கிறது, இந்தப் போக்குச் சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும் படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத் தன்மை இருக்காது; ஒருவரையொருவர் நம்பிக்கொண்டு வாழ வேண்டிய அவசியம் இருக்காது; பெண்களுக்குக் காவல் கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழ வேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒருநாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் அல்லது இரண்டுமணி நேரத்துக்கு வேலை செய்யவேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தன் காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் "எனக்கு வலிக்கிறது'' என்று சொல்லுவது போல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும்படியும், அனுபவிப்பது போல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டு வாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்த பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்யவேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள், உடற்பயிற்சிக்காக வேலை செய்ய வேண்டுமே என்கின்ற கவலை கொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகிவிடலாம்.

ஆகவே, ஓர் ஆண்டில் மீதியுள்ள 50 வாரங்களும் மக்களைச் சும்மா, சோம்பேறிகளாய் இருக்கச் செய்யுமே என்று யாரும் பயப்பட வேண்டியதில்லை.



வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும், யோசனையும், கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும், போக போக்கியத்துக்கும் யோசனைகளும், ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவற்றைச் சுலபமாகச் செய்ய வசதிகள் கண்டுபிடிப்பதும், அவை நாளுக்கு நாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்பட வேண்டி இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும், சிற்பிகளும், போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும்; மற்றவர்கள் அலட்சியப் படுத்தப்படுவார்கள்.

போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப் பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.




மேற்கண்ட சாதனங்களால் ஓர் இடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன்படும்படியாக உணவு, சத்துப் பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடங்கக்கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய "ஆயுள் நூறு'' வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம், இன்னும் மேலே போனாலும் போகலாம்.

பிள்ளைப்பேறுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புதிய நுட்பமும், அழகும், திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாக பொலிகாளைகள்போல் தெரிந் தெடுத்து மணிபோன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப் பட்டுவிடும். மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டு வந்து விடக்கூடும்.

அநுபோகப் பொருள்களும் வெகுதூரம் மாற்ற மடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகு சுருக்கமாக மாற்ற மடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார் கார், ஓர் அந்தர் வெயிட்டுக்கு வரலாம்; பெட்ரோல் செலவு குறையலாம்; பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப் படுத்தப்படலாம் அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணை செய்யும் விதமாகவும் விரியும்– பெருகும், விஞ்ஞானம் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன்படும் படியான அதிசயப் பொருள்களும், கண்டுபிடிப்புகளும் தனிப்பட்டவர்களின் லாபத்துக்காக என்று முடங்கிக்கிடக்காமல் சகல மக்களும் சவுகரியம் தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

– தந்தை பெரியார் எழுதிய
"இனிவரும் உலகம்'' என்னும்
நூலிலிருந்து ...

* * *



அறிஞர் அண்ணா பிறந்தநாள் - செப்டம்பர் 15

# வீட்டுக்கொரு புத்தகசாலை

பழங்காலத்திலே நூல் நிலையங்கள் சரியாக நடத்தப்பெறவில்லை. ஓலைச்சுவடிகள் பல நன்கு காப்பாற்றப்படாமல் பற்பல இடங்களிலே சிதறிப் போய்விட்டன. உலகத்திலே அச்சுப் பொறிகளைக் கண்டு பிடிப்பதற்கு முன்னர், எழுதுவதற்கு வேறு சாதனம் இல்லை. அப்போது ஓலைச்சுவடி சிறந்த சாதனமாக இருந்தது. அச்சுப்பொறிகள் கண்டுபிடித்த பின்னர் புத்துணர்ச்சி ஏற்பட்டது; நல்ல வசதியும் ஏற்பட்டது. அச்சுப்பொறிகள் கண்டுபிடிப்பதற்கு முன்னர் ஓலைச்சுவடியைக் கண்டுபிடித்த அறிவுத்திறனை நாம் பாராட்டுகிறோம்

நான், காணாத ஒரு புத்தகத்தை நூல் நிலையத்திலே கண்டு எடுத்துவிட்டேனானால், என்றுமில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது. நூல் யாரோ ஒருவருடைய சிந்தனை. அந்தச் சிந்தனையை தொகுத்துப் படிக்கிறோம்.

சென்னையில் வாழும் ஒருவனுக்கு, டெலிபோனை உபயோகிக்கத் தெரியாமல் போனால் எப்படியிருக்கும்? தந்தி கொடுக்கத் தெரியாமல் போனால் எப்படியிருக்கும்? துறைமுகத்தில் மிதக்கும் கப்பலைப் பார்த்து, 'ஓ! வீடு மிதக்கிறதா?' என்று கேட்டால் எப்படியிருக்கும்?

உலகத்திலே விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து, இப்பொழுது உச்சநிலையை அடைந்துள்ளது. மேல்நாட்டிலே ஒருவர் பேசுகின்ற நிலையிலே (Television) அவர் பேசுவதைக் கேட்பதுடன் அவரையே நேரில் காணலாம். உலகமே இன்று வீட்டு வாயிற்படியில் வந்து விட்டதே!

என்னுடைய விருப்பமெல்லாம், இத்தகைய, நவீன விஞ்ஞான அறிவைக் கற்பிக்கும் நல்ல ஏடுகள் உண்டாக வேண்டுமென்பதாகும். புதிய ஏடுகள் நல்ல கருத்துக்களை உடையதாக இருக்கவேண்டும். பழைய பெரிய நூல்களின் உள்ள நல்ல கருத்துக்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டால், மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

தமிழை மட்டும் படிப்பதால் நாம் முழு அறிவையும் பெறமுடியாது. மற்ற மொழிகளிலே உள்ள சிறந்த நூல்களையும் நாம் படிக்கவேண்டும். சரித்திர அறிவு பெற வேண்டுமானால் சரித்திரத்தைப் பற்றிய நூல்களைப் படிக்க வேண்டும்! அப்பொழுதுதான் சரித்திர அறிவு பெருகும்.

தொகுப்பு முறையிலே பல நூல்கள் தோன்ற வேண்டும். பொய்யைக் கட்டிவிடாமல் உண்மையிலேயே நல்ல விதத்தில் ஏடுகள் அமைய வேண்டும். நாம் தேடித்தேடிக் கிடைக்காத கருத்தை நூலிலே கண்டால் மகிழ்ச்சி அடைவோம், அறிஞர் எல்லோரும் ஒன்றுகூடி நல்ல திட்டம் போட்டு நல்ல ஏடுகளைத் தயாரிக்கலாம்.

இக்கால அறிவைக் கலந்து தரக் கூடியதாகவும் சுவைக்கக் கூடியதாகவும், பாருக்குப் பயன்படுவதாகவும் பல நூல்கள் தோன்ற வேண்டும். அகநானூறு – புறநானூறு இவைகளைப் பற்றி மக்களில் பலர் அறியமாட்டார்கள். அவற்றைப் பற்றிய சிறந்த கருத்துக்களையெல்லாம் தொகுத்து மக்களுக்கு நூல் வடிவாகத் தரவேண்டும். நல்ல நூல்கள் பரவினால் வெளி உலகம் தெரியாதிருக்கும் மக்கள், புதிய அறிவைப்பெற்று விழித்துக் கொள்வார்கள்.

நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.

விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்க பல அற்புதங்களைக் கண்டுபிடிப்பதை மக்கள் அறியமாட்டார்கள். எதிர்கால உலகம் விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து, மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்தி செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் வீட்டுக்கொரு புத்தகசாலையை அமைக்க வேண்டும்.

ஆங்கிலம் தமிழ் அகராதி, அட்லாஸ், சரித்திரப் புத்தகம் இவை இரா, வாங்குவதற்குப் பணமில்லை என்று குறை சொல்ல முடியாது. மற்றவற்றிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதியை ஒதுக்கிப் புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவிட வேண்டும்.

❖ ❖ ❖

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை, அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால், வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

ஒளியின் பிம்பங்களாக நாம் திகழுகிறோம் நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம், மானமே பெரிதென மதித்த இனம், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன், பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று, ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்.

இன்று தேவைப்படுகிற கருத்து அந்த நாளிலே தேவைப்படாமல் இருந்திருக்கலாம். செஞ்சிக் கோட்டையின் உள்ளே பகைவர்கள் யாரும் புக முடியாதபடி, அந்தக் காலத்துக்கு ஏற்பக் கோட்டை கட்டப்பட்டது. ஆனால் அந்தக் கோட்டையையே வைத்துக் கொண்டு, இந்தக் காலத்திலே, யாரும் போர் செய்ய முடியாது அந்தக் காலத்து நிகழ்ச்சியையும், இந்தக் காலத்து நிகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதையும் சரியா? தப்பா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் சரியில்லாததைத் தூக்கி எறிய வேண்டும்.

நம் மனம் ஒரு மியூசியம் போல இருக்கிறது. எது கொள்ளத்தக்கதோ, அதை ஏற்றுக் கொள்ளுங்கள். எது தள்ளத்தக்கதோ, அதைத் தள்ளி விடுங்கள்.

மாணவர்கள் மனத்தை துலாக்கோல்போல் வைத்து, தாங்கள் கேட்டவற்றை மனமாகிய துலாக்கோலில் இட்டுப் பார்க்க வேண்டும். நேர்மையானவற்றை ஏற்க வேண்டும்; மற்றவற்றைத் தள்ள வேண்டும், அதற்கு ஆசிரியர்கள் வழி செய்ய வேண்டும். பெருந்தன்மையோடு, எந்தக் கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தரவேண்டும்

எத்தகைய கருத்துக்கும், நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது, மாணவமணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும், நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பிகளாக வேண்டும். உங்களிடம் தீரமும் திறமும் இருந்தால் மட்டும் போதாது இத்துடன் அறிவு ஆராய்ச்சிகளும் தேவை, இதற்கான பண்பும், பயிற்சியும் மிகமிகத் தேவை. அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து இது சரி, தவறு என்று முடிவுகட்டும் மனப்பான்மை, உங்களுக்கு வேண்டும் இதோடு, திட்டவட்டமான கொள்கையும் பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

*(அறிஞர் அண்ணாவின் "சொற்செல்வம்" நூலிலிருந்து)*

# சொல்லும் செயலும்

ஒரு சமயம் காட்டில் குள்ளநரியை வேட்டைக்காரன் விரட்டினான். வெகுதூரம் ஓடி ஒரு விறகு வெட்டியிடம் குள்ளநரி தஞ்சம் புகுந்தது. அதனிடம் இரக்கம் கொண்ட விறகுவெட்டி பக்கத்திலிருந்த புதரில் அந்தக் குள்ளநரியை ஒளிந்து கொள்ளும்படி சொன்னான்.

சிறிது நேரத்தில் வேடன் துப்பாக்கியுடன் குள்ளநரியைத் தேடிக்கொண்டு வந்தான். அந்தக் குள்ளநரி சாதாரணமானது அன்று. அந்தக் காட்டிற்கு அருகில் இருந்த கிராமத்தில் பல குட்டி ஆடுகளை அடித்துத் தூக்கிச் சென்று தின்றுவிடும். ஆகவேதான் துப்பாக்கி வைத்திருக்கும் வேட்டைக்காரனிடம் அவ்வூர் மக்கள் அந்தக் குள்ளநரி பற்றிப் புகார் கூறினர். அவனும் அந்தக் குள்ளநரியைத் தேடிப்பார்த்தான். ஆனால் கண்ணில்பட்டதும் அது காணாமல் பதுங்கிவிட்டது.

வேட்டைக்காரன் அலைந்து திரிந்து கடைசியாகக் குள்ளநரி பதுங்கியிருக்கும் சரியான இடத்திற்குத்தான் வந்தான். ஆனால், அங்கே இருந்த விறகு வெட்டியைப் பார்த்ததும் "இங்கே சற்று நேரத்திற்கு முன் ஒரு குள்ளநரி ஓடிவந்ததை நீங்கள் பார்த்தீர்களா?'' என்று கேட்டான்.

விறகு வெட்டி, தன்னிடம் தஞ்சம் அடைந்த நரியைப் பற்றி வெளிப்படையாகப் பேச விரும்பவில்லை. "நான் குள்ளநரியைப் பார்க்கவில்லை!'' என்று ஒரு பொய்யைக் குள்ளநரியின் காதில் விழும்படியாக உரக்கக் கூறினான். அவன் பேசுவதைக் குள்ளநரியும் கேட்க வேண்டுமென்று அவன் விரும்பினான்.

விறகு வெட்டி வாயினால் குள்ளநரியைப் பார்க்கவில்லையென்று கூறினானே தவிர, அவனது கை குள்ளநரி பதுங்கியிருந்த புதரைக் காட்டியது.

வேட்டைக்காரன் விறகு வெட்டியின் கையைக் கவனிக்கவில்லை, வாயினால் சொன்னதைக் கேட்டு வேறு வழியில் குள்ளநரியைத் தேடிச் சென்றுவிட்டான்.

வேடன் மறைந்தான். பதுங்கியிருந்த குள்ளநரி வெளியே வந்தது. விறகுவெட்டியிடம் ஒன்றும் சொல்லாமலே வழி நடக்கத் தொடங்கியது.

"நன்றி கெட்ட குள்ளநரியே! என்னிடம் சொல்லாமல் செல்வதேன்?'' என்று கேட்டான் விறகுவெட்டி.

"நண்பனே! உன் சொல்லைப்போல் உன் செயல் இல்லை, நீ கூறிய சொற்களுக்குப் பங்கம் விளைவித்தது உன் நீள்கரம். உன் சொல்லைப்போல் செயலும் இருந்திருக்குமாயின் நான் உனக்கு மரியாதை காட்டியிருப்பேன். நன்றியும் சொல்லியிருப்பேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பாராமலேயே நடந்து சென்றது குள்ளநரி, கடமை தவறியதாக அது நினைக்கவில்லை.

*ஏ.ஜி.எஸ். மணி எழுதிய "உலகம் போற்றும் கதைகள்" நூலிலிருந்து*







# ஒரு இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு

திரு. ஆற்காடு நா. வீராசாமி
மாண்புமிகு மின்சாரம் மற்றும்
ஊரகத்தொழில் துறை அமைச்சர்

**1. தொழில் துறைக்கு மேலான சேவை அளித்தல்**

ஆளுநர் உரையில் தெரிவித்தபடி, தொழில் முதலீட்டாளர்கள் தொழில் துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு அனைத்து வசதிகளையும் வழங்கும். அதற்கான முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொழில் வணிக இயக்ககம், 269 கணினி மையங்கள் மூலம் தொழில் முனைவோர் பதிவு செய்து தற்காலிக தொழிற்பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான வசதிகளை கொண்டுள்ளது. இவ்வியக்ககம் 2006–07 ஆம் ஆண்டில் தொழில் முனைவோர்க்கு நேரடி கணினி மூலம் கூடுதல் வசதிகளை அளிக்க ஒரு திட்டத்தை மேற்கொள்ள உள்ளது. கணினி ஆளுமை வசதிகளை விரிவுபடுத்துவதால் தொழில் முனைவோர் தங்களது மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்களின் தற்போதைய நிலையை நேரடியாக அறிந்துகொள்ள ஏதுவாகும். இதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. மாவட்டத் தொழில் மையங்களின் செயல்பாட்டை மேம்படுத்துதல்**

மாவட்டங்களில் தொழில் நடவடிக்கைகள் ஊக்குவிப்பதில் மாவட்டத் தொழில் மையங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. துறையின் அனைத்து திட்டங்கள் மற்றும் ஊக்குவிப்பு முயற்சிகள் அனைத்தும் மாவட்டத் தொழில் மையங்கள் மூலமே செயல்படுத்தப்படுகின்றன. மேலும், பொது மேலாளர் மற்றும் பணியாளர்களின் விரைவான செயல்பாட்டிற்கு 14 மாவட்டத் தொழில் மையங்களுக்கு தகுதியான வாகனங்கள் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்கான செலவினம் ரூ. 70 இலட்சம் ஆகும்.

**3. புதிய தொழில்களை உருவாக்கி ஒரு இலட்சம் நபர்களுக்கு தரமான வேலைவாய்ப்பளித்தல்**

மாநிலத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்க ஏதுவாக புதிய தொழிற்சாலைகள் துவங்குவதற்கு உரிய வசதிகளை செய்து கொடுப்பது இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும். துறை நிருவாகத்தை முடுக்கி விடுவதன் மூலம் தொழில் முனைவோருக்கு தேவையான ஊக்குவிப்பும் உதவியும் அளித்து சிறுதொழில் பிரிவில் புதிய தொழில்கள் துவங்கி அதன் மூலம் 31.3.2007க்குள் குறைந்தது ஒரு இலட்சம் நபர்களுக்கு தரமான வேலைவாய்ப்பளிப்பதை இத்துறை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### 4. தொழிற்சேவை கூட்டுறவுச் சங்கங்களை நெறிப்படுத்துதல்

தொழிற்சேவைப் பணிகள் மாநிலத்தில் பெருகி வருகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்றவர்கள் உள்ளிட்ட வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள திறன்படைத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1.50 இலட்சத்திற்கும் மேலாகும். அதே சமயம் நகர்ப்புறங்களில் குளிர்சாதன வசதி பழுதுபார்த்தல், குழாய்ப் பணி செய்தல், குளிரூட்டிகள் பழுதுபார்த்தல் போன்ற சேவைப் பணிகளுக்கான தேவை பெருகி வருகிறது. திறன் படைத்த மற்றும் திறன் பெறாத பணியாளர்களான குழாய்ப் பணியாளர், மின்னாள் போன்றோர் பயன்பெறும் வகையில் 2006–07ஆம் ஆண்டில், 10 தொழிற்சேவை கூட்டுறவுச் சங்கங்களை இச்சேவைப் பணிகளில் ஈடுபடுத்த இத்துறை முடிவெடுத்துள்ளது. இச்சேவை சங்கங்கள் மூலம் தொழில் வாய்ப்புகளை இப்பணியாளர்கள் கண்டறிந்து அதன் மூலம் தங்கள் வருவாயையும், தொழிற் திறனையும் மேம்படுத்திக் கொள்வதுடன் இயந்திரங்கள் கையாளும் திறனையும் பெருக்கிக் கொள்ள இயலும். இதனை தனிநபர்கள் எளிதில் பெற இயலாது. 2006–07ஆம் ஆண்டில் இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ.1 இலட்சம் வீதம், ரூ. 20 இலட்சம் மானியமாக வழங்கப்படும். இதன் மூலம் தொழிற்பயிற்சி பெற்ற 500 இளைஞர்களுக்கு இந்தாண்டு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

### 5. சிறுதேயிலை விவசாயிகளுக்கு சேமிப்பு கிடங்கு வசதி அளித்தல்

சிறுதேயிலை விவசாயிகளுக்கு பெருமளவில் உதவிடும் வண்ணம் குன்னூரில் உள்ள இண்ட்கோசர்வ் நிறுவனத்திற்கு கிடங்கு வசதி பற்றாக்குறையாக உள்ளது. ரூ. 140 இலட்சம் மதிப்பீட்டில் 9,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ள கூடுதல் கிடங்கு வசதிக்கு அரசு ரூ. 30 இலட்சம் மானியம் வழங்கும். இதனால், உற்பத்தி மிகுதியாகும் காலத்தில் கூடுதலாகப் பெறப்படும் தேயிலைப் பொருட்களையும் ISO தர நிர்ணய விதிகளின்படி சேமிக்க இயலும்.

### 6. கயிறுக் குழுமங்களை மேம்படுத்துதல்

மாநிலத்தில் கயிறுத் தொழில் 70,000 பேருக்கு மேல் வேலைவாய்ப்பு அளித்து வருகிறது. இத்துறை கயிறு வாரியத்துடன் இணைத்து வேலூர், சிவகங்கை, தேனி, சேலம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ரூ. 7.02 கோடி திட்ட மதிப்பீட்டில் 2006–07 ஆம் ஆண்டு முதல் கயிறு குழுமங்களை மேம்படுத்தும் பணியைத் துவக்க திட்டமிட்டுள்ளது. இதனால், இத்தொழிலின் உற்பத்தித் திறன் மேம்படுவதுடன், அடுத்த ஐந்தாண்டுகளில் 70,000க்கும் கூடுதலான கயிறு தொழிலாளர்கள் பயனடைவர்.

### 7. சேகோசர்வ்

சவ்வரிசித் தொழில் இம்மாநிலத்தில் சுமார் 2.5 இலட்சம் ஏக்கர் பரப்பில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுவதாலும், அதைக் கொண்டு சேகோ மற்றும் ஸ்டார்ச் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதாலும் மாநிலத்தில் சுமார் 5 இலட்சம் மக்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த மரவள்ளிக் கிழங்குப் பயிரைத் தாக்கி வரும் 'கசாவா மொசைக்' என்னும் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுநடவுத் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு வழங்குமாறு குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேகோசர்வ் சங்கத்தின் முயற்சியால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் சிலவகை சேகோ பொருட்களுக்கு மூன்றாண்டு காலத்திற்கு பாதுகாப்பு வரி (Safeguard Duties) விதிக்கப்படுகிறது. மத்திய அரசினால் விதிக்கப்படும் தீர்வை மற்றும் சுங்க வரி இனங்களில் சேகோசர்வ் சார்பாக அரசு உதவிடும் அதே வேளையில் இவ்வரிவிதிப்பின் முழுபலனையும் அடைய சவ்வரிசித் தொழில் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தி, விலையைக் குறைப்பது அவசியமாகும். நவீனமயமாக்கல் மூலம் இக்குறிக்கோளை எய்த சேகோசர்வ் அதன் உறுப்பினர்களுக்கு நவீன இயந்திரங்களை நிறுவ தொழில் அலகு ஒன்றுக்கு ஆகும் செலவில் 50% தொகையை, அதிகபட்சமாக ரூ.4.00 இலட்சத்திற்கு மிகாமல் மானியமாக வழங்கும். இதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மாநில அரசு சேகோசர்வ் சங்கத்துக்கு அவ்வாறு மானியமாக வழங்கப்படும் தொகையில் 50 விழுக்காட்டை அரசு ஏற்றுக்கொள்ளும். இதற்காக 2006–07 ஆம் ஆண்டில் ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 8. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

சிட்கோ, தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 43 தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. அதுமட்டுமன்றி 35 அரசு தொழிற்பேட்டைகளை முகவர் முறையில் பராமரித்து வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சிறுதொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கோடு தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படும். திருப்பூருக்கு அருகில் பனியன் மற்றும் பின்னலாடை தொழில்களுக்கு தொழிற்பேட்டை அமைப்பதற்கான கோரிக்கைக் குறித்து, இவ்வாண்டு ஆய்வு செய்யப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பர்கூர் மற்றும் ஊத்தங்கரையில் உள்ள தொழிற்பேட்டைகளில் குறுந்தொழில் தொடங்குவோருக்காக 300 மனைகள் சுமார் ரூ. 40 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.



**நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ செர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.**

### டான்சி

டான்சி என்றழைக்கப்படும் நிறுவனம் 1965ஆம் ஆண்டு மாநிலம் முழுவதும் உள்ள சிறுதொழில் கூடங்களின் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது. ஆரம்பத் திட்டக்காலங்களில் 64 சிறுதொழில் கூடங்கள் இக்கூட்டமைப்பில் இயங்கி வந்தன. நம் மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகள் குறைவாக இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த டான்சி நிறுவனமானது சிறுதொழில்கள் நன்கு வளர்ச்சி பெற்றுள்ள தற்காலத்தில் மிகவும் நலிவடைந்து உள்ளது. இதற்கு அதிமுக ஆட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டு எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளே காரணமாகும். குறிப்பாக 1991–1996க்கு உள்ளான காலக்கட்டத்தில் டான்சி நிறுவனம் தன் வசம் இருந்த நிலங்களைக் கூட விற்கும் நிலைக்குத் திட்டமிடப்பட்டுத் தள்ளப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையின் கீழ் அமைந்துள்ள இந்த அரசு மீண்டும் இந்நிறுவனம் மேம்படுவதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். முதற்கட்டமாக மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் தாங்கள் வாங்கும் பொருட்களின் ஒரு பகுதியை டான்சி நிறுவனத்திடமிருந்து வாங்கிட ஏதுவான ஆணைகள் வெளியிடப்படும். அரசு நிறுவனங்களின் டெண்டர்கள் மூலம் பொருட்களைக் கொள்முதல் செய்யும்போது L1 ஆக வரும் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலையில் டான்சி நிறுவனம் அப்பொருட்களை வழங்கிட முன்வருமானால் டான்சி நிறுவனத்திடமிருந்து 15 சதவிகித பொருட்களை அரசு நிறுவனங்கள் வாங்கிட தக்க ஆணைகள் வெளியிடப்படும்.

### பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்கள் தொடங்கிட ஊக்கமளித்தல்

கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சியின்றி பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் அப்பகுதியில் தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோருக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. அவர்கள் செய்யும் முதலீட்டில் 15 சதவிகிதம் வரை மானியமாக வழங்கப்பட்டது. ஆனால் அடுத்து வந்த அ.தி.மு.க ஆட்சியில் இச்சலுகைகள் மறுக்கப்பட்டதால் மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

மீண்டும் தமிழகத்தில் ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு "தொழில் வளத்தில் பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் தொழில்களுக்கு கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, முதலீட்டு மானிய நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்புக்கு ஏற்ப தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைக் கண்டறிய தேவையான வரைமுறைகளைப் பரிந்துரை செய்ய அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது."

வரவு செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் குழு தன்னுடைய அறிக்கையை மூன்று மாத காலத்திற்குள் அரசுக்கு வழங்கும். இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று சிறுதொழில்களுக்கு முதலீட்டு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### சிறுதொழில்கள்

சிறுதொழில்கள் தமிழகத்தின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நாட்டின் மொத்த உற்பத்தியில்

சிறுதொழில்களின் 40 சதவிகிதம் மற்றும் ஏற்றுமதியில் 50 சதவிகிதம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் சிறுதொழில்களின் முக்கியத்துவம் நன்கு உணர்த்தப்படுகிறது. தமிழகத்தில் 5.16 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஊரகத் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் :**

1. தொழில் வணிக இயக்ககம்
2. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO)
3. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (TANSI)

**தொழில் வணிக இயக்ககத்தின் கீழ் :**

1. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்
2. இண்ட்கோசர்வ்
3. தேயிலை உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் (டிசர்வ்)
4. சேகோசர்வ் (ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிகிழங்கு மாவுப் பொருட்கள்)
5. கயிறு துறை
6. தாய்கோ வங்கி

என பல்வேறு துறைகள் இயங்கி வருகின்றன.

**பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம்**

குறைந்த அளவு கல்வித் தகுதிப் பெற்றுள்ள ஏழை இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு ஏற்படுத் துவதைக் குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ள 18 முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்கள் சுயதொழில் தொடங்கிட இத்திட்டம் வாய்ப்பளிக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு இத்திட்டத்தின் மூலம் பயன்பெற 1.4.1999 முதல் வயது வரம்பு 45ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இத்திட்டத்தின் மூலம் 27,000 ஏழை இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம் தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு நிதியுதவி அளித்து ஊக்கமளித்து வருகிறது. இதற்கான மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 75 சதவீதம் வரை அல்லது ரூ. 50 கோடி வரை இவற்றில் எது குறைந்த தொகையோ அதனை மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தின் மூலம் 1. சென்னையில் வாகன உதிரி பாகக் குழுமம், 2. திருப்பூரில் பின்னலாடைக் குழுமம் 3. மதுரையில் தானியம் மற்றும் பருப்பு அரைவைக் குழுமம் 4. கோவையில் மோட்டார் பம்பு மற்றும் பவுண்டரி தொழில் குழுமம் 5. ஆம்பூரில் தோல் தொழில் குழுமம் ஆகியவற்றிற்கு மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 370.89 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 198 கோடியை தனது பங்களிப்பாக வழங்கிட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**டான்சி திரும்பப் பெற்ற இரண்டு நிலங்களுக்கு முத்திரைப் பதிவு கட்டணத்திலிருந்து விலக்கு அளிப்பது பற்றிய குறிப்பு :**

அரசு நிறுவனமான டான்சிக்கு சொந்தமான இரண்டு நிலங்களை ஜெயா பப்ளிகேஷன்ஸ் மற்றும் சசி எண்டர்பிரைசஸ் என்ற இரண்டு நிறுவனங்கள் முறையே 29.5.1992 மற்றும் 30.9.1992இல் மொத்தம் ரூ. 2,56,73,182 செலுத்தி பத்திரப்பதிவு செய்யப்பட்டன. இந்த விற்பனை தொடர்பாக எழுப்பப்பட்ட வழக்கில் இந்த இரண்டு நிறுவனங்களும், மேற்சொன்ன நிலங்களை டான்சி நிறுவனத்திற்கே திருப்பி ஒப்படைக்க முன்வந்தன. இது தொடர்பாக குற்றவியல் நீதிமன்றம் 18.11.2002 நாளிட்ட தனது ஆணையில் மேற்காணும் நிலங்களை திரும்ப டான்சிக்கு ஒப்படைக்கும்பொழுது, அதற்கான விற்பனைப் பத்திரத்தில், அவை வாங்கப்பட்ட விலைக்கு மட்டுமே விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டது. அதன்படி இந்த இரண்டு நிலங்களும் டான்சியிடமிருந்து அவை வாங்கப்பட்ட விலைக்கே 16.7.2003 அன்று விற்பனைப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டன. அதற்காக முத்திரைக் கட்டணமாக டான்சி ரூ. 35.95 இலட்சங்கள் செலுத்தியது. ஆனால் பத்திரப்பதிவுத் துறை 16.7.2003 அன்றைய வழிகாட்டி விலைப்படி (G.L.V.) முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டு பத்திரங்களை முடக்கி வைத்துள்ளது. இவ்வளவு பெரிய தொகையை டான்சி நிறுவனத்தின் நிதி நிலையைக் கணக்கில் கொண்டு தன்னால் கட்ட இயலாது என்று டான்சி நிறுவனம் அரசுக்குத் தெரிவித்துள்ளது. யாரோ செய்த தவறுக்கு டான்சி நிறுவனம் இழப்பிற்கு உள்ளாவது எந்த வகையிலும் நியாயமில்லை என்பதால் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம் டான்சி நிறுவனத்தின் நிலையை எடுத்துக் கூறி அவரது ஆலோசனையைக் கேட்டேன். அதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் டான்சியும் ஒரு அரசு நிறுவனம் தான் என்பதால் மேலும் எஞ்சியுள்ள பதிவுக்கட்டணம் ரூ. 3.18 கோடியை டான்சி நிறுவனம் செலுத்தத் தேவையில்லை என்று விலக்கு அளிக்கலாம் என்று கூறியுள்ளார். எனவே, இதற்கு தகுந்த அரசாணை வெளியிடப்பட்டு முடக்கி வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் டான்சி





நிறுவனத்திற்கு விரைவில் வழங்க தக்க ஆணைகள் வெளியிடப்படும் என்பதை இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகள்**

நீலகிரி மாவட்டத்தில் 20,000 சிறுதேயிலை உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாகக் கொண்ட 15 தேயிலை தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டில் இத்தொழிற்சாலைகள் 475.87 இலட்சம் கிலோ பச்சைத் தேயிலையை கொள்முதல் செய்து ரூபாய் 4,289.16 இலட்சம் மதிப்புடைய 123.42 இலட்சம் கிலோ தேயிலையை உற்பத்தி செய்துள்ளன. இத்தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளைப் பயன்படுத்தும், சிறுதேயிலை விவசாயிகளுக்கு உதவும் வண்ணம் டாக்டர் கலைஞர் அரசின் நிதிநிலை அறிக்கையில் தேயிலைக்கான விற்பனை வரி குறித்து கீழ்க்கண்டுள்ளவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

"நமது மாநிலத்திலுள்ள ஆயிரக்கணக்கான சிறிய தேயிலை விவசாயிகளுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் உதவிடும் வண்ணம் டீ செர்வ் (Tea Serve) ஏல மையத்தில் விற்கப்படும் தேயிலை மீது தற்போது விதிக்கப்படும் 4 சதவிகித பொது விற்பனை வரி மற்றும் 2 சதவிகித மத்திய விற்பனை வரி ஆகியவை 1 சதவிகிதமாகக் குறைக்கப்படும். கோயம்புத்தூர் மற்றும் குன்னூரிலுள்ள பிற ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கான பொது விற்பனை வரி தற்போதுள்ள 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகவும் தற்பொழுதுள்ள மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகவும் குறைக்கப் படும். இந்த ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலை விற்பனையின் மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனை வரி மற்றும் மேல் வரி ஆகியவை நீக்கப்படும்."

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி லிட் (தாய்கோ வங்கி)**

- தற்போது 27 கிளைகளுடன் இயங்கி வரும் தாய்கோ வங்கி, தனது அடுத்த கிளையை சென்னை, வியாசர்பாடியில் உள்ள கூட்டுறவுத் தொழிற்பேட்டை வணிக வளாகத்தில் விரைவில் செயல்பட உள்ளது.
- தமிழகத்தில் தாய்கோ வங்கிக் கிளை இல்லாத மாவட்டங்களில் தேவை மற்றும் வணிக வாய்ப்புகள் அடிப்படையில் கிளைகள் துவங்கப்படும்.

தொழில் முக்கியத்துவம் வாய்ந்த இதர நகரங்களிலும் தாய்கோ வங்கியின் புதிய கிளைகள் துவங்கப்படும்.

❖ ❖ ❖

# ஊரகப் பகுதிகளில் புதிய துணை மின்நிலையங்கள்

**தமிழ்நாடு மின்சார வாரியம்**

1. மேதகு ஆளுநர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்தப்படி, பெருகி வரும் மின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டு மேட்டூர் மற்றும் வட சென்னை அனல் மின் நிலையங்களில் ஒவ்வொன்றிலும் 500 மெகவாட் திறன் கொண்ட கூடுதல் மின் உற்பத்தி அலகுகள் அமைக்கப்படும்.
2. மேலும் இயக்கத்திலிருக்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் 1,000 மெகாவாட் (2x500 மெகாவாட்) விரிவாக்கத் திட்டமும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. உச்ச மின் தேவையை எதிர்கொள்ளும் பொருட்டும் மற்றும் தற்போதுள்ள கையிருப்பின் பேரிலான மின் கட்டண விகித முறையின் அதிக பட்ச பலனை அனுபவிக்கும் பொருட்டும், 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
4. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பழுப்பு நிலக்கரி ஆதாரத்தை உபயோகிக்கும் பொருட்டு ஜெயங்கொண்டத்தில் 1,000 மெகாவாட் திறனுடைய திட்டமொன்றை உருவாக்க நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. இதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். இதை விரைவுபடுத்த சிறப்பு வருவாய் பணியாளர்களை நியமிக்க தமிழக அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது.
5. 'BEST' (Billing of Energy Services by TNEB) என்ற திட்டத்தின் கீழ் கணினிமயமாக்கப்பட்ட தாழ்வழுத்த மின் கட்டணப் பட்டியல் திட்டமானது 615 நகர்ப்புறப் பிரிவுகளில் ரூ. 51.23 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இந்த 'BEST' திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 1.25 கோடி மின் பயனீட்டாளர்கள் அடங்கிய அனைத்து 1,805 ஊரகப் பிரிவுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த வருட இறுதிக்குள் முடிக்கப்படும்.
6. இந்திய அரசின் அணு சக்தித்துறை நீலகிரி மாவட்டத்தில் சிங்காராவில் பைக்காரா

இறுதிநிலை புனல் மின் திட்ட வளாகத்தில் ஒரு நிலத்தடி அறிவியல் ஆய்வகக் கூடத்தை அமைக்க தேர்ந்தெடுத்துள்ளது. இந்திய நியூட்ரினோ ஆய்வகம் (India based Netrino Observatory **(INO)** என்று பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வகக் கூடம் அணுவின் அடிப்படைத் துகள்கள் பிரத்தியேகமாக ஆய்வு செய்வதற்காக அமைக்கப்படுகிறது. இது இந்தியாவிலேயே முதல் ஆய்வுக் கூடமாகத் திகழும்.

### மின் இழப்பைக் குறைத்தல்

மின் செலுத்துகை மற்றும் மின் விநியோக கட்டமைப்புகளில், இந்தியாவிலேயே தமிழகத்தில் மின் இழப்பு மிகக் குறைந்த அளவாக 18 சதவிகிதமாக இருக்கலாம் என வரையறுத்துள்ளது. தற்போது 1.60 இலட்சம் மின்மாற்றிகள் (Transformers) உள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த மின் மாற்றிகளில் (Transformers) முதல் கட்டமாக 30.09.2006 க்குள் ஒரு இலட்சம் மின் மாற்றிகளுக்கு மின் அளவிகள் (Meters) பொறுத்தப்பட்டு, எந்தெந்தப் பகுதிகளில் மின் இழப்பு மற்றும் மின் திருட்டு உள்ளன என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவைகளில் மின் இழப்பு மற்றும் மின் திருட்டு ஏற்படும் பகுதிகளில் உரிய தீவிர உடனடி நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் மின் இழப்பினை 15 சதவிகிதமாகக் குறைத்திட இயலும். இதன் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ. 450 கோடி சேமிக்க இயலும்.

### கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கு மையம்

கணினிமயமாக்கப்பட்ட மின்தடை நீக்கு மையம் சென்னையில் வெற்றிகரமாக நடைமுறையில் இருப்பதைத் தொடர்ந்து, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிகளில் இதைப் போன்ற மையங்கள் ரூபாய் 73 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.மேலும், இந்த வசதியை சேலம், திருநெல்வேலி, ஈரோடு, நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மின்சார வாரிய நிதி நிலை

தமிழ்நாடு மின்சார வாரியம் நடப்பு நிதியாண்டில் (2006–2007) 46,796 மில்லியன் யூனிட் விற்பனை செய்வதின் மூலம் ரூ. 12,793.46 கோடி வருவாய் ஈட்டும். (அரசு மானியம் நீங்கலாக) இது தவிர வாரியத்தின் இதர வருவாய் ரூ. 465.32 கோடியாக இருக்கும். அரசு மின்வாரியத்திற்கு மானியமாக ரூ. 1,529.71 கோடியை வழங்குகிறது. இதனையும் கணக்கில் கொண்டபின் வாரியத்தின் மொத்த வருவாய் ரூ. 14,788.49 கோடியாகும். இதற்கெதிராக வாரியத்தின் வருவாய் இன செலவு ரூ. 1,6786.58 கோடியாகும். இதன்படி வாரியத்தின் வருவாய் இனப் பற்றாக்குறை நடப்பாண்டில் ரூ. 1,998.09 கோடியாகும்.

மின்வாரியம் மின் செலுத்துகை, மின்பகிர்மான கட்டமைப்பை மேம்படுத்தவும், வலிமைப்படுத்தவும் அதன் மூலம் மின் இழப்பை வெகுவாகக் குறைக்கவும், தடையற்ற தரமான மின்சக்தியை வழங்கவும், நடவடிக்கை எடுத்து வருகிறது. நடப்பு ஆண்டில் 2006–2007 வாரியத்தின் மூலதன செலவினங்கள் ரூ.1,797.65 கோடியாகும்.

ரூபாய் கோடியில்

1. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட .......... 255.89
2. குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிட .. 16.00
3. வழிபாட்டுத் தலங்களுக்கு .......... 5.46
4. கைத்தறி நெசவாளர்களுக்கு .......... 11.20
5. விசைத்தறி நெசவாளர்களுக்கு .......... 66.84
6. வீட்டு உபயோக இணைப்புகளுக்கு .......... 1,049.32
7. புனல் மின்சக்தி உற்பத்தி இழப்பு மானியம் .......... 125.00

மொத்தம் .......... 1,529.71

தமிழ்நாடு மின்சார வாரியம் 2006–2007 ஆம் ஆண்டு நிதி நிலை

| | |
|---|---|
| விற்பனைக்குரிய மின்சார அளவு | 46,796 மில்லியன் யூனிட்டுகள் |
| மின் விற்பனையில் வருவாய் | ரூ. 12,793.45 கோடி |
| இதர வருவாய் | ரூ. 465.32 கோடி |
| அரசு மானியம் | ரூ. 1,529.71 கோடி |
| மொத்த வருமானம் | ரூ. 14,788.49 கோடி |
| மொத்த வருவாயின செலவு | ரூ. 16,786.58 கோடி |
| வருவாயின பற்றாக்குறை | ரூ. 1,998.09 கோடி |

### மின் விநியோக மின்மாற்றிகள் நிறுவுதல்

கடந்த ஆண்டுகளில் சராசரியாக ஆண்டொன்டிற்கு 6,000 மின் விநியோக மின்மாற்றிகள் (Transformers) மட்டுமே நிறுவப்பட்டன. வேகமாக வளர்ந்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய இவை போதுமானதாக இல்லை. மேலும், குறைந்த அழுத்த குறைபாடுகள் மின் நுகர்வோர் மத்தியில் அதிருப்தியை உண்டாக்கியது. இதைத் தீர்க்கும் பொருட்டு நடப்பாண்டில் 14,000 மின் விநியோக மின்மாற்றிகள் (Transformers) நிறுவ உத்தரவிட்டுள்ளது. இதனால் குறைந்த மின் அழுத்த குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும்.



### துணை மின் நிலையங்கள் நிறுவுதல்

தமிழகத்தில், நடப்பாண்டிற்கு 60 துணை மின் நிலையங்கள் நிறுவ உத்தரவிடப்பட்டுள்ளது. இவற்றில் 25 மின் நிலையங்கள் ஊரகப் பகுதிகளில் நிறுவப்படும். இதன் மூலம் ஊரகப்பகுதிகளில் தடையற்ற மின்சாரம் கிடைக்க உறுதி செய்யப்படும்.

### விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

மேதகு ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி சுயநிதி திட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் அளிக்க இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் 2.4 இலட்சம் விவசாயிகள் பயன் பெறுவர். இதற்காக தமிழக அரசு மானியமாக ரூ. 38 கோடி மின்சார வாரியத்திற்கு வழங்கும்.

மேலும், விவசாயிகளுக்கு இரவில் 8 மணி நேரமும் பகலில் 6 மணி நேரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் தடையற்ற மின்சாரம் வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு வழங்குதல்

குடியிருப்பு வீடுகளுக்கான மின் இணைப்பு 24 மணி நேரத்திற்குள் கொடுப்பதற்காக உத்தரவு வழங்கப்பட்டு 2000–2001 ஆம் ஆண்டு முடிய 3,87,768 இலட்சம் மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. மீண்டும் 24 மணி நேரத்திற்குள் மின் இணைப்பு கேட்டவர்களுக்கு மின் இணைப்பு வழங்க இந்த அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், தாழ்வழுத்த தொழிற்சாலை புதிய மின் இணைப்புகளுக்கு 5 குதிரை திறனுக்குள் இருக்கும் பட்சத்தில் 24 மணி நேரத்திற்குள் புதிய மின் இணைப்பு வழங்கவும், 5 குதிரை திறனுக்கு மேல் இருப்பின், 15 நாட்களுக்குள் புதிய மின் இணைப்பு வழங்கவும் இந்த அரசு ஆணையிட்டுள்ளது.

புதிய மின் இணைப்புகளை உடனடியாக வழங்குவதற்குரிய மின் அளவி, மின்பாதை அமைப்பதற்கான உபகரணங்கள் / தளவாடங்கள் பிரிவு அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, புதிய மின் இணைப்பு வேண்டுவோர் இனி காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மின்சார வாரிய ஊழியர்களுக்கு 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஊதியத்துடன் இணைப்பு மற்றும் ஓய்வூதியச் சலுகைகள்

தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல மின் வாரிய ஊழியர்களுக்கும் 50 சதவிகித அகவிலைப்படியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்து வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர். மின்சார வாரிய ஊழியர்களின் இக்கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் தெரிவித்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இக்கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து மின்சார வாரிய ஊழியர்களுக்கு 01.08.2006 அதாவது இன்று முதல் ஐம்பது சதவிகித அகவிலைப்படியை அவர்களது அடிப்படை ஊதியத்துடன் சேர்த்து வழங்கிட ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோன்று மின்சாரவாரிய ஓய்வூதியதாரர்களுக்கும் 01.08.2006 முதல் 50 சதவிகித அகவிலைப்படி அடிப்படை ஓய்வூதியத்துடன் இணைத்து வழங்கப்படும். இதனால் மின்சார வாரியத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 10.42 கோடியும் இந்த நிதியாண்டில் மொத்தம் ரூ. 83.33 கோடியும் அதிகப்படியாக செலவாகும். இதன் மூலம் சுமார் எழுபத்து ஏழாயிரம் மின்சார வாரியத் தொழிலாளர்களும் சுமார் அறுபத்து இரண்டாயிரம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற பணியாளர் முன்னேற்ற சங்கத்தினர், கடந்த ஆட்சியில் அ.தி.மு.க அரசால் பறிக்கப்பட்ட ஓய்வூதியச் சலுகைகளை மீண்டும் வழங்கிடுமாறு கோரியுள்ளனர். இந்தக் கோரிக்கைகளைக் கேட்டுத்தான் கடந்த ஆட்சியின்போது பல்வேறு போராட்டங்களை நடத்தி சிறையிலடைக்கப்பட்டு பல தொல்லைகளுக்கு உள்ளானார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் கூறியவாறு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இக்கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளார். மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இப்பேரவையில் சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசு ஊழியர்களின் ஓய்வூதியத்தைக் கணக்கிடுவதற்கு 10.04.2003க்கு முன்பு கடைபிடிக்கப்பட்ட நடைமுறையே மீண்டும் கடைபிடிக்கப்படும் வகையில் 33 ஆண்டுகள் பணி புரிந்தால் மட்டுமே முழு ஓய்வூதியம் பெற இயலும் என்பதை மாற்றி, 30 ஆண்டுகள் பணியாற்றினாலே முழு ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும், ஓய்வு பெறுவதற்கு முந்தைய 10 மாதங்களின் சராசரி அடிப்படை ஊதியத்தில் 50 சதவிகிதமே ஓய்வூதியமாக கணக்கிடப்பட வேண்டும் என்பதை மாற்றி, கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாதங்களின் சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் ஆகியவற்றில் எது அதிகமோ, அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படும் என்றும், 31.07.2006 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தக்க ஆணைகள் வெளியிடப்படும் என தெரிவித்துள்ளார். மேற்படி ஆணைகள் வெளியிடப்பட்டவுடன் மின்வாரிய ஓய்வூதியதாரர்களின் கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு மின்வாரியம் தக்க ஆணைகள் பிறப்பிக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# அறிந்துகொள்வோம் அரசாணையை

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

கால்நடை பராமரிப்பு – தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் – கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு முடித்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை ரூ.1,150லிருந்து ரூ.1,650 ஆக உயர்த்தி வழங்கல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசாணை (நிலை) எண் : 166 நாள் : 7.9.2006

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை (நிலை) எண். 188 கா.ப.மீ. (கா.ப.6) துறை நாள். 28.10.96.
2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பதிவாளரின் கடித எண். 6155/மதிப்பீட்டுக் குழு /கல்வி –1/2003. நாள். 22.4.2003.

..........

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கால்நடை பட்டப்படிப்பு முடித்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு உள்ளுறைப் பயிற்சி உதவி தொகையாக (Intership Allowance) மாதம் ஒன்றுக்கு அரசு ரூ.250லிருந்து ரூ.750 ஆக உயர்த்தி வழங்கி வருகிறது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லி தனது பங்காக வழங்கும் ரூ.400ஐயும் சேர்த்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,150 (ரூ.750 + ரூ.400= ரூ.1,150) வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மாணவர்கள் பட்டப்படிப்பு முடித்து தொடர்ந்து 180 நாட்கள் (6 மாதங்கள்) உள்ளுறைப் பயிற்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மேற்கண்ட பயிற்சிக்கு செல்லும் போது பயணச்செலவிற்கும், இருப்பிடச்செலவிற்கும் உணவிற்கும், தாங்களாகவே செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தற்போதுள்ள விலைவாசி உயர்வினாலும் அவர்களுக்கு அளிக்கப்படும் இவ்வுதவித்தொகை மேற்படி செலவுகளை ஈடுகட்ட போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து, தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.1,150 உதவித்தொகையினை ரூ.2,000 ஆக உயர்த்தி வழங்கிடுமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் அரசை வேண்டியுள்ளார்.

2. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்த, பின்பு தற்போது வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு 8 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும், தற்போதுள்ள போக்குவரத்து, உணவு, தங்குமிடம் ஆகிய செலவுகளைக் கருத்தில் கொண்டு உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களின் உதவித் தொகையை மாதம் ஒன்றிற்கு ரூ.1,150லிருந்து ரூ.500 உயர்த்தி ரூ.1,650 (ரூபாய் ஆயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) என (தமிழக அரசு பங்கு ரூ.1,250 இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புதுதில்லியின் பங்கு ரூ. 400) நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இச் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படலாம்:–

''2415 வேளாண்மை ஆராய்ச்சியும் கல்வியும்–03 கால்நடை வளர்ப்பு –277 கல்வி–1 திட்டத்தில் சேராதது –AA தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு மானியங்கள் – 09 உதவி மானியங்கள் –03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்.''

(த.தொ.கு. 2415 –03–277–AA–0936)



4. இவ்வரசாணை நடப்பு கல்வியாண்டு (2006–2007) முதல் (Current academic) நடைமுறைக்கு வருகிறது.

5. இச் செலவினம் ஒரு புதுப்பணி குறித்த செலவினமாகும். காலப்போக்கில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்பார்த்து இச்செலவினத்தை எதிர்பாரா செலவு நிதியில் இருந்து முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ 1)த்துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவு நிதியில் இருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதி (வ.செ.பொது1) த்துறைக்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வாணையின் நகலுடன் அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் மற்றும் இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை–6. அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். திருத்த துணை மதிப்பீடு 2006–2007க்கான கருத்துருவை அனுப்பும்போது தவறாமல் இந்த தொகையையும் சேர்க்குமாறு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 2–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை ஆணையாளர் மற்றும் இயக்குநர் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை –6. அவர்கள் பெற்று, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 47401/கா. பமீ/2006 நாள்.31.8.2006 மற்றும் கூடுதல் நிதி பேரேடு எண். 467 –ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

**லீனா நாயர்**
அரசு செயலாளர்



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 135ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னையில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும் மாண்புமிகு மத்திய சட்டம் மற்றும் நிதித்துறை இணை அமைச்சர் திரு.கே.வேங்கடபதி அவர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

*சிறுகதை*



# பலாப் பழம்

*- வண்ணநிலவன்*

**ப**க்கத்து வீட்டுக்கு பலாப்பழம் வந்திருக்கிறது.

செல்லப்பாப்பா புரண்டு படுத்தாள். கனமான அடி வயிறுதான் சட்டென்று சிமெண்டுத் தரையின் குளுமையை முதலில் உணர்ந்தது. உடம்பெல்லாம் ஒரு விதமான கூச்சம் பரவிற்று. ஸ்டவ் அந்த அறையின் ஒரு மூலையில் சத்தத்துடன் எரிந்து கொண்டிருந்தது. பல திரிகள் கட்டையாகிவிட்டன. மாற்றவேண்டும். சிலது எரியவே இல்லை. தீ சரியாக எரியாமல் அடுப்பில் எதை வைத்தாலும் இறக்குவதற்கு நேரமாகிவிடுகிறது. ஒரு சிறு விஷயம்; திரிகளை மாற்றுவது என்பது. ஆனாலும் திரிகளை மாற்றவில்லை அவள்.

சிமெண்டுத் தரையில் வெறுமனே ஒன்றையும் விரிக்காமல் படுத்துக் கொள்கிறது அவளுக்குச் சின்ன வயசிலேயே பிரியமான காரியம். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் அந்தக் குளிர்ச்சி எல்லாவற்றையும் மாற்றி மனசை லேசாக்கிவிடும். ஆனால் இப்போது இந்தச் சின்னச் சின்ன விஷயங்கள் எல்லாம்கூட வெகுதூரத்தில் சென்று மறைந்து கொண்டுவிட்டன.

அண்ணாந்து உயரே சுவரில் தொங்கிய மர ஸ்டாண்டை வெறிக்கப் பார்த்தாள். அவளுடைய வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த ஹார்லிக்ஸ் பாட்டில்களும், கிளாஸ்கோ டின்களும் புகையடை பிடித்துப் போயிருந்தன, பல பாட்டில்களில் சாமான்களே இல்லை. இருந்த ஒன்றிரண்டு பாட்டில்களிலும் ரொம்பவும் கீழே ஏதேதோ சாமான்கள் கிடந்தன. மனசுக்கு முட்டிக்கொண்டு வந்தது. பார்வையைத் திருப்பி புரண்டு படுத்தாள்.

அவளையொட்டி *சீனிவாசன்* படுத்துக் கிடந்தான். அவனுடைய பின்புற பனியன் வாரைப் பிடித்துச் சுருட்டிச் சுருட்டி விளையாடினாள். கழுத்துப் பகுதியிலும், ஓரங்களிலும் அழுக்கு சேர்ந்து போயிருந்தது. அவளுடைய கைகளில் பிசுபிசுத்தது. அடிவயிறு தரையில் உரச, இன்னுங் கொஞ்சம் அவனுடைய முதுகோடு தன் வயிறும் மார்பும் ஒட்ட நகர்ந்து படுத்துக் கொண்டாள். அவனுடைய முரட்டுத் தலைமயிருக்குள் விரல்களை விட்டு அளைந்தாள். கொஞ்ச நேரத்தில் அது பிடிக்காமல் அவனுடைய பிடரியின் அடியில் முளைத்திருந்த சின்ன சின்ன முடிகளைத் தொட்டு விளையாடினாள். அவனுடைய அடிக்கழுத்தில் கையை நுழைத்துக் கீச்சங்காட்ட வேண்டுமென்று ஆசையாக இருந்தது. அப்படியே அவனுடைய இடுப்பின் மீது தலையை வைத்துப்



படுத்துக் கொண்டாள். *சீனிவாசன்* விழித்துக் கொண்டான்.

"இன்னம இந்தப் பக்கம் வாங்க, சொல்லுதேன். ஏய் *சீதா* அங்க என்னடி ஆச்சு? நான் வந்துட்டேன்னு நீயும் அடுப்ப அப்படியே போட்டுட்டு, வந்திட்டியா?"

"இல்லம்மா... எனக்கு இன்னொரு சொளை வேணும்மா."

"அவளுக்கு மட்டும் கூட ஒண்ணாக்கும்?... நான் அப்பாட்டப் போய் சொல்லப் போறேன்...?"

"ஏய் தடிக் கழுத... கழுதைகளா... ஒண்ணையுமே கண்ணால பாத்திராத மாதிரிதான். லெச்ச கெடுக்கியளே. ஒங்களுக்குப் போயி வாங்கிக் கொண்ணாந்து போடுதாங்களே, அவங்களச் சொல்லணும்."



"இன்னும் ஒண்ணே ஒண்ணும்மா."



"பாடாப் படுத்துதீங்களே. லோசுக் குட்டியைப் பாருங்க. எம்புட்டுப் புள்ள. காய்ச்சலும்மா ஒனக்கு, பண்டம் திங்கக் கூடாதுன்னு சொன்னேன். பாத்துக்கிட்டு பேசாம இருக்கா பாருங்க... நீங்களா? பேருதான் பெரிய பிள்ளைகள்னு பேரு. பிசாசு மாதிரி..."

அந்த அழகு கூடிற்று. இப்போதெல்லாம் செல்லப் பாப்பாவுடைய சிரிப்பில் ஒரு சோர்வு இருக்கிறது. அந்தச் சிரிப்பு அவளுடைய முகத்தில் உண்டு பண்ணின அபூர்வமான சோபையை அவன் ரசித்தான். இன்னொரு தடவை அப்படிச் சிரிக்க மாட்டாளா என்று இருந்தது.

அந்தக் குழந்தைகளுக்குள்ளே ஏதாவது தகராறு வந்திருக்க வேண்டும். இரண்டு குடித்தனங்களுக்கு தடுப்பாக இருந்த பலகைச் சுவரில் யாரோ வந்து மோதி விழுந்ததும், தொடர்ந்து அழுகைச் சத்தமும் கேட்டது.

செல்லப்பாப்பா அவனை அணைத்துப் படுத்திருந்தபடியே தலையை மட்டும் நீட்டி—ஒன்றும் தெரியப்போவதில்லை, என்றாலும்—பலகைத் தடுப்பைப் பார்த்தாள். பலகையின் மீது மோதின அதிர்ச்சியில் ஆணியில் மாட்டியிருந்த சீனிவாசனுடைய சட்டை மட்டும் சுருட்டி எறிந்தது போல் தரையில் விழுந்து கிடந்தது.

திடீர் திடீரென்று அடுத்த பக்கத்திலிருந்து பலாப்பழ வாடை வீசியது.

சீனிவாசன் திரும்பி, அவள் பிரியப்பட்டபடியே அவளை தன் நெஞ்சோடு நெஞ்சாய் வாரியெடுத்துப் போட்டுக் கொண்டான். அவளுடைய முக நெருக்கத்துக்குள்ளிருந்து பல்பொடி வாடை அடித்தது. அவளுடைய கனத்த வயிறு அவனுடைய வயிற்றின் மீது விழுந்து அழுத்திய போது கேட்டான்:

"செல்லப்பாப்பா, ஒனக்கு இப்படி படுத்தா வயிறு அமுங்கலியா? கஷ்டமா இருக்கா?"

செல்லப்பாப்பா பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தாள். இரண்டு உதடுகளிலும் வெள்ளை வெள்ளையாய் மேல்தோல் உரித்து பார்க்க அழகாக இருந்தது. மெதுவாகச் சிரிக்கிறபோது பின்னும்

"ஏய்... ஏய்... மாடு, எத்தனை தடவை சொல்லட்டும், கொட்டய எல்லாம் ஒரு எடத்துல துப்புங்கன்னு. ஏம் பிராணன ஏன் இப்பிடி வாங்கணும்?"

"யம்மா... நாம் பாரும்மா எல்லாக் கொட்டயவும் சேத்து வச்சிருக்கேன். இந்தப் புள்ள சீதாக் கொரங்குதான் நெடுகத் துப்பிப் போட்டுருக்கா."

"ஆமா... நீரு ஒம்ம துருத்தியை ஊதிக்கிட்டு கெடயும்."

"ஏட்டி ஒனக்கு என்ன அம்புட்டுக் கொளுப்பா?"

ஏதோவொரு பாத்திரம் சரிந்து உருண்டு விட்டது. ஒரே கூச்சலும் அழுகையும். எல்லாவற்றுக்கும் மேலே பழவாடை மட்டும் தனியே வந்து கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் செல்லப்பாப்பாவும் சீனிவாசனும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்தபடிக்கே கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

செல்லப்பாப்பா கேட்டாள், "ஒங்களுக்கு ஏன் இன்னுஞ் சம்பளம் போடல?"

சட்டென்று சீனிவாசனுடைய முகம் மாறிவிட்டது. அவனுடைய முகத்தைப் பார்த்துவிட்டு, தான் அப்படிக் கேட்டிருக்க வேண்டாமோ என்று யோசனையுடன் பனியன் மேலே ஏறித் திரைந்து போய் தெரிந்த, முடிகள் அடர்ந்த அவனுடைய தொப்புள் குழியையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய வெதுவெதுப்பான உடம்பின் சூடு அவளுக்கு இதமாக இருந்தது.

"நாங்க எல்லோரும் சம்பளம் வாங்குறது இல்லன்னு முடிவு பண்ணியிருக்கோம். பேச்சு வார்த்தை முடிஞ்சாத்தான் முடிவு என்னன்னு தெரியும்."

அவள் ஒன்றும் பேசாமலிருந்தாள் இரண்டு பேருமே மௌனமாக இருந்தது அவர்களுக்கே பயமாக இருந்தது. இரண்டு பேருமே எப்படியாவது ஏதாவது பேசிவிட வேண்டுமென்று ரொம்பவும் ஆசைப்பட்டார்கள்.

இப்போது பழவாடை ரொம்பவும் காரமாக ஒரு நெடி பரவுவது போல் சின்ன அறை முழுவதும் வீசியது.



அவன் கேட்டான்.

"இது என்னமோ வாடை அடிக்கே; பனம்பழ வாடை மாதிரி..."

"இல்ல, அது பலாப்பழ வாடை" என்று சட்டென்று சொன்னாள் செல்லப்பாப்பா. அவளுடைய வேகம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளையே பார்த்தான்.

இன்னமும் பலகைக்கு அந்தப் பக்கத்திலிருந்து அழுகையும் கூச்சலும் ஓயவில்லை. கொஞ்ச நேரத்தில் அந்தப் பழ வாடைகூட போய்விட்டது. ஆனால் அழுகை மட்டும் நிற்கவில்லை. பழம் நறுக்கித் தந்த அம்மாவுக்காக அடுப்பைக் கவனித்துக் கொண்டிருந்த சீதாதான் அழுது கொண்டிருந்தது. அந்த அம்மாள் அந்தப் பையனை கண்டபடி திட்டிக் கொண்டிருந்தாள். வேகமாக வார்த்தைகள் வரும்போது குரல் முறிந்து போய், அழுது விடுவதுபோல தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. அந்தக் குழந்தைகள் படுத்துகிற பாட்டைப் பொறுக்க முடியாத தவிப்பு அந்தக் குரல் நெடுகிலும் கேட்டது. சத்தமும், அழுகையும் கூடக் கூட பழ வாடையையே காணவில்லை.

"செல்லப்பாப்பா ரொம்பக் கஷ்டமா இருக்காம்மா? இந்தக் காப்பித் தண்ணிய மட்டும் போட்டு எறக்கி வையி. கௌப்புல போயி இட்லி ஏதாவது வாங்கிட்டு வாரேன். நீ ஒண்ணுஞ் செய்ய வேண்டாம்." ரொம்பவும் பிரியமாகப் பேசினான் அவன்.

"துட்டு ஏது?"

"அதெல்லாம் இருக்கு. நேத்து அரிகிருஷ்ணங்கிட்டே ஒரு ரூபா கேட்டேன்."

"எந்த அரிகிருஷ்ணன்?"

"அதுதாம்மா. நமக்குக் கல்யாணம் ஆன புதுசுல ஒரு நா சாயந்திரம் வந்து இந்த நடை வாசல் படியிலேயே இருந்து காப்பியெல்லாம் குடிச்சிட்டுப் பேசிட்டுப் போல?... அவந்தான்."

"ம் ஹூம்..."

"சம்பளம் போட்டுருவாங்க, ஒன்னய டாக்டரம்மா கிட்டக் கூட்டிக்கிட்டு போகலாம்னு பாக்கேன், முடிய மாட்டங்கே... இன்னைக்குச் சாயந்திரம் மேகநாதன் இருபது ரூபா தாரேன்னு சொல்லியிருக்கான்."

"ஒங்க கூட படிச்சாரு, பாத்திரக் கட வைச்சிருக்காருன்னு சொல்லுவீங்களே அந்த ஆளா?"

"ஆமா. அவந்தான். எம்மேலே கொஞ்சம் உருத்து உள்ளவன். சாயந்தரம் போகணும். நேத்து பஜார்ல வச்சுப் பாத்தேன். ஒன்னய ரொம்ப விசாரித்தான் ஒன்னய டாக்டரம்மாகிட்டக் கூட்டுட்டுப் போகணும். கொஞ்சம் பணம் இருந்தாக்குடுன்னு கேட்டேன். கண்டிஷனா சாயந்திரம் வான்னு சொல்லியிருக்கான்."

அவனைப் பார்த்துக் கொண்டே மேகநாதனை நினைத்துப் பார்த்தாள். அவனை அவள்

பார்த்ததில்லை. அவன் எப்படியிருப்பான் என்று மனசிற்குள் பார்த்துக் கொண்டாள். அவனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அவனைப் பார்த்துவிட்டு வருகிற போதெல்லாம், அவளை ரொம்பவும் விசாரித்ததாக இவன் சொல்லியிருக்கிறான். அவனைப் பற்றி இவன் பிரஸ்தாபிக்கிற போதெல்லாம் அவனைப் பார்க்க ஆசைப்பட்டிருக்கிறாள். அவனைப் பற்றியொரு சித்திரம்கூட செல்லப்பாப்பா மனசிலிருக்கிறது.



செல்லப்பாப்பா காபி தூளைப் போட்டுவிட்டு ஸ்டவ்வை அணைத்தாள். அதை நகர்த்தி வைத்துக் கொண்டே அவனிடம் சொன்னாள், "அந்த "ஸ்டவ்வு திரி எல்லாம் சிறுசாப்போச்சுப்பா. மாத்தணும்."

"ஆகட்டும், சாயந்திரம் வாங்கிட்டு வாரேன். சாயந்தரம் ரெடியா இரு. வந்ததும் டாக்டர் வீட்டுக்குப் போவோம்."

"இப்ப எதுக்குப்பா? சம்பளம் வாங்குன பொறவு போய்க்கிடலாம்... வீட்டுக்கார ஆச்சிக்கு மொதல்ல வாடகையைக் குடுத்திடுவோம்."

அவனுக்கு கோபம் வந்து விட்டது. பதிலே பேசாமல் உம்மென்று மேலே அண்ணாந்து பார்த்துக் கொண்டு படுத்திருந்தான்.

"என்ன கோயிச்சிட்டீங்களாக்கும்? என்னப்பா சொல்லிட்டேன்?"

"என்னத்தைச் சொன்ன? ஈர மண்ணுந் தெருப் புழுதியும்..."

அவள் – செல்லப்பாப்பா, ஒரு காலை மடித்து குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள். காபியிலிருந்து, கொதிக்கிற மணங்கலந்த ஆவி காற்றில் அலைந்து போய்க் கொண்டிருந்தது.

திடீரென்று அந்தப் பழவாடை முன்பை விட ஆழமாக வீசியது. ஒருவேளை அந்த அம்மாள் தன் பிள்ளைகளிடம் அந்தப்



பழத்தைக் கொடுத்து அனுப்பி வைப்பாளோ என்று ஆசைப்பட்டாள்.

அவள் உட்கார்ந்திருந்த நிலை அவனுக்கு ரொம்பவும் இரக்கத்தை உண்டு பண்ணிற்று. சட்டென்று எழுந்துபோய் அவளுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டு அவள் நாடியைப் பிடித்து முகத்தைத் தூக்கினான். கலங்கிப் போயிருந்த கண்களுடன் அவனை ஏக்கத்துடன் பார்த்தாள்.

"பின்ன என்னம்மா? நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணு சொல்லுத. மனுஷனுக்கு கோவம் வருமா வராதா சொல்லு பாப்பம்?"

"நானுந்தான் என்னப் பெரிசா தப்பாச் சொல்லிட்டேன்?"

யாரோ கதவைத் தட்டினார்கள். தொடர்ந்து "யக்கா... யக்கா..." என்கிற குரல் கேட்டது.

செல்லப்பாப்பா பின்னால் இரண்டு கைகளையும் ஊன்றி மெதுவாக எழுந்திருக்க முயன்றாள். அவன் அவளுடைய தோளைத் தொட்டு உட்காரப் பண்ணினான். அவனே எழுந்து போனான். கேட்ட குரல் சீதாவுடைய குரலாக இருந்தது. 'ஞாபகமாக அந்த அக்கா குடுத்துவிட்டிருக்காங்களே' என்று மனசிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டாள்.

அவன் கதவைத் திறந்தான். சீதாதான் நின்று கொண்டிருந்தது. அவனைப் பார்த்து பேசாமல், அவன் நின்றிருந்த இடைவெளியினூடே இவளைப் பார்த்து "யக்கா, இன்னைக்குச் சாயந்தரம் புட்டாரத்தி அம்மன் கோயிலுக்குப் போயிட்டு வரலாமான்னு அம்மா கேட்டுட்டு வரச் சொன்னா?" என்றாள்.

செல்லப்பாப்பா ஒன்றும் சொல்லாமல் அவனை அண்ணாந்து பார்த்தாள். பார்த்து விட்டுச் சொன்னாள். "இன்னைக்கி எங்கம்மா வர? அக்கா வரலையாம்னு சொல்லு."

சீதா போகும்போது அவளுடைய கடை வாயில் மேல் உதட்டோரமாக பலாப்பழ நார் ஒட்டிக் கொண்டிருந்ததை செல்லப்பாப்பா பார்த்தாள்.

சாயந்திரம் சீனிவாசன் சொன்னபடி வரவில்லை. ரொம்ப நேரம் கழித்துத்தான் வந்தான். கதவைத் திறந்ததும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டே உள்ளே வந்து உட்கார்ந்தான். சுவரில் மாட்டியிருந்த பெட்ரூம் லைட்டைத் தூண்டி எடுத்துக் கொண்டு வந்து அவனுக்கு முன்னால் வைத்துவிட்டு, அவனுக்கென்று எடுத்து மூடி வைத்திருந்த தட்டைத் திறந்து அவனிடம் தந்தாள். அப்படியே சென்று திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

திடீரென்று அந்தப் பழவாடை வீசிற்று. ஆச்சர்யத்துடன் எழுந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

சீனிவாசன் குனிந்து மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.



– **"நவீன தமிழ்ச் சிறுகதைகள்"** என்ற நூலிலிருந்து...

(சாகித்ய அக்காதெமி வெளியீடு)

**ஓடாநிலையில்**

# தீரன் சின்னமலை

## நினைவு ஆடிப்பெருக்கு விழா

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் – ஓடாநிலையில் 3.8.2006 அன்று அரசின் சார்பில் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு மத்திய சமூகநலம் மற்றும் சமூகநீதித்துறை இணை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், தீரன் சின்னமலை உருவப்படத்தை திறந்து வைத்து அவரது வாழ்க்கை வரலாறு மலரை வெளியிட்டார். பின்னர் அவர் பேசும்போது தெரிவித்ததாவது:

"சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நினைவு நாள் ஒவ்வொரு ஆண்டும் ஆடிப்பெருக்கு அன்று அரசு விழாவாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டும் தீரன் சின்னமலையின் 201–ஆவது நினைவு நாள் அரச்சலூர் – ஓடாநிலையில் ஆடிப்பெருக்கு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கொங்கு சமுதாயத்திற்கு தமிழக முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதன்மூலம் கொங்கு சமுதாயம் உயர்த்தப்பட்டு உள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இச்சமுதாயம் சேர்க்கப்பட்டதால் பலர் வேலைவாய்ப்பும் உயர்கல்வியும் பெற முடிந்துள்ளது. தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். தற்போது பொதுமக்களில் பெரும்பாலானோர் தொலைக்காட்சித் தொடர்களையே அதிகம் கண்டுகளிக்கின்றனர். மேலும் திரைப்படமாக வெளியிட்டால் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டுமே காண முடியும். தொலைக்காட்சித் தொடராக வெளியிட்டால் தமிழ்நாடு மட்டுமின்றி உலகம் முழுவதிலும் உள்ளவர்கள் காண இயலும். இதனால் தீரன் சின்னமலையின் வாழ்க்கை வரலாறு உலகம் முழுவதும் பரவ வாய்ப்புள்ளது.

மேலும், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பயிற்சி கொடுக்க பயிற்சிக் கூடம் கட்ட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிக் கூடத்தை மத்திய, மாநில அரசுகள் அமைக்க முடியாது. தனியார் தொண்டு நிறுவனங்கள் பயிற்சிக் கூடம் அமைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கலாம். இதற்கான செலவுகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்றார்.

விழாவில், தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றுக் கல்வெட்டினைத் திறந்து வைத்து அவருடைய வாரிசுதாரர்கள் திரு. வி.டி. சுப்பிரமணியம், திரு. ஆர். ரத்தினம், திரு. கே. நடராஜ், திரு. ஆர். நடராஜ், திரு.ஜே. சின்னமலை கிருஷ்ணகுமார், திரு. த. சின்ன சாமி, திரு.ஆர்.சிவக்குமார், திரு.சி.கோபாலகிருஷ்ணன், திரு. ஆர். அர்ச்சுணன், திரு. பி.பார்த்திபன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்கேகே.பி. ராஜா அவர்கள் தெரிவித்ததாவது,

"இன்றைய இளைஞர்களிடம் சமுதாய உணர்வு அதிகமாக இருக்கிறது. இந்த உணர்வு அவர்களுடைய சமுதாயத்தை உயர்த்துவதற்கு பயன்படுத்த வேண்டும். நம்மால் முடிந்த பணியை சமுதாயத்திற்கும், அதன் வளர்ச்சிக்கும் செய்ய வேண்டும். இளைஞர்களிடம் தான் வருங்கால சமுதாயமே உள்ளது. எனவே அவர்கள் சமுதாய வளர்ச்சிக்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்" என கூறினார்.

விழாவில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியைத் திறந்து வைத்து ரூ.89 இலட்சம் மதிப்பில் 200 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் தீரன் சின்னமலை நினைவு ஆடிப்பெருக்கு விழா தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கி மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் பேசும்போது "விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பெயருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக





முதலமைச்சர் அவர்கள் தீரன் சின்னமலை தபால்தலை வெளியிட நடவடிக்கை எடுத்து தபால்தலை வெளியிடப்பட்டுள்ளது. தொடர்ந்து தீரன் சின்னமலையின் பெயரை உலகுக்கு எடுத்து சொல்ல நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், காவிரி ஆற்றில் பாசூர் சோழ சிராமணி இடையே கட்டப்பட்டு வரும் தடுப்பணையின் மேல் பகுதி வழியாக வாகனங்கள் சென்று வரும் வகையில் பாதை அமைக்க ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் நாமக்கல், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து ஈரோடு மாவட்டத்திற்கு வருவதற்கு வசதியாக இந்த பாதை அமைகிறது" என தெரிவித்தார்.

விழாவிற்கு தலைமை வகித்த மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்ததாவது:

"சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் சிறப்பியல்புகளைப் பரப்புவதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்தப் புகழைப் பரப்புவதற்கு இளைஞர்களும் முன்வர வேண்டும். நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்கள், தியாகிகளை வாழ்க்கையின் முன்மாதிரியாக வைத்து வாழ வேண்டும். அவர்கள் செய்த சமுதாயப் பணிகளை நாமும் நம்முடைய சமுதாயத்திற்கு ஆற்ற முன்வர வேண்டும் "என கூறினார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. கார்வேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஆர். எம்.பழனிசாமி, திரு.கே.வி.ராமநாதன், முன்னாள் அமைச்சர் திரு. துரைராமசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜ்குமார் மன்றாடியார், அரச்சலூர் பேரூராட்சித் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம், கொங்கு அமைப்புகளைச் சேர்ந்த திரு. தேவராஜ், திரு.மு. பாலசுப்பிரமணியம், திரு.செல்லமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக ஈரோடு கோட்ட வருவாய் அலுவலர் திரு ச. குப்புசாமி அனைவரையும் வரவேற்றார். முடிவில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. என். பாலையா நன்றி கூறினார்.

விழாவில், செய்தி – மக்கள்தொடர்புத் துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மைத்துறை, கைத்தறித்துறை மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. மகளிர் சுயஉதவிக் குழுவினர் கண்காட்சியில் அரங்குகள் அமைத்திருந்தனர். இதில் 3 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு கொங்கு பேரவை மூலம் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் கொங்கு கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஈரோடு மாவட்ட கலை மன்றம் மற்றும் கோபி மண்டல கலை பண்பாட்டுத்துறை சார்பில் சின்னமனூர் சகோதரிகளின் தீரன் சின்னமலை வரலாற்று பரதநாட்டியம் நடைபெற்றது.

விழா நடைபெற்ற 3.8.2006 அன்று ஓடாநிலை கிராமம் விழாக்கோலம் பூண்டிருந்தது. கொங்கு பேரவையினைச் சார்ந்த பெரியோர்கள் தீரன் சின்னமலை உருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தீரன் சின்னமலை மணிமண்டபம் மற்றும் சமுதாயக் கூடம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு அன்றைய தினம் அன்னதானம் வழங்கப்பட்டது. அரசு சார்பில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்ட இவ்விழாவினை அவரது வாரிசுதாரர்கள் மற்றும் கொங்கு பேரவையினைச் சார்ந்த பிரதிநிதிகள் அரசை பெரிதும் பாராட்டினர்.

**– செய்தி மக்கள்தொடர்பு அலுவலர்**
ஈரோடு

# படமும் செய்தியும்

சென்னையில், 4.9.2006 அன்று மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்** அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தின் 150ஆவது ஆண்டு விழாவையொட்டி, நினைவுத் தபால் தலையினை வெளியிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்வில், மேதகு தமிழக ஆளுநர் திரு. **சுர்ஜித் சிங் பர்னாலா** அவர்கள், மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் பங்கேற்றனர்.





சென்னையில் 8.9.2006 அன்று, "கனெக்ட் 2006" என்று, தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கையும், கோவையில் கட்டப்படவுள்ள தகவல் தொழில் நுட்ப மாதிரி வடிவங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை மீண்டும் அமைத்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கு, இ. கம்யூ. சார்பில் 12.9.2006 அன்று திருவாரூரில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர்கள் மற்றும் இ. கம்யூ. கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.தா. பாண்டியன், மூத்த தலைவர் திரு. இரா. நல்லக்கண்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்





ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் 4.9.2006 அன்று நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். **ஆ.ப.ஜெ. அப்துல்கலாம்** அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களுக்கு தொல்காப்பியர் விருதினை வழங்கினார்கள். உடன் ஆழ்வார்கள் ஆய்வு மையத் தலைவர் திரு. இராம வீரப்பன், செயலாளர் திரு. சா. ஜெகத்ரட்சகன், மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு. கா.பொன்முடி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 17.9.2006 அன்று தந்தை பெரியார் அவர்களின் 128ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை அண்ணா சாலையிலுள்ள பெரியாரின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி உடன் உள்ளார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 15.9.2006 அன்று பேரறிஞர் அண்ணா அவர்களின் 98ஆவது பிறந்தநாளையொட்டி, சென்னை வள்ளுவர் கோட்டத்திலுள்ள, அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மாண்புமிகு மத்திய மற்றும் மாநில அமைச்சர் பெருமக்கள் உடன் உள்ளனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
முன்னிலையில், தமிழக அரசிற்கும்,
ஹாங்காங், குரோத்லிங்க்
நிறுவனத்திற்கும் இடையே
19.9.2006 அன்று, சென்னை
தலைமைச் செயலகத்தில் புரிந்துணர்வு
ஒப்பந்தம் கையெழுத்தானது.
குரோத்லிங்க் நிறுவன இயக்குநர்
திரு.பீட்டர் டி. நிக்கல்சன்,
தமிழக அரசின் தலைமைச் செயலாளர்
திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப மற்றும்
தொழில்துறைச் செயலாளர்
திரு.சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப.,
ஆகியோர் உள்ளனர்.





மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில், 9.9.2006 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில், செய்தி – மக்கள்தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம் – பணிப்பட்டறை நடைபெற்றது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலர் திரு.வெ. இறையன்பு, இ.ஆ.ப., செய்தி – மக்கள்தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு அரசின்
தலைமைச் செயலாளர்
திரு. எல்.கே. திரிபாதி,
இ.ஆ.ப.,
அவர்கள் தலைமையில்,
19.9.2006 அன்று
சென்னையில், மாநில
செய்தியாளர்கள் கூட்டம்
நடைபெற்றது. அரசின்
அனைத்துத் துறை
செயலாளர்களும் பங்கேற்று
செய்தியாளர்களின்
கேள்விகளுக்கு
பதிலளித்தார்கள்.



# சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளையொட்டி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 20.8.2006 அன்று, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும் இணைந்து "ராஜீவ் காந்தியின் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தினமாக" கொண்டாடியது.

அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் பங்கேற்ற பேரணியை கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் நீரஜ் மித்தல் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். கார்மல் கார்டன் பள்ளியில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி தொடர்பான கண்காட்சி நடந்தது. பின்னர் நடைபெற்ற புதுப்பிக்கவல்ல எரிசக்தி கருத்தரங்கில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், "புதுப்பிக்கவல்ல எரிசக்தியின் தேவை என்ன என்பதை



தற்போதைய சூழலில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "நம் நாட்டில் 4 இலட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்தால்தான் நாம் பல்வேறு வளங்களைப் பெருக்கிக் கொள்ள முடியும். தற்பொழுது 1.30 இலட்சம் மெகாவாட் மின் உற்பத்தி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த வேறுபாட்டை எதிர்காலத்தில் நாம் சரி செய்திட வேண்டும். இன்றைய சூழலில் எரிபொருள் குறிப்பாக பெட்ரோல், டீசல் பயன்பாட்டினால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது என கண்டறியப்பட்டுள்ளது. இந்தச் சூழலை கருத்தில் கொண்டு புதுப்பிக்கவல்ல எரிசக்தியை பயன்படுத்தினால் மட்டுமே சுற்றுச்சூழலை மேம்படுத்திட முடியும். ஆகையால் தான் மத்திய மாநில அரசுகள் மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றன.

இக்கருத்தரங்கின் மூலம் பள்ளி மாணவ மாணவியருக்கு மரபுசாரா எரிசக்தி தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, மின் செலவுகளை குறைப்பது போன்றவற்றை தெரிவிப்பதற்காகவும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. எனவே மாணவர்கள் இவ்வாய்ப்பை பயன்படுத்தி எதிர்காலத்தில் அடுத்துவரும் சந்ததியினருக்கு ஒரு வளமான எதிர்காலத்தை காண்பித்திட வேண்டும்.

இயற்கை, சூரியன் என்ற சக்தியை நமக்களித்துள்ளது. அதன் ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் மற்றும் எரிபொருட்களை நாமே நமக்குத் தேவையான அளவு உற்பத்தி செய்து கொள்ளலாம். (உதாரணம்) மாட்டுச் சாணத்திலிருந்து சாண எரிவாயு தயாரிக்கலாம். அதன் மூலம் உற்பத்தியாகும் எரிசக்தியை சமையல், எரிவிளக்குகள் மற்றும் நீர் இரைத்தல் போன்றவற்றிற்குப் பயன் படுத்தலாம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் வீடுகளில் 2 கன.மீ. மனிதக்கழிவுடன் கூடிய சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் எரிவாயுவைக் கொண்டு சமையலுக்குப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இந்திய மக்கள் அனைவரும் பல்வேறு வகைகளில் எரிசக்தியைப் பயன்படுத்தினால் வரும் காலங்களில் கனிமவளங்களின் பற்றாக்குறையை ஈடுசெய்ய வாய்ப்புள்ளது. மேலும், தற்போது எரிபொருட்களின் மூலம் ஓசோன் படலத்தில் ஓட்டை விழும் அளவு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது. அவற்றை கட்டுப்படுத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினைப் பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். எனவே, மேற்குறிப்பிடப் பட்டுள்ள எரிசக்தி தொடர்பான செயல்பாட்டினை இராஜீவ்காந்தி எரிசக்தி தினமாக கொண்டாடப்படும் அவரது பிறந்த நாளன்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாணவ மாணவியரிடையே கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது" என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
கோயம்புத்தூர்.

* * *



# நெசவாளரை உயர்த்திடும் கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாட்டில் கூட்டுறவு நெசவாளர்களின் வளர்ச்சியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் முக்கியப்பங்கு வகிக்கிறது. தமிழகத்தில் 2 இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை விற்பனை செய்யும் பணிகளை, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொள்கிறது. கடந்த 71 ஆண்டுகளாக கோ-ஆப்டெக்ஸின் அளப்பரிய பணியினால் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன், தரமான விலை மற்றும் நியாயமான வணிக நடவடிக்கைகளின் மூலம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையும் கோ-ஆப்டெக்ஸ் பெற்றுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், புதிய வடிவமைப்புடன் பல வண்ணங்களில், தரமான பட்டு மற்றும் பருத்தி சேலைகளை உற்பத்தி செய்து அவற்றை "சித்திரை தொகுப்பு சேலைகள்" என்ற பெயரில் இவ்வாண்டு கண்காட்சி நடத்தியது. இக்கண்காட்சி தமிழகம் மட்டுமல்லாமல் கர்நாடகம், மகாராஷ்ட்ரா, ஆந்திரா மற்றும் புது தில்லி ஆகிய மாநிலங்களிலும் மகளிரிடையே வரவேற்பினைப் பெற்றது. புதுயுக மகளிர் விரும்பும் 300-க்கும் மேற்பட்ட சுடிதார் இரகங்கள் "யுவா கலெக்ஷன்" என்ற பெயரில் கண்காட்சியில் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

ஓணம் திருநாளையொட்டி, வானவில் கோ - ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் கண்காட்சி மற்றும் விற்பனை நடத்தப்பட்டது.

கும்பகோணத்திற்கு அருகில் உள்ள கோடாலி கருப்பூரில் உள்ள சிற்ப வடிவமைப்பிலிருந்து உருவாக்கப்பட்ட கோடாலி கருப்பூர் சேலை இந்திய குடியரசு தலைவர் விருது பெற்று சிறப்பு சேர்த்தது.

திருமலை - திருப்பதி தேவஸ்தானம் அருள்மிகு வெங்கடேசப் பெருமாளுக்கு அணிவிக்கின்ற மேல்சாத்து உத்திரியம் பட்டாடைகள், "ஓம் நமோ வெங்கடேஸ்வ ராய" என்று தமிழிலும், சமஸ்கிருதத்திலும் வடிவமைக்கப்பட்ட மேல் துண்டு, கல்யாண சேவைக்கு பயன்படுத்திக் கொள்ள பருத்தியிலான துணிகள், தேவஸ்தான உண்டியல் துணிகள் மற்றும் ஆலய குருக்களுக்கான ஆடைகள் ஆகியவை கோ-ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப் படுகின்றன.

தீபாவளி, ரம்ஜான் திருநாட்களுக்காக அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் அனைத்து இரகங்களும் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்ளன.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை வளாகத்தில் 23.9.2006 முதல் 30.9.2006 வரை நடைபெற்ற நவராத்திரி விழாவினை, 23.9.2006 அன்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., அவர்கள் பள்ளிக் குழந்தைகளுடன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போது அவர், நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஊன்றுகோலாக இருக்கிறது என்று தெரிவித்ததுடன், இந்நிறுவனத்தின்மூலம் பள்ளி கல்லூரி மாணவர்கள் கல்வி பயிலுகின்ற போது வருமானத்தை பெறலாம் என்கிற திட்டத்தினையும் அறிவித்தார்.

தீபாவளியையொட்டி 20.9.2006 அன்று முதல் 30 சதவிகித சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. 300க்கும் மேற்பட்ட புதிய வடிவமைப்பில் பட்டு மற்றும் பருத்தி சேலைகள், பெட்சீட்கள், வேட்டிகள், லுங்கிகள், திரைச்சீலை ஆகிய இரகங்கள் விற்பனைக்கு உள்ளன.

★ ★ ★





# இராமநாதபுரம் மாவட்டத்தின் சுதந்திரப் போராட்ட வீரர் மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி



வரலாற்றுச் சிறப்பும், புராண-இதிகாச காலத்து தொடர்புடைய கதைகளில் பெருமையும், தொன்றுதொட்டு வருகின்ற வீரத்தின் வலிமையும், இரக்கத்தின் ஈரம் கொண்ட காய்ந்த பூமி, புகழ் வேய்ந்த பகுதியே சேதுபதி சீமையாகும்.

சுதந்திர வரலாற்றுச் சுவடுகளில் மங்காத புகழ் படைத்த மறவர் சீமையும் இதுதான். மக்களாட்சி பூப்பதற்கு முன்பு சேதுபதி மன்னர் ஆட்சியில் இறுதி மாமன்னரும், இராமநாதபுரம் சீமையில் வெள்ளையரின் ஏகாதிபத்தியத்தை வீரமுடன் எதிர்த்து 24 ஆண்டு கொடுஞ்சிறை அனுபவித்து இறுதி மூச்சை சுதந்திர நீருக்கு சொந்தமாக்கியவர் 16ஆவது மாமன்னர் ரிபெல் முத்துராமலிங்க விஜய ரெகுநாத சேதுபதி ஆவார்.

1760-இல் வீர நிலத்தில் ஆற்றல்மிகு ஜோதியாக அவதரித்தார். 1809 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23-ஆம் நாள் விடியாத இரவில் வீரத்தின் மூச்சுக் காற்று விண்ணோடு கலந்தது. உயிர்வாழ்ந்த ஆண்டுகள் 49, சிறையில் வாடிய ஆண்டுகள் 24 அவர் தம் 25-ஆம் வயதில் சிறை புகுந்து 49-ஆம் வயதில் மரணமுற்றார்.

## சுதந்திரப் போர்க்களங்கள்

வீரத்தோடு, வஞ்சகமும் கலந்து வளர்ந்ததால், விடுதலைப் பயிருக்கு நயவஞ்சக களையால் நாசம் விளைந்தது. 1795-இல் பிப்ரவரி 8-ஆம் நாள் ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனியின் கூலிப்படைகள், கப்பம் கட்ட மறுத்த இராமநாதபுரம் சேதுபதி நாட்டின் மீது போர் தொடுத்தது. ஆங்கிலேயப் படைகள் இராமநாதபுரம் கோட்டை வாயிலைக் கடந்து அரண்மனையைச் சூழ்ந்து கொண்டன. ஆங்கிலேயத் தலைமைத் தளபதி மார்ட்டின், படைத்தளபதி ஸ்டீவென்ஸன், ஆங்கிலேயே கலெக்டர் பவுனி ஆகியோரால் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவருடைய மந்திரிகள், படைத்தளபதிகள் கைது செய்யப்பட்டனர்.

இராமநாதபுரம் அரண்மனைக் கருவூலம், விலையுயர்ந்த கலைப்பொருட்கள், பொக்கிஷங்கள், அணிகலன்கள் கொள்ளையிடப்பட்டன. எதிர்ப்போரின் தலைகள் வெட்டப்பட்டன. மக்களைப் பயங்கொள்ளச் செய்திட பீரங்கிப்படைகள் வலம் வந்தன. சேதுபதிச்சீமை கிழக்கிந்தியக் கம்பெனியின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

## கலவரம் மூண்டது

விடுதலை வேட்கையுள்ள வீரர்களையும், மக்களையும் துணையாகக் கொண்டு சேதுபதியின் தளபதி மயிலப்பச் சேர்வைக்காரர் 24.4.1794-இல் முதுகுளத்தூர், அபிராமம், கமுதி, குளத்தூர், காடல்குடி, நாகலாபுரம், பாஞ்சாலங்குறிச்சி போன்ற பகுதிகளில் கிளர்ச்சிகளை நடத்தினார். கொள்ளையர்களின் கூடாரங்கள், களஞ்சியங்கள் சூறையாடப்பட்டு தீ வைத்து கொளுத்தப்பட்டன.

கி.பி. 1800–1801–இல் மீண்டும் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர், சிவகங்கை போரட்டக்காரர்களின் ஊக்குவிப்பினால் தொடங்கிய கிளர்ச்சி இராமநாதபுரம் சீமைப்பகுதிகளில் மட்டுமல்லாது மதுரை, திண்டுக்கல் சீமைகளுக்கும் பரவியது. வெள்ளையரது சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மக்களின் எழுச்சியை ஒடுக்க மலேயா மற்றும் இலங்கையிலிருந்து படைகள் வரவழைக்கப்பட்டு மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

வீரத்தையும், மானத்தையும் காக்க வீறுகொண்டு போராடிய மக்களின் ஆயுதம் வேலும் வாளும், வெடி மருந்து வீச்சுக்களின் முன் வீரம் விலை போகவில்லை. ஆங்கிலேயரின் ஆயுத வலிமை வெற்றி பெற்று வேரூன்றி விட்டது.

மன்னரின் மகுடங்களாக விளங்கிய கோட்டைகள் தரைமட்டமாயின. மறவர்களின் ஆயுதங்கள் பறிக்கப் பட்டன. மக்கள் மீது கடும் வரிச்சுமை ஏற்றப்பட்டது.

மக்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்டும் கூட சேதுபதி மன்னரைப் பற்றிய பயம் ஆங்கிலேயர்களை விடவில்லை. கிளர்ச்சியின் சூத்திரதாரி திருச்சிக்கோட்டைச் சிறையிலே இருந்த சேதுபதி என்பதை கண்டறிந்த கலெக்டர் லூஷிங்டன் மக்கள் தொடர்பு கொள்ளாதிருக்க சேதுபதி மன்னரை நெல்லூர் அரணுக்கு மாற்றுமாறு கிழக்கிந்திய கம்பெனி தலைமைக்கு பரிந்துரைத்தார்.

மன்னர் முத்துராமலிங்க சேதுபதி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே ஒரு இருட்டு அறையில் சிறை வைக்கப்பட்டார்.

உணர்ச்சிகள் அழிக்கப்பட்டு உள்ளத்தின் நம்பிக்கைகள் நசுக்கப்பட்டு ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாக பதினான்கு ஆண்டுகள் சேதுபதி மன்னர் சிறைவாசம் அனுபவித்தே சிதைந்தார்.

இந்திய விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்த முன்னோடிகளில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி முதன்மையானவர். ஆங்கிலேயரையும், ஆர்க்காட்டு நவாப்பையும் எதிர்த்ததாலே உரிமையையும், உற்றாரையும் இழந்து தனிமைச்சிறையில் வாடி, மடிந்த வீரத்தின் தீபச் சுடரானவர் மானங்காத்த மறவர் சீமையின் இறுதி மன்னராக மக்கள் மனங்களில் குடிபுகுந்தார்.

**சாதனைகள்**

ரிபெல் முத்துராலிங்க சேதுபதி 12 ஆண்டுகள் சேது சீமையின் மன்னராக கோலோச்சியுள்ளார், இவரது ஆட்சி வடபுரத்தில் கோட்டைப்பட்டினம் முதல் தென்பகுதியில் விளாத்திகுளம் வரையும் 2,353 சதுர மைல் பரப்பளவு கொண்டிருந்தது.

நிதி [illegible] டிருந்தது, நீதி தவறாது தலைத்தோங்கியது. வாணிபம் வளர்ச்சியுற்றிருந்தது. கல்வி கடல் கடந்தும் பரவியிருந்தது. கடல் பொருள்களும், நிலவழிப் பொருட்களும் சாலை வழியிலும், நீர் வழியிலும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

**கல்வி மேம்பாடு**

சேதுபூமி கல்வி நிலையில் மேலோங்க கி.பி. 1785–இல் சுவார்ட்ஸ் பள்ளியினை தொடங்கிட மன்னர் ஆதரவும், நிதியுதவியும் வழங்கினார், இவர் காலத்தில் மீர் ஜவ்வாகப் புலவர், சுங்கடிப்புலவர், முத்தையா புலவர், கங்கமுத்துப் புலவர், மாசிலாமணிப் புலவர் போன்ற கல்வியில் சிறந்து விளங்கிய கல்விமான்கள் சிறப்பிக்கப்பட்டனர். பட்டங்களும், பரிசுகளும் கொடுத்து கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

**ஆன்மீக வளர்ச்சி**

எம்மதமும் சம்மதம், ஆண்டவனை அவரவர் விரும்பும் வழியில் – நெறியில் வழிபட வழிவகுத்துக் கொடுத்தார். இராமேஸ்வரம், திருப்புல்லாணி, திருச்சுழி, திருஉத்திரகோசமங்கை, கமுதி போன்ற இடங்களிலுள்ள கோவில்கள் திருப்பணி செய்யப்பட்டன. இராமேஸ்வரம் கோவிலின் மூன்றாம் பிரகாரத்தினை முடித்து வைத்தவரும் இவரே. ஆன்மீக யாத்திரீகர்களுக்கு இலவச அன்ன சத்திரங்களை அமைத்துக் கொடுத்தார். கோவில்களையும், அன்னதான சபைகளையும் கண்காணிக்கவும், பராமரிக்கவும் கி.பி. 1788–இல் தரும மகிமை, தர்மாசனம், ஜவிதம் போன்ற நிதியங்களை தோற்றுவித்தார். ஆலயங்கள், மசூதிகள், தேவாலயங்களுக்கு மானியங்கள் வழங்கி ஆன்மீகம் காத்தார்.

**உரிமை காத்தவர்**

தன்மானத்தோடு தானும், தனது குடிகளும் வாழ வேண்டும் என்பதற்காக மாற்றாரை வீரத்தோடு எதிர்த்து தம் உடல், பொருள், ஆவியை நாட்டிற்கும், விடுதலைக்கும் காணிக்கையாக்கினார். கி.பி. 1857 சிப்பாய் கலகம் தோன்றுவதற்கு முன்பே, புரட்சிக்கு வித்திட்டார், இராமநாதபுரம் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்வுக்கும் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி மன்னரின் சுதந்திர வேட்கைப் போராட்டமே முன்னோடியாகத் திகழ்ந்தது. வாழுகின்ற தலைமுறைக்கு வாழ்ந்தவர் பாடம் என்பதற்கு இணங்கவும், சுதந்திரத்தை தண்ணீர் விட்டா வளர்த்தோம். சர்வேசா; இப்பயிரை கண்ணீர் விட்டல்லவோ காத்தோம் என்ற மகாகவியின் கூற்றுக்கு ஏற்பவும், சுதந்திர தாகத்தின் முன்னோடி, வரலாற்று நாயகர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் வீரத்தையும், தியாகத்தையும் வருகின்ற ஒவ்வொரு தலைமுறையும் அறிந்திட தமிழக அரசு இராமநாதபுரம் [illegible]த்தில் மன்னருக்கு விழா எடுத்தும் வாரிசுகளை சிறப்[illegible] [illegible]கிறது.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்

* * *



தமிழரசு
R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08





# ஐந்தாண்டுகளுக்குள் நிலமற்ற ஏழை–எளிய விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கிட தொடர்ந்து பணியாற்றுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்

"வயதில் அறிவில் முதியார்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்
உயர் எண்ணங்கள் மலரும் சோலை"

தந்தை பெரியார் அவர்களுடைய பிறந்த நாளில் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்குகின்ற இந்த நாள் – இன்பநாள்; நிலங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரமல்ல; அந்த நிலங்களை வழங்கிய எனக்கும், இதுபோன்ற இன்பநாள் என்றுமே வாய்த்ததில்லை. என்னுடைய வாழ்க்கையில் உணர்ச்சிகரமான உள்ளத்தை தொட்டு இழுக்கின்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றதுண்டு. ஆனால், அந்த நிகழ்ச்சிகளெல்லாம் இந்த நிகழ்ச்சிக்கு ஈடில்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு இன்று இந்த மாவட்டத்திலே, இந்தப் பகுதியிலே ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவசமாக நிலங்களை வழங்குகின்ற திட்டத்தினுடைய தொடக்க விழாவை நடத்துகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.



பல்லாயிரக்கணக்கிலே இங்கே கூடியிருக்கின்றீர்கள், ஒவ்வொருவருக்கும் நிலம் தர நிலம் இல்லை. ஆனால், நிலம்தான் தரவில்லை என்றாலும், உட்கார இடமாவது தருவீர்களா என்றால் அதுவும் இல்லை நான் வருகிற வழியில் பந்தலுக்கு வெளியிலே பல்லாயிரக்கணக்கில் அங்கே இன்னொரு பந்தல் நிரம்பி வழிகின்ற அளவுக்கு நீங்கள் நிற்கின்ற காட்சியைப் பார்த்துவிட்டுத்தான் இங்கே வந்தேன். என்னுடைய அருமை நண்பர் சுதர்சனம் கூட வெளியே எவ்வளவு பேர் இருக்கிறார்கள் பார்த்தீர்களா என்று சொன்னார்கள் முந்திக்கொள்ளாத காரணத்தால், அவர்கள் அங்கே நிற்க நேரிட்டிருக்கிறது. நான் அவர்களிடத்திலெல்லாம் வருத்தத்தையும் மன்னிப்பையும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று உங்களுக்கு ஏற்பட்டுள்ள குறையைப் போக்க விரைவிலே இன்னொரு நாள், பந்தல் இல்லாத ஒரு கூட்டத்திலே பேசி உங்கள் அத்தனை பேரையும் சந்திக்கின்ற வாய்ப்பை நான் பெறுவேன் என்பதை முதற்கண் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கின்றேன். திருக்குறளிலே ஒரு அருமையான குறள் உண்டு.

*"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"*

எதுவுமே இல்லையேன்று சோம்பி உட்கார்ந்திருப்பவரைப் பார்த்தால், நிலம் ஏளனப் புன்னகை புரியுமாம். நிலம் இல்லை என்றா சோம்பேறித்தனமாக உட்கார்ந்திருக்கிறாய், நான் இருக்கிறேன்; என்னைப் பண்படுத்தி, உழுது பயிரிட்டு, உன்னுடைய வாழ்க்கையை நகர்த்து என்று சொல்லாமல் சொல்லி, நிலமகள் – பூமி சிரிப்பாள் என்று வள்ளுவர் அழகாகச் சொன்னார்.

அந்தச் சிரிப்பு என் காதிலே விழுந்த காரணத்தால்தான் தமிழகத்திலேயே நிலமில்லாத ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கெல்லாம் முடிந்த வரையில், இயன்றவரையில் நிலம் தருகின்ற பணியை ஆற்ற வேண்டும் என்று அந்தப் பணியை ஆற்றத் தொடங்கியிருக்கிறேன். தி.மு.கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும், தொடர்ந்து நடைபெற்ற ஆளுநர் உரையிலும் அதைத்தொடர்ந்து வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும், குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் எப்படி நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை எனக்கு முன்னால் இங்கே பேசிய நண்பர்களெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

## தமிழகம் முழுவதும் 24,949 குடும்பங்களுக்கு 26,321 ஏக்கர் நிலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் திட்டத்தினுடைய தொடக்க விழா நாளாக அமைந்துள்ள இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் முதல்கட்டமாக அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு இல்லாத நிலம் **6,881** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலமும், பண்படுத்தப்பட்ட நிலமாக **5,076** நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு இன்றைக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. அரசுக்குச் சொந்தமான ஆக்கிரமிப்பு உள்ள **10,564** ஏக்கர் தரிசு புறம்போக்கு நிலம், நிலமற்ற **14,083** சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. **5,790** சிறு, குறு விவசாயிகளுக்குச் சொந்தமான **8,876** ஏக்கர் பட்டா தரிசு நிலங்களை அரசின் செலவில் மேம்படுத்தி விளைநிலங்களாக மாற்றி அவர்களுக்கே வழங்கப்படுகிறது. இந்தக் கணக்கு இந்த ஒரு நாள் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். ஆனால், இன்று மட்டும் தமிழகம் முழுவதும் நான் காட்டியிருக்கின்ற இந்தக் கணக்கின்படி மொத்தம் **24,949** ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு **26,321** ஏக்கர் நிலம் பண்படுத்தி வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வாழ்நாளில் நான் ஆற்றியிருக்கின்ற பணிகளில் மிகச்சிறந்த பணி இன்றைய பணி.

எப்படி பண்படுத்தப்படுகிறது ? என்னென்ன சீர்திருத்தங்கள் செய்து அவைகள் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுருக்கமாக கோடிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

தரிசு நிலங்களில் இருந்த முட்புதர்களை அகற்றி உழுது, பண்படுத்தி, கற்களை அகற்றி, நிலத்தை சமன்படுத்தி, வரப்புகளை ஏற்படுத்தி, ஆழ்துளைக் குழாய் கிணறுகளை அமைத்து, பயன்தரும் பழ மரக்கன்றுகளையும், ஊடுபயிர்களையும் நடவு செய்து இன்றைய தினம் இந்த நிலங்களெல்லாம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியை நான் நிறைவேற்றி வைப்பதற்காக வெங்கடாபுரத்திலே சென்று இறங்கியதும் அங்கே குழுமியிருந்த மக்களைப் பார்த்தேன், சகோதரிகளைப் பார்த்தேன், தாய்மார்களைப் பார்த்தேன், பெரியவர்களைப்